உதயன் அங்காடி விளம்பர சிறப்பிதழ் உள்ளே

# உதயன்

பக்கம்: 56
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 ■ கதிர்: 040 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 21, ஞாயிறு 05.01.2014

மப்பான வானிலை
29 C 24 C

யாழ்.நகரில் கண்டுகொள்ளாத குளம், கழிவு நீர் ஓடாத வாய்க்கால் 05

மனிதஉரிமை மீறல் பிரச்சினையும் அனைத்துலக அழுத்தங்களும் 12

வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது முத்துத்தம்பி 22

வாய்ப்புக் கிடைத்தால் மீண்டும் வருவேன் 23

# தமிழ் அரசியல் கைதிகளை சந்திக்கிறார் விக்னேஸ்வரன்

## 12 ஆம் திகதி மகஸின் சிறைச்சாலைக்கு பயணம்

கொழும்பு, ஜன. 5
நீண்ட காலமாகக் கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் சந்தித்துப் பேசவுள்ளார் என்று தெரிய வருகிறது.
இந்தச் சந்திப்பு எதிர்வரும் 12 ஆம் திகதி மகஸின் சிறைச் சாலையில் இடம்பெறவுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது.
மகஸின் சிறைச்சாலைக்கு செல்லும் வடக்கு மாகாண முதலமைச்சர் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை நேரில் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வார் என்று தெரியவருகிறது.
கடந்த 2 ஆம் திகதி அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசியதன் பின்னணியில் வடக்கு முதலமைச்சர் தமிழ் அரசியல் கைதிகளைச் சந்திக்க உள்

21 ஆம் பக்கம் பார்க்க

## மத்திய கிழக்குக்கு மஹிந்த

கொழும்பு, ஜன.5
மத்திய கிழக்கு நாடுகளுக்கான ஆறு நாள்கள் உத்தியோக பூர்வ பயணமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக்காலை பயணமானார்.
மத்திய கிழக்குக்கான தமது

21 ஆம் பக்கம் பார்க்க

# சர்வதேச போர்க்குற்ற நிபுணர் நாளை இலங்கை வருகிறார்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் சந்தித்துப் பேசுவார்

கொழும்பு, ஜனவரி 5
சர்வதேச போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் அமெரிக்காவின் விசேட தூதுவர் ஸ்ரீபன் ஜே.ராப், உத்தியோக பூர்வ பயணம் மேற்கொண்டு நாளை திங்கட்கிழமை இலங்கை வருகிறார்.
எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரின் போது இலங்கைக்கு எதிராக அமெரிக்கா, கடுமையான பிரேரணையை நிறைவேற்றவுள்ளது என எதிர்பார்க்கப்படும் நிலையில், இவர் இலங்கை வருவது இலங்கை அரச தரப்பினரை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.
இரண்டாவது தடவையாக இலங்கை வரும் இவர், எதிர்வரும் 11ஆம் திகதி வரை இங்கு தங்கியிருப்பார் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இவரின் வருகையை இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக



அமுனுகமவும் நேற்று 'உதயனி'டம் உறுதிப்படுத்தினார்.
ஸ்ரீபன் ஜே ராப், இந்தப் பயணத்தின் போது அரச உயர் அதிகாரிகள், எதிர்க்கட்சியினர், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், நீதித் துறையினர் உள்ளிட்ட பலரைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார் எனவும், இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை நேரடியாக ஆராய்வார் என்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது
போர்க்குற்றங்களுக்குத் தண்டனை விதித்தல் மற்றும் மோதல்களுக்குப் பின்னரான இலங்கையின் நிலை, இன நல்லிணக்கம் மற்றும் அதற்கான முன்னெடுப்புக்கள் தொடர்பில் இந்தப் பயணத்தின் போது ஸ்ரீபன் அதிக கவனம் செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.
இதேவேளை, இலங்கை வரும்

21 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு கிழக்கில் காற்றுடன் கடும் குளிர்

யாழ்ப்பாணம், ஜன5
வடக்கு-கிழக்குக் கடற்பிர தேசங்களில் கொந்தளிப்புடனான காற்று வீசக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.
திருகோணமலைக்கு அப்பால் 250 கிலோமீற்றர் தூரத்தில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம் வலுப்பெற்று வருவதனாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.
இதன் காரணமாக, மன்னார்

21 ஆம் பக்கம் பார்க்க

# ரி.ஐ.டி. கைது செய்த நபரின் 15 வயது மகன் திடீர் சாவு

## தந்தை சிறைக்குச் சென்ற பின் குடும்ப பாரத்தைச் சுமந்தவனை இழந்து தவிக்கின்றனர் தாயும் சகோதரிகளும்

யாழ்ப்பாணம், ஜன. 5
கிளிநொச்சி, திருநகர் தெற்கைச் சேர்ந்த 15 வயதுச் சிறுவன் ஒருவன் நேற்று திடீரெனத் துடிதுடித்து வீழ்ந்து உயிரிழந்தான். அவனது சாவுக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை.
பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 9 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுப்பிரமணியம் வீரலிங்கம் (வயது 45) என்பவரின் மகனான வீ.நிதர்சனின் உடல் பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.
சாப்பிட்டுவிட்டுக் காலை 8.30 மணியளவில் வெளியே புறப்பட்ட சிறுவன் திடீரெனத் துடிதுடித்து வீழ்ந்து மூர்ச்சையாகிப் போனான் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

21 ஆம் பக்கம் பார்க்க

# இலங்கை ஒருபோதும் தனிமைப்படவில்லை

## குற்றச்சாட்டுகளை நிராகரித்தார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 5
அரசு மனித உரிமைகளை மீறியது என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சர்வதேச சமூகத்திலுள்ள நண்பர்கள், தமக்கு உதவி செய்ய முயற்சிக்கின்றனர் என்றும் சர்வதேச அரங்கில் இலங்கை தனிமைப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.
ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியொன்றிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார். அந்தச் செவ்வியின் சுருக்கம் வருமாறு.
மனித உரிமை விவகாரம் தொடர்பில் 2, 3 வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வெளியில் ஒரு குழு நியமிக்

21 ஆம் பக்கம் பார்க்க

## ஹத்துருசிங்கவுக்கு பரிசு மழை



யாழ்ப்பாணம், ஜன. 5
யாழ்.மாவட்டத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுக்குப் பிரியாவிடை வைபவத்தின் போது பரிசுப் பொருள்கள் குவிந்தன.
யாழ். மாவட்டப் படைகளின் தளபதியாகக் கடமையாற்றிய

21 ஆம் பக்கம் பார்க்க


## இந்து ஆலயங்களின் புனிதத்தை காக்க யாழில் ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜன. 5
குடாநாட்டில் இந்து ஆலயங்களின் புனிதத் தன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும், ஆலயங்களில் இடம்பெறுகின்ற திருட்டுச் சம்பவங்களை இல்லாது செய்வதற்காகவும் சிவ ஆராதனை ஊர்வலம் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

21 ஆம் பக்கம் பார்க்க

## தோண்டத் தோண்ட மண்டையோடுகள் மன்னார் புதைகுழியால் பெரும் பரபரப்பு





மன்னார், ஜன. 5
மன்னார், திருக்கேதீஸ்வரம் பகுதியில் தோண்டப்பட்டு வரும் மனிதப் புதைகுழியிலிருந்து நேற்றும் 3 மண்டையோடுகள், எலும்பு எச்சங்கள், மனிதப் பற்கள் என்பன மீட்கப்பட்டன.
மீட்கப்பட்ட பற்கள் 6 வயதுக் குழந்தையினுடையதாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.
கடந்த மாதம் 20 ஆம் திகதியிலிருந்து நேற்று வரை புதைகுழியிலிருந்து 18 மண்டையோடுகளும் மனித எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன.

21 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை - கொழும்பு பஸ் மீது கல் வீசித் தாக்கு

### சாரதி கையில் காயம்

வடமராட்சி, ஜன.5
பருத்தித்துறை - கொழும்பு பஸ் மீது இனந்தெரியாதோர் நடத்திய கல் வீச்சினால் பஸ்ஸின் ஜன்னல் கண்ணாடி உடைந்து சாரதி கையில் காயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் இக்கிரிக்கொல்லாவ என்னும் இடத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. சம்பவத்தையடுத்து மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் சாரதி யோகராஜா முறைப்பாடு செய்து விட்டு பஸ்ஸை கொழும்புக்கு கொண்டு சென்றார்.

கடந்த மாதம் கொழும்பில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்த பஸ்ஸும் இரவு வேளை கல்வீச்சுக்கு இதே இடத்தில் இலக்கானது. இவ்விரு சம்பவங்களிலும் பயணிகள் தெய்வாதீனமாகக் காயமடையவில்லை.

இக்கிரிக்கொல்லாவையில் உணவுச்சாலையில் பஸ் நிறுத்துவதில் உணவுச்சாலை உரிமையாளர்களிடையே எழுந்த போட்டியே இவ்வாறான கல்வீச்சுச் சம்பவத்துக்குக் காரணம் என்று பயணிகள் தரப்பில் கூறப்படுகின்றது. (த-173)

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு ஈழத் தமிழர் நிலை குறித்து விளக்கம்

### சந்தித்துப் பேசினார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்

புதுடில்லி,ஜன 05
இந்தியாவுக்கு தனிப்பட்ட பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது ஈழத் தமிழர்களின் இன்றைய நிலை குறித்து அவர்களுக்கு தெளிவுபடுத்தினார் சம்பந்தன். கட்சியின் மாநிலக்குழு அலுவலகத்தில் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணனை சந்தித்தார். அப்போது மத்திய குழு உறுப்பினர்கள் அ.சவுந்திரராசன், பி.சம்பத், செயற்குழு உறுப்பினர்கள் பி.செல்வசிங், க.கனகராஜ் மாநிலக்குழு உறுப்பினர்கள் ஏ.ஆறுமுக நயினார், ஆர்.கோவிந்தராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு பிந்திய நிலைமைகள் குறித்தும் இலங்கைத் தமிழ் மக்கள் சந்திக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடுகள் குறித்தும் அவர் இந்தச் சந்திப்பில் விளக்கினார் என்று கூறப்படுகிறது. (த)



# 13 ஆயிரம் இராணுவத்தினரே இப்போது யாழ்ப்பாணத்தில்

### விடைபெறும் யாழ்.தளபதி ஹத்துருசிங்க கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஜன 05
யாழ்.மாவட்டத்தில் இப்போது 13ஆயிரத்து 150 படையினரே உள்ளனர். இந்த எண்ணிக்கையும் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகின்றது. இராணுவ அணியின் பிரிவுகளும் குறைக்கப்பட்டுள்ளன என்று கூறினார் யாழ்.மாவட்டப் படைகளின் தளபதியாகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க.

அவருக்கான பிரியாவிடை வைபவம் நேற்று வயாவிளானில் அமைந்துள்ள படையினரின் வரவேற்பு விடுதியில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நான் யாழ்ப்பாணத்தில் இருந்து எனது கடமையை நிறுத்திக் கொள்ள இன்னும் இரண்டு நாள்கள் மட்டுமே இருக்கின்றன. கடந்த காலங்களில் நாம் ஒருமித்து ஒன்றாகக் கடமை புரிந்துள்ளோம். இருப்பினும் கூடச் சில பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டிய தேவை உள்ளது.

கடந்த 4 வருடமாக யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றியும் கூடத் தமிழ் மொழியில் என்னால் பேச முடியவில்லை. எனவே அதனையிட்டு நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்கிறேன். சில சந்தர்ப்பத்தில் தமிழ் மொழியை நான் விளங்கிக் கொள்பவனாகவே இருக்கின்றேன். இருந்தாலும் கூடத் தமிழ்மொழியைப் படிக்கும் ஆர்வத்துடனேயே இருக்கின்றேன். அந்த ஒரு மொழி தான் உங்களையும் எங்களையும் இணைக்கின்ற ஒரு பாலமாக அமைகின்றது.

2009 நவம்பர் 20 ஆம் திகதி யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியாகப் பொறுப்பு எடுத்துக் கொண்டேன். அந்தக் காலப் பகுதி போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட காலமாக இருந்தது. அது ஒரு இக்கட்டானகாலம். மக்கள் மத்தியில் பல தேவைகள் இருந்தன. இவ்வாறான சூழலில்தான் யாழ்.மாவட்டத்தில் கடமையைப் பொறுப்பேற்றேன். அந்த நேரத்தில் 4 பாதுகாப்புப் பிரிவாக இராணுவப் பிரிவு இருந்தது. அதில் 27ஆயிரத்து 200 இராணுவத்தினர் கடமையில் இருந்தனர். பலமான ஆளணி எனது கரங்களிலேயே இருந்தது. அதனையடுத்து மக்களின் தேவையை அறிந்து மிகவும் சிறந்த பணியை செய்ய வேண்டும் என நினைத்துக் கொண்டேன். அந்தச் சந்தர்ப்பத்தில் மக்கள் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்களுடன் இணைந்து எவ்வாறான அபிவிருத்தியை மேற்கொள்ளலாம் எனக் கேட்டு அறிந்து கொண்டேன்.

எமது இராணுவத்தினரைக் கொண்டு அபிவிருத்திப் பணிகளை யாழ். மாவட்டத்தில் மேற்கொண்டோம். இதன் காரணமாகவே சிவில் நிலையங்கள் அமைக்கப்பட்டு அதனூடாக ஒரு உறவு வலுப்படுத்தலை மேற்கொண்டோம்.

யாழ். மாவட்டத்தில் உங்களுடைய சொத்துக்கள், வீடுகள் மற்றும் நிலங்களை நாம் பயன்படுத்தி வருகின்றோம். அந்த வகையில் அதற்கான தீர்வுகள், தீர்வுக்கான வழிகள் வேண்டும். எனவே அதற்கான தீர்வு ஒன்று வேண்டும் என்பதை அறிந்தவனாக இருக்கின்றேன்.

52 படைத்தலைமையகம் உள்ள வரணியில் இராணுவப் பிரிவு 8ஆம் திகதி இந்த மாதம் எடுக்கப்படவுள்ளதுடன் நாளாந்தம் இராணுவம் குறைக்கப்பட்டு இயல்பு வாழ்க்கைக்கு உரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உங்களுடைய அழுகைகள் புலம்பல்கள் அனைத்தையும் நான் அறிந்தவனாக உள்ளேன். சாதகமான முன்னோக்கிய பயணம் ஒன்றை நாம் தொடர வேண்டும். அதற்குரிய ஒத்தாசைகளை ஒருமனதுடன் நாம் செய்ய வேண்டும்.

ஒரு தேசமாக நாம் வாழ வேண்டும். கடந்த காலப் பிரச்சினைகளால் ஏற்பட்ட விபரீதங்களை நாம் பார்க்க வேண்டும். அதனால் மீண்டும் அவ்வாறான விபரீதங்கள் எழாத வகையில் ஐக்கியமாக வாழ வேண்டும்.

இராணுவம் வீடுகளையும் கட்டி கொடுத்துள்ளது. இடர் நிலையில் இருப்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதே எமது இலக்கு. இதுவரை யாழ்ப்பாணத்தில் 1888 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவை முழுக்க முழுக்க இராணுவத்தினரால் கட்டப்பட்டவை.

மாகாண சபை தேர்தலில் அதிகப்படியான ஆசனங்களைப் பெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றது. எனவே அவர்கள் நல்ல முறையில் சேவைகளை முன்னெடுத்து செல்ல வேண்டும். பேச்சு மூலம் தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டும். இதை விடுத்து கடந்த காலங்களைப் போலப் போர்ச் சூழலை ஏற்படுத்தக் கூடாது - என்றார். (த-86)

## மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.5
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 14ஆவது நினைவு தினக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மறை மாவட்ட ஆயர் வண பிதா இராயப்பு ஜோசப் கலந்துகொள்வார். நிகழ்வில் "தமிழர் அரசியலும் சர்வதேச சமூகமும்" எனும் தலைப்பில் அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் உரை நிகழ்த்துவார். (ஒ-14-421)

## பொலிஸ் அதிகாரி கைது

கொழும்பு,ஜன 05
ஒட்டோ தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யாமல் இருப்பதற்காக 15 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் பயாகல பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவு உப பொறுப்பதிகாரி இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகளினால் கைது செய்யப்பட் டார். (த)

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குங்கள்

### ஜனாதிபதிக்கு கரைச்சிப் பிரதேச சபை மனு

அக்கராயன், ஜன.5
பல்வேறு நெருக்கடிகளுடன் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி அவர்களை விடுவிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சபையின் கடந்த வருடத்துக்கான இறுதிக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதன்போது அனைத்து உறுப்பினர்களின் உதவியுடன் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்புக் கோரும் மனு ஒன்று புதுவருட தினத்தில் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:


கடந்த 30 வருட கால போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதும், அதனால் எழுந்த விளைவுகள் நீண்டுகொண்டே செல்கின்றன. குறிப்பாக அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் மக்கள் பெரும் எதிர்பார்ப்புகளுடன் உள்ளனர். அரசியல் கைதிகள் பல வருடங்களாக சிறை வைக்கப்பட்டிருப்பதனால், அவர்களுக்குள்ளும், அவர்களின் குடும்பத்தினருக்குள்ளும் மிக மோசமான பாதிப்புக்களை அவதானிக்க முடிகிறது.

உளத்தாக்கங்கள், பொருளாதார பாதிப்புக்கள், வறுமை, கல்வி கற்க முடியாமை, கலாசார பாதிப்புக்கள் என்ற பிரச்சினைகள் தோன்றுகின்றன. இதனால் சமூகக் கட்டமைப்பின் பிரதான அம்சமான 'குடும்பங்கள்' சிதைவடைந்து பெரும் விளைவுகள் தோன்றுகிறது.

முன்னாள் போராளிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பல்வேறு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சமூக மயப்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களால் நாட்டை அச்சுறுத்தும் வகையிலான எந்தப் பிரதிபலிப்புக்களும் இதுவரை எழுவில்லை. போருக்குப் பின்னர் வன்முறைச் சிந்தனைகளுக்கோ செயற்பாடுகளுக்கோ எமது இளைஞர், யுவதிகள் தயா ரில்லை.

இந்த நிலையில், இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், சமூகங்களுக்கிடையிலான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும், ஒரு நல்ல சூழல் உருவாக்கப்பட வேண்டும். அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படாது தடுத்து வைக்கப்பட்டிருப்பது இவற்றுக்கு சாத்தியமாகாததே.

எனவே போர் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டு எதிர்வரும் மே 18ஆம் திகதி 5 வருடங்கள் ஆகவுள்ள நிலையில் அதற்கு முன்பதாக அரசியல் கைதிகள் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4-18)



பத்தரமுல்லை, கொஸ்வத்தை டென்சில் கொப்பேகடுவ மாவத்தை பகுதியில் உள்ள கட்டடம் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. பழைய இரும்புப் பொருள் களஞ்சிய சாலையில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது. (த)

கனடா பெண்கள்
படிக்க உழைக்க
50 நாள்களில் செல்லலாம்
முடிவு:- 07/01/2014
★ சிங்கப்பூரில் படிக்க உழைக்க மாதம் 80.000 உழைக்க 2 மாதத்தில் பறக்கலாம்.
★ IELTS தேவையில்லை நியூசிலாந்து சென்று படிக்க 2 வருடத்தில் PR பெறலாம்.
7 நாள்களும் திறந்திருக்கும்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனிக்கப்படாத நிலையில் குளம், கழிவு வாய்க்கால்

## நுளம்பு உற்பத்தி நிலையங்கள் இவைதான்





யாழ்ப்பாணம், ஜன.5
யாழ்.நகரின் கோயில் வீதிப் பகுதியில்-ஆசிரமக் கோயில் அருகில் அமைந்துள்ள தேவரிக்குளம் கடந்த பல வருடங்களாகப் புனரமைப்பு இன்றிக் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

அந்தப் பகுதியில் உள்ள குடிமனைகளுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் வாய்க்கால்களில் கழிவு நீர் தேங்கிக் காணப்படுகிறது. அது தற்போது 'நுளம்பு உற்பத்தி மையமாக' உள்ளது. டெங்கு ஒழிப்புக் குறித்து பொதுமக்களுக்கு அடிக்கடி அறிவுறுத்தி வரும் அதிகாரிகள் இந்த இடத்தை அடையாளம் காணவில்லை போல் தெரிகிறது.

இவ்வாறு அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தேவரிக்குளத்துக்கு கழிவு நீர் வழிந்தோடக் கூடியதாக அந்தப் பகுதியில் கழிவு நீர் வாய்க்கால்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனினும் நீண்ட காலமாக குளம் மற்றும் கால்வாய்கள் புனரமைப்பு இல்லாது காணப்படுவதால் குப்பை கூளங்கள் நிறைந்து நீர் வழிந்தோட முடியாதவாறு சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றன.

உணவகங்கள் மற்றும் வீடுகளில் இருந்து வெளியகற்றப் படுகின்ற கழிவு நீர் இந்த வாய்க்கால்களால் வழிந்தோட முடியாது கால்வாயில் தேங்கி துர்நாற்றம் வீசுகிறது. அங்கிருந்து நுளம்புகள் குடிமனைகளை நோக்கி படையெடுக்கின்றன.

நெருக்கமான குடியிருப்புகள் இந்தக் குளத்தைச் சுற்றி அமைந்திருப்பதுடன் கடந்த காலங்களில் குளத்து நீரை மக்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். கடந்த வருடம் அந்தப் பகுதியில் இருந்து டெங்கு நோய்த்தாக்கத்தால் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்து இருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மீண்டும் டெங்கு நோய்த் தாக்கத்தை அந்தப் பகுதி மக்களுக்கு ஏற்படுத்தாத வகையில் குளம் மற்றும் கால்வாயைப் புனரமைக்க யாழ்.மாநகர சபை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14)

**"_"**

**நெருக்கமான குடியிருப்புகள் இந்தக் குளத்தைச் சுற்றி அமைந்திருப்பதுடன் கடந்த காலங்களில் குளத்து நீரை மக்கள் பயன்படுத்தி வந்துள்ளனர்.**

# கால்வாய் நோய்க்கு தடை மருந்து ஏற்றல்

## கிராம ரீதியாக முன்னெடுப்பு

அச்சுவேலி.ஜன.5
வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் கிராம ரீதியாக மாடுகளுக்கு கால்வாய் நோய்த் தடை மருந்து ஏற்றப்பட்டு வருகிறது.

ஐந்து மாதங்களுக்கு மேற்பட்ட அனைத்து மாடுகளுக்கும் தடை மருந்தை ஏற்றிக் கொள்ளுமாறு வட்டுக் கோட்டை பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் எவ்.யூலி யானா அறிவித்துள்ளார்.

கிராம வாரியாக கால்வாய் நோய்த்தடை மருந்து ஏற்றப்படும் தினங்கள் அறிவிக்கப் பட்டுள்ளன.

இதன்படி வட்டுக்கோட்டை கால் நடை வைத்திய அதிகாரி பிரிவில் இன்று ஞாயிற்றுக் கிழமை- மூளாய் காளிகோயிலடி, தண்ணீர் தொட்டியடியிலும் நாளை திங்கட் கிழமை-பண்ணாகம் ஐயனார் கோயிலடியிலும் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை- வட்டுக்கோட்டை தெற்கு அரசடியிலும் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன் கிழமை- மூளாய் ஆஸ்பத்திரி வீதியிலும் எதிர் வரும் 9 ஆம் திகதி வியாழக் கிழமை- மடத்துப் பிள்ளையார் கோயிலடி தொல்புரத்திலும் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை- அருள் கராஜ் வழக்கம்பரையிலும் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை- வட்டுக் கோட்டை சிவன் கோயிலடியிலும் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை- உடுக்கிய வளை பிள்ளையார் கோயிலடியிலும் மருந்து ஏற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-11)

# தென்கிழக்குப் பல்கலையில் இன்று சர்வதேச ஆய்வரங்கு

அம்பாறை, ஜன.5
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தின் முதலாவது சர்வதேச ஆய்வரங்கு இன்று ஞாயிறு நடைபெறவுள்ளது.

"இஸ்லாமிய அறிவியலையும் மானுட சமூக அறிவியலையும் ஒன்றிணைப்பதை நோக்கி" என்னும்தொனிப்பொருளில் இந்த ஆய்வரங்கு நடைபெறவுள்ளது. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் அமைந்துள்ள இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தில் இந்த ஆய்வரங்கு நடைபெறும்.

முதலாவது சர்வதேச ஆய்வரங்கில் தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி எஸ்.எம்.முஹம்மட் இஸ்மாயில் பிரதம அதிதியாகவும், இலங்கை ஜாமியாஹ் நளீமிய் யாஹ் கல்லூரியின் பணிப்பாளரும், ஓய்வு பெற்ற சிரேஷ்ட அரபு மொழி, இஸ்லாமிய கற்கைகள் விரிவுரையாளருமான கலாநிதி எம்.ஏ. எம்.சுக்ரி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

ஆய்வரங்கில் இலங்கை, இந்தியா, மலேசியா, ஈரான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்களால் 56 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

மொழி, இலக்கியம், மொழி பெயர்ப்பு, இஸ்லாமிய நாகரிகம், எண்ணக் கருக்கள், இஸ்லாமிய வங்கியியலும் நிதியும் மற்றும் முஸ்லிம் சமூக விடயங்கள் ஆகிய உப தலைப் புகளில் அனைத்து ஆய்வுக் கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளன. (வ-30)

**"_"**

**மொழி, இலக்கியம், மொழி பெயர்ப்பு, இஸ்லாமிய நாகரிகம், எண்ணக் கருக்கள், இஸ்லாமிய வங்கியியலும் நிதியும் மற்றும் முஸ்லிம் சமூக விடயங்கள் ஆகிய உப தலைப் புகளில் அனைத்து ஆய்வுக் கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.**

# குற்றச் செயல்களில் ஈடுபட்ட; கடந்த வாரம் 34 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜன.5
யாழ்.குடாநாட்டில் குழு மோதல், தகராறு என பிறருக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் கடந்த வாரம் 34 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அத்துமீறி வீடு புகுந்த குற்றச்சாட்டில்- 3 பேரும், சட்ட விரோதமாக மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் -7 பேரும், பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் -2 பேரும், சமாதானச் சீர் குலைவு ஏற்படும் வகையில் செயற்பட்ட ஒருவரும், சந்தேகத்தின் பேரில் -12 பேரும், காரணம் இன்றி இரவு நேரம் வீதியில் சுற்றித்திரிந்த -4 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்- என்றார். (வ-4)

# முத்திரையிடப்படாத நிலையில் நிறுத்தல், அளத்தல் கருவிகள் சிக்கின

யாழ்ப்பாணம், ஜன.5
தென்மராட்சி மற்றும் வலிகாமம் பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்தைகளில் 2013 ஆம் ஆண்டுக்கான முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவைக் கருவிகள் திடீர் சோதனையின்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

மீசாலை, அல்லாரை, கொடிகாமம், புத்தூர், கொக்குவில் போன்ற பகுதிகளில் உள்ள மீன் சந்தைகள் மற்றும் சில வர்த்தக நிலையங்கள் மீது நிறுத்தல் அளவைப் பகுதியினர் இவ்வாறு திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையின்போது கடந்த 2013 ஆம் ஆண்டுக்கான முத்திரையிடப் படாத நிறுத்தல் அளவைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டமை தெரியவந்தது.

இதில் முத்திரையிடப்படாத நிறுத்தல் அளத்தல் கருவிகளைப் பயன்படுத்தியோருக்கு 15 வழக்குகளும், தவறான நிறுத்தல் அளவைகளைப் பயன்படுத்தியதற்கு எதிராக 10 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டதாக செயலக நிறுத்தல் அளவை பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ-17)

# காசோலை மோசடி 4 முறைப்பாடுகள்

யாழ்.குடாநாட்டில் காசோலை மோசடி தொடர்பான முறைப்பாடுகள் மீண்டும் அதிகரித்துள்ளன. கடந்த வாரமும் நான்கு முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதோடு 30 லட்சம் ரூபா வரை மோசடி செய்யப்பட்டுள்ளதாக பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.நகரில் வியாபார நோக்கில் பெறப்பட்ட பொருள்களுக்காக 6 லட்சத்து 96 ஆயிரம் ரூபா காசோலை கொடுத்து பணம் வைப்பிலிடாது மோசடி செய்யப்பட்டுள்ளது.

வேறொரு இடத்தில் 10 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை கொடுத்து மோசடி செய்யப்பட்டுள்ளது.

வண்ணார் பண்ணையில் 6 லட்சத்து ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை கொடுக்கப்பட்டு பணம் வைப்பிலிடாது மோசடி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.நகரில் ஒருவரிடமிருந்து 4 லட்சம் ரூபா பெறுமதியான காசோலை பெறப்பட்ட போதும் வங்கிக் கணக்கில் பணம் வைப்பிலிடாததனால் அவர் அது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் எவரும் கைது செய்யப் படவில்லை என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

தவிர வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒருவர் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா காசோலை மோசடி தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4-86)

# காவலாளிகள் பற்றாக்குறை

## அலுவலகச் சொத்துக்கு பாதுகாப்பில்லை

வலி.தென்மேற்கு, ஜன.5
காவலாளிகளுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையால் அலுவலகச் சொத்துக்களுக்கு பூரண பாதுகாப்பு வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பிரதேச சபையின் நலன் கருதி காவலாளிகளைத் தந்துதவுமாறு வலி. தென்மேற்கு பிரதேச சபையின் பதில் தவிசாளர் எஸ்.சிவகுமார் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரைக் கோரியுள்ளார்.

"சாரதி, காவலாளி பதவிகளுக்கு நிமித்த அடிப்படையிலான நியமனம் கோரல்" என்ற தலைப்பில் பதில் தவிசாளர் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:-

அலுவலகச் செயற்பாடுகளில் அலுவலகச் சொத்துக்களை பாதுகாப்பதற்கும் கண்காணிப்பதற்கும் காவலாளியின் சேவை மிகவும் அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் எமது சபைக்கு காவலாளி பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 5 ஆகும். தற்போது நிரந்தர பதவியில் 3 பேரும் ஒருவர் தற்காலிக அமைய அடிப்படையிலும் கடமையாற்றி வருகின்றார்.

மேலும் தற்போது தலைமை அலுவலகத்துக்கு காவலாளி இல்லாத நிலையில் தலைமை அலுவலகத்துக்குப் பின்புறமாக சுற்றுமதில் கட்டுவதற்கான வேலையும் ஆரம்பமாக உள்ளதால் தலைமை அலுவலகத்துக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது தலைமை அலுவலகத்துக்கு பின்புறமாக இருக்கும் தகர வேலியும் சீரற்ற நிலையில் இருப்பதால் அலுவலக வளாகத்துள் எந்த நேரமும் தேவையற்ற ஆள் நடமாட்டம் காணப்படுகின்றது.

அதேசமயம் எமது சபைக்கு சாரதி பதவிக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி 4. ஆனால் ஒருவரே நிரந்தரமாக சாரதி பதவியில் கடமையாற்றி வருகின்றார். பண்டத்தரிப்பு நகர சபை, கிராமம் ஆகிய இரு உப அலுவலகங்களிலும் குப்பை அகற்றுவதற்கும் குடிதண்ணீர் விநியோகம் செய்வதற்கும் நிமித்த அடிப்படையில் கடமையாற்றிவரும் சுகாதாரத் தொழிலாளி ஒருவரே சாரதியாகக் கடமையாற்றி வருகின்றார். அத்துடன் தலைமை அலுவலகம், ஏனைய 3 உப அலுவலகம் ஆகியவற்றில் இருக்கும் வாகனங்களுக்கு (2 டிரக்டர், பிக்கப், ஓட்டோ, வீதி உருளை) ஒரு நிரந்தர சாரதியுடன் சுகாதாரத் தொழிலாளி ஒருவரும் சாரதியாகக் கடமையாற்றி வருகின்றார். இதனால் எம்மால் மக்களுக்குரிய சேவைகளை ஒழுங்காக நிறைவேற்ற முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே எமது அலுவலகத்தால் பொதுமக்களுக்குரிய சேவைகளை சிறந்த முறையில் திருப்திகரமாக செய்வதற்கு குறைந்தது 2 காவலாளிகளையும் 2 சாரதிகளையும் நிமித்த அடிப்படையில் தற்காலிகமாக நியமிப்பதற்கு தங்கள் அனுமதியை தருமாறு தயவாக கேட்டுக் கொள்கின்றேன்- என்றுள்ளது. (வ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில் 24 காணிகள் மக்களிடம் மீளவும் கையளிப்பு

கிளிநொச்சி, ஜன.5
கிளிநொச்சியில் கடந்த நான்கு வருடங்களாக இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்த 24 காணிகள் நேற்றுமுன்தினம் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சியில் அமைந்துள்ள பொழுது போக்கு மத்திய நிலையத்தில் இடம் பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் உதயபெரேரா, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு காணி உரிமையாளர்களிடம் ஆவணங்களைக் கையளித்தனர்.


“ – ”
வறிய குடும்பங்களைச் சேர்ந்த 20 பேருக்கு வாழ்வாதார உதவியாக பால் மாடுகளும் வழங்கப்பட்டன.

கடந்த காலங்களில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் அவர்களது முகாம்களாக இருந்து பின்னர் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த 24 காணிகளே உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இதில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 22 காணிகளும், பூநகரியில் ஒரு காணியும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக விசுவமடு பிரதேசத்தில் ஒரு காணியும் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை அன்றைய தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்த 20 பேருக்கு வாழ் வாதார உதவியாக பால் மாடுகளும் வழங்கப்பட்டன. (வ)

# சென்னையில் ஆர்ப்பாட்டம் மஹிந்தவின் பொம்மை எரிப்பு

சென்னை, ஜன.5
இலங்கை கடற்படையால் தொடர்ந்து தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்தும், இலங்கைச் சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க கோரியும், இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை விடுவிக்கக் கோரியும் கச்ச தீவை மீட்கக் கோரியும், தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் வெள்ளிக் கிழமை சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



இந்த ஆர்ப்பாட்டத்துக்கு தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன் தலைமை தாங்கினார்.

ஆர்ப்பாட்டத்தின்போது, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உருவப் பொம்மையைத் தீவைத்துக் கொளுத்தினார்கள்.

அப்போது அங்கு பாதுகாப்புக்கு நின்ற பொலிஸார் தடுத்து நிறுத்தி உருவ பொம்மையைக் கைப்பற்றினார்கள்.

பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த நிர்வாகிகள், தொண்டர்கள் என 500 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மத்திய அரசுக்கு எதிராக கோஷம் எழுப்பினார்கள். பின்னர் போராட்டம் நடத்தியவர்கள் அருகில் உள்ள சுங்கத் திணைக்கள அலுவலகத்தை முற்றுகையிட்டனர். (வ)

## மட்டு.பள்ளிவாசலில் திருடியவர் சிக்கினார்

மட்டக்களப்பு, ஜன.5
மட்டக்களப்பு கோட்டை முனை பகுதியில் அமைந்துள்ள அவுலியா பள்ளி வாசலின் உண்டியலை உடைத்துக் கொள்ளையிட முயன்ற ஒருவரை பொது மக்கள் மடக்கிப்பிடித் துள்ளனர்.

“ – ”
பணத்தை எடுக்கும்போது, பள்ளிவாசலில் கடமை யாற்றும் ஒருவர் அவரை மடக்கிப் பிடித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் தொழுகை முடித்து விட்டு அனைவரும் கலைந்துசென்றவேளை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

உண்டியலை உடைத்துக் கொள்ளையிட்டு பணத்தை எடுக்கும்போது, பள்ளிவாசலில் கடமையாற்றும் ஒருவர் அவரை மடக்கிப் பிடித்துள்ளார். அதனையடுத்து, குறித்த நபரை மட்டக்களப்பு பொலிஸாரிடம் நிர்வாகத்தினர் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு பிடிக்கப்பட்டவர் காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

# நாடு திரும்பிய அகதிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

*ஐ.நா. அகதிகள் பேரவை*

கொழும்பு, ஜன.5
கடந்த வருடம் நாடு திரும்பிய அகதிகளின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்திருப்பதாக ஐக்கிய நாடுகளின் அகதிகள் பேரவை தெரிவித்துள்ளது.

இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து இலங்கைக்கு மீண்டும் திரும்புகின்ற அகதிகளுக்கு ஐக்கிய நாடுகளின் அகதிகள் பேரவை உதவி வழங்கி வருகிறது.

கடந்த 2013 ஆம் ஆண்டு மொத்தமாக 718 அகதிகள் இலங்கைக்கு திரும்பியுள்ளனர். அவர்களுள் ஏழு பேர் மலேசியா மற்றும் மொரோக்கோ ஆகிய நாடு களில் இருந்தும் ஏனைய அனைவரும் தென்னிந்தியாவில் இருந்தும் நாடு திரும்பியவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் இந்த எண்ணிக்கை கடந்த 2012இ 2011 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பி டும் போது சடுதியாக குறைவடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. 2011 ஆம் ஆண்டு ஆயிரத்து 728பேரும்இ2012ஆம்ஆண்டு ஆயிரத்து 480 பேரும் சுய விருப்பத்துடன் இலங்கை திரும்பி இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் படி இலங்கையைச் சேர்ந்த ஒருலட்சத்து 24 ஆயிரத்து 436 பேர் பல்வேறு நாடுகளில் அகதிகளாக வசிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

## மக்களிடம் தந்திரமாகப் பேசி பணம் பறிக்கும் ஆசாமிகள்

யாழ்ப்பாணம், ஜன.5
யாழ்.நகரிலும், நகரை அண்டிய புறநகர்ப் பகுதியிலும் மக்களை தந்திரமாக மயக்கி பணம் பறிக்கும் ஏமாற்றுப் பேர்வழிகள் அதிகமாக நடமாடி வருகின்றனர்.

ஏமாற்றுப் பேர்வழிகளிடம் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் நகரில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு மண்ணெண்ணெய் வாங்க நடந்து சென்ற வயோதிபர் ஒருவரை மறித்த நபர் ஒருவர் குறித்த எரிபொருள் நிலையத்தில் மண்ணெண்ணெய் இல்லை. அதற்கு அடுத்த நிலையத்தில்தான் வாங்க வேண்டும். எனவே என்னிடம் தாருங்கள் என்று கூறி அவரிடம் ஆயிரம் ரூபாவையும் அதற்கான வெற்றுக் கானையும் வாங்கிக் கொண்டு தலை மறைவானார் அந்த ஆசாமி. சம்பந்தப்பட்டவரிடம் பணத் தையும் கானையும் கொடுத்து விட்டு நீண்ட நேரம் வீதியில் காத்து நின்ற அந்த வயோதிபர் ஏமாற்றத்துடன் திரும்பினார்.

அதனை விட பருத்தித்துறை வீதியில் கோப்பாய்ப் பகுதியில் பஸ்ஸுக்காக காத்து நின்ற ஒருவருடன்அந்த வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் உரையாடிவிட்டு உங்கள் வீட் டுக்காரன் 500 ரூபா வாங்கு மாறு கூறினார் என்று கூறிப்பணத்தைதந்திரமாகபெற்றுச் சென்றுள்ளார். (வ-17)

## இருநாட்டு மீனவரும் பேசினால் தான் தீர்வு

*தமிழ்நாடு காங். தலைவர் ஞானதேசிகன் தெரிவிப்பு*

சென்னை, ஜன.5
தமிழக மீனவர் பிரச் சினையில் இருநாட்டு மீன வர்களும் பேசவேண்டும். அவ்வாறு பேசினால் தான் நிரந்தரத் தீர்வு ஏற்படும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவர் பி.எஸ். ஞானதேசிகன் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை அவர் அளித்த பேட்டியின்போதே இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் 20 ஆம் திகதி மீனவர் பிரச்சினை தொடர்பில் பேச்சு நடைபெறும் என்று அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மீனவர் பிரச்சினைக்கு கச்சதீவு தான் தீர்வு என்று நான் கருதவில்லை.


கச்சதீவு பிரச்சினை தீர்ந்தால் தான் மீனவர் பிரச்சினை தீரும் என்பது தவறான கண்ணோட்டம்- என்றார்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## பொங்கலுக்கு முன்னர் மீனவர் விடுவிக்கப்படுவர்

*சுதர்சன நாச்சியப்பன் தெரிவிப்பு*

சென்னை, ஜன.5
இலங்கை சிறைகளில் உள்ள தமிழக மீனவர்களை பொங்கலுக்கு முன்பாகவே விடு விப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய இணைய மைச்சர் சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்தார்.



சென்னை விமான நிலையத்தில் நேற்று செய்தி யாளர்களிடம் பேசியபோது இவ்வாறு அவர் கூறினார்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் தமிழகத்தில் காங்கிரஸ் கூட்டணி குறித்து கட்சியின் தலைமை விரைவில் அறிவிப்பு வெளியிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ)

## செய்மதி உபகரணங்களுடன் கட்டுநாயக்காவில் ஒருவர் கைது

கொழும்பு, ஜன.5
சட்டவிரோதமான முறையில் செய்மதி உபகரணங்கள் மற்றும் வெங்காய விதைகளையும் இறக்குமதி செய்த நபர் ஒருவர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று அதிகாலை 4 மணிக்கு பெங்களூரிலிருந்து வந்த விமானத்தில் பயணித்துள்ளதாக விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமான நிலைய சுங்க அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து செய்மதி உபகரணங்கள் 60 மற்றும் பல உபகரணங்கள் 200 சுங்க பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப்பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

இதேவேளை சந்தேகநபரிடமிருந்து 50 கிலோ கிராம் பெரிய வெங்காய விதை களும் கைப்பற்றப்பட்டுள்ளன. கொழும்பைச் சேர்ந்த 43 வயதான சந்தேகநபர் ஒரு வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

உபகரணங்கள் மற்றும் வெங்காய விதைகளின் பெறுமதி 4 லட்சம் என்று விமான நிலைய சுங்க ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (வ)

## காணிகளை அபகரிப்பவர்கள் தொடர்பாக அதிக பிணக்குகள்

*கிளிநொச்சி பொலிஸார் தெரிவிப்பு*

அக்கராயன், ஜன. 5
கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து இந்தியாவில் தங்கியுள்ள குடும்பங்களின் காணிகளை சட்ட விரோதமான வகையில் அபகரிப்பவர்கள் தொடர்பான பிணக்குகள் அதிகளவில் காணப்படுவதாக கிளி நொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் இந்தத் தகவல் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியின் மலையாளபுரம், கிருஸ்ணபுரம், ஜெயபுரம் ஆகிய கிராமங்களில், இந்தியாவில் தங்கியுள்ள குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகளை பிறர் அபகரிக்கும் செயற் பாடுகள் அதிகளவில் இடம் பெறுவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மீளக்குடியமர்வின் பின்னர் காணிப் பிரச்சினை பூதாகரமாக உருவெடுத்துள்ளதாகவும், கிளிநொச்சி அரச அதிபர் காணிப்பிணக்குகளைத் தீர்ப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இங்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-18)

## மரண அறிவித்தல்



### திருமதி பத்மாவதி சதாசிவம்

ஆலடி ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி சதாசிவம் நேற்று (04.01.2014) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - மகேஸ்வரி தம்பதியரின் அன்புமகளும் செல்லையா சதாசிவத்தின் அன்புமனைவியும் சதீஸ்வரன் (MLT வவுனியா), பிரதீஸ்வரன், குகதீஸ்வரன், நிசாந்தீஸ்வரன், அமிர்தாலினி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும் உதயானந் (கனடா), வாசுகி, கீர்த்திகா ஆகியோரின் அன்புமாமியும் மிதுனமான்சிகா, திவானுகுபேரன், நிருஷா (கனடா) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடி, ஆனைக்கோட்டை.
077 2487741

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்ட விரோத மது விற்பனை; 264 பேருக்குத் தண்டம்

### சங்கானைப் பகுதியில்

யாழ்ப்பாணம் ஜன.5

சங்கானை மதுவரித் திணைக்களத்துக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த வருடம் சட்ட விரோதமாக மதுவரிக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 264 பேருக்கு 5 இலட்சத்து 6 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது என்று சங்கானை மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி என்.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

மதுவரித் திணைக்களத்தின் சட்டக் கோவைகளுக்கு அப்பால் சட்டவிரோதமாக மதுவரிக் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை மதுவரித் திணைக்களம் கண்காணித்து வருகிறது. அந்த வகையில் சங்கானை மதுவரித் திணைக்களத்துக்கு உட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக வீடுகளில் வைத்து கள் விற்பனை செய்தவர்களும், சாராயத்தை அனுமதி பெறாமல் வீடுகளில் வைத்து விற்பனை செய்தவர்களும் இனங்காணப்பட்டனர்.

> “–” சட்டவிரோதமாக மது வரிக் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை மதுவரித் திணைக்களம் கண்காணித்து வருகிறது.

கடந்த வருடம் 264 பேருக்கு எதிராக ஊர்காவற்றுறை, மல்லாகம் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போது 5 இலட்சத்து 6 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (வ-14)

## மல்வம் பொதுச் சந்தை திறப்பு



வலி.வடக்கு. ஜன.5

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் மல்வம் பொதுச் சந்தை, சபை நிதி மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டு சபையின் தவிசாளர் தி.பிரகாஸால் திறந்து வைக்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டின் வரவு -செலவுத் திட்டத்தின் மேலதிக வருமானத்தில் திட்டமிடப்பட்டு சபையின் அனுமதியுடன் ரூபா 7 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுப் புதுப் பொலிவுடன் தோற்றமளிக்கும் வகையில் மாட்டிறைச்சிக்கடை மற்றும் மீன், மரக்கறி விற்பனைக்கெனத் தனித்தனியே விற்பனைக் கூட இட ஒதுக்கீட்டுடன் குறித்த சந்தை அமைக்கப்பட்டுள்ளது.

உடுவில் மல்வம் ஞானப்பிரகாசர் சனசமூக நிலையத்தினர் கடந்த இரு வருடங்களாக பிரதேச சபையிடமிருந்து சந்தையைக் குத்தகைக்குப்பெற்று நடத்தி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஞானப்பிரகாசர் சனசமூக நிலையத் தலைவர் அன்ரன் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில் சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

திறப்பு விழா நினைவுக் கல்லும் திரைநீக்கம் செய்யப்பட்டது.

இதே போன்றதொரு சந்தையை இந்த வருடம் குப்பிளான் தெற்கு மயிலங்காடு பகுதியில் நிர்மாணிப்பதற்காக இந்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மிகவிரைவில் வேலைக்கான கேள்வி கோரப் படவுள்ளதாகவும் தவிசாளர் தி.பிரகாஸ் தெரிவித்தார். (வ-86)



யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி சந்திப் பகுதியில் வானும் மோட்டார் சைக்கிளொன்றும் நேற்று முன்தினம் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் உரிமையாளர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (வ-7-20)

## 20 ஆயிரம் ஏக்கர் நெற் பயிர் முல்லை மாவட்டத்தில் பாதிப்பு

அக்கராயன், ஜன.5

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறட்சி காரணமாக செய்கை பண்ணப்பட்ட 37 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கையில் 20 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அழிவு விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன என்றும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட நெற்செய்கை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

> “–” நெற் பயிர்ச் செய்கை அழிவுகள் தொடர்பாக விவரம் திரட்டும் பணி தற்போது இடம்பெற்று வருகிறது

வறட்சியால் முல்லைத்தீவு மாவட்டத்தின் மானாவாரி நெற்செய்கை முழுமையாக அழிவடைந்துள்ளது. குளங்களின் நீர்மட்டம் எதிர்பார்த்தளவு உயராமையால் குளத்து நீரை நம்பி மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை அழிவடையத் தொடங்கியுள்ளது. அழிவு விவரங்கள் தற்போது திரட்டப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்ட நெற்பயிர் அழிவுகள் தொடர்பாக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்;

நெற் பயிர்ச் செய்கை அழிவுகள் தொடர்பாக விவரம் திரட்டும் பணி தற்போது இடம்பெற்று வருகிறது- என்றார். (வ-18)

### வாய்க்காலை புனரமைக்க கோரிக்கை

வரணி கரம்பைக் குறிச்சி கிராம அலுவலர் பிரிவில் திக்கில் குளம் வாய்க்காலை புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்களால் தென்மராட்சி பிரதேச செயலரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. குறித்த வாய்க்கால் நீண்ட காலம் புனரமைக்கப்படாமையால் அந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ள வயல் வெளியில் போதிய நெல் விளைச்சல் இல்லையென்றும் வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த மனுவை பிரதேச செயலர் பரிந்துரை செய்து பிரதி விவசாயப் பணிப்பாளருக்கு அனுப்பி சம்பந்தப்பட்ட வாய்க்காலை புனரமைத்துக் கொடுக்குமாறு கோரியுள்ளார். (வ-122)

## இரணைமடுக் குளத் தண்ணீரை பருகுவதற்கு மட்டுமே பயன்படுத்துக

### நல்லூர் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், ஜன.5

யாழ்.மாவட்ட குடிதண்ணீர் திட்டத்தில் இரணைமடுக் குளத்தில் பயன்பெறும் விவசாயிகளினதும் மக்களினதும் தேவைக்கு மேலதிகமாகவுள்ள நீரை மட்டுமே பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு கிடைக்கும் நீரை குடிதண்ணீருக்காக மட்டுமே பயன்படுத்த யாழ்.மாவட்ட மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று பொதுமக்களைக் கோரும் தீர்மானத்தை நல்லூர் தெற்கு ஜே/108 கிராம அபிவிருத்திச் சங்கம் கடந்த வாரம் நடைபெற்ற சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றியுள்ளது.

இது தொடர்பாக சங்கத் தலைவர் எஸ்.லோகசிவம் செயலாளர் சி.சங்கரப்பிள்ளை ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:-

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம் தொடர்பாக கிராம அபிவிருத்திச் சங்கத்தில் ஆராயப்பட்டது. எதிர்காலத்தில் யாழ். மாவட்டத்தில் ஏற்படப்போகும் குடிதண்ணீர் பிரச்சினைக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையாலும் நீர் வழங்கல் மற்றும்வடிகாலமைப்பு அமைச்சாலும் முன்மொழியப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம் யாழ். மாவட்டத்துக்குக் கிடைத்த வரப்பிரசாதமிக்க வரலாற்று நிகழ்வு.

இரணைமடுக் குளத்துக்கு மகாவலி ஆற்று நீரையும் வீணாக கடலுடன் கலக்கும் வேறு ஆற்று நீரையும் திசை திருப்பக்கூடியதான எதிர்காலத் திட்டங்களை சம்பந்தப்பட்டவர்கள் வகுக்க வேண்டும். இது தொடர்பான உறுதி மொழிகளை கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு வழங்கி அவர்களின் சந்தேகங்களைப் போக்கவும்நடவடிக்கை எடுக்கவேண்டும். இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்களுடன் தொடர்பு கொள்ளப்படும்என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (வ-7)

## காப்புறுதிக் கொடுப்பனவு பெற நெற் செய்கையாளர்கள் முயற்சி

தென்மராட்சி, ஜன.5

தென்மராட்சி பிரதேச நெற்செய்கையாளர்கள் நெற்பயிர்க் காப்புறுதிக் கொடுப்பனவு தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு வருகின்றனர்.

பிரதேசத்தில் போதிய மழை வீழ்ச்சியின்மையால் நெற்பயிர்கள் அழிவடையும் நிலை காணப்படுகிறது. மழை இனிமேல் பெய்தாலும் சிறந்த விளைச்சலை எதிர்பார்க்க முடியாது என்பதால் நெற்செய்கையை கைவிட்டுள்ளனர்.

சில இடங்களில் நெற்பயிர்கள் அழிக்கப்பட்டு உப உணவுப் பயிர்கள் பயிரிடும் பணிகள் இடம் பெற்று வருகின்றன. காலபோக நெற் செய்கைக்கான மானிய உர வகைகள் வழங்கப்பட்டபோது நெற்பயிருக்கான காப்புறுதிப் பணமும் செலுத்தியுள்ளதால் நெற்பயிர் அழிவு தொடர்பாக தமக்கு ஏற்பட்ட இழப்புக்கு காப்புறுதி பெறுவதற்கு உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வருவதாக நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, நெல் விதைப்புச் செய்யப்பட்ட வயல்களில் நெற்பயிர்களை அழித்து மாற்றுப் பயிர் நடவுள்ள வயல்கள் காப்புறுதி நிறுவனத்தினரால் பார்வையிடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## புகையிலைப் பயிர்கள் அழிக்கப்பட்டு மீள் நடுகை

வடமராட்சி, ஜன.5

புகையிலைச் செடிகளுக்கு மஞ்சள் இலைக்குருத்து நோய் ஏற்பட்டதால் வடமராட்சிப் பிரதேசத்தில் பயிரிடப்பட்ட புகையிலைப்பயிர்கள் அழிக்கப்பட்டு, மீள் நடுகை செய்யப்பட்டு வருகின்றன.

பாத்தி கட்டி நீர் இறைக்கும் நிலை வருவதற்கு முன்னரேயே இலைக்குருத்து நோய் வந்துள்ளதால் புகையிலைச் செடிகள் முற்றாக அழிக்கப்பட்டு



மீள்நடுகை துரிதகதியில் இடம் பெற்று வருகின்றது.

புகையிலை நாற்று விளைச்சல் அதிகரித்துள்ளதால் மீள்நடுகைக்கு போதிய புகையிலைநாற்றுக்களைப் பெறக்கூடியதாக இருக்கின்றது. (வ-173)

## கசிப்பு விற்பனையால் மக்களுக்கு அசௌகரியம்

தென்மராட்சி, ஜன.5

மட்டுவில் தெற்கு கல்வம் சிவன் ஆலயத்துக்கு அருகில் கசிப்பு விற்கப்படுவதால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பகுதியில் உள்ள பற்றை மறைவுகளில் உற்பத்தி செய்யப்படும் கசிப்பு மாலை வேளைகளில் விற்பனை செய்யப்படுவதாகவும் இதனை அருந்தி விட்டு வீதிகளில் நிற்போர் அவ்வழியே செல்லும் மாணவிகள், யுவதிகள், பெண்கள் ஆகியோரை தலைகுனிய வைக்கும் விதத்தில் தகாத வார்த்தைகளால் ஏசுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆலயத்துக்கு சிறிது தூரத்தில் உள்ளதவறணைக்கு அருகிலும் கசிப்பு வியாபாரம் இடம் பெறுவதாகவும் தெரிவித்த அந்தப் பகுதி மக்கள் அதைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றுதெரிவித்தனர். (வ-9)

## பாடசாலை மாணவருக்கு ஊக்குவிப்புக் கொடை

யாழ்ப்பாணம் ஜன.5

வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளரால் வலி.மேற்கு பிரதேசத்துக்கு உட்பட்ட 100 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் ஊக்குவிப்பு கொடை இந்த மாதத்திலிருந்து வழங்கப்படவுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட மற்றும் தாய், தந்தையரை இழந்த மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அவை வழங்கப்படும். இதற்கான விண்ணப்பப் படிவம் இந்த மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் வலி. மேற்கு பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் நேரடியாக பெற்றுக்கொள்ளலாம் என்று வலி.மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் தெரிவித்தார். (வ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STUDY MBBS INDIA

2014 ஆண்டிற்கான நுழைவுகள்
ஆங்கில மொழியில்



RECOGNIZED BY: SLMC, Europian Medical Association, Medical Council of India, GMC-UK, ECFMG-USA & WHO

இந்தியா - JJM Medical College
Affiliated to Rajive Ghandhi University

சீனா - Dalian Medical University

ஐரோப்பா - Georgia
Tbilisi State Medical University

கட்டணம்
US$ 4500
ஒரு வருடத்திற்கு

(சி/11138)

பெங்களூர் பல்கலைக்கழகம்

**Programs After A/L's**

- B.Sc. - Biotech/Micro/Genetics
- Business Management
- B.Sc. - IT
- B.Com
- Bachelor of Engineering
- B.A. - Journalism/English/Psychology
- B.Sc. - Fashion & Apparel Design
- B.Sc. - Medical Lab Technology
- B.P.T. - Physiotherapy
- BE - Bachelor of Engineering
- Pre-Medicine Course available for students without A/L

**ICAM கல்வி நிறுவனம்**
17 A, Kassapa Road, Colombo 05
0773-039666 / 011-2593933 / 0773-022177 | www.icam.lk

## காணி விற்பனைக்கு

கோப்பாயில் வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு. (சி/11150) (2.6.3)
தொடர்பு:077 595 3196

## முச்சக்கரவண்டி விற்பனைக்கு

நீல நிற முச்சக்கரவண்டி விற்பனைக்கு உண்டு. Qx..., 175, 19km வீட்டுப் பாவனையில் இருந்தது. (சி/11151)(2.6.3)
தொடர்பு:077 622 0729/077 365 0992

## Study & work

UK, Singapore, Malaysia, Latria, Poland, Lithuania, Romenia, Russia, Italy, Swiss, German மிக விரைவில குறைந்த கட்டணத்தில் அனுப்பி வைக்கப்படும். Singapore இல் ஒரு வருடம் படித்த பிறகு Europ செல்லும் வசதி உண்டு. 077 363 7864
(சி/11152)(2.6.3)

## தேவை

கட்டட நிர்மாணத்துறையில் பல வெற் றிடம் மேசன்/ செடலின் பாஸ்/ கம்பிபாஸ்/பெயின்டர்/இலற்றீசன்/ வெல்டர்/கை உதவியாளர் வெற்றிடம் (கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் வேலை வாய்ப்பு) சம்பளம் 25000/-, 45000, உணவு, தங்குமிடம் உண்டு. (43582)
தொடர்பு:077 556 1883 (45.6.3)

## அறை வாடகைக்குத் தேவை

யாழ். நகர் மத்தியில் முகாமையாளர் ஒருவருக்கு சகல வசதிகளையும் கொண்ட அறை வாடகைக்குத் தேவை. (42005)(4.6.3)
தொடர்பு: 077 239 5714

## விற்பனைக்கு

XQ xxxx CD Dulex மோட்டார் சைக்கிள் 78-xxxx Land master விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 076 608 4139 (33063)(4.6.3)

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் மற்றும் திருநெல்வேலி, கோண்டாவில் ஆகிய இடங்களில் தனி வீடு வாடகைக் குத் தேவை.
தொடர்பு: 077 759 5307 (42003) (2.6.3)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு அருகில் லோட்டன் (Lawton) வீதியில் இரண்டரைப் பரப்பு (2½)வெற்றுக்காணி விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 617 0037

## தேவை

பழைய காகிதாதிகள், புத்தகங்கள், கொப்பிகள் என்பன மீள் சுழற்சி பயன்பாட்டுக்காகக் கொள்வனவு செய்யப்படும். அலுவலக ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனடியாக உருமாற்றம் செய்யப்படும்.
தொடர்பு: 077 418 0185 (41966) (2.6.3)

## நிரந்தர தொழில் வாய்ப்புக்கள்

நிரந்தர தொழில் வாய்ப்பினை எதிர்பார்க்கிறீர்களா? எங்களது தொழிற்சாலைகளான டொபி,ஜேம்,கோடியல், கோழிஇறைச்சி, பொலித்தீன்,Paint,Brush,Battery போன்றவற்றில் உற்பத்தி/லேபல்/பொதியிடல்/Loading/unloading போன்ற பிரிவில்18 - 55 வயது வரையான ஆண், பெண் இருபாலாருக்கும் குறைந்தவிலைகளில் சாப்பாடு தங்குமிட வசதியுடன் 18,000/=, 38,000/= வரையான சம்பளங்களுடன் வேலை வாய்ப்புகள். தொடர்பு: 077 711 7661
(43581) (45.6.3)


## மணமகள் தேவை


யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1979 ஆயிலியம், கிரகபாவம் 55 செவ்வாய்க் குற்றமற்ற டாக்டர் மணமகனுக்குப் படித்த அழகிய மணமகள் தேவை. (சி/109427) (2.6.3)
தொடர்பு: 077 723 4085, 071 416 8659
balagi_dr@yahoo.co.uk

## காணி விற்பனைக்கு

வவுனியா, குட்செட் வீதியில் அமைந்துள்ள, ஆலடி வீதியில் கிணறு, சிறிய வீட்டுடன் கூடிய 2 பரப்புக் காணியும் அதே வீதியில் அமைந்துள்ள மதில் கட்டிய 1½ பரப்புக் காணியும் விற்பனைக்குள்ளது.
தொடர்பு: 024 222 5365
077 110 6739
077 077 7573

## University of Mysore
In Sri Lanka








# ENROLL NOW !
## 2014 ADMISSIONS OPEN

**Global Recognition**
**Affordable Fees**
**On Campus Labs**

### ALL 3 YEARS IN SRI LANKA

- 1st University in India to be awarded the 5 Star status.
- The 6th oldest university in India.
- Established in 1916 and stands magnificent at 98 years.
- Top Ranking University in the Association of Common wealth Universities.

**Your Opportunities:**

**BSc**
- ★ Biotechnology, Biochemistry & Microbiology
- ★ Chemistry, Botany & Food Science
- ★ Chemistry, Geology & Environment Science

**BSc**
- ★ Math, Statistics & Computer Science
- ★ Math, Statistics & Physics

**BA**
- ★ Psychology, Sociology & Criminology
- ★ English Literature, Journalism & Political Science

www.adinnovations.lk

Outreach Campus — Since 2002
**Spectrum Institute of Science & Technology**

SPECTRUM
HUMAN CAPITAL DEVELOPMENT

190, Galle Road, Colombo - 4.
(+94) (011) 2554848 (+94) (011) 2504742
info@spectrumcampus.net
www.spectrumcampus.net

Hot Lines:
077 2278927
075 5459588
077 4549040

(சி/11137)

## உடனடியாக தேவை

எமது வவுனியாவில் உள்ள தனியார் காரியாலயத்திற்கு சிங்களம் பேசக் கூடிய தமிழ் பெண் எழுதுவினைஞர் தேவை. (வயது - 28) பயிற்சி வழங்கப்படும். சம்பளம் 12000/=. தனியார் வகுப்புகளுக்கு செல்லாதோர் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 556 1883

## மலர்ந்திருக்கும் புத்தாண்டில் எங்களோடு இணைய ஓர் அரிய சந்தர்ப்பம்

**குழு I பதவி வெற்றிடம் - 12**
பதவிக்கான தகைமை - G.C.E (A/L) or G.C.E (O/L) 6 பாடங்களில் சித்தி.
வயதெல்லை 18 - 40.

**குழு II பதவி வெற்றிடம் - 15**
பதவிக்கான தகைமை -
G.C.E (O/L) *(பயிற்சி அடிப்படையில் தெரிவு செய்யப்படும்)*
வயதெல்லை 18 - 30

குறிப்பு: **021 569 8889, 077 346 6511** என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்களைப் பதிவு செய்த பின்னர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.
மேலதிக தகவல்கள் யாவும் நேர்முகத் தேர்வில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## கந்தையா சங்கரப்பிள்ளை

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும்
கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட
**கந்தையா சங்கரப்பிள்ளை**
03.01.2014 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
செய்திகேட்டு ஆறாத்துயரடைவதுடன் அவரது
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**பேரப்பிள்ளைகள்:**
வசிகரன்-துளசிமலர் (உரும்பிராய்)
சிறிதரன்-நளாயினி(கனடா)
சிவகுமார்-சியாமினி(கனடா)
சிவகணேஸ்(கனடா)
பிரசாந்(கனடா)

**பூட்டப்பிள்ளைகள்:**
ஐதுர்ஷன்,ஜாதுளன், விஷாலினி, அனிஷ்,
(41994)(5.6.4) ஆகாஷ், அபினேஷ், மிதுஷா, மகிலா.

# எட்டாண்டு நிறைவின் இதயக்குமுறல்

மண்ணில் 05.08.1931 — விண்ணில் 05.01.2005



அமரர்
## வே.க.பாலசிங்கம்
(கலைமகிழ்நன்)

வையத்தில் வாழ்வாங்கு
வாழ்ந்து வாழ வைத்து
பாருளோர் புகழ்ந்தேத்த
பெருமையாய் வாழ்ந்த தெய்வம்
இகவாழ்வில் சுமை துறந்து
இறைபணியைத் தொடர்ந்திட
குமரனடி போற்றி செய்வோம்.

பவளம் - பாலசிங்கம்,
செந்தில்பதி, பொலிகண்டி.

# ஈராண்டு நினைவலைகள்

தோற்றம்
29.04.1945

மறைவு
29.12.2011



## திருமதி இராஜேஸ்வரி சுப்பிரமணியம்

திதி: 05.01.2014

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
நீர் பூத்த கண்களோடும்
நீங்காத நினைவுகளோடும்
மண்ணில் நாம்
வாழும் வரையும்
அன்னையே!
பெற்ற பிள்ளைகள் நாம் - நின்
பாசத்தையே நித்தமும்போற்றிப்
பூஜித்திருப்போம்தாயே!
ஆறாத்துயர் கொண்டு
இப்பொழுதும்
அழுது புலம்புகிறோம்ஆனாலும்
உம் ஆத்மா சாந்தியடைய அருள்மிகு
கலட்டி அம்மனை வேண்டி நிற்கின்றோம்.

சூசையப்பர் வீதி,
பத்தமேனி, அச்சுவேலி.
(41590)(45.6.8.)

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தினர்.
குணசேகர் (மகன் - கண்ணன்) 077 845 4972

# இரண்டாம் ஆண்டு கண்ணீர்ப் பூக்கள்

திருமதி
## மகேஸ்வரி புலேந்திரராஜா

(இளைப்பாறிய எழுதுவினைஞர்
கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்)
திதி: சுவர்க்கவாயில் ஏகாதசி
(11.01.2014)



"நிலவைக் காட்டித்
தமிழை ஊட்டியவள்
நிலத்தை அளந்தவள்
குழியில் வீழ்ந்தாள்"

கண்ணீருடன்:
பூ.புலேந்திரராஜா J.P., Rt.AO,
(நல்லை அமிழ்தன்),
Eng பு.திலீப்காந்த் MSc,
(ஆஸ்திரேலியா).

புதிய செம்மணி வீதி,
யாழ்ப்பாணம்.

நெல்லை 09.10.1942 — நல்லை 05.01.2012

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி பரமேஸ்வரி இரத்தினசபாபதி

வேலணை மேற்கு, 8ஆம் வட்டாரம்
திதி: நவமி

பிறப்பு 03.09.1934 — இறப்பு 05.01.2013

குல விளக்கே எங்கள் அம்மா
எம்மை விட்டு எங்கு சென்றீர்கள்
எங்கள் ஒளி விளக்கே அம்மா
உங்கள் நினைவால் நித்தம் வாடுகின்றோம்
வருடம் ஒன்று சென்றதம்மா உங்கள் முகம் கண்டு

எங்கள் இல்லம் இருளாய்ப் போனதம்மா
உங்கள் திருமுகம் பாராமல்
ஏங்கித் தவிக்கின்றோம் அம்மா
உங்கள் புன்னகை காணாது
உள்ளம் வாடி நிற்கின்றோம் அம்மா

அன்பு காட்டி எம்மை அரவணைத்து என்றும்
புன்னகைத்த வண்ணம் உறவுகளோடு உறவாடி
ஊர் கூடி விருந்தோம்பிய
உங்கள் உத்தம பண்புகளை நினைந்து
நினைந்தழுகின்றோம் அம்மா

ஆலம் விழுதுகள் போல்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
தாயின் பாசத்திற்கு நிகருண்டோ!
எங்கள் அம்மா.
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

(41998) (18.8.6)

உங்கள் பிரிவால் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள்
பிள்ளைகள் (கனடா, பிரான்ஸ்)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



இணுவிலைப் பிறப்பிடமாகவும்
கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட
## திருமதி செல்வரத்தினம் சிவயோகம்

கடந்த 02.12.2013 இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவியின்

வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (05.01.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் நினைவுப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible]
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
077 614 1728
(41954)(45.6.3)

குடும்பத்தினர்.

# ஆரிடம் நாங்கள் போக?



நோதலும் இழப்பும் போரால்
நுவலரும் துன்பம் உற்றுச்
சாதலும் விதியாய்ப் போன
தமிழரை நினைந்து நீசெய்
ஈதலும் வலக்கை செய்வது
இட(து) அறியா தவாறு
போதரக் கண்டோம் ஐயா!
புகழைநீ நாட வில்லை!

நோயுனை வாட்டும் போதும்
நொடிந்தவர் தமைக்கை தூக்க
ஆயிரம் அறங்கள் செய்வது
அன்றி வேறு ஏதும் எண்ணாய்
தாய் தந்தை அற்ற பிள்ளை
இல்லாத உலகைக் காண
நீயிங்கு சூழ்ந்த தெல்லாம்
நினைந்து நெஞ்சுருகு கின்றோம்

'தெய்வம்' நீ இருக்கின்றாய் நாம்
செய்பணி இனிது முற்றும்.
உய்வம் என்றிருந்தோம் ஆனால்
ஓய்ந்ததுன் மூச்சுஎன் கின்றார்
செய்வதொன் றறியா திங்கு
திகைக்கின்றோம்; பணி முடிந்தா
ஐய வானுலகு சென்றாய்?
ஆரிடம் நாங்கள் போக?

*(லண்டன் தமிழ் அநாதைகள் அறநிதிய தலைவர் பொன்.தெய்வேந்திரம் மறைவு குறித்த அஞ்சலி)*

*கவிஞர் சோ.பத்மநாதன்*
*(தலைவர், சைவ வித்தியா விருத்திச் சங்கம்)*

## போரால் சேதமடைந்த ஆலயங்களைத் திருத்த நிதி

போரால் பாதிக்கப்பட்ட அதிக பாதிப்புக்குள்ளான ஆலயங்களைப் புனரமைப்பதற்காக இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நிதி வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 39 ஆலயங்களுக்கும் முல்லைத்தீவுமாவட்டத்தில் 67 ஆலயங்களுக்கும் மன்னாரில் 5 ஆலயங்களுக்கும் தலா 2 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டதாக கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசன் தெரிவித்தார். (வ-7)

## கைதடி ஊற்றல் மயானத்துக்கு அபிவிருத்திச் சபை

கைதடி கிழக்கு ஊற்றல் இந்து மயானத்தின் அபிவிருத்திச் சபைக்கான புதிய நிர்வாகத் தெரிவுகள் சனிக்கிழமை கைதடி கிழக்கு துர்க்கா சனசமூக நிலைய மண்டபத்தில் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் இ.துரைராஜா தலைமையில் நடைபெற்றது.

மேற்படி அபிவிருத்திச் சபையின் தலைவராக கைதடி செல்வா சனசமூக நிலையத்தைச் சேர்ந்த இ.கந்தசாமியும், செயலாளராக கைதடி வடக்கு சனசமூக நிலையத்தைச் சேர்ந்த கோ.கௌரிதாசனும், பொருளாளராக கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தைச் சேர்ந்த க.தயாகரனும் தெரிவாகினர். அத்துடன்11பேர்கொண்ட நிர்வாகசபையும்தெரிவு செய்யப்பட்டது.

இதேவேளை கைதடியிலுள்ள ஏனைய மூன்று இந்து மயானங்களுக்கும் இவ்வாறு புதியநிர்வாகசபை அன்றைய தினம் தெரிவு செய்யப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ-288)

## திருவாசகம் முற்றோதல்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயிலில் இன்று ஞாயிறு உதயகாலப் பூசைவேளையில் திருவாசகம் முற்றோதல் இடம்பெறும். (ஓ-36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

வன்னியில் செயற்பட்டுவரும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனமொன்றில் வெளிக்கள உத்தியோகத்தர் பதவியொன்றுக்கான வெற்றிடம் உள்ளது.

**தகைமைகள்:**

01.தமிழிலும் ஆங்கிலத்திலும் அறிக்கை தயாரிக்கத்தக்க திறமை
02.கணினி அறிவு கொண்டிருத்தல்
3.செல்லுபடியாகத்தக்க மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரம்

**மேற்குறிப்பிட்ட தகுதிகள் உடைய விண்ணப்பதாரிகள் E-mail ஊடாக விண்ணப்பிக்கவும்.**

**TRISRATNAM @ AOL.COM**
**AKANDA 18 @ HOT MAIL.CO.UK**

(சி/10945)(4.6.3) தொடர்பு:077 637 2695

## DUTCH(Netherlands)

மொழிகயை இலகுவாக கற்கவும் Embassy இனால் நடாத்தப்படும் விசாவுக்கான பரீட்சையில் சிறப்பாக சித்தியடையவும் நெதர்லாந்து நாட்டிலிருந்து வருகை தந்த ஆசிரியரினால் Audio, Video மற்றும் தமிழ் விளக்கங்களுடன் கற்பிக்கப்படுகிறது

**Netherland அரசாங்கத்தினால் April - 2012 லிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள M.V. V விசா பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்திற்கமைய புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளது ஏற்கனவே Netherland தூதரக பரீட்சையில் சித்தியடையாதவர்களுக்கும், கூடிய கவனம் தேவைப்படுகிறவர்களுக்கும் விஷேட வகுப்புக்களும் மாதிரிப் பரீட்சைகளும் தமிழ் விளக்கத்துடன் உண்டு**

மாணவர்கள் கவனத்திற்கு : இலங்கையில் போலியான ஆசிரியர்கள் இருப்பதாக எமக்கும் Netherland தூதரகத்திற்கும் தகவல் கிடைத்துள்ளது எனவே உங்களது ஆசிரியரை தெரிவுசெய்ய முன் நெதர்லாந்திலிருந்து உங்களை Sponcer செய்பவர் மூலம் நீங்கள் தெரிவுசெய்யும் ஆசிரியருடன் Dutch மொழியில் பேசி அவர் உத்தரவாதம் மிக்கவரா ? என்பதை உறுதிப்படுத்திய பின்னர் கற்கை நெறியை மேற்கொள்ளுங்கள். இதனால் உங்கள் பணம், நேரத்தை மிச்சப்படுத்தலாம்.........

Netherland தூதரகத்தினால் நீண்ட கால நம்பகத்தன்மை பெற்ற ஒரே International Language Academy

**Dutch Lanka Academy**
#69 -2/1, Galle Road, Dehiwala(Colombo).
Tel : 0777251332, 011 271 8811

குறிப்பு : இலங்கையில் எமக்கு வேறு கிளைகள் கிடையாது, குறிப்பாக யாழ்ப்பாணத்தில் எமக்கு கிளைகள் கிடையாது. (C/11143)

நெதர்லாந்து தூதரக பரீட்சையில் சித்தியடைவதற்கு 100 % உத்தரவாதம் அளிக்கப்படும். **Condition Apply

max adz

# VACANCY

## ASSISTANT SHOWROOM MANAGER (MALE) - COLOMBO 03

- Age below 30 years
- Proficiency in MS Office Package
- Should have a strong personality with very good interpersonal skills
- Fluency in Spoken & Written English
- Ability to work with positive attitudes
- Salary negotiable

max adz

**Please send your CVs to info@crafts.lk within one week.**

(C/11155) 250/1/09, 1st Floor, Liberty Plaza, R.A De Mel Mawatha, Colombo - 03. Phone : 0766060790

# உங்களுக்கு அவசரபணத்தேவை உள்ளதா?

# SINGER FINANCE

நாடுங்கள்

உங்கள் வாகனபுத்தகத்தை கொடுத்து
உங்கள் பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

(C/11142)

| தொடர்புக்கு | | |
|---|---|---|
| | தனு | 077 9 357 124 |
| | சுஜந்தன் | 077 7 391 449 |
| | பிருந்தன் | 078 5 000 917 |

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

## வைத்தியம்

சுவாமி ஆயுர்வேத ஆஸ்பத்திரி Home & Hotel Visit வயிறு சம்மந்தமான, ஆண்களுக்கான பிரச்சனை மற்றும் அனைத்து நோய்களுக்கும் ஒய்ல் மசாஜ் இந்தியா சிகிச்சை ஸ்பா ஆயுர்வேத மசாஜ் & ஸ்டீம் பாத் அர்சல் வியாதிகளுக்கும் @ மெனவ்ட் வெவனியா

**பிரியா**
0728 138 773
0777 204 921

## வீடு விற்பனைக்கு

சண்டிலிப்பாய், சித்தன்கேனி வீதியில் 29.02 பேர்ச்சஸ் (2.9 பரப்பு) வளவு 4 அறைகள் கொண்ட முற்றாக கட்டி முடிக்கப்படாத வீட்டுடன் விற்பனைக்கு உண்டு

**0776 463 843**

## இலவச இணையக் கற்கை நெறி நிறுவகம்
## SERVE e- Learning Institute

T.P:021 225 6206 பதிவு எண்:1100

கற்கைநெறி:-
இலவச Diploma In Information Communication Technology (ICT)
(4 மாதங்கள்)

தகைமைகள்:
- *க.பொ.த(உ/த) பரீட்சைக்கு தோற்றிப் பல்கலைக்கழக அனுமதியை எதிர் நோக்குவோர்.
- *க.பொ.த(உ/த) பரீட்சையில் சித்தியடைந்து வேலை தேடுவோர் or வேறு தொழில் பயிற்சிகளை மேற்கொள்வோர்.
- *க.பொ.த(சா/த) பரீட்சைக்குத் தோற்றியோர்.

பாடங்கள்:
தகவல் தொழில்நுட்பம் (ICT)
ஆங்கிலம் (English)
தட்டச்சுப் பயிற்சி (Computer Typing)

**விண்ணப்ப முடிவு திகதி: 10.01.2014**

மேலதிக விபரங்களுக்கு
No.66, கட்டைப்பாலி ஒழுங்கை,
ஆனைக்கோட்டை. தொலைபேசி:0212256206

மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்

பதிவாளர்
SERVE e-Learning Institute

(41991)(10.6.3)

CEYLON THEATRES

**இப்பொழுது காண்பிக்கப்படுகிறது**

**MAJESTIC CINEPLEX AT Cargills SQUARE யாழ்ப்பாணம்**
(Opposite Jaffna Teaching Hospital)

**Silver 10.30am, 2.30pm, 6.30pm**

விசாரணை ☎ 021-2227712

குடும்பத்தோடு பார்க்கவேண்டிய யதார்த்த த்ரில்லர்

CEL வெளியீடு JSK FILM CORPORATION J. SATISH KUMAR Presents

மதயானைக் கூட்டம்


விக்ரம் சுகுமாரன் (U) (C/11139) FLEX Graphic

www.facebook.com/CeylonTheatres Web: www.ceylontheatres.com

CEYLON THEATRES

**இப்பொழுது காண்பிக்கப்படுகிறது**

முதல் முறையாக யாழ்நகர்
**MAJESTIC CINEPLEX**
திரையரங்கில்
**3Dயில்**
பார்த்து அனுபவியுங்கள்




**THOR THE DARK WORLD**

MAJESTIC CINEPLEX - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)
**Platinum 10.30am, 2.30pm, 6.30pm**
(C/11140) விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres Web: www.ceylontheatres.com

## காணி விற்பனைக்கு

கரந்தன் சந்திக்கு முன்பாக இராச வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (41987)(2.6.3)

தொடர்பு:077 118 5263, 077 625 8805, 077 015 5297

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



35 வருடங்களுக்கும் மேலாக வயலின் இசையில் தடம் பதித்து இன்றும் இசை வளர்ச்சியில் பெரும் பங்காற்றிக் கொண்டிருக்கும் எமது ஆசான் கலாவித்தகர் **கிருஸ்ணசாமி பத்மநாதன்** [இணுவில்] அவர்கள் "**கலாபூஷண விருது**" பெற்றமையைப் பாராட்டுவதுடன் அவரின் இசைப் பணி தொடர விரும்பி இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

நல்லூர் நாவலர் மணி மண்டபம்.

வாழ்த்துவோர்:
**வயலின் கற்கும் மாணவர்கள்.**

(42008)(2.6.3)

## மணிவிழா நாயகரை மனமகிழ்ந்து வாழ்த்துகிறோம்



இன்று (05.01.2014) ஞாயிற்றுக்கிழமை மார்கழிச் சதய நன்நாளில் அறுபது அகவைதனை நிறைவுசெய்து "ஷஷ்டியப்த பூர்த்தி" விழாக் காணும் "கோப்பாய் சிவம்" **பிரம்மஸ்ரீ பஞ்சாட்சர சிவானந்தசர்மா ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி** தம்பதியர் சகல செல்வ போகம்மிக்க பெருவாழ்வு பெற நீர்வை அரசகேசரி விநாயகர், நீர்வைக்கந்தன் திருவடிகளைப் பிரார்த்தித்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வாழ்த்தும் :
சிவஸ்ரீ.நீர்வை மணி - கு.தியாகராஜக்குருக்கள் குடும்பத்தினர்.
சிவஸ்ரீ.சாம்பசதாசிவ - சோமதேவக் குருக்கள் குடும்பத்தினர்.
சிவஸ்ரீ.இராஜேந்திர - சுவாமிநாதக் குருக்கள் குடும்பத்தினர்.
பிரம்மஸ்ரீ.இ.பாலமுருகன் சர்மா குடும்பத்தினர்.
நீர்வை வாழ் அந்தண சமூகத்தினர்.

(42007)(7.6.3)

## CENTRAL FINANCE COMPANY PLC

**பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் மாபெரும் மலிவு விற்பனை**




சென்றல் பினான்ஸ் கம்பனி பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் இருப்பினை முடிவுறுத்தும் முகமாக மாபெரும் விலைக்கழிவில் விற்பனையை மேற்கொள்கின்றது. குத்தகை (லீசிங்Leasing) அடிப்படையில் பெற்றுக்கொள்ளலாம்

காலம்: ஜனவரி 6 ஆம், 7 ஆம் திகதிகளில்
நேரம்: காலை 8.30 முதல் மாலை 5 மணி வரை
இடம்: இல.364, பிரதான வீதி, யாழ்ப்பாணம். சென்றல் பினான்ஸ் கம்பனி

இருப்புள்ளவரை மட்டுமே

**Central Finance Company PLC, 364, Main Street. Jaffna.**

நிபந்தனைக்குட்பட்டது.

தொடர்பு: 021 222 1608, 077 410 9151, 077 361 8100, 077 258 8352
(42006)(3.6.4)

## VACANCIES FOR IMMEDIATE APPOINTMENT

**SERVE eLearning Institute,**
66, Kattapali Lane, Anaikoddai, Jaffna.
+94 21 2256206

**1.REGISTRAR**
- Should have Very Good skills in writing reports in English using MS Word and Excel. Skills in Office management, filing and supervision of Security Staff.
- Working hours Monday through Saturday from 8 AM to 5 PM with 1 hour lunch break
- Attractive remuneration will be given. Retired officers also can apply.

**2.ENGLISH LECTURER**
- On an hourly basis teaching to ICT Diploma students
- Should have competent in the use of computers and Internet.
- Retired English teachers will be given preference

**3.COMPUTER TECHNICAL ASSISTANT**
- Full time work
- Should have good knowledge in both Software and Hard ware (Preferably in MS office 2010, Video editing, Local Area Network, internet, email, installation & trouble shooting)

Please forward your self-prepared application with your curriculum vitae to 66, Kattapali Lane, Anaikoddai, Jaffna, via registered post or by hand to reach the office during working hours on or before 10th of January 2014. There will be an interview for short listed suitably qualified candidates.

**Director.** (41992)(10.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 149

நீங்கள் வைத்தியரிடம் நேரடியாக கேட்கத் தயங்கும் சுகாதாரம் சம்பந்தமான விடயங்களை கேட்பதற்கும், உடல் பரிமாணங்களை சரியான அளவில் பேணுவது எப்படி? என்பது பற்றிய தகவல்களையும், உடல் எடையை குறைப்பது எப்படி? முடி உதிர்வதை தவிர்ப்பது சம்பந்தமான விடயங்களை அறிவதற்கும் மற்றும் பல காணொலிகளையும், புதிய சுகாதார தகவல்களையும் அறிந்து கொள்ளவும். எமது சுகாதார இணையத்தளமான **www.jaffnadiabetic centre org** க்கு தினமும் சென்று பயன் பெறுங்கள்.

நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

# உடல்நிறை குறைப்பு ஒரு இலகுவான கலை

## பகுதி 2

சென்றவாரத் தொடர்ச்சி..........

"கண்டது கற்றவன் பண்டிதன் ஆவான் கண்டதை உண்டவன் பண்டிபோல் குண்டாவான்" என்று பலரும் பேசுவதைக் கேட்டிருக்கிறோம். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்று நம் முன்னோர்கள் கூறிவைத்திருக்கிறார்கள். எனவே நாம் எமது முன்னோர்களின் கருத்துக்களையும் கருத்தில் எடுத்து ஆரோக்கியமாக, சுவையாக, நிறைவாக உண்டு, எமது நிறையை சரியான அளவில் பராமரிக்கும் கலையை கற்றுக்கொள்ள முயலுவோம்.

நிறையைக் குறைத்துக் கொள்வதற்கு பட்டினி கிடக்க வேண்டிய அவசியமில்லை. பட்டினி கிடந்து நிறையைக் குறைத்துக் கொள்வது உடல் ஆரோக்கியத்துக்கும் நல்லதல்ல. நிறை குறைப்பதற்கு முயற்சி எடுக்கும் காலத்திலே ஆரோக்கியமான உணவு வகைகளை உண்ணுவதை நிறுத்த வேண்டிய அவசியம் இல்லை. இந்தக் காலத்திலே சுவையான உணவு வகைகளை உண்ண முடியாது என்று தப்பபிப்பிராயமும் கொள்ளத் தேவையில்லை. சரியான நடவடிக்கைகள் மூலம் உடல் நிறையைக் குறைத்தால், வரும் காலங்களில் உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும் என்று பயப்பட வேண்டிய அவசியமும் இல்லை.

உடல் நிறையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்ற ஓர் உணர்வு பல்வேறு தரப்பினரிடையேயும் குறிப்பாக இளம் வயதினரிடையே மேலோங்கி வருவது ஒரு நல்ல அறிகுறியாகும். உடல் நிறையைக் குறைத்துக் கொண்ட பலர் களைப்பு நீங்கி மூட்டு நோ, நாரிநோ என்பன குறைந்து பல்வேறுபட்ட நோயின் தாக்கங்கள் குறைந்து பாவிக்கும் மருந்துகளையும் குறைத்துக் கொண்டு ஆரோக்கியமாக வாழ்வது மேலும் பலரை நிறைகுறைக்கும் முயற்சியில் ஈடுபடுவதற்கு தூண்டுகோலாக இருக்கிறது.

ஒருவர் அளவான உடல் நிறையைப் பேணுவது அவர் வாழும் காலத்தை அதிகரிக்கச் செய்வதுடன் அவரது செயற்திறனையும் கூட்டும் என்பது பல ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அதிகரித்த உடல்நிறை பல்வேறு நோய்களுக்கு இட்டுச் செல்லும் என்ற விடயத்தை பொதுவாக அனைவரும் அறிந்து வைத்திருக்கிறார்கள். உடல் நிறையைச் சரியான அளவில் பேணாதவர்களுக்கு நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், பாரிசவாதம், மூட்டு சம்பந்தமான நோய்கள், நாரி சம்பந்தமான நோய்கள், புற்று நோய், மாரடைப்பு, நுரையீரல் சம்பந்தமான நோய்கள், மாதவிடாய் கோளாறுகள், கர்ப்பம் தரிப்பதில் தாமதம், குடும்ப வாழ்வில் ஆரோக்கியக் குறைவு போன்ற சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் உள்ளது.


ஒருவருக்கு நிறையைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டு அதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது சம்பந்தமான தெளிவும் ஏற்படுமாயின் நிறையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது மிகவும் இலகுவானது.

இனிவரும் பகுதிகளில் இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது சம்பந்தமாகப் பார்ப்போம்.

தொடரும்...........



**Dr.S.சிவன்சுதன், MD**
பொது வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.





# குழந்தைகளினதும், பிள்ளைகளினதும் உணவூட்டல் முறைகள்

கடந்த வருடங்களில், இலங்கையில் மந்த போசணையுள்ள குழந்தைகளினதும், வளர்ச்சி குறைந்த குழந்தைகளினதும் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து வந்துள்ளது. எனினும், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் போசனைக் குறைபாடு ஒரு பெரும் பிரச்சினையாக இப்போதும் உள்ளது. ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில், ஏறத்தாழ 30 சதவீதமானோர் நிறை குறைந்த குழந்தைகளாகவும், 14 சதவீதமானோர் வயதுக்கேற்ற வளர்ச்சி இல்லாதவர்களாகவும் உள்ளனர். மேலும், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 30 சதவீதமானோர் இரும்புச் சத்துக் குறைபாட்டு குருதிச் சோகையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(ஆதாரம் : குடும்ப சுகாதார பணியகம்)

கர்ப்பிணிப் பெண்களினதும், இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளினதும் சரியான போசாக்கு, பிற்காலத்தில் ஒரு சௌக்கியமான மனிதனை சமூகத்துக்கு வழங்கும் என்பது விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. சரியான போசனையை குழந்தைகளும், இளம் பிள்ளைகளும் பெறவில்லையாயின், பிற்காலத்தில் வளர்ந்தபின் அவர்கள் பின்வரும் பிரதான விளைவுகளை எதிர்நோக்க நேரிடலாம்.

1. தொற்றா நோய்களான நீரிழிவு, குருதியமுத்தம் போன்றன அதிகமாக ஏற்படலாம்.
2. வேலை செய்வதற்கான உடற் சக்தி இன்மையால் முழுமையான பலத்தை வேலைத்தலங்களில் உபயோகிக்க முடியாது.
3. புத்திக்கூர்மை (I.Q), ஞாபக சக்தி என்பன குறைவடையலாம்.
4. பெண்களாயின், பிறக்கும் குழந்தைகள் நிறை குறைவாக இருப்பதுடன், பிள்ளைப் பேற்றின்போது சிக்கல்கள் பல ஏற்படலாம்.

சுகாதாரத் திணைக்களத்தின் 2000 ஆம் ஆண்டுக்கான தகவல்களின்படி, குழந்தைகளில் போசனைப் பிரச்சினைகள் ஆறு மாதமளவில் ஆரம்பித்து தொடர்ச்சியாக இரண்டு வயது வரைக்கும் அதிகரித்துள்ளது. இதற்கான பிரதான காரணி தவறான மேலதிக உணவூட்டல் முறைகளாகும்.

**ஏன் மேலதிக உணவூட்டலை ஆரம்பிக்க வேண்டும்?**

1. வளர்ந்துவரும் குழந்தைக்குத் தேவையான அனைத்துப் போசனையையும், ஆறு மாதங்களின் பின்னர் தாய்ப்பாலினால் மட்டும் வழங்க முடியாது.
2. குழந்தைகளை பலவிதமான உணவுகளின் சுவைக்கும் தன்மைக்குப் பழக்கப்படுத்தி அவர்கள் ஒரு வயதளவில் குடும்ப உணவுகளை உண்ண வாய்ப்பளித்தல்.
3. குழந்தைகளின் வயதுக்கும், வளர்ச்சிப் படிநிலைகளுக்கும் ஏற்ப உணவருந்தும் முறைகளைப் பழக்கப்படுத்துவதுடன், இரண்டு வயதளவில் தாமாகவே தமது உணவுகளை உண்ணக் கூடியவர்களாக உருவாக்குதல்.

**தனித் தாய்ப்பாலூட்டல் எவ்வளவு காலத்துக்குக் கொடுக்கப்படல் வேண்டும்? எப்போது மேலதிக உணவூட்டலை ஆரம்பிப்பது?**

தனித் தாய்ப்பாலூட்டலை 6 மாதம் முடியும் வரை (180 நாள்கள் வரை) மேற்கொள்வது மிகமிக நன்மையளிக் கக் கூடிய விடயமாகும். அதன் பின்னர் தாய்ப் பாலூட்டலைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டே படிப்படியாக மேலதிக ஆகாரங்களை வழங்க வேண்டும்.

**ஆறு மாதங்கள் முடியும் வரை தனித் தாய்ப் பாலூட்டலை வழங்குவது மட்டுமே போதுமானது என்பதற்கான ஆதாரங்கள் எவை?**

உலக சுகாதார நிறுவனம் (WHO) பின்வரும் ஆதாரங்களை முன்வைக்கிறது.

1. முழு மாதத்தில் பிறந்த, சாதாரண நிறையுள்ள ஒரு குழந்தைக்குத் தாய்ப் பாலிலுள்ள அனைத்துப் போசாக்கும் 6 மாதம் முடியும்வரை போதுமானதாகும்.
2. தனித் தாய்ப் பாலூட்டலை ஆறு மாதம் முடியும் வரை மேற்கொள்வதன் மூலம் தாய்ப் பாலிலுள்ள நோய் எதிர்ப்புச் சக்தியினால் குழந்தைகளுக்கு வயிற்றோட்டம் போன்ற குடல் வியாதிகளும், சுவாசத் தொற்று நோய்களும் , காதினுள்ளே கிருமித் தொற்றும் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவடைகின்றது.
3. மிகமுக்கியமாக தனித் தாய்ப்பாலூட்டல் 6 மாதங்கள் முடியும் வரைக்கும் வழங்கப்படும் குழந்தைகளின் மூளை வளர்ச்சியும், புத்திக் கூர்மையும், உடல் வளர்ச்சியும் அதிகரித்துக் காணப்படுவதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆறு மாதங்கள் முடியும் முன்பே மேலதிக உணவை அறிமுகப்படுத்தும்போது பிற்காலத்தில் ஒவ்வாமை (Allergy) என்பன ஏற்பட வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றது. எனினும், இரு சந்தர்ப்பங்களில் மேலதிக உணவூட்டலை 4 மாதங்கள் முடிவடைந்த பின் 5 ஆம் மாதத் தொடக்கத்திலிருந்தே ஆரம்பிக்கலாம்.

1. நோய்கள் ஏதுமற்ற குழந்தையொன்றுக்கு சரியான தாய்ப்பாலூட்டல் முறைகளை பின்பற்றியபோதும், குழந்தையின் நிறை அதிகரிப்பு வீதம் குறைவடைந்து செல்லுமாயின்.
2. தாய்க்குத் தொடர்ந்து வேலைத்தலத்திலிருந்து விடுமுறை கிடைக்காவிடினும் தாய்ப்பாலைக் கறந்து எடுத்து சேமித்து, பின்னர் குழந்தைக்கு கொடுக்க முடியாவிடினும் அவ்வாறு செய்யலாம்.

**மேலதிக ஆகாரங்களின் அளவும், சக்தியும் வழங்கவேண்டிய வேளைகளும்.**

மேலதிக ஆகாரமானது எப்போதும் தொடக்கத்திலிருந்தே ஓரளவு திண்மமாக வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் சிறிதளவு உணவாயினும் அதிகளவு போசனை குழந்தைக்கு கிடைக்கும். தொடக்கத்தில் 2-3 தேக் கரண்டியளவில் ஆரம்பித்து படிப்படியாக உணவின் அளவை அதிகரிக்க வேண்டும். ஆரம்பத்தில் குறைந்தது இரு தடவையாவது மேலதிக ஆகாரம் வழங்கப்பட வேண்டும்.

(தொடரும்....)

*Dr. ந.ஸ்ரீசரவணபவானந்தன்*
*குழந்தை வைத்திய நிபுணர்*
*யாழ். போதனா வைத்தியசாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொது அறிவித்தல் -2014

## 01. பட வரைஞராகப் பதிவு செய்தல்

2014ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2014ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும், புதுப்பித்துக்கொள்ளவும் தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

## 02. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2014

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலகங்களில் 2014ஆம் ஆண்டு ஜனவரி 20ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி அவ்அவ் உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2014 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade License) பெற்றுக் கொள்ளவும். 31.03.2014ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 03. ஆதன வரி அறிவித்தல் - 2014

3.1 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி 2013ஆம் ஆண்டு அறவிடப்பட்ட ஆதன வரி வீதத்தின் பிரகாரம் 2014ஆம் ஆண்டிற்கான ஆதன வரி அறவீடு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2014ஆம் ஆண்டிற்கான ஆதன வரியை 31.01.2014ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்த வரியில் 10% கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு, ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்தந்த கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதன வரியை செலுத்த தவறின் 15% விறாந்துக் கட்டணம் ஆதன வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே குறித்த ஆதன வரிகளை 31.01.2014ஆம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக் கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

3.2 மேலும் எமது சபை எல்லைக்குள் ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர்மாற்றத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

## 04. சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL - 2014)

இப்பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் சிறிய மற்றும் நடுத்தர வியாபார / தொழில் முயற்சிகளில் ஈடுபடும் சகலரும் தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தை 31.01.2014இற்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெறத் தவறுபவர்கள் 2014ஆம் ஆண்டு மேற் குறிப்பிட்ட வியாபார / தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் அறியத் தருகின்றேன்.

## 05. துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமம்

மேற்படி துவிச்சக்கர வண்டிகள், வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2014.03.31ஆம் திகதிக்கு முன் அவ்அவ் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2014ஆம் ஆண்டிற்கான வாகன, மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

## 06. வீடுகள், கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள், குழாய்க்கிணறுகள், கிணறுகள் அமைத்தலும், புதுப்பித்தல் / திருத்த வேலைகள் செய்தலும்

6.1 எமது நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் மேற்படி அமைப்பு வேலைகளை அனுமதியின்றி மேற்கொள்ளல் வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டம் பிரிவு - 268 இன் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே உரிய விண்ணப்பப்பத்திரங்களை அவ்அவ் உப அலுவலகங்களில் பெற்று சபையின் முன் அனுமதி பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு முன் அனுமதி பெறப்படாத கட்டடங்கள் யாவும் சட்டநடவடிக்கை மூலம் எதுவித நட்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

6.2 ஏற்கனவே அனுமதி பெற்று ஒருவருட காலத்தில் கட்டட வேலைகள் பூர்த்தியாகாதவிடத்து அவ்விண்ணப்பதாரிகள் அனுமதியினைப் புதுப்பித்துக்கொள்வதோடு கட்டடத்தை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

## 07. வீதி ஒழுங்கைப் பேணல்

சங்கானை நகர மையப்பகுதியில் அதிகரித்த போக்குவரத்துக் காரணமாக, விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளும் முகமாக வியாபார நிலையங்களுக்கு முன்னால் பொருள்களை வெளியே வைத்து விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன்.

## 08. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்

இப்பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இரு மருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும் / காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களை 31.01.2014ஆம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் / நிறுவனங்கள் / வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 01.02.2014ஆம் திகதிக்கு பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். கட்டண விபரம் பின்வருமாறு.

| தொ. இல | விபரம் | பிளாஸ்ரிக் (1சதுர அடி) | துணி (1சதுர அடி) |
|---|---|---|---|
| 1. | தனியார் வளவுகளில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் பிரசார பலகைகள் | ரூபா 50.00 | ரூபா 25.00 |
| 2. | பிரதான பாதைக்கு தெரியக் கூடிய விதத்தில் உள்ள இடத்தைப் பயன்படுத்தி பிரதான பாதைக்கு அருகில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள் | ரூபா 60.00 | ரூபா 30.00 |
| 3. | உள்ளூராட்சி மன்றங்களின் வளவுகளை பயன்படுத்திய வண்ணம் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள் | ரூபா 100.00 | ரூபா 50.00 |

## 09. பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்

வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருள்களை அனுமதியின்றி கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொது சுகாதாரத்தைக் கருத்திற் கொண்டு தடை செய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேச சபை கட்டளைச்சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

## 10. தரகர் முறை நீக்கல்

எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர்.

## 11. பொது சுகாதாரம் பேணுதல்

சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும், பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் பற்றைகளை துப்புரவு செய்து பொது சுகாதாரத்தினை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி நா.ஜங்கரன்
தவிசாளர்

வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
04.01.2014

(சி/10926)(7.6.3)

## நியமனம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்துக்கு புதிய உதவிப் பணிப்பாளராக ஐ.தபேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றிய இ.ஈஸ்வரராஜா பதவியில் இருந்து இடை நிறுத்தப்பட்டதை அடுத்து கடந்த 5 மாதங்களாக உதவிப் பணிப்பாளருக்கு உரிய பதவி வெற்றிடமாக விருந்தது.

கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் அதிகாரியாகக் கடமையாற்றிய ஐ.தபேந் திரன் கடந்த முதலாம் திகதி தொடக்கம் அப்பதவிக்கு நியமிக்கப் பட்டுள்ளார். (ந-14)


## பாரதி கல்வி நிலையத்தினரின் பாராட்டு வாழ்த்துக்கள்

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த
**செல்லையா விஸ்வலிங்கம்**
அவர்கள் கலாபூஷண விருது பெற்றமையையிட்டு
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சிறுப்பிட்டி வடக்கு. பாரதி கல்வி நிலையத்தினர்.

(சி/10940)(7.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த.உயர் தரத்தில் கலைப் பிரிவில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மாணவனான செல்வன்
**அலெக்ஸ் செல்வநாயகம் ஸ்டெவின்**
(புனித மரியன்னை ஆலய மடம்)
அவர்கள் A,2B(மா.நி.30) சித்தி பெற்றமையையிட்டு மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:குடும்பத்தினர்.
சிலாவத்தை, முல்லைத்தீவு.

(42002)(3.6.4)

## வீடு வாடகைக்கு

கோயில் வீதி, நல்லூரடியில் பொஸ்கோ பாடசாலைக்கு அருகில் வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு:077 178 9637

## நாய் விற்பனைக்கு

GERMAN SHEPHERD பெண் நாய் விற்பனைக்குண்டு. (THE KENNEL ASSOCIATION OF SRI LANKA REGISTRATION)

93, சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

## வீடு வாடகைக்கு

சப்பல் வீதி, யாழ்.மத்திய கல்லூரிக்கு அருகில் 6 அறை, 2 ஹோல், வாகனத் தரிப்பிடம் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 391 1229

## வகுப்பு (கணிதம்)

தரம் 6 முதல் O/L
வரையான வகுப்புகளுக்குக் கணிதம் அனுபவம் வாய்ந்த முன்னணி ஆசிரியரால் வீடுகளுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் வந்து தனியாகவோ, குழுவாகவோ (வினாத்தாளில் பயிற்சி, மாதாந்தப் பரீட்சை, கூடிய நேரம் அடங்கலாக) சிறந்த முறையில் கற்பிக்கப்படும்.

தொடர்பு: 077 937 0228

## தேவை

கார்த்திகைக் காய்களின் பருவம் இது. நன்கு முற்றிய பச்சைக் காய்கள் தேவை.
தொடர்புக்கு:
EK & CO
55/1, ஸ்ரீ மஹிந்த தர்மாவத்தை கொழும்பு -00900
T.P:011267 707 7/011269 772 9

(41881)(4.6.3)

## காணி விற்பனைக்கு

நாலுபக்கமும் ஆறு அடி உயரத்திற்கு சுற்றுமதில் கட்டப்பட்ட தென்னை மரங்கள் உள்ள இரண்டு பரப்புக் காணி இலக்கம் 608, மானிப்பாய் வீதியில், யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்கு உட்பட்ட பகுதியில் விரைவில் விற்பனைக்கு உள்ளது. விலை பரப்பு ரூபா ஐம்பது இலட்சம். கூடிய விலை கோருபவர்களுக்கு விற்பனை செய்யப்படும். தரகர்கள் வேண்டாம். (சி/11125)(7.6.3)

தொடர்பு : 077 730 8354 அல்லது 492 7113

## காணி விற்பனைக்கு

பாண்டியன்தாழ்வில் 2 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு :077 771 9392

(41950)(4.6.3)

## சிகை அலங்காரம்

எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பட்டமளிப்பு நிகழ்விற்கு பெண்களுக்கான அலங்காரம் தங்கள் இடங்களிற்கு வந்து செய்யப்படும்.

Contact No-021 791 2799

(41878)(4.6.3)

## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் வீதி, இருபாலைச் சந்திக்கு அருகில் சகல நவீன வசதிகளுடன் 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 500 0919 (பிரதீபன்)

## மணமகள் தேவை

மட்டு/யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 38 வயதுடைய 5' 4" UK PR உரிமையுடைய Engineer இற்கு, படித்த நற்குணமான மணமகள் தேவை. (ஏழைகள்/விதவைகள் விரும்பத்தக்கது)

(41951)(12.3.6) தொடர்பு: 021 492 5047

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் சதயம் (2ஆம் கால்) 55 கிரகபாவம் 1984இல் பிறந்த, செவ்வாயும் சனியும் (7ஆம் வீட்டில்) உள்ள அரச தொழில் பார்க்கும் மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

(41886)(12.3.6) தொடர்பு: 077 790 5438

## கார் விற்பனைக்கு

ஒருகைப் பாவனையிலுள்ள 2ஸ்ரீ 2922 இலக்கம் கொண்ட மொறிஸ்- 1000 கார் (கறுப்பு) விற்பனைக்குள்ளது.

தொடர்பு:077 365 3560,
யாழ்-222 3151

(சி/10937)(4.6.3)

## சாரதி தேவை

40 வயதிற்கு மேற்பட்ட நல்லூர், கோப்பாய், சாவகச்சேரி, யாழ்ப்பாணம் பிரதேசத்தவர்கள் மாத்திரம் நேரில்வரவும். நாள் ஒன்றுக்கு 500/= வீதம் வழங்கப்படும். மேலதிக நேரப்படியும் உண்டு.

திலைகாட்டி (பிறைவேற்)லிமிற்,
175, மருத்திமடுவீதி, யாழ்ப்பாணம்.
021 568 9090/021 790 4941

## கடை வாடகைக்கு

திருநெல்வேலி சந்திக்கு அருகில் ஆடியபாதம் வீதியில் 42 அடி அகலமும் 70 அடி நீளமும் கொண்ட கட்டடம் வாடகைக்குண்டு. வாகனத் தரிப்பிட வசதி உண்டு. (நிதி நிறுவனங்கள், வங்கிகள், காட்சி அறைகளுக்கு ஏற்றது)

தொடர்பு : 077 668 1547 (41835)(7.6.3)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1986.04.16 திருவாதிரை நட்சத்திரம் கிரகபாவங்கள் அற்ற கொழும்பில் சொந்தத் தொழில் புரியும் (மருந்து விநியோகத்தர்) மணமகனுக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். யாழ்ப்பாணத்தவர் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 773 1867

## காணி விற்பனைக்கு

சுதுமலை, மாப்பியன் வீதியில் மாரியம்மன் கோயிலுக்கு அருகில் 1¾ பரப்புக் காணி, வீடு, கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை.

தொடர்பு:
077 051 7625/021 492 0580

## காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் ஒரு பரப்பு 15.50 குழி விஸ்தீரணம் கொண்ட 5 அறைகள் உள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 711 1400

(41980)(4.6.3)

## பஸ் விற்பனைக்கு உண்டு

நல்ல நிலையிலுள்ள
**லேலன்ட் பலூன் பஸ்**
விற்பனைக்கு உண்டு.
வாகன இல : ND - XXXX
உற்பத்தி ஆண்டு: 2011 (சி/10930)(2.6)
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 374 4930

## காணி விற்பனைக்கு

மாவிட்டபுரம் அரசடிச் சந்தியில் (K.K.S.றோட்) 8 பரப்பு, 5 பரப்பு ஆகிய காணிகள் விற்பனைக்குள்ளன.

தொடர்பு : 077 626 7029 (41909)(7.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி.

### வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2014

சபையானது 2014ஆம் ஆண்டுக்கான கீழ்க்குறிப்பிடப்படும் பொருள்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவுசெய்து கொள்ளவிரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் 1000 ரூபாவை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பங்கள் யாவும் 15.01.2014 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**தொகுதிகள்**

தொகுதி "A" – பொருள்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" – பொருள்கள் வழங்குதல் (மருத்துவம்)
தொகுதி "C" – சேவைகள் / வேலை
தொகுதி "D" – வாகன திருத்தமும் சுத்திகரிப்பு செய்தலும்

| தொகுதி இல | பொருள்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A - 01 | காகிதாதிகள், எழுது பொருள்கள், மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள் |
| A - 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம் / உருக்கு) |
| A - 03 | கணினிகள், கணினியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A - 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் வகைகள் நீர்க்குழாய்கள், குழாய் இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் |
| A - 06 | கட்டட இரும்புப் பொருள்கள், தீந்தைகள், வாணிஸ் மற்றும் சகல வன் பொருள்கள் (ஹாட்வெயார்) சீமெந்து, மணல், கல், தீராந்தி சலாகை உட்பட |
| A - 07 | மின்சாரப் பொருள்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின் இயந்திரங்கள் (மோட்டர்கள்), மின்குமிழ்கள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருள்களும் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A - 09 | அழுக்கு நீக்கும் தூள்கள், அழுக்கு நீக்கும் திரவியங்கள் (விம் ஹார்பிக் போன்றவை) மற்றும் கிருமி நாசினிகள் ஏனையவை |
| A - 10 | இயந்திர (மோட்டார்) வாகன உதிரிப்பாகங்கள் ரயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| A - 11 | தோல் உற்பத்திப் பொருள்கள், பசைகள், காலணிகள் (Foots) |
| A - 12 | இறப்பர் முத்திரை வகைகள் |
| A - 13 | நூலகங்களுக்கான நூல்கள். |

| தொகுதி இல | பொருள்கள் வழங்குதல் (மருத்துவம்) |
|---|---|
| B – 01 | சித்த மருத்துவ மருந்துகள் |
| B – 02 | மருத்துவ உபகரணங்கள் (Medical equipments) |

| தொகுதி இல | சேவைகள் விவரம் |
|---|---|
| C - 01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் |
| C - 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் (காற்றுக் குளிராக்கி, தொலைநகல், நிழல்படப் பிரதி இயந்திரம்) |
| C - 03 | மின் இயந்திரங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின் விசிறிகள், மின் இயந்திரங்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும் |
| C - 04 | பதிப்பக வேலை – சகல விதமான படிவங்கள் ஏனையவை |
| C - 05 | கட்டட திருத்த வேலை, உள்ளகத் தொலைபேசி பராமரித்தல் |
| C - 06 | வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |
| C - 07 | கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்குவிடல் (பெக்கோ, மோட்டர் கிரேடர், ரோலர், JCB) |
| C - 08 | கழிவகற்றல் சேவை |

| தொகுதி இல | வாகனத்திருத்தமும் சுத்திகரிப்பு செய்தலும் |
|---|---|
| D - 01 | சகல விதமான வாகனத்திருத்தம், மின்சார வேலை, வாகன உட்பக்கம், சீற் என்பவற்றுக்கான குசன் வேலை |
| D - 02 | சகலவிதமான வாகனமும் சுத்திகரிப்பு |

**நிபந்தனைகள்:**

01. கிளிநொச்சி மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டிருத்தல் வேண்டும்.
02. வழங்கல்கள் / சேவைகள் 2014 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
03. திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகள் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு / செயலாளருக்கு உண்டு.
04. பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு / செயலாளருக்கு உண்டு.
05. பின்வரும் ஆவணங்கள் இணைத்தல் வேண்டும்.
    - வதிவிடச் சான்றிதழ்
    - அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி

### பட வரைஞர்களை பதிவு செய்தல்

- சபையானது 2014ஆம் ஆண்டுக்கான பட வரைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
- பதிவை மேற்கொள்ளுவதற்கு ரூபா 1500.00 ஐ செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளமுடியும்.
- தொழில் மூலதன வரியாக ரூபா 3000.00 செலுத்த வேண்டும்.
- முன்னர் பதிவை மேற்கொண்டவர்களும் 15.01.2014 ஆம் திகதிக்கு முன் தங்களது பதிவினை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1. கிளிநொச்சி மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டிருத்தல் வேண்டும், அத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைத்தல் வேண்டும்.
    - வதிவிடச் சான்றிதழ்
    - படவரைஞருக்குரிய தொழில் தகைமைச் சான்றிதழ்
    - கல்வித் தகைமைச் சான்றிதழ்
    - அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி

(இவற்றின் மூலப்பிரதிகளுடன் புகைப்படப் பிரதிகள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

நா.வை.குகராசா.
தவிசாளர்
கரைச்சி பிரதேசசபை,
கிளிநொச்சி.

(C/109[illegible]6.3)

---

**நிர்வாகிகள் தெரிவு**

யாழ் - வண்ணார் பண்ணை வள்ளுவன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த 25 ஆம் திகதி நடைபெற்றது. கூட்டத்தில் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக தலைவர் - பொ.குமாரசாமி, செயலாளர் - நா.கனகராசா, பொருளாளர் - செ.தேவராசா, உபதலைவர் - ஞா.உதயசங்கர், உபசெயலாளர் - மு.ரவிச்சந்திரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டதுடன் நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ந)

---



**எழாலை தெற்கு வசந்தபுரம் களபாவோடை**
**அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்**
**மஹோற்சவ விஞ்ஞாபனம்**
**06.01.2014 தொடக்கம் 15.01.2014 வரை**

| | |
|---|---|
| கொடியேற்றம் | 06.01.2014 திங்கட்கிழமை காலை 9.35 மணி |
| வேட்டைத்திருவிழா | 12.01.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி |
| சப்பறத் திருவிழா | 13.01.2014 திங்கட்கிழமை காலை 9.00 மணி |
| தேர்த்திருவிழா | 14.01.2014 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி |
| தீர்த்தத்திருவிழா | 15.01.2014 புதன்கிழமை காலை 9.00 மணி |

மஹோற்சவ காலங்களில் விஷேட சமயச் சொற்பொழிவுகளும் மஹேஸ்வர பூஜையும் (அன்னதானம்) இடம்பெறும்.
இக்காலங்களில் அடியார்கள் வருகைதந்து அம்பிகையை வழிபாடுசெய்து அம்பாளின் அருட்கடாட்சத்தைப் பெற்று இன்புறுமாறு வேண்டுகின்றோம்.

தேவஸ்தானம்.

(40596) (10.6.3)

---

**காணி விற்பனைக்கு**

கோண்டாவில் மேற்கில் 4 பரப்புக் காணி உடனடி விற்பனைக்கு உண்டு.
விலை பேசித்தீர்க்கலாம்.
தொடர்பு: 071 860 7327, 077 693 9592
(41986) (2.6.3)

---

**ஓட்டோ சாரதி தேவை**

யாழ். மாநகரசபை எல்லைக்குள் பாடசாலை மாணவர்களுக்கான ஓட்டோவுக்கு சாரதி (ஆண்/பெண்) தேவை.
தொடர்பு:071 654 3985
(41958) (4.6.3)

---

# கரைச்சிப் பிரதேச சபை
# பொது அறிவித்தல்கள் - 2014

**01. கட்டட அனுமதி**

1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் பிரகாரமும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 52ஆம் பிரிவிற்கமைய கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அரச திணைக்களங்கள். அதிகார சபைகள், அரச அரசசார்பற்ற நிறுவனங்கள், வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது ஆதனத்தில் புதிய கட்டடங்கள், மதில்கள், மலசல கூடம் அமைக்கும்போது அல்லது பழைய கட்டடங்களின் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியிருப்பின் கட்ட அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். கட்டட அனுமதியைப் பெறுவதாயின் கரைச்சிப் பிரதேச சபையின் கரைச்சி, முரசுமோட்டை உப அலுவலகங்களில் வேண்டுகைக், கடிதத்தை வழங்கி உரிய ஆவணங் களுடன் கட்டணத்தை செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். சபையின் அனுமதியின்றி கட்டப்படும் கட்டடங்கள் தொடர்பாக ஆதன சொந்தக்காரர் மீது குறித்த சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**02. வியாபார உரிமம்**

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 150(4), 152(4)ஆம் பிரிவிற்கமைய அத்தியாவசியமாக்கப்பட்டுள்ளது. கரைச்சி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் வியாபார/தொழில் நிலையங்களை நடத்தி வருகின்ற அனைத்து உரிமையாளர்களும் கரைச்சிப் பிரதேச சபையினால் வழங்கப்பட்ட வியாபார உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். வியாபார உரிமத்தினை கரைச்சிப் பிரதேச சபையின் உபஅலுவலகங்களான கரைச்சி, முரசுமோட்டை என்பவற்றில் பெற்றுக் கொள்ளலாம். வியாபார உரிமத்தினை 2014.03.31ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் குறித்த சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**03. சூழல் பாதுகாப்பு உரிமம்**

சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2008ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் திகதி அதிவிசேட வர்த்தகமானியில் இ பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/ வியாபார நடவடிக்கைகளை பிரதேச எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்படி தொழிலை/வியாபாரத்தை நடத்துபவர்கள் கரைச்சிப் பிரதேச சபையின் தலைமையகத் துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களை பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பித்து உரிய கட்டணத்தை செலுத்தி உரிமத்தைப் பெற்றுக் கொள்ளலாம். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**04. விளம்பர பெயர் பலகைகளுக்கான அனுமதி**

கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இடங்களில் காட்சிப்படுத்தப்படும் விளம் பரங்களுக்கு பிரதேச சபையிடம் அனுமதிபெற வேண்டும். அவ்வாறு அனுமதி பெறாதுள்ள விளம்பரங்கள் பிரதேச சபையால் எவ்வித முன்னறிவித்தலுமின்றி 2014.03.31 ஆம் திகதிக்குப் பின் அகற்றப்படும். வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் விளம்பரங்கள் இல்லாத பெயர்ப் பலகை ஒன்று மட்டும் காட்சிப் படுத்த முடியும். விளம்பரங்களுடனான பெயர்ப்பலகை மற்றும் மேலதிகமாக உள்ள பெயர்ப் பலகைகளுக்கு பிரதேச சபையின் அனுமதி பெறல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறாத பெயர்ப் பலகைகள் பிரதேச சபையால் அகற்றப்படும். மேலும் வியாபார நடவடிக்கை களில் ஈடுபடுவோர் தமது கடை கட்டட எல்லைக்குள்ளேயே பொருள்கள் காட்சிப்படுத்தவோ களஞ்சியப்படுத்தவோ முடியும் அவ்வாறு அல்லாத கடையின் வெளிப்புறத்திலோ வீதிக்கரு கிலோ பொருள்களை காட்சிப்படுத்தவோ களஞ்சியப்படுத்தவோ தடை செய்யப்பட்டுள்ளது என்பதுடன் இவற்றை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

**05. வாகனங்கள் விலங்குகளுக்கான உரிமம்**

கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்குள் வசித்து வருகின்ற அனைத்து துவிச்சக்கர வண்டி உரிமையாளர்களும் தாம் வைத்திருக்கின்ற ஒவ்வொரு துவிச்சக்கர வண்டிகளுக்கான ஆண்டுக்குரிய உரிமத்தினையும் நாய் வளர்க்கின்ற உரிமையாளர்கள் தாம் வளர்க்கின்ற நாய் ஒவ்வொன்றிற்கும் ஆண்டுக்குரிய உரிமத்தையும் கரைச்சிப் பிரதேச சபையின் உப அலுவலகங்களில் இருந்து நடப்பு நிதியாண்டின் பங்குனி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ள வேண்டும். குறித்த ஆண்டுக்கான உரிமத்தை பெற்றுக் கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**06. நடைபாதை வியாபாரம்**

கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்குள் நடைபாதை வியாபாரம் மேற்கொள்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. மீறி நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடுவோர் மீது பிரதேச சபையால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அப்பொருள்களும் பிரதேச சபையால் கையகப்படுத்தப்படும்.

**07. தரிப்பிட உரிமம்**

முச்சக்கர வண்டிகள், சிற்றூர்திகள், தனியார் பேருந்துகள், உழவு இயந்திரங்கள், கனரக வாகனங்கள், லான்மாஸ்ரர்கள், ஹயஸ் வாகனங்கள், கன்ரர், வடி டிப்பர் என்பன 2014ஆம் ஆண்டு தொடக்கம் தமது தரிப்பிட உரிமங்களை கரைச்சிப் பிரதேச சபையில் பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்தி கொள்ளுதல் வேண்டும். தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**08. விலங்கு வேளாண் உரிமம்**

விலங்கு வேளாண்மையில் ஈடுபடுபவர்கள் தமது பண்ணைகளுக்கான 2014ஆம் ஆண்டுக்கான உரிமங்களை கரைச்சி பிரதேச சபையின் உப அலுவலகங்களில் பெற்றுக்கொள் வதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**09. பிளாஸ்ரிக் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது**

கரைச்சிப் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் நடத்தப்படும் உணவனங்களில் பொதி செய்யப் பயன்படும் பிளாஸ்ரிக் உணவுப் பொதிப் பெட்டி (Lunch Box), உணவு பொதியிடும் உறை (Lunch Sheet) என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

நா.வை.குகராசா
தவிசாளர்,

(சி.10944)(45-7.3.6)

கரைச்சிப் பிரதேச சபை தலைமை அலுவலகம்,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தர்மம் பொறுத்திருந்தே தண்டிக்கும்; அதற்கு முன்னர் ஆடாதீர்கள்.....!

மன்னார் மாவட்டம் திருக்கேதீஸ்வரம் பகுதியில், நேற்றுமுன்தினம் வரை புதைகுழிகளில் இருந்து மொத்தம் பதினைந்து மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் நீதிவான், அனுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் ஆகியோர் பிரசன்னத்தில் நேற்று முன்தினம் மட்டும், நான்கு எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன என்பது தகவல்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தோண்டுதல் பணியின் போது, கண்டெடுக்கப்பட்ட மண்டை ஓடுகளில் துவாரங்கள் காணப்பட்டதாகவும், பல தடயப் பொருள்கள் சிக்கியதான தகவல்களும் வெளிவந்துள்ளன. அவற்றின் உத்தியோக ரீதியான நிலைப்பாடு வெளிவர இன்னும் சில வாரங்கள் கழியலாம்.

செம்மணிப் புதை குழி விவகாரம் சிறிது சிறிதாக மேலெழுந்து 1996 ஆம் ஆண்டளவில் வெளிப்பட்டது. அதிகாரத்தில் இருந்தவர்களால் யாழ்.மாவட்ட மக்களில் பெரும் எண்ணிக்கையினர் கொன்று புதைக்கப்பட்டார்கள் என்ற உண்மை மேலெழுந்தது.

புதைகுழிக் கொலைகள் குறித்து விசாரணை நடத்துமாறு அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உத்தரவிட்டிருந்தார்.

1996 ஒக்ரோபர் மாதத்தில், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி கிருஷாந்தி மர்மமான முறையிலும், அவரது தாயார், தம்பியார், அயல் வீட்டுக்காரர் ஆகிய நால்வரும் காணாமற்போய், 22.10.1996 அன்று செம்மணிப் பகுதியில் செம்மணி வீதியோரத்தில் புதைகுழிகளிலிருந்து சடலமாக மீட்கப்பட்டனர்.

புதைகுழியில் கிடந்த சடலங்கள் கழுத்தில் கயிற்றினால் சுருக்கு இடப்பட்ட நிலையில், உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டிருந்தன.

ஒப்பீட்டளவில், அரச படைகள் - தமிழீழ விடுதலைப் புலிகள் இடையேயான இறுதிப் போரின் போது, முன்னர் எப்போதும் இல்லாத எண்ணிக்கையில் பொதுமக்கள் உயிரிழக்க நேர்ந்தது என்று உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

சனல்-4 தொலைக்காட்சியின் காணொலியில், பொதுமக்கள் எண்ணுக்கணக்கின்றி கொலையுண்ட காட்சிகள் வெளிவந்தன, வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக, போர்த் தவிர்ப்பு அறிவிக்கப்பட்டதன் பேரில், பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று தங்கியவேளை, கொத்துக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டன என்ற குற்றச்சாட்டுகள் மேலோங்கி உள்ளன. தனது அதிகார, பிரசார பலங்களை பயன்படுத்தி அரசு அவற்றை முற்றாகத் தூக்கிக் கடாசிவிடலாம்....!

ஆனால் காலங்கள் பல சென்றாலும் உண்மை, உயிர்ப்புடன் உயர்ந்து நிற்கும்.

அதற்கு, மன்னார்ப் புதைகுழிகள் உதவும் என்ற நம்பிக்கை, பாதிக்கப்பட்டவர்கள் மனங்களில் மேலெழுவது இயல்பே.

அதர்மம் ஒரு வடிவில் மேலோங்கினும், மேலோங்கச் செய்யப்படினும், அது தர்மத்தினால் சாய்க்கப்படும் என்பதே உலக நியதியும், நியமமும் ஆகும்.

தர்மம் பொறுத்திருந்தே தண்டிக்கும். ஆகையால், அதற்கு முன்னதாகத் தாம் மற்றவர்களுக்குத் தீங்கு விளைக்க முனைவது மிகப் பொல்லாத வினையாக மாறும். இதனை ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் உணர்வதற்கும் அதன்பால் ஒழுகுவதற்கும் முன்வராவிடில், ஒரு காலத்திலேனும் கழிவிரக்கம் கொள்ள நேரிடும்.

# மனிதஉரிமை மீறல் பிரச்சினையும்

## அனைத்துலக அழுத்தங்களும்

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் டிசெம்பர் 20ஆம் திகதியன்று மறைந்த முன்னாள் தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவை நினைவுகூரும் முகமாக சந்திப்பொன்றை ஒழுங்குபடுத்தியிருந்தது. இந்த வணக்க நிகழ்வில் மறைந்த நெல்சன் மண்டேலாவைப் பற்றி அதிகம் பேசப்படவில்லை. ஆனால் இலங்கை தனது நாட்டில் பாதிக்கப்பட்ட மக்களின் வடுக்களை ஆற்றுவதற்கான பொறிமுறையைக் கட்டியெழுப்புவதில் தென்னாபிரிக்கா எவ்வாறு இலங்கைக்கு உதவுகிறது என கேள்வியெழுப்பப்பட்டது.

தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் மீளிணக்கப்பாட்டு ஆணைக் குழுவை ஒத்ததாக இலங்கையில் சாத்தியமான பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கான உதவியைப் பெறுவதற்காக, நவம்பரில் இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டில் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு தென்னாபிரிக்க அரசை நாடியிருந்தது.

பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாடு இடம்பெற்றபோது, தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமாவிடம் இலங்கை அரசு இவ்வாறு வேண்டுகோள் விடுத்ததாக இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் ஜியோப் டொய்ட்ஜ் தெரிவித்தார். இலங்கையில் தென்னாபிரிக்காவின் உண்மையான மீளிணக்கப்பாட்டு ஆணைக்குழு போன்ற ஒரு பொறிமுறை உருவாக்கப்படாவிட்டால், நீங்கள் எவ்வளவு தான் முன்னோக்கிச் சென்றாலும் கடந்த காலம் எப்போதும் உங்களுக்குப் பிரச்சினையாகவே இருக்கும் என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இடம்பெற்ற நெல்சன் மண்டேலாவின் நினைவு வணக்க நிகழ்வின் கேள்வி-பதில் நேரத்தின் போது தென்னாபிரிக்கத் தூதுவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் உள்நாட்டுப் போர் கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் முடிவடைந்ததில் இருந்து, இங்கு இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பளித்து இலங்கை அரசு தனது தவறு களைத் திருத்துவதற்கு தென்னா பிரிக்காவின் உண்மையான மீளிணக்க ஆணைக் குழு போன்ற சாத்தியமான பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனக் கேள்வியெழுப்பப்படுகிறது. இது இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள மனித உரிமை மீறல்களை முதன்மைப்படுத்துவதற்கான ஒரு குறியீடாகக் காணப்படுகிறது.

### இலங்கை பொறுப்பு கூற வேண்டும்

இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய மாநாடு இலங்கை மீதான மனித உரிமை மீறல் தொடர்பில் மீண்டும் அழுத்தம் கொடுப்பதற்கான ஒரு வாய்ப்பாக அமைந்திருந்தது. இந்த உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கைக்குச் சென்றிருந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் முன்னாள் போர் வலயம் அமைந்துள்ள நாட்டின் வடபகுதிக்கு ஊடகவியலாளர்கள் மற்றும் செய்தியாளர் குழுவுடன் சென்றிருந்தார். வரலாற்று முக்கியத்துவம் மிக்க இந்தப் பயணத்தின் பின்னர், இலங்கை தன்மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பதிலளிக்கத் தவறினால் அனைத்துலக விசாரணைக்கு முகங்கொடுக்க வேண்டிவரும் என டேவிட கமரூன் குற்றம்சுமத்தியிருந்தார்.

இலங்கை பொதுநலவாய அமைப்பின் விழுமியங்களை மதித்து தன்மீதான குற்றச்சாட்டுக்களுக்குப் பொறுப்பளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவே பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாடு அமைந்திருக்கும் என இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜோன் றன்கின், உச்சி மாநாடு இடம் பெறுவதற்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இலங்கை மீதான அனைத்துலக விசாரணைக்கான தேவையை இந்த உச்சி மாநாடானது மீண்டும் வலியுறுத்தியுள்ளது என அனைத்துலக மன்னிப்புச் சபையின் பொதுச் செயலர் அலுவலகத்தின் இயக்குநர் ஸ்ரீவ் கிரசோ தெரிவித்துள்ளார்.

இலங்கை விடயத்தின் கமரூன் அறிவித்துள்ளதை அனைத்து நாட்டுத் தலைவர்களும் பின்பற்ற வேண்டும் எனவும், இந்தச் செய்திகள் ஊடகங்களில் தணிக்கை செய்யப்படக் கூடாது எனவும் கிரசோ மேலும் தெரிவித்துள்ளார். போரின்போது மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் தொடர்பாக குறிப்பாக பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் காணாமற் போனமை தொடர்பாக இலங்கை மேலும் விசாரணை மேற்கொள்ளவேண்டிய தேவையுள்ள தாக அமெரிக்கா அறிவித்திருந்தது. இலங்கை அரசு மீது அமெரிக்க அரசானது தற்போது தீவிர அழுத்தத்தை இட்டுவருகிறது.

### காணாமற் போனோர் படுகொலை செய்யப்பட்டோர் தொடர்பில் விசாரணை

ஜனவரி மாத நடுப்பகுதியில் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிசா தேஷாய் பிஸ்வால் இலங்கைக்கான தனது பயணத்தை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கைக்கான இவரது முதலாவது சுற்றுப்பயணத்தின்போது காணாமற்போனோர் மற்றும் படுகொலை செய்யப்பட்டோர் தொடர்பான விசாரணை பற்றி கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

போர்க் காலத்தில் படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நவம்பர் மாத இறுதியில் புதிய ஆணைக்குழு ஒன்றை நிறுவினார். இதுதொடர்பாக இலங்கை சனத்தொகை மற்றும் புள்ளிவிவரப்பகுதியால் புதிய கணக்கெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2005இல் இருந்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 4156 பேர் வரை காணாமற் போயுள்ளதாக இலங்கை சனத்தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தால் 2011இல் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் மூலம் தெரியவந்துள்ளது. ஐ.நா செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட வல்லுநர் குழு உட்பட பல்வேறு அனைத்துலக அமைப்புக்கள் இந்த எண்ணிக்கையின் பத்து மடங்கான பொதுமக்கள் காணாமற் போயுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளனர்.

தான் ஏற்கனவே காணாமற்போன பொதுமக்கள் தொடர்பான கணக்கெடுப்பை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளதாக வடக்கு மாகாண சபை அறிவித்திருந்தது.

இவ்வாறான அழுத்தமானது நீதிக்காகவும் உண்மைக்காகவும் தொடர்ந்தும் போராடும் போரால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பங்கள், ஊடகவியலாளர்கள், சட்டவாளர்கள், மத குருமார்கள் போன்றோருக்கு தைரியத்தையும் நம்பிக்கையையும் வழங்குகிறது என இலங்கையின் மனித உரிமைச் செயற்பாட்டுச் சபையின் உறுப்பினர் றுக்சன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

### ஜெனிவாவில் காத்திருக்கும் அனைத்துலக அழுத்தம்

இலங்கை அரசானது தொடர்ந்தும் இவ்வாறான அழுத்தங்களைத் தட்டிக்கழித்தால், வரும் மார்ச்சில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடரில் மிகக் கடுமையான நிலையை எதிர்நோக்க வேண்டிவரும் என பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். கடந்த இரு கூட்டத் தொடர்களிலும் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட போதிலும் இவற்றுள் எந்தத் தீர்மானத்திலும் அனைத்துலக விசாரணைக்கான சாத்தியப்பாடு தொடர்பாக குறிப்பிடப்படவில்லை.

மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் 2009-2012 மற்றும் 2013களில் இலங்கை மீதான தமது நிலைப்பாட்டை மேலும் இறுக்கமாக்கியுள்ளன. இலங்கை மீது இந்தியா தனது நிலைப்பாட்டை மேலும் இறுக்கமாக்கிக் கொள்வதற்கு இந்தியா தயார் என்பதையே பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டை இந்தியப் பிரதமர் புறக்கணித்தமை சுட்டிக்காட்டுகின்றது என பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடானது கடந்த ஐந்து ஆண்டுகளில் கணிசமான அளவு மாற்றமடைந்துள்ளது. 2014இல் இந்தியாவானது சிறிலங்கா தொடர்பான தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டியிருப்பதுடன் திராவிட முன்னேற்றக்கழகத்தைத் தனது கூட்டணியில் சேர்த்துக் கொள்ளவேண்டிய நிலையேற்படும் எனக் ஹரிகரன் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தியாவின் தமிழ்நாட்டின் முக்கிய அரசியற் கட்சியாக தி.மு.க உள்ளது.


தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தமிழ்நாட்டால் மேற்கொள்ளப்பட்ட அழுத்தத்தின் விளைவாகவே நவம்பரில் இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய உச்சி மாநாட்டை இந்தியப் பிரதமர் புறக்கணித்திருந்தார்.

ஐ.நா மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் இலங்கை மீது கணிசமான அளவு அழுத்தத்தை ஏற்படுத்த முடியும் என அனைத்துலக மன்னிப்புச் சபையைச் சேர்ந்த கிரசோ சுட்டிக்காட்டியுள்ளார்.

> ஜனவரி மாத நடுப் பகுதியில் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இரா ஜாங்கச் செய லர் நிசா டேசை பிஸ்வால் இலங்கைக் கான தனது பய ணத்தை மேற்கொள் வார் என எதிர்பார்க் கப்படுகிறது. இலங் கைக்கான இவரது முதலாவது சுற்றுப் பயணத்தின்போது காணாமற்போனோர் மற்றும் படு கொலை செய்யப்பட்டோர் தொடர் பான விசாரணை பற்றி கலந்துரையாடப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நன்றி: புதினப்பலகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரண்டு தவணைக் கட்டணமாகக் காப்புறுதிக் கட்டணம் ரூபா 446 ஐச் செலுத்திய நபருக்கு ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினர் ஒரு லட்சம் ரூபாவை இழப்பீட்டுத் தொகையாக வழங்கினர். புத்தூர்ப் பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் பலியான யாழ்.பல்கலைக்கழக மாணவனான சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த யோகேஸ்வரன் கஜேந்திரன் என்பவருக்கான இழப்பீட்டுத் தொகையான ஒரு லட்சம் ரூபா அவரது தாயாரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது.
சாவகச்சேரி கிளை முகாமையாளர் எம்.கோபிதாஸன் காசோலையைக் கையளிப்பதையும், அருகில் நிறுவன விற்பனை மேற்பார்வையாளர்களான எம்.பிரகாஸ், தனபிரகாஸ் ஆகியோரும் காணப்படுகின்றனர். (த-9)



## 'ஹவ்லொக் சிற்றி' அறிமுகம் செய்யும் புதிய ஆடம்பரத் தொடர்மாடிகள்

ஹவ்லொக் சிற்றியானது புதிய கூட்டுத் தொடர்மாடி கோபுரங்கள் இரண்டின் விற்பனையைக் கோலாகலமாக ஆரம்பித்து வைத்துள்ளது. இதற்கான தொடக்க நிகழ்வானது நவீன வசதிகளுடன் அமைந்துள்ளன. கிளப்ஹவுஸ்' மன்றத்தில் கொண்டாடப்பட்டுள்ளது. கொழும்பில் கேந்திரமான இடத்தில் 18 ஏக்கர் நிலத்தில் பல்வகை பாவனைக்கான ஒருங்கிணைந்த மிகப்பெரும் அபிவிருத்தித் திட்டமான ஹவ்லொக் சிற்றி, வதிவிட மனைகள், வர்த்தக நிலையங்கள், ஹோட்டல்கள், அலுவலகங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளது.
ஒவ்வொன்றும் 28 மாடிகளை கொண்ட ஸ்ரட்போர்' மற்றும் மெல்போட்' கொண்டோமினியம் கோபுரங்களில் 2,3,4 படுக்கை அறைகளை கொண்ட 300 ஆடம்பர மனைகள் விற்பனைக்கு முன்வைக்கப்பட்டுள்ளன.
மிகவும் கவர்ச்சிகரமான விலைகளில் இவை விற்கப்படுகின்றன. இவற்றை ஒதுக்கீடு செய்வதற்கு ஐந்து சதவீத பணம் வைப்புச் செய்யப்படல் வேண்டும். மூன்று ஆண்டு காலத்தில் முழுத்தொகையையும் செலுத்தித் தீர்த்தல் வேண்டும். கொள்வனவு செய்வோர் முதலீட்டாளர்களுக்கு கட்டுப்படியாகும் விலைகளில் இவை நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அவசியமாயின் வங்கிக் கடன்களும் ஏற்பாடு செய்யப்படலாம்.
கிளப்ஹவுஸ் ஆனது வேறு எந்தவொரு நிர்மாணிப்புடனும் ஒப்பிடும்போது மிக விசாலமானதாகும். 60,000 சதுர அடி பரப்பில் நீச்சல் தடாகங்களும், Jacuzzi களும் விருந்தினர் மண்டபம், உடற்பயிற்சி நிலையங்கள், உண்டிச்சாலைகள், ஓடியோ-வீடியோ நிலையங்கள் உல்லாச களிப்பிடங்கள் என்பன அமையப் பெற்றுள்ளன.

## அங்கர் நியூடேல் தயாரிப்புகள் உற்பத்தியை நேரடியாகக் காணும் அரிய சந்தர்ப்பம்



இலங்கையர்களுக்கு அங்கர் நியுடேல் தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் முறை தொடர்பாக நேரடியாக பார்வையிடக்கூடிய வாய்ப்பை பொன்டெரா ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. இலங்கையின் உள்நாட்டுப் பாலைக் கொண்டு உயர்தரம் வாய்ந்த பாலுற்பத்திப் பொருள்களை அங்கர் நியுடேல் வர்த்தக நாமத்தில் உற்பத்தி செய்யும் விதம் போன்றவற்றை இதன் போது பார்வையிட முடிந்தது.
ஐந்து நாள்கள் இடம்பெற்ற இந்தத் திறந்த சுற்றுப்பயணத்தின் போது, மொத்தமாக 2500க்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு இந்த பொன்டெரா பால் உற்பத்திப் பகுதியை பார்வையிடக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது.
இந்த பகுதியைப் பார்வையிடச் சென்றிருந்த மக்களுக்கும் குடும்பத்தாருக்கும் பசுமையான பாலானது, தரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு செயன்முறைகளுக்கு உள்ளாகும் விதத்தைப் பார்வையிட முடிந்தது.
பொன்டெராவின் நவீன வசதிகள் கொண்ட நிரப்பு இயந்திரங்களின் மூலமாக யோகட் கோப்பைகள் நிரப்பப்பட்டதையும், அவற்றைப் பொதி செய்யும் முறை போன்றவற்றைப் பார்வையிடல் போன்ற பல விடயங்களையும் அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைத்திருந்தன.
பாலுற்பத்திப் பொருள்கள் தயாரிக்கப்படும் முழுமையான செயன்முறை தொடர்பான விளக்கங்களும் பங்குபற்றுநர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. உயர் தரம் வாய்ந்த, பசுமையான பாலை உள்நாட்டின் 4000க்கும் அதிகமான பாற்பண்ணையாளர்களிடமிருந்து சேகரிப்பதிலிருந்து ஆரம்பிக்கும் இந்தச் செயற்பாடு, உயர் தரம் வாய்ந்த அங்கர் நியுடேல் தயாரிப்புகள் விற்பனையகங்களின் காட்சிப்படுத்தல் பகுதிகளுக்கு சென்றடைவதுடன் நிறைவடைகிறது. (த)

## குளிரூட்டல் துறையில் பிரபலம்பெற்ற வர்த்தக நாமம் இலங்கையில் பிரவேசம்

இந்தியாவின் குளிர்பதன மற்றும் வர்த்தக குளிரூட்டல் முன்னணி நிறுவனமான ப்ளுஸ்டார், விரிவான குளிர்பதன மற்றும் வர்த்தகக் குளிரூட்டல் தீர்வுகளுடன் இலங்கையில் பிரவேசித்துள்ளது.
இதன் குளிர்பதன வரிசை எல்லா இடங்களுக்குமான ஸ்பிளிட் ஏசிக்கள் முதல் VRF கள், பக்கேஜ்ட் ஏசீக்கள் மற்றும் குளிர்விப்பான்கள் என்னும் விரிவான வரிசையை உள்ளடக்கியுள்ள அதேவேளை, தண்ணீர் குளிர்விப்பான்கள், போத்தலில் அடைக் கப்பட்ட நீர் விநியோகங்கள், மிகை குளிரூட்டிகள், மட்டுப்படுத்தப்பட்ட குளிர்கொண்ட அறைகள், பழங்களை பழுக்க வைக்கக்கூடிய அறைகள் என்பனவற்றினையும் கொண்டுள்ளது.
70 வருடங்களுக்கும் மேலாக வலிமையான அடித்தளத்தினைக் கொண்ட ப்ளுஸ்டார், 500 மில்லயன் அமெரிக்க டொலர் பெறுமதி கொண்ட பட்டியலிடப்பட்ட நிறுவனமாகும்.
7 நவீன வசதிகள் கொண்ட உற்பத்தி நிறுவனங்களுடனும், 30 அலுவலகங்களைக் கொண்ட வலையமைப்புடனும், 2800 ஊழியர்களுடனும் (மிக அதிகளவிலான AC&R பொறியியலாளர்கள் குழாத்தினைக் கொண்ட நிறுவனங்களில் ஒன்று) 7 தசாப்த பாரம்பரியங் கொண்ட 165 அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான வருமானங்கொண்ட பட்டியலிடப்பட்ட 75 இந்திய நிறுவனங்களில் ஒன்றாக இருக்கின்றது. இந்திய ஜனாதிபதி மாளிகையான ராஷ்டிரபதிபவன் மற்றும் நாடாளுமன்றம் போன்ற இந்தியாவின் பெருமைமிகு அடையாளங்களுக்கு குளிரூட்டல் தீர்வுகளை வழங்கியுள்ளதோடு இந்தியாவின் முன்னணி விவசாய வர்த்தக நிறுவனங்களும், ப்ளுஸ்டாரின் வர்த்தக குளிரூட்டல் தீர்வுகளையே உபயோகிக்கின்றன.
குடியிருப்பு குளிர்பதன சந்தையில், அதிக பிரசித்தம் பெற்ற 6 Room AC மொடல்களும் ப்ளு ஸ்டார் உற்பத்தி வரிசையில் அடங்கும். இந்தியாவில் மட்டும் இந்நிறுவனம் 2.5 இலட்சம் AC அலகுகளை வருடாந்தம் விற்பனை செய்கின்றது. (த)



## 20 மில்லியன் ரூபா முதலீட்டில் அட்லஸ் நிறுவன ஆய்வுகூடம்

காகிதாதிகள் தயாரிப்புகள் உற்பத்தியில் நீண்ட காலமாக ஈடுபடும் முன்னணி வர்த்தக நாமமான அட்லஸ், பாடசாலை மற்றும் அலுவலக காகிதாதிகள் தயாரிப்புகளின் தரத்தை மேலும் மேம்படுத்தும் வகையில் உயர் தரம் வாய்ந்த நவீன வசதிகளைக் கொண்ட ஆய்வு கூடமொன்றை நிறுவ முன்வந்துள்ளது.
இதற்காக மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் 20 மில்லியன் ரூபாவுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை அண்மையில் கைச்சாத்திட்டுள்ளது. இந்த ஆய்வு கூடத்தை கம்பனி வளாகத்தில் நிறுவாமல், பல்கலைக்கழக வளாகத்தில் நிறுவுவதற்கான தீர்மானத்தை மேற்கொண்டமையானது, உள்நாட்டு பொறியியல் திறமைகளை மேம்படுத்தும் நோக்கத்தை முன்னிறுத்தி உள்நாட்டு கல்விச் சூழலில் காணப்படும் வாய்ப்புக்களையும் கிடைக்கப்பெற்ற வளங்களையும் ஊக்குவித்து மேம்படுத்துவதன் மூலம் பிராந்திய ரீதியில் அவர்களை தேர்ச்சி நிலையில் வைத்திருக்க முடிவதாக அட்லஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி நிர்மல் மதநாயக்க தெரிவித்தார்.
இந்த அங்குரார்ப்பண வைபவத்தில் மதநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், 'பல்கலைக்கழகத்துடன் அட்லஸ் கொண்டுள்ள தொடர்புகளின் மூலம் உள்நாட்டு பயிலுநர்களை தாம் பயிலும் புத்தக ரீதியிலான விடய தானங்களை செயன்முறைப்படுத்த வாய்ப்பு வழங்கப்படும். இதன் மூலம் மாணவர்களுக்கு நிலையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு வழிகாட்டுவதாக அமைந்திருப்பதுடன், எதிர்காலத்தில் அவர்களுக்கு தொழில் வாய்ப்பொன்றை பெற்றுக் கொள்வதற்கு வழிகாட்டுவதாகவும் அமைந்திருக்கும். உள்நாட்டு நிறுவனம் என்ற வகையில், சர்வதேச நாமத்தை எய்தியுள்ள எமது நிறுவனம், உள்நாட்டவர்களின் ஆளுமை மற்றும் திறமையில் அதிகம் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், உள்நாட்டவர்களை சர்வதேச தரத்துக்கு கொண்டு செல்வதற்காக தன்னை மேலும் அர்ப்பணித்துள்ளது' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

நாளை

மார்கழி-22திங்கட்கிழமை 06.01.2014
திதி: ஷஷ்டி பி.இ.05.11 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி பி.இ.03.18 வரை
சுபநேரம்: 12.31- 02.01 வரை
இராகுகாலம்:08.01-09.31 வரை

**மேடம்:** சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். புதிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**இடபம்:** சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். மனதுக்கு இதமான செய்தி கேட்பீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மிதுனம்:** உணர்ச்சிவசப்படாமல் அறிவுபூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள். சிக்கலான, சவாலான காரியங்களை யெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள்.

**கடகம்:** மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். வியாபாரத்தில் நெளிவு, சுழிவுகளைக் கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் நிம்மதி உண்டு. கவனம் தேவை.

**சிங்கம்:** பிரபலங்கள் அறிமுகமாவார்கள். பழைய பிரச்சினைகளைப் பேசி சுமுகமான முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்குப் பாராட்டுக் கிடைக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் ஆதாயமடைவீர்கள்.

**துலாம்:** கடந்த கால இனிய அனுபவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். அரசாலும், அதிகாரப் பதவியில் இருப்பவர்களாலும் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் அனுபவமிக்க வேலை யாள்களைத் தேடுவீர்கள்.

**தனுசு:** சுறுசுறுப்புடன் செயற்பட்டு தேங்கிக் கிடந்த வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். நீண்ட நாள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள்.

**மகரம்:** சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. நண்பர்கள், உறவினர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம்.

**கும்பம்:** வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். உத்தியோகத்தில் மறைமுகத் தொந்தரவுகள் வரக்கூடும்.

**மீனம்:** வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். வியாபாரத்தைப் பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | | 8 | | | 9 |
| | | 1 | 9 | | | 6 | | |
| | 4 | | 1 | | | | | 8 |
| | | 6 | | 4 | 2 | | 5 | |
| 4 | 3 | | 5 | 1 | 9 | | 7 | 6 |
| | 5 | | 8 | 6 | | 3 | | |
| 2 | | | | | 5 | | 6 | |
| | | 4 | | | 1 | 5 | | |
| 5 | | | 6 | | | 4 | | 7 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 3 | 5 | 7 | 2 | 9 | 1 | 4 |
| 1 | 4 | 9 | 6 | 3 | 8 | 7 | 5 | 2 |
| 2 | 5 | 7 | 1 | 9 | 4 | 3 | 6 | 8 |
| 3 | 9 | 8 | 2 | 5 | 6 | 4 | 7 | 1 |
| 5 | 7 | 1 | 4 | 8 | 3 | 2 | 9 | 6 |
| 6 | 2 | 4 | 7 | 1 | 9 | 8 | 3 | 5 |
| 7 | 3 | 6 | 8 | 4 | 5 | 1 | 2 | 9 |
| 4 | 1 | 2 | 9 | 6 | 7 | 5 | 8 | 3 |
| 9 | 8 | 5 | 3 | 2 | 1 | 6 | 4 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# நீங்கா நினைவலைகளில்...

**17 ஆம் ஆண்டு** — **2 ஆம் ஆண்டு**



மலர்வு
03.10.1934

உதிர்வு
24.06.1997
திதி: பஞ்சமி

## அமரர் தாமு சங்கரப்பிள்ளை

நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்
கண்ணிமைக்கும் காலத்துள்
காலனுமைக் கவர்ந்து சென்ற
கொடுமையை எண்ணிக் கலங்குகிறோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம்
பதினேழு ஆண்டுகள் சென்றபின்னும்
என்றும் அழியா நினைவுகள்



மலர்வு
15.03.1974

உதிர்வு
17.12.2012
திதி: பஞ்சமி

## செல்வி ஜெயக்குமாரி சங்கரப்பிள்ளை

ஆண்டு ஒன்று அகன்றோடிப் போனாலும் ஆறுமோ நெஞ்சம்
இன்று உமது நாள் எம் நெஞ்சை வாட்டுகின்றதே
மண்ணுக்காய் மரணித்த மங்கையே
மாண்புடனே வாழ எண்ணியிருந்தோம்
எம் நினைவு நிறைவேறாது போயிற்றே!
உம்மோடு நிம்மதியும் முற்றாய் இழந்து
நிற்கதியாய் நிற்போம் என்று கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை
துடுப்பை இழந்த படகெனவே துன்பக் கடலில் தத்தளித்தே
கரைக்கும் ஒதுங்க முடியாத கண்ணீர்க் காவியம் இதுவே
எம் இதயம் நெகிழ்ந்த கண்ணீர்த் துளிகள் தான் ஜெயந்தா!

ஓம் சாந்தி
ஓம் சாந்தி
ஓம் சாந்தி

"இலிங்க பவனம்"
கரணவாய் மத்தி, கரவெட்டி. (41882)(2.6.3)

என்றும் நினைவுடன் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தால் வடமராட்சி வலய முன்பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட தேவாரப் பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அண்மையில் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (ஒ-14)



அளவெட்டி மேற்கு ஜே 220 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள முதியோர் சங்கத்தினரால் அந்தப் பகுதியைச் சேர்ந்த தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ஒ-36)



தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினால் கழக பிரிவுக்கு உட்பட்ட தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். கழகத் தலைவர் த.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ கலந்து கொண்டு மாணவர்களைக் கௌரவித்தார். (ஒ-9)




தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்ற ஒளிவிழாவில் வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் சிரேஷ்ட வைத்தியர் டாக்டர் இளங்கோ ஞானி மங்கல விளக்கு ஏற்றுவதையும், நிகழ்வில் இடம்பெற்ற கலை நிகழ்வையும் காணலாம். (ஒ-36)



அளவெட்டி தெற்கு முற்போக்கு முன்பள்ளி மாணவர்களின் ஒளி விழா நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வின்போது.. (ஒ-36)



அளவெட்டி தெற்கு கலைவாணி முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப் போட்டி நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அளவெட்டி தெற்கு அ.மி.த.க.பாடசாலை ஆசிரியை திருமதி தர்மராசா புஸ்பராணி பரிசில் வழங்கினார். (ஒ-36)



மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையின் நோயாளர் நலன் கருதி தேநீர்ச் சாலை அமைப்பதற்கான அடிக்கல்லை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி நட்டு வைக்கிறார். (ஒ-100)



வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்த சுவாமி ஆலயத்தில் திருவெம்பாவை உரை நிகழ்த்திய இந்து கலாசார செயலாளர் ஞானி சிவசுப்பிரமணியம் ஆலய நிர்வாகத்தால் கௌரவிக்கப்பட்டார். (ஒ-14)



மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையில் நீண்ட காலம் கடமையாற்றி ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி க.நடராசாவுக்கு புதிய வைத்திய அதிகாரி ஆ.காந்தநேசன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (ஒ-100)




யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் இடம்பெற்ற கிராமிய நடன நிகழ்வையும் மாணவி ஒருவருக்கு வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா சான்றிதழ் வழங்குவதையும் காணலாம். (ஒ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா வடக்கில் அமைந்துள்ள கிராமங்களில் வசிக்கும் மக்கள் மத்தியில் வவுனியா இடர் முகாமைத்துவப் பிரிவினர் இடர்களின் போது எச்சரிக்கையாக இருப்பது தொடர்பான ஒத்திகையை நடத்தினர். (க-402)





வருடாந்த ஒளிவிழா நிகழ்வு வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயத்தில் இடம்பெற்றபோது பாட சாலை அதிபர் பி.நேசராஜா தலைமையில் விருந்தினர் கள் அழைத்து வரப்படு கின்றனர். சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (க-421)



அண்மையில் திறந்து வைக்கப்பட்ட பரந்தன் தபால் நிலையத்தின் புதிய கட்டடம் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. (க-6)



ஒட்டுசுட்டானில் உள்ள சின்னச்சாளம்பன் ஈசுவரன் வித்தியாலயம் நிரந்தரக் கட்டடமில்லாது தகரத்தினால் ஆன தற்காலிகக் கொட்டகையில் வசதியீனங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது. (க-500)



வவுனியா மாவட்ட பொலிஸ் பொதுமக்கள் பிரிவின் ஏற்பாட்டில் வவுனியா கோயிற்குளம் சிறுவர் இல்லச் சிறார்களுக்கு அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்பட்டன. (க-421)



மழை பெய்யாததால் முத்துஐயன்கட்டுக் குளம் நீர் வற்றிய நிலையில் தரவை போன்று காட்சியளிக்கின்றது. (க-500)



துணுக்காய் கோட்டை கட்டியகுளம் கிராமத்தில் நிரந்தர வீடு கிடைக்காத நிலையில் வசிக்கின்ற குடும்பம் ஒன்றின் அவல நிலையை காண்கிறீர்கள். (க-18)



கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலய நிறுவுநர் நாள் நிகழ்வும் பரிசில் நாள் நிகழ்வும் அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்ற போது மாணவிகளின் கலை நிகழ்வு இடம்பெறுகின்றது. (க-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா இலங்கை வங்கி நகரக் கிளையில் நடைபெற்ற சிறுவர் சேமிப்புக்கான பரிசில்களை வங்கி உத்தியோகத்தர் திருமதி சிந்து பிரதீபன் வழங்குகின்றார். (க-402)

## நூலக அறைக்குள் தீ; நூல்கள் சேதம்

தென்மராட்சி, ஜன.5

வீட்டின் நூலக அறைக்குள் திடீரென தீ பற்றிக் கொண்டதில் நூல்கள் உட்பட பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகின.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி பெரியமாவடியில் இடம்பெற்றது.

நூலக அறைக்குள் திடீரென தீ பிடித்த வேளை அயலவர்களின் உதவியுடன் தீ அணைக் கப்பட்ட போதிலும் பெருமளவு நூல்கள், உடு புடைவைகள், தளபாடங்கள், சமையலறைப் பாத்திரங்கள் உட்பட பெறுமதிமிக்க பொருள்கள் எரிந்து நாசமாகின.

நூலக அறையினுள் மின் ஒழுக்கு ஏற்பட்டதால் தீப் பிடித்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(வ-9)

## உள நோயாளருக்கு தனியான விடுதி திறப்பு


*கிளி.மருத்துவமனையில்*

கிளிநொச்சி பொது மருத்துவமனையில் உள நோயாளர்களுக்கான தனியான விடுதி கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொது மருத்துவமனையின் உள நல மருத்துவர் எம்.ஜெயானந்தராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பா.கார்த்திகேயன் நாடாவை வெட்டி விடுதியை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மருத்துவமனையின் மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். கிளிநொச்சி மருத்துவமனையில் உள நோயாளர்களுக்கான தனியான விடுதி இயங்குவதென்பது மருத்துவ ரீதியாக ஏற்பட்ட பெரும் முன்னேற்றமாகக் கருத முடியும். (வ-18)

## வடக்கில் மருத்துவர்களுக்கு பற்றாக்குறை; சுகாதார அமைச்சில் கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், ஜன.5

வடமாகாணத்தில் நிலவும் மருத்துவர், தாதிய உத்தியோகத்தர், துணை மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை தொடர்பாகவும், மாகாண சுகாதார சேவைகளின் முன்னேற்றத்துக்கு மத்திய அரசின் ஒத்துழைப்புத் தொடர்பாகவும் கொழும்பிலுள்ள மத்திய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுடன் வட மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவ கலாநிதி ப.சத்தியலிங்கம் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் கொழும்பில் அமைந்துள்ள மத்திய சுகாதார அமைச்சில் நடைபெற்றது.

(வ-402)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சாந்தநாயகி (சாந்தா) இரட்ணசோதி



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தநாயகி (சாந்தா) இரட்ணசோதி 27.12.2013 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜதுரை - சிவயோகம் (உரிமையாளர் - பிள்ளையார் ஸ்ரோஸ், யாழ்ப்பாணம்) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரட்ணசபாபதி - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், இரட்ணசோதியின் அன்பு மனைவியும், சிவகாமி, அபிராமி, ராகவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், இரஞ்சிதமலர் (லண்டன்), யோகேஸ்வரி, இரட்ணேஸ்வரன் (உரிமையாளர் - பிள்ளையார் ஸ்ரோர்ஸ், பிள்ளையார் இன் யாழ்ப்பாணம்), செந்தமிழ் செல்வி (லண்டன்), வதனி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகராஜா (லண்டன்), சிவதாசன் (யாழ்ப்பாணம்), அமுதினி, தனஞ்சயன் (பாபு-லண்டன்), சற்குனேஸ்வரன் (கனடா), இரட்ணமகேசன் சுகுந்தா, புஸ்பராணி முத்துகுமாரசாமி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.01.2014 புதன்கிழமை Moden Assembleyhall (Tudor Drive, Moden Surrey SM44PJ) இல் 8amஇல் இருந்து 11am வரை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: இரட்ணேஸ்வரன் (சகோதரன்) 0777222715,
திருமதி S.மகேஸ்வரி (பெரியதாயார்) 0212225047

இல.31,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (41996)(12)(3.6)



## திருமதி புவனேஸ்வரி பாலசுந்தரம்

யாழ்.கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும், கனடா Ottawa ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி பாலசுந்தரம் 01.01.2014 புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - இந்திராணி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காங்கேயர் - ராசமுத்து (சங்கானை) தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலசுந்தரம் (பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், அகிலா (கனடா), சரளா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருஞானம்மா, மகேஸ்வரி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கபிலன், ஜிவித்குமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற பேரின்பநாயகம் மற்றும் சுப்பிரமணியம், காலஞ்சென்ற யதார்த்தநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஞானபாலன், சுசி, சுகன், சுதா, ஜெயந்த் ஆகியோரின் சிறிய தாயாரும், சபரீசன், காயத்திரி, ஆரணி, அஜிவ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2014) ஞாயிற்றுக்கிழமை கனடா நேரப்படி மு.ப.9.00 முதல் 10.30 மணிவரை கனடாவில் 3700 Prince of wales, Dr.Nepean எனும் முகவரியிலுள்ள Capital Memorial Gardens இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கபிலன் (கனடா) +16138788710,
ஜிவித்குமார் (பிரித்தானியா) +442082445678,
சுதன் (கனடா) +14168230983,
இரத்தினேஸ்வரி (இலங்கை) +94112559342 (42001)(12)(3.6)

தகவல்: குடும்பத்தினர்


## நூல் வெளியீடு

யாழ்.உரும்பிராய் சாட்டுப் பத்தூர் சிவதர்ம சாஸ்தா ஆலயத்தின் "சிவதர்ம சாஸ்தாமிர்தம்" எனும் நூல் வெளியீடு இன்று ஞாயிறு மாலை 6 மணிக்கு ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

பிரம்மஸ்ரீ வாசுதேவா குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உலக சைவத் திருச்சபை தலைவர் செ.சண்முகரத்தினம் கலந்து கொள்வார். நிகழ்வில் ஆசியுரையை யாழ்.சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்யா நிகழ்த்துவார். (ஒ-14)


# கண்ணீர் அஞ்சலி



பிள்ளையார் இன் ஹோட்டல் உரிமையாளரான இரட்ணேஸ்வரன் அவர்களின் அன்புச்சகோதரி

திருமதி சாந்தநாயகி இரட்ணசோதி

(லண்டன்) அவர்கள் இயற்கை எய்தியதை யிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு,

அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உத்தியோகத்தர்கள்,
பிள்ளையார் இன் ஹோட்டல் (41997)(4.6.3)
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.


## யாழ்ப்பாணக் கல்லூரிக்கு புதிய அதிபர்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் புதிய அதிபராக வண. கலாநிதி.டேவிற் சதானந்தன் சொலமன் நியமனம் பெற்றுள்ளார்.

புதிதாக பதவியேற்றுள்ள கல்லூரி அதிபரை பதவியில் அமர்த்தும் வழிபாடு நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இம்பெறும்.

தென்னிந்திய திருச் சபை பேராயர் கலாநிதி டானியல்.எஸ்.தியாகராஜா தலைமையில் இந்த நிகழ்வு வட்டு. தென்னிந்திய திருச்சபை பேராலயத்தில் இடம்பெறும். (ஒ-50)


# மரண அறிவித்தல்

## கந்தையா சங்கரப்பிள்ளை



புன்னாலைக் கட்டுவன் வடக்கைச் சேர்ந்த கந்தையா சங்கரப்பிள்ளை நேற்று முன்தினம் (03.01.2014) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தங்கமுத்து தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற மகாலட்சுமியின் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30 மணியளவில் அன்னாரது மகனது கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (41995)(12)(3.6)

தகவல்:
மகன் S.ஸ்ரீராமச்சந்திரன் (சந்திரன்)
0777049749/0788257767

# மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரி குழந்தைவடிவேலு



வேலணை, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி குழந்தைவடிவேலு நேற்று(04.01.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - அன்னலட்சுமி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கந்தையா குழந்தைவடிவேலுவின் அன்பு மனைவியும், தெய்வேந்திரம், வாலாம்பிகை, நகுலேஸ்வரி (ரதி), புஸ்பராணி (புஸ்பா - லண்டன்), லோகநாயகி (பேபி), செந்தமிழ்ச்செல்வி (செல்லா - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சரோஜாதேவி வரதராசா, இராஜரட்ணம் பரமேஸ்வரன் (லண்டன்), அரவிந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சீவரட்ணம் (சுவிஸ்) மற்றும் நாகராசா (சின்ராசா), மகாலிங்கம் (லண்டன்), நித்தியானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், துஷ்யந்தனின் (நியூ உதயா நகைமாடம்) பாசமிகு வளர்ப்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

[illegible], கந்தர்மடம்,
பலாலி வீதி, யாழ்ப்பாணம். (42052)(12)(3.6)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாடகை**
Attached bathroom
உடன் கூடிய அறைகள்
வாடகைக்கு உண்டு.
(ஒரு நாள் 500/=)
Hotel Villa City,
422 Galle Rd, Colo 6
இராமகிருஷ்ண வீதிக்கு
அருகில்
0722 552 222

## குடும்பஸ்தர் தாக்கப்பட்டார்

தென்மராட்சி, ஜன.5

மிருசுவில் வடக்குப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் தாக்குதலுக்கு இலக்கானார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மிருசுவில் துர்க்கை அம்மன் வீதியைச் சேர்ந்த புவனேந்திரம் வேலாயுதம் (வயது-43) என்பவர் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

## 83 முன்பள்ளிகளில் ஒரேபாடத்திட்டம்

### தென்மராட்சி பிரதேசத்தில் ஆரம்பம்

தென்மராட்சி, ஜன.5

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள 83 முன்பள்ளிகளிலும் ஒரே வகையிலான பாடத் திட்டச் செயற்பாடுகள் வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பிரதேசத்தில் இதுவரை இயங்கி மாகாண கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளின் செயற்பாடுகளை சமச்சீரான முறையில் மேற்கொண்டு சிறார்களின் அடிப்படைக் கல்வியை மேம்படுத்த வலயக் கல்வி அலுவலகத்தினால் பாட அலகுகளும் அறிவுறுத்தல்களும் தயாரிக்கப்பட்டு முன்பள்ளி ஆசிரியைகளிடம் கையளிக்கப்பட்டன. இந்தத் திட்டம் வியாழக்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

மாகாண கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்ட தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 83 முன்பள்ளிகளிலும் கற்பிக்கும் 115 ஆசிரியைகளுக்கும் வலயக் கல்விப் பணிப்பாளரின் முயற்சியினால் விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான அடிப்படைத் தகைமையுள்ளவர்களாக மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-9)

**VACANCY**

Fast growing Beverage Company spread across south Asia in Beverage sector with success looking for a dynamic candidate.

my Cola — It's my THRILL

**AREA SALES MANAGERS**
NORTHERN, NORTH CENTRAL & WESTERN

The personality we require; needs to have adequate experience and expertise in the Retail FMCG segment, with strong analytical, innovative and relationship building skills. He will operate this channel as a separate cost center and should be willing to travel widely if required.

This is middle management position with options for career development, for the right candidate. Remuneration is negotiable subject to knowledge, experience and skill levels.

- Below 40 years
- Not less than 5 years hands on experience in a similar position
- Willing to be based in respective territory
- GCE A/L is a must; along with other professional qualifications.
- High Competency in English and Tamil/Sinhala languages will be a definite advantage.
- Wide area knowledge with adequate business contacts in Retail market channel.

Please send in your resume with in 10 days to:

Human Resource Manager
**my BEVERAGES MARKETING (PVT) LTD.**
555/5D, Gonahena Road, Kadawatha.
E-mail: mycola@sltnet.lk (C/11141)

**வாடகைக்கு**
வெள்ளவத்தை, ஸ்ரேசன் றோட், இலக்கம் 8 இல் அமைந்துள்ள லொட்ஜில் இணைந்த குளியலறையுடன் அமைந்த அறைகளும், தனி அறைகளும் நாள், கிழமை, மாத அடிப்படையில் குறைந்த விலையில் வாடகைக்குண்டு. தொடர்பு:
077 183 2404/011 250 4281

**மரங்கள் விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், அரியாலை A9 வீதி காணியில் உள்ள மரங்கள் விற்பனைக்கு. காலை 10 மணிக்குப்பின் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 075 544 0503

**வீடு வாடகைக்கு**
308/3, கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள 4 அறைகள், 2 கோல், வாகனத்தரிப்பிட வசதிகளுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:077 539 3729 (42013)(4.6.3)

**அரியாலை முதியோர் இல்லம்**
60 வயது பூர்த்தியாகிய முதியவர்கள் எமது இல்லத்தில் அனுமதி கோரலாம். விண்ணப் பப்படிவம் நேரிலோ அல்லது தபாலிலோ பெற்றுக்கொள்ளலாம். இப்பொழுது தங்கி இருப்பவர்களுடன் மேலும் 10 பேருக்கு மட்டும் இடம் உண்டு என்பதை அறியத் தருகின்றோம்.
நிர்வாகம்
272, A.V. றோட், அரியாலை, யாழ்ப்பாணம்.
077 257 1253 (42009)(4.6.3)

**ஆசிரியர்கள் தேவை**
பிரபல ஆங்கில பாலர் பாடசாலைக்கு கோப்பாய், மானிப்பாய், சங்கானை, அச்சுவேலி ஆகிய இடங்களில் ஆசிரியர்கள் தேவை. புதன்கிழமை (08.01.2014) காலை 9.30 மணிக்கு நேர்முகப்பரீட்சைக்கு நேரில் வரவும்.
இல. 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 362 7055/ 077 468 2951 (43582) (45.6.3)

**யாழ்நகரில்...**
இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
**ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்**
இல்லங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் விருத்திக்கு!
எமது குழுவினர் யாழ்நகரில்...
2014 ஜனவரி 5ம் திகதி
**இன்று மட்டும்**
காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை
**ஸ்ரீ தனலஷ்மி யந்திரங்கள்**
விற்பனைக்குண்டு (C/11147)





பதக்கம் சிலை பாதுகை யந்திரம் ஆமை
**Free Gift**
**Shiv-Hanuman Pendant & Idol**
கையிருப்பு உள்ளவரை மட்டுமே... பதிவுக்கு இன்றே முந்துங்கள்!
Sri Lanka 0777 614 186
flex 4, IBC Road, Wellawatte, Colombo 06.
CAPTAIN TV MEGA TV JAYA TV
FLEX Graphic

**2014 இற்கான புதிய அனுமதிகள்**
**BBC** ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை
11 வது வருடத்தில்

| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
| --- | --- | --- |
| Play Group | Montessori | Pre School |

10 வருடங்களில் 7500 ற்கு மேற்பட்ட சிறார்கள் கல்வி பயின்றுள்ளார்கள். 90 % மாணவர்கள் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள்.

கற்பித்தல் முறை:
★ சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
★ தமிழ் கட்டாய பாடம்.
★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
★ சிறார்களின் திறமைகளை வெளிக்கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.
★ விளையாட்டுப் போட்டி, English Concert, முத்தமிழ் விழா, சித்திரக்கைவேலைக் கண்காட்சி, Graducation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்
தலைமைக் காரியாலயம் → யாழ்ப்பாணம்: 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

| யாழ்ப்பாணம் | நீர்வேலி |
| --- | --- |
| மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம் (ஓட்டுமடம் சந்தி அருகாமை) | 1வது மைல் கல் இராச வீதி |
| **கோப்பாய்** | **சாவகச்சேரி** |
| பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி | சாவகச்சேரி Hindu Collgee Primary School அருகாமை |
| **மானிப்பாய் 1** | **அச்சுவேலி** |
| 252, ஆலடிச்சந்தி, யாழ் வீதி. | ஆதார வைத்தியசாலை அருகாமை |
| **மானிப்பாய் 2** | **சங்கானை** |
| சங்கரப்பிள்ளை வீதி. [மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி] | பிரதேச செயலகம் அருகாமை [ஞிகர வைரவர் கோயிலடி] |
| **சுன்னாகம்** | **வடமராட்சி** |
| Dr. சுபாரத்தினம் வீதி சுன்னாகம் | பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி. |

(C/10948)
**BRITISH BUSINESS COLLEGE**
64, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Where Students Come First
Tel:077 362 7055, 021 222 4060, 021 222 5796, 077 6646357
British Council இனால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்[illegible]
Registered as an Education & Training Company with the Registrar of Companies-Sri Lanka. Reg. No: P 9718

**JAAHED**
Jaffna Alagappa Academy For Higher Education
**அழகப்பா பல்கலைக்கழகம்**
காரைக்குடி தமிழ்நாடு
[இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிகள்]
UGC/IUA/4
A/L இல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் 3 பாடம் சித்தியடைந்தவர்கள் Degree Course இற்கும் ஏதாவது Degree உடையவர்கள் Master Degree Course இற்கும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.

| கற்கை நெறிகள் (Degree Courses) | Master Degrees (முதுமாணி கற்கை நெறிகள்) |
| --- | --- |
| 01. B.A (Tamil LIT) | 01. M.Com |
| 02. B.A (English) | 02. M.Com (Finance) |
| 03. B.A (History) | 03. M.Sc (IT) |
| 04. B.A (Public Administration) | 04. M.A (English) |
| 05. B.Sc (Psychology) | 05. M.A (History) |
| 06. B.Sc (Mathematics) | 06. M.Sc (Maths) |
| 07. B.B.A (Administration) | 07. M.A (Personal Management) |
| 08. B.C.A (Computer) | 08. M.A (Education) |
| 09. B.B.A (Banking) | 09. M.B.A (Education) |
| 10. B.Com | 10. M.A (Journalism) |

Post Graduate Diploma Programmes
PG Dip. in Sports Management, PG Dip. in B.M.

Mayஇல் பரீட்சை எழுத விண்ணப்ப முடிவு திகதி : 16.01.2014

★ தமிழ் / ஆங்கிலத்தில் கற்கலாம்
★ கற்றல் கையேடுகள் பெறலாம்
★ தகைமைமிக்க விரிவுரையாளர்களினால் பரீட்சை மாதிரி வழிகாட்டல் நடைபெறும்.

Hon. Consultants:
Prof. M. Sinnathamby, Mr. A. Panchalingam (Emeritus Principal)

யாழ் இணைப்பாளர்:
P. Balamuhunthan
அழகப்பா பல்கலைக்கழகம்
Mobile: 077 386 7458

JAAHED
(Jaffna Alagappa Academy for Higher Education)
No:20, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
(SMART KIDS BUILDING)
(42051)(10.6.3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வீடு, காணி விற்பனைக்கு

வவுனியா, கூமாங்குளம் பாடசாலைக்கு அருகில் 4 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு

(43584)(10.14) தொடர்பு:077 6701883

## PERSONAL CLASS

இணைந்த கணிதம் (EM/TM) A/L 2014, 2015, 2016 & Repeat மாணவர்களுக்கு

(42057)(10.14) தொடர்பு:072 172 3528

## பொதிகள் சேவையில் முதலிடம் பதித்த இலங்கை நிறுவனம்

GTV ENTERPRISES, MAHARAJAH FOOD PRODUCTS, VIJEYA ENTERPRISES

### பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்

கடந்த இருபது வருடங்களாக பொதிகள் சேவையில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தியதும் தனிநபருக்குரிய பாவனைப் பொருட்களை (Personal Effect) கடல்மார்க்கமாகவும் ஆகாயமார்க்கமாகவும் சேவையினை முதன் முதலாக ஆரம்பத்த பெருமைக்குரிய நிறுவனங்களான G.T.V ENTERPRISES (PVT) LTD, மஹாராஜா பூட் புரடக்ட்ஸ் ,விஜயா எண்டபிரைஸஸ், மலர்ந்துள்ள 2014 தை மாதத்திலிருந்து சித்திரைப் புத்தாண்டு வரை புதிய மாற்றமாக விஷேட விலைக் கழிவுடனான சேவையினை ஆரம்பித்துள்ளது.

கடலுணவுப் பொருட்களும் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு மேலதிக கட்டணம் எதுவும் அறவிடப்படாது ஒரே கட்டணம் அறவிடப்படும். வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும் குறைவான கட்டணத்தில் விரைவான சேவையை பெற்றுக்கொள்ள கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

0714353708 / 0114378161

**G.T.V ENTERPRISES (PVT) LTD/ MAHARAJA FOOD PRODUCTS/ VIJEYA ENTERPRISES.**

இலக்கம்: 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தலைமை அலுவலகம்
18/3, Dr.E.A.Cooray Mawatha, Wellawatte, Colombo - 00600.

கிளைகள்
- 513, Galle Road, Wellawatte, Colombo - 00600.
- 170, Central Road, Colombo - 00120.
- 288, George R.De Silva Mawatha, Colombo - 00130.
- G-2 146, Pearl Park, Negombo Road, Wattala.
- 37/4, Trinco Road, Batticaloa.

இந்த வாரம் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு பெறுமதிமிக்க Rice cooker இனை பெறும் இரண்டாவது அதிர்ஷ்டசாலி ரசீது இலக்கம் - 84141 திரு : எ.சி. இந்திரன் குருநகர் யாழ்ப்பாணம்.

எச்சரிக்கை:
பொய்யான விளம்பரங்களை கண்டு ஏமாறாதீர்கள்.

ஒரே வார்த்தை ஒரே சேவை
சொல்லே செயல்
நம்பகமானது , விரைவானது

**வெளிநாட்டு நாணயமாற்று சேவை**

எங்களிடம் உங்கள் வெளிநாட்டு நாணயங்களை நியாயமான விலைக்கு மாற்றிக்கொள்ளலாம்.
எம்மை தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்
077 7747299, 071 4353708

## ஓராண்டு நினைவஞ்சலி

அம்மா! உமையிழந்து.... ஆண்டொன்று ஆனதுவோ?

வையகம் 17 . 02 . 1968



வானகம் 17 . 12 . 2012

**அமரர் ஸ்ரீபாஸ்கரி குணராசா**

திதி: பூர்வபக்க பஞ்சமி 05.01.2014

அம்மா! உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவோ?
ஆசைமுகம் மறைந்து அவலம்தான் சூழ்ந்ததுவோ?
செம்மையாம் சிரிப்பு செந்தளிப்பாம் பூவதனம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தியெலாம் மறைந்திடுமோ?
உம்மைக் காக்க உழைத்தோம் முடியவில்லை!
ஒவ்வோர் பொழுதுமிங்கு உம் நினைவில் வாடுகிறோம்!
எம்வீட்டு நாயகியே! என்றென்றும் நாம் மறவோம்!
இறைவன் தாள்மலரில் நீரமரப் பிரார்த்திப்போம்.
- ஓம் சாந்தி -

கச்சாய் வீதி,
முதலாம் கட்டை, சாவகச்சேரி.

உறவினர் உற்றார்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சதானந்தன் சரஸ்வதி



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், மூளாய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சதானந்தன் சரஸ்வதி நேற்று (04.01.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- தங்கம்மா தம்பதியரின் புத்திரியும், கந்தையா சதானந்தனின் மனைவியும், கந்தையா (திருச்செந்தூர் வாத்தியார்), சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், கோகுலன், மதுரா (டென்மார்க்), சுஜீவன் ஆகியோரின் அன்புத் தாயும், பஞ்சலிங்கம், நந்தகோபாலன் (டென்மார்க்) ஆகியோரின் மாமியும், அனுஷ்காவின் (டென்மார்க்) பேர்த்தியும், மகேஷ்வரி (கனடா), காலஞ்சென்ற சதானந்தம் மற்றும் சச்சிதானந்தம், அருளானந்தம், முருகானந்தம் காலஞ்சென்ற கருணானந்தம் மற்றும் நித்தியானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.01.2014) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் பித்தனை மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சதானந்தன் (கணவர்),
பிள்ளைகள்

மூளாய் கிழக்கு, சுழிபுரம். (42054)(10.14)

## People's Leasing & Finance PLC
### (A subsidiary of People's Bank)

**வாகனங்கள் விற்பனைக்கு**

**BUSES**

| VEHI. NO | MAKE & MODEL | YEAR | YARD |
|---|---|---|---|
| 030-35XX | ISUZU,ELF,14 SEATS | 1979 | JAFFNA |
| 062-72XX | MITSUBISHI,ROSA,28 SEATS | 1989 | JAFFNA |
| 60-23XX | TOYOTA HIACE,OMINIBUS 14 SEATS | 1981 | JAFFNA |
| NP JP-73XX | TATA LP1510,49 SEATS | 2004 | JAFFNA |

**CABS**

| VEHI. NO | MAKE & MODEL | YEAR | YARD |
|---|---|---|---|
| NP PP-80XX | TATA,ACE | 2010 | JAFFNA |
| NP PP-90XX | TATA,ACE | 2010 | JAFFNA |
| NP PQ-69XX | MAHINDRA,MAXXIMO | 2011 | JAFFNA |
| NP PT-63XX | TATA,SUPER ACE | 2012 | JAFFNA |
| NP PV-62XX | TATA,SUPERACE | 2013 | JAFFNA |

**LORRIES**

| VEHI. NO | MAKE & MODEL | YEAR | YARD |
|---|---|---|---|
| 027 SRI 93XX | ISUZU,TXD50 CLOSED | 1980 | JAFFNA |
| 041 SRI 11XX | ISUZU | 1981 | JAFFNA |
| 041 SRI 14XX | ISUZU,CLOSED | 1985 | JAFFNA |
| 068-24XX | ISUZU U-NHR69C | 1993 | JAFFNA |
| NE LI-81XX | TATA,LPT1109 | 2010 | JAFFNA |

**TIPPERS**

| VEHI. NO | MAKE & MODEL | YEAR | YARD |
|---|---|---|---|
| NP LK-41XX | LANKA ASHOK LEYLAND, COMET TIPPER 1613 | 2010 | JAFFNA |

**TRACTORS**

| VEHI. NO | MAKE & MODEL | YEAR | YARD |
|---|---|---|---|
| 037 SRI 46XX | MASSEY FERGUSON,240 | 1984 | JAFFNA |
| 049-48XX | MASSEY FERGUSON, | 1980 | JAFFNA |
| NP JU-18XX | MASSEY PERGUSON | 1986 | JAFFNA |
| NP JW-28XX | MASSEY FERGUSON,MF135 | 1982 | JAFFNA |
| NP RB-63XX | STANDARD,350 DI | 2010 | JAFFNA |
| NP RC-51XX | MASSEY FERQUSON,MF240 | 2003 | JAFFNA |
| NP RC-63XX | TAFE,45DI | 2011 | JAFFNA |
| 025 SRI 87XX | MASSEY FERGUSON | 1969 | JAFFNA |

**VANS**

| VEHI. NO | MAKE & MODEL | YEAR | YARD |
|---|---|---|---|
| 59-44XX | TOYOTA | 1993 | JAFFNA |

* வாகனங்கள் மற்றும் பத்திரங்கள் உள்ளபடியே கொடுக்கப்படும்.
* ஒவ்வொரு வாகனத்தின் முன் கண்ணாடியிலும் வாகனம் பற்றிப் பெறக்கூடிய தகவல்கள் காட்டப்பட்டுள்ளன
* வாகனங்களின் படங்களைப் பார்க்க www.plc.lk இணையத்தளத்திற்குப் பிரவேசிக்கவும்
* வாகனத்தைப் பெற்றுக்கொள்ள முற்பணக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து 03 நாள்களுக்குள் முழுக்கொடுப்பனவையும் அல்லது ஏதாவதொரு மாற்று ஏற்பாட்டையும் செய்தல் வேண்டும்
* எந்த வொரு சூழ்நிலையிலும் முற்பணக்கொடுப்பனவின் மீள் வழங்கல் செய்யப்படமாட்டாது.

**பார்வையிடும் நேரமும் காலமும்**

2014 ஜனவரி 03, 04, 05 மற்றும் 06 ஆம் திகதிகளில் மு.ப. 9.00 - பி.ப. 4.00 மணிவரை மற்றும் 2014 ஜனவரி 07 ஆம் திகதி மு.ப. 9.00 மணி - மு.ப. 11.00 மணி வரை நடைபெறும்.
கேள்விக்கோரல்கள் 2014 ஜனவரி 07 ஆம் திகதி பி.ப. 2.00 மணியுடன் முடிவடையும்

**பார்வையிடும் இடம்**

யாழ்ப்பாணம் : இல. 02 டச்சு வீதி இருபாலை.
021 222 8031, 021 222 0187, 077 4803804, 077 5309740, 077 3608670

**கோரல்கள் நடைபெறும் முகவரி**

பிரதம விற்பனை பிரதிநிதி
பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி. இல. 1161 மருதானை வீதி கொழும்பு - 08

கோரல்களை அண்மையில் உள்ள அல்லது தலைமைக்காரியாலயத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடலாம் அல்லது கோரல்களை பதிவுத்தபாலில் அனுப்பலாம் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வாகனங்கள் விற்பனை ( கோரப்பட்ட வாகனத்தின் பதிவு இலக்கம்) எனக் குறிப்பிட்டு 2014 ஜனவரி 07 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பு அலுவலகத்தில் கிடைக்கும் படியாக அனுப்பவும் பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி இன் தலைமை உத்தியோகத்தர் கோரல்களையோ அல்லது அனைத்து கோரல்களையோ நிராகரிப்பதற்கான காரணங்களைக் காட்டாமல் நிராகரிப்பதற்கு தகைமை உடையவர் ஆவார். தலைமை அலுவலகத்திலோ கிளைகளிலோ அல்லது எமது வாகனசாலைகளிலோ ஒவ்வொரு வாகனத்திற்கும் ரூபா 500/= கொடுப்பனவாக செலுத்தி ஏலத்திற்கான படிவங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். ஏலப்பெட்டி திறக்கப்பட்ட 07 நாள்களின் பின்னர் தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு கோரல் பற்றி அறிவிக்கப்படும்.

**ஏல விற்பனை நிலையம், பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி. 011 2631631**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுகளை அமைக்காதவர்களுக்கு எச்சரிக்கைக் கடிதம்

## அனுப்பி வைத்தார் வவுனியா வீடமைப்பு அதிகாரசபை முகாமையாளர்

ஓமந்தை அரச ஊழியர் வீடமைப்புத் திட்டத்தில் இதுவரை வீடுகளை அமைக்காதவர்கள் ஒரு மாத காலத்தினுள் வீடுகளை அமைக்கும் பணிகளை மேற்கொள்ளாது விட்டால் மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென வவுனியா மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் உரியவர்களுக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றும் சுமார் 600 அரச ஊழியர்களுக்கு கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் வீடுகளை அமைப்பதற்கென காணிகள் வழங்கப்பட்டன. வவுனியா வேப்பங்குளப் பகுதி யில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் இது வரை 250 வீடுகள் மாத்திரமே கட்டப்பட்டுள்ளன. சுமார் 90 வரையான காணிகள் பற்றைக் காடுகளாகக் காட்சியளிக்கின்றன. ஏனைய காணிகளிலும் வீடுகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்த நிலையில் இதுவரை வீட்டு வேலைகளை ஆரம்பிக்காதவர்களுக்கு வவுனியா மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் மேற்கண்ட கடிதத்தை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-402)

### ஏகமனதாக நிறைவேறியது வரவு-செலவுத் திட்டம்

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

நெடுங்கேணி பிரதேச சபைத் தவிசாளர் மு.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 7 உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 3 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஒருவருமாக மொத்தம் 11 உறுப்பினர்களின் ஆதரவுடன் வரவு-செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (க-422)

# பரந்தன் 8 ஆம் ஒழுங்கையில் வீணாக்கப்படும் தண்ணீர்

கிளிநொச்சி, ஜன.5

பரந்தன் எட்டாம் ஒழுங்கைப் பகுதியில் நெல் வயல்களுக்குச் செல்ல வேண்டிய கழிவு நீர் வாய்க்காலை மறித்து திசை திருப்பியதால் வயல் நிலங்களுக்கு நீர் செல்லாது வீணாவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.


பரந்தன் 8 ஆம் ஒழுங்கையில் முல்லைத்தீவு வீதியில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வயல்களில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் மழை பெய்யாததால் அழிவடையும் நிலையில் காணப்படுகின்றன. முல்லைத்தீவு வீதிக்குத் தெற்குப் புறமாகவுள்ள வயல்களுக்கு இரணைமடுக் குளத்திலிருந்து தண்ணீர் கிடைத்து வருகின்றது. ஆனால் பரந்தன் முல்லைத்தீவு வீதியின் வடக்குப் பக்கமாகவுள்ள வயல்களுக்கு நீர் கிடைப்பதில்லை.

குளத்தின் கழிவு வாய்க்கால் ஊடாக வயல் நிலங்களுக்குச் செல்ல வேண்டிய கழிவு நீர் இடைமறிக்கப்பட்டு அருகிலுள்ள மக்கள் குடியிருப்புக்குள் திருப்பி விடப்பட்டுள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் மக்கள் குடியிருப்பு வீதிகளில் நீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்துக்கும் இடையூறாகக் காணப்படுகின்றது.

(க-426)

## மரண அறிவித்தல்

### சத்துருலிங்கம் தம்பிமுத்து



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும், கைதடி தெற்கு கருங்காலி வளவை வசிப்பிடமாகவும் கொண்ட சத்துருலிங்கம் தம்பிமுத்து நேற்று (04.01.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சத்துருலிங்கம் - தங்கமுத்து தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற தில்லைப் பிள்ளையின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற வேலுப் பிள்ளை, சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் நடராசா (ஜேர்மனி), தங்கராணி (கைதடி), அரியராணி (ஜேர்மனி), நவரத்திராசா (ஜேர்மனி), கேசராணி (கைதடி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஸ்ணானந்ததேவி (ஜேர்மனி), நவரத்தினராசா (இரத்தினம் - கைதடி), விவேகானந்தன் (ஜேர்மனி), ஜசோதா (ஜேர்மனி), தனபாலசிங்கம் (பிரதேசசபை கொடிகாமம்), ஆகியோரின் அன்புமாமனும். ஸ்ரீசசிகரன் கார்த்திகா, கௌரிதாசன் பிரியதர்சினி, கௌதிபன் றேஜீ, கௌதமன் (கபா), கோமதி காலஞ்சென்ற கௌரிமாலா, கௌரிதர்சினி, சிவானந்தன், செந்தூரன், ஜீவந்தி, தர்சினி மயூரதன் ஆகியோரின் பேரனுமாவார்.வினித், ரூசிபா, சாரங்கன், சாருஷன், விஜேனா, தீருஷன், ஆகியோரின் பூட்டனும் காலஞ்சென்ற தையல்நாயகி, கண்மணி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மார்க்கண்டு (கிராம சேவகர்) காலஞ்சென்ற ஆறுமுகம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 1.00 மணிக்கு ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

கைதடி தெற்கு, கைதடி.

## மரண அறிவித்தல்

### கனகராசா திசோக்குமார்



நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திசோக் என அன்பாக அழைக்கப்படும் கனகராசா திசோக்குமார் கடந்த (22.12.2013) பிரான்ஸில் காலமாகி விட்டார்.

அன்னார் கனகராசா - லோகினி தம்பதியரின் அன்பு மகனும், தர்சினி, சஞ்சுயா, நிரூபினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தகிரதனின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் நாயன்மார்கட்டில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நவேந்திரராணி சிற்சபேசன்



உடுவில் மேற்கைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட சிற் சபேசன் நவேந்திரராணி நேற்று (04.01. 2014) சனிக்கிழை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்சபேச னின் (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், கனகம்மா தம்பதியரின் புத்திரியும், காலஞ் சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் செந் தூரன் (வைத்தியர்), ஐங்கரன் (பொறியியலாளர்- லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், நாகபூசணம், சிவலிங்கம், நவபுஸ்பம் ஆகி யோரின் சகோதரியும், , கிருஸ்ணவதனா, கிருஷ்ண ரூபனா ஆகியோரின் மாமியும், கேசிகன், தரணியா ஆகி யோரின் அப்பம்மாவும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் ஜெய லக்சுமி, கதிர்காமநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

உடுவில் மேற்கு, சுன்னாகம்.

### இலங்கை மீனவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

இந்திய கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 59 பேரைத் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு இந்திய நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. இந்தியாவின் இராமநாதபுரம் பிரதான நீதிவான் நீதிமன்று இலங்கை மீனவர்களை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. (வ)

லண்டன் / கனடா / அமெரிக்கா / சுவிஸ் / ஜேர்மனி பிரான்ஸ் / இத்தாலி / டென்மார்க் / அவுஸ்திரேலியா நியூசிலாந்து மற்றும் ஏனைய நாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு

வங்கியில் பணவைப்பு

அரச வங்கியில் 3, 6, 12 மாதங்களுக்கான முன் பின் வங்கியில் பணவைப்பு

Saving Book - FD - Statement

For: Student | Business | Migration | PR | Visit Family | Dependant | Refused | Visas

077 4789289

விசா பெற்றுக்கொள்வதற்கு தேவையான சகல உதவிகளும் எம்பசி வேலைகளும் செய்து தரப்படும்

No.52, Davidson Road, Colombo -04.

நேரத்தை முன்கூட்டியே பதிவுசெய்துவிட்டு வரவும்.

STUDY ABROAD
வெளிநாட்டில் உயர்கல்வி வாய்ப்பு
UNIVERSITY & COLLEGES

வருடமொன்றுக்கான கற்கைநெறிக்கட்டணம்

ENTRANCE - JAN./FEB.2014

UK - £ 3000
USA - US$ 8000
CANADA - C$ 5000
AUSTRALIA - A$ 8000
NEW ZEALAND - NZ$ 10000
SINGAPORE - US$ 3800
MALAYSIA - US$ 3000
EUROPE - US$ 3500
CYPRUS - E 2500
CHINA - US$ 3000
INDIA - US$ 1500



➤ Free of charge ( Consultation )
➤ Enrolment - G.C.E. (O/L)
➤ After visa payment

Hotline: 077 3388366

542/A, R.A.De Mel Mawatha, Colombo - 03. Tel: 0112506072
e-mail:study2visa@yahoo.com

சமையல் ஆள் தேவை

உணவகம் ஒன்றுக்கு சைவம் மற்றும் அசைவம் சமைக்கக் கூடிய சமையலில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப் படும். (ஆண்/பெண்)

தொடர்புகளுக்கு:
0777 361870

வேலைக்கு ஆள்கள் தேவை

புதுக்குடியிருப்பில் இயங்கும் ABANS UNLIMITET HERO ABANS காட்சியறைகளுக்கு ஆலுவலகப் பணியாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் 10. 01. 2014 க்கு முன் நேரடியாக அல் லது தொலைபேசி ஊடாக தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 1590339, 0778998744
முகாமையாளர்

அக்ஷயா டிப்ளோமா அழகுக்கலை பயிற்சி நெறி

1) பேசியல் (10) 2) மேக்கப் (7) 3) ஹெயாஸ்ரைல் (25)
4) தலைமுடி அயன்பண்ணுதல் 5) கேளிங் பேமிங் 6) சாறி பிளவுஸ் கட்டிங் (6)
7) சாறி வேக் (5) 8) வொக்கே செற்றிங் (10) 9) ஐசிங் கேக் (20)
10) ஐசிங் பிளவர் (20)

◇ மேற்படி பயிற்சி நடைபெறுகின்றன. பயிற்சியின் முடிவில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.
◇ பிறப்பிலே கறுப்பு, கருமை, மஞ்சள் புள்ளிகள், காய்கள், நாட்பட்ட பருக்கள், பள்ளங் கள் அனைத்தையும் மாற்றும் ஒரிஜினல் வைற்றிங் கிறீம் விற்பனைக்கு உண்டு. [illegible]
◇ பேசியல் (வைத்திங், கோல்ட்) மேக்கப், ஐசிங் கேக், றிச் கேக் ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும். அக்ஷயா 221, நாவலர் றோட்
தொடர்புகளுக்கு: 077 210 6155 (பிறவுன் றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

UK, Australia, Canada, USA, New Zealand, Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden etc...

வங்கியில் பணவைப்பு

Saving book, Fixed Deposit, Statement

3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு (அரசவங்கிகளில் மட்டும்)

Migration / Skill Migration / Visit Visas / Student Visas / Dependent / Business / Investment / New Applications etc...

(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

SKYWALK Visa Solutions

ஸ்கைவோர்க் வீசா சொலூஷன்

No.65, 1/1, Galle Road, Dehiwala. (Food City - 1st Floor)

077-7711905

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08 ✱ 12 ✱ 1937



மறைவு
17 ✱ 12 ✱ 2012

அமரர் இளையதம்பி குமாரசாமி

நடைமுறையில் ஒத்துவராத
செயற்பாடுகளாக இருந்தாலும்
சமூகத்தின் எதிர்மறைக்குள்
தலைப்பட்டு இருந்தாலும்
முகம் கொடுத்து
எங்களை வெளிப்படுத்திய அப்பா
நீங்கள் சாகவில்லை
எங்களுக்குள் வாழ்கிறீர்கள்

523 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ். செயலக நிறுத்தல், அளத்தல் பிரிவில் வைத்து நாளை திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை நிறுத்தல், அளத்தல் கருவிகளுக்கு இந்த ஆண்டுக்கான முத்திரையிடும் பணிகள் இடம்பெறவுள்ளன.

இந்த ஐந்து நாள்களிலும் நிறுத்தல், அளத்தல் கருவிகளுக்கு முத்திரையிடுவதை வியாபார நிறுவனங்கள் உறுதிப் படுத்திக்கொள்ளுமாறு யாழ். செயலக நிறுத்தல், அளத்தல் பகுதி அதிகாரி கேட்டுள்ளார்.

இதனை விட 9 ஆம் 10 ஆம் திகதிகளில் நகைக் கடைகள், மற்றும் அஞ்சல் நிலையங்கள், வங்கிகள் போன்றவற்றின் நிறுத்தல், அளத்தல் கருவிகளுக்கும் முத்திரை யிடும் பணிகள் இடம்பெறும் என்றும் அவர் கூறினார். (த-17)

## மாகாணத் தேர்தல்கள் தொடர்பில் 6ஆம் திகதி முக்கிய தீர்மானம்

### ஐ.தே.க அறிவிப்பு

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ளதாக எதிர்பார்க்கப்படும் மேல், தென் மாகாண சபைத் தேர்தல்கள் குறித்த முக்கிய தீர்மானங்களை எதிர்வரும் 6 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி எடுக்கவுள்ளதாக தலைமைத்துவ சபையின் தலைவர் கருஜயசூரிய தெரிவித்தார்.

இவ்வருடத்தின் முதலாவதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான கூட்டமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எதிர்வரும் திங்கட்கிழமை காலை கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் தலைமைத் துவ சபை கூடவுள்ளது. இது இவ்வருடத்தின் முதல் கூட்டம் மட்டுமன்றி நடைபெறவிருக்கும் மேல், தென் மாகாண சபைத் தேர்தல்கள் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளது. அத்துடன், ஐ.தே.கவின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் யார் என்ப தைத் தேர்தல் குறித்து அறிவித்தவுடன் தெரியப்படுத்துவோம்" என்றார்.

## ரயிலுடன் மோதியது கடற்படை வாகனம்

### சிப்பாய் சாவு:ஐவர் காயம்

அநுராதபுரம் - யாழ்ப்பாணம் சந்தியிலுள்ள ரயில் கடவையில் கடற்படையினரின் வாகனமொன்று ரயிலுடன் மோதி நேற்று அதிகாலை விபத்துக்குள்ளானதில் கடற்படைச் சிப்பாய் உயிரிழந்ததுடன் ஐவர் காயமடைந்துள்ளனர்.

வவுனியாவிலிருந்து மாத்தறை நோக்கிப் பயணித்த ரஜரட்ட ரயிலில் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கடற்படையினரின் வாகனத்தில் பெண்கள் உட்பட 10 பேர் பயணம் செய்துள்ளனர். காயமடைந்தவர்களில் ஐவர் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதா கத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வாகனத்தில் பூனேவ கடற்படை முகாமின் பொறுப்பதிகாரி அவருடைய மனைவி மற்றும் பிள்ளைகள் உள்ளிட்டோரே பயணித்துள்ளனர்.

அவருடைய பிள்ளைகள் இருவரும் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த)

## 60 செய்மதிகளுடன் ஒருவர் சிக்கினார்

கொழும்பு, ஜன. 5

தொலைத் தொடர்புகள் ஆணைக் குழுவின் அனுமதியின்றி இந்தியாவி லிருந்து செய்மதித் தொலைபேசிகள் மற்றும் அதற்குத் தேவையான 200 உபகரணங்களைக் கொண்டுவந்த நபர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பைச் சேர்ந்தவர் என்றும் அடிக்கடி இந்தியாவிற்குச் சென்றுவருபவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், இந்தியாவிலிருந்து நேற்று அதிகாலை இலங்கை வந்த விமானத்தில் வந்திறங் கியபோதே விமான நிலைய சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரின் மற்றொரு பயணப் பையிலிருந்து 50 கிலோகிராம் விதை களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த விதைகள் கமத்தொழில் திணைக்களத்தின் அனுமதியின்றி கொண்டு வரப்பட்டுள்ளது என சுங்கத் திணைக் களத்தின் ஊடகப்பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார். (த)

## மாணவருக்கு கொடுப்பனவு

கோண்டாவில் மக்கள் நலன் பேணும் அமைப்பினால் குடும் பத் தலைவர்களை இழந்த குடும்பங்களில் தெரிவு செய் யப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவு கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையில் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு வழங்கப்படவுள்ளது. அந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக வழங்கப்படும் இந்தக் கொடுப்பனவை சம்பந்தப்பட்ட மாணவர்கள் வந்து பெற்றுக்கொள்ளுமாறு அமைப்பின் செயலாளர் செ. தனுஜன் கேட்டுள்ளார். (த-4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இந்து

சர்வதேச இந்து மதக் குருமார்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த ஊர்வலம் எதிர்வரும் 20 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு யாழ் நகர், வண்ணார்பண்ணை சிவன் கோயிலில் உச்சிக் கால பூசையுடன் ஆரம்பமாகி ஓம் நமசிவாய மந்திரச் சுவடிகளைத் தாங்கியவாறு ஊர்திகளுடன் காங்கேசன்துறை வீதியூடாக கீரிமலைச் சிவன் கோயிலைசென்றடையவுள்ளது.

இந்த ஊர்வலத்தில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் உட்பட அனைத்துப் பிரதேசங்களிலும் உள்ள ஆலயங்களில் இருந்து சைவ சமய விழிப்புணர்வுக் கருத்துக்களுடன் கூடிய வாசகங்கள் தாங்கிய ஊர்திகள் பங்கேற்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் ஊர்வலம் இடம் பெறும் பாதையில் உள்ள பாடசாலைகளில் மாணவர்கள் ஊர்திகளை வரவேற்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

குடாநாட்டில் இந்து ஆலயங்களில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் திருட்டுச் சம்பவங்கள், ஆலயங்கள் இடித்தழிப்பு ஏனைய சமகாலப் பிரச்சினைகள், இந்து சமயத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாத்தல் போன்ற கருத்துக்களை முன்வைத்து இந்த ஊர்வலம் நடத்தப்படவுள்ளது.

இந்த ஊர்வலத்துக்கு இந்து மக்கள் உட்பட பொது அமைப்புகள், ஆலயங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று சர்வதேச இந்துக் குருமார்கள் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, இந்த விழிப்புணர்வு ஊர்வலம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று ஒன்றியத்தில் நடைபெற்றது.

ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (த-14)

### தோண்டத்

மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம், அநுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல். வைத்தியரட்ன ஆகியோரின் முன்னிலையில் புதை குழி தோண்டும் பணி நேற்று காலை 8 மணி முதல் 2.15 மணி வரை நடைபெற்றது.

இதன் போது 3 மனித எலும்புக்கூடுகள், எலும்பு எச்சங்கள், மனிதப் பற்கள் மீட்கப்பட்டன.

குறித்த மனித புதைகுழியை தோண்டும் பணி மீண்டும் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-56)

### சர்வதேச

ஸ்ரீபன் ஜே ராப், கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்றும், அவர் வடக்கு சென்று இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வாழும் மக்களுடனும், இறுதிப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுடனும் கலந்துரையாடுவார் என்றும் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல்தடவையாக இலங்கை வந்த ஸ்ரீபன் ஜே ராப், இரா.சம்பந்தன், தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பினரைக் கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-சி)

### மத்திய

பயணத்தில் ஜோர்தான், பலஸ்தீன், இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு ஜனாதிபதி செல்லவுள்ளார் என ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆறு நாள்கள் கொண்ட இந்த பயணத்தின்போது, அந்த நாடுகளு டனான இருதரப்புப் பேச்சுகளில் ஜனாதிபதி ஈடுபடவுள்ளார்.

இந்த பயணத்தின் முதற்கட்டமாக ஜோர்தானுக்குச் செல்லும் ஜனாதிபதி, அந்நாட்டின் மன்னர் இரண்டாம் அப்துல்லா இப்னு அல் ஹுசேய்னை சந்திக்கவுள்ளார்.

இதையடுத்து பலஸ்தீன் செல்லும் அவர், பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்துப் பேசவுள்ளார்.

இதன்போது இலங்கை - பலஸ்தீன நட்புறவு சங்க உறுப்பினர்களை ஜனாதிபதி சந்திக்கவுள்ளதுடன், பலஸ்தீன முன்னாள் தலைவர் யாஸீர் அரபாத்தின் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்திற்கும் சென்று மரியாதை செலுத்தவுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக இஸ்ரேலுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி, பெத்ல ஹேமிலுள்ள இயேசு கிறிஸ்து பிறந்த இடத்தையும் பார்வையிடவுள்ளார்.

இஸ்ரேலில் இரண்டு நாள்கள் தங்கியிருக்கும் அவர், அந்த நாட்டுப் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு, ஜனாதிபதி ஷிமோன் பெரஸ் ஆகியோரையும் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-சி)

### ஹத்துருசிங்க

மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க கொழும்பு இராணுவத் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இதனை அடுத்து யாழ். மாவட்டப் படைத் தளபதியாக கிளிநொச்சி மாவட்டப் படைத் தளபதியாக உள்ள மேஜர் ஜெனரல் உதய பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்கவின் பிரியாவிடை வைபவம் நேற்று வசாவிளானில் அமைந்துள்ள படையினரின் வரவேற்பு விடுதியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தளபதி மஹிந்த ஹத்துரு சிங்க உரையாற்ற எழுந்ததும் மேடை பரிசுப் பொருள்களால் நிறைந்தது.

பிரியாவிடை நிகழ்வில் கலந்து கொண்ட பலரும் பரிசுப்பொருள்களை தளபதிக்கு வழங்கித் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

யாழ் மாவட்டக் கிரிக்கெட் பயிற்றுநர் சண்முகலிங்கன் படைத் தளபதிக்குத் தங்க மோதிரம் ஒன்றை பரிசளித்தார்.

திணைக்களங்களின் தலைவர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், சமூகப் பிரதிநிதிகள், வர்த்தகர்கள் எனப் பலரும் படைத் தளபதிக்கு பரிசுப் பொருள்களை வழங்கி வாழ்த்தினர்.

இந்த வைபவத்தில் சாந்தன் இசைக் குழுவின் இன்னிசை நிகழ்வும் இடம்பெற்றது.

இந்தப் பிரியாவிடை வைபவத்தில் பிரதேச செயலர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், வடக்கு மாகாண சபை அதிகாரிகள், கல்வி அதிகாரிகள், பாடசாலைகளின் அதிபர்கள், விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள், மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள், வர்த்தகர்கள், சமயத் தலைவர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர். (த-86)

### இலங்கை

கப்பட்டது. அந்தக் குழு, எமது நாட்டுக்கு வராமல், அனைத்து சாட்சிகளையும் ஆராய்ந்து பார்க்காமல் ஏதோ ஒரு வகையில் அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்ட தரப்பினருடன் பேச்சு நடத்தி அறிக்கை யொன்றை வெளியிட்டது. உலகம் முழுவதும் சரியான தைச் சிந்திப்பவர்கள் அந்த அறிக்கை பக்கச் சார்பானது எனக் கூறி அதை நிராகரித்தனர்.

எமக்கு, எம்முடைய பொறிமுறை உள்ளது. நல்லிணக்க ஆணைக்குழுவினர் தமது அறிக்கையை வெளியிட்ட போது அதில் ஏற்றுக்கொள்ளக்கூடிய பரிந்துரைகள் இருந்ததால் உலகமே அதை ஏற்றுக்கொண்டது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்கள் சிக்கல் தன்மைகொண்டதால் அவற்றைத்தீர்ப்பதற்கு அரசுக்கு கால அவகாசம் தேவை.

பிரிட்டன் பிரதமரின் கருத்து எமது நாடு சுயாதீனமானது. அதில் சட்டரீதியாக தெரிவு செய்யப்பட்ட அரசுக்கு அச்சுறுத்தல் விடுப்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை. நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கைப் பரிந்துரைகளுக்குமைய காணாமற்போனோர் தொடர்பில் அறிக்கையிடுவதற்கு ஆணைக்குழு ஒன்றை நிறுவியுள்ளோம். இந்த ஆணைக் குழுவுக்கு இது வரையில் 10 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த ஆணைக்குழுவின் தலைவர் உயர்மட்ட வரவேற்பு பெற்ற சுயாதீனமான ஒருவராவார். ஆணைக் குழு வின் தலைவராக வெளிநாட்டவர் மட்டும் இருக்க வேண்டும் என கூறுபவர்கள் யார்? அவர்கள் பக்கச் சார்பற் றவர் கள் என எமக்கு நற்சான்றிதழ் வழங்குபவர் யார்?

குற்றச்சாட்டுகளுக்கு பதில்

எம்மை விமர்சிப்பவர்கள் யார்? அவர்கள் ஏன் அப்படி செய்கின்றனர்? இவை நாம் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய பிரச்சினைகள் ஆகும். எமது நாட்டின் வரலாற்றை அறியாதவர்கள் தான் எம்மைப் பற்றி பேசுகின்றனர். 1983 ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை நடந் தவை என்ன என அறியாதவர்கள் தான் இப்படி பேசுகின்றனர்.

தோற்கடிப்பட்ட தீவிரவாதத்தின் குரலாகத்தான் அவர்கள் செயற்படுகின்றனர். 80ஆம் ஆண்டுகளின் ஆரம்பம் முதல் கொண்டுசெல்லப்பட்ட பொய்ப் பிரச்சாரங்கள் குறித்து உங்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை. தோற் கடிக்க முடியாது எனக் கூறிய தீவிர வாதத்தைத் தோற்கடித்ததுதான் நாம் செய்த ஒரே தவறு.

தனக்கு அநீதி இழைக்கப்படுகின்றதெனில் எவரும் முறைப்பாடு செய்யலாம் என்று நான் கூறியுள்ளேன். அத்துடன், சிறந்த நீதித்துறை முறைமை ஒன்றும் எம்மிடம் இருக்கிறது. எமது அரசு மனித உரிமைகளை மீறியது என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை நான் நிராகரிக்கின்றேன். இப்போது எமக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்கள், எமது ஆண்கள், பெண்கள், பிள்ளைகள், கர்ப்பிணிகள் மரணித்தபோது அமைதியாக இருந்ததை என்னால் மறக்க முடியாது எனத் தெரிவித்துள்ளார். (த-சி)

### தமிழ்

ளார் என்று தெரிவிக்கப்பட்டது. மகஸின் சிறைச்சாலைக்கு வரவுள்ள வடக்கு முதலமைச்சர் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் நேரில் சந்தித்து பேச வேண்டும் எனவும் அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கைதிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த)

### வடக்கு

முதல் பொத்துவில், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பிர தேசங்களில் இடியுடனான கடும் மழை பெய்யக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. வடபகுதியிலிருந்து கிழக்கு நோக்கி வீசும் காற்று மணிக்கு 30 முதல் 50 கிலோ மீற்றர் வரை வீசும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

### ரீ.ஐ.டி.

தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து தனது படிப்பை நிறுத்திவிட்ட நிதர்சன், கூலி வேலைக்குச் சென்றே குடும்பத்தைக் காப்பாற்றி வந்துள்ளான். குடும்பத்தின் ஒரே உழைப்பாளியான தந்தை சிறைக்குள் தள்ளப்பட்டதால்தாயையும்மூன்று சகோதரிகளையும் இந்தப் பிஞ்சு வயதிலேயே சுமக்க வேண்டிய பொறுப்பு சிறுவனின் தோள்களில் சுமத்தப் பட்டது. அவன் தச்சுவேலை செய்தே தனது சகோதரிகளையும் தாயாரையும் கவனித்து வந்துள்ளான்.

இப்போது அவனையும் இழந்து என்ன செய்வது என்று தெரியாது பரிதவித்து நிற்கின்றது அந்தக் குடும்பம். சிறுவனின் இறுதிச் சடங்குகளைச் செய்வதற்கான வழிவகை அறியாது தவிக்கும் தாயும் சகோதரிகளும் மகன் இறந்த செய்தியை தந்தைக்கு எப்படித் தெரிவிப்பது என்று அறியாமல் தவிக்கிறார்கள்.

குழந்தைகளை போதிய அக்கறையுடன் வளர்க்காத பெற்றோர்கள் சிலரைக் கடந்த காலங்களில் தண்டித்துள்ள நீதித்துறை, இந்தச் சிறுவனை கல்வி கற்கும் வயதில் வேலைக்குச் செல்ல நிர்ப்பந்தித்த இலங்கை அரசையும் அதன் அதிகாரிகளையும் தண்டிக்க முன்வருமா என்று கேள்வி எழுப்புகிறார்கள் சமூக ஆர்வலர்கள். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது முத்துத்தம்பி



யாழ்ப்பாணம், ஜன.5
கொம்மாந்துறை விளையாட்டுக்கழகம் நடத்திய 8 பேர் பங்கு கொள்ளும் 8 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் திருநெல்வேலி முத்துத் தம்பி விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.
கடந்த செவ்வாய்க் கிழமை கொம்மாந்துறை விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் கொக்குவில் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக் கழகஅணிமோதிக்கொண்டது.
முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழக அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் ஜெயறூபன் 32 ஓட்டங்களையும், சிந்து 37 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக்கழக அணி சார்பில் சுரேந்திரன், கிசோர், பிரபு ஆகியோர் தலா ஓர் இலக்கினை வீழ்த்தினர்.
83 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி முத்துத் தம்பி விளையாட்டுக் கழக அணி 7.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்கினை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் லவன் 16 ஓட்டங்களையும், விதுன் 31 ஓட்டங்களையும், கிசோர் 21ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் கொக்குவில் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழக அணி சார்பில் தீபன் 3 இலக்கினையும், சிந்து, ஜெயறூபன் ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.
ஆட்ட நாயகனாக திருநெல்வேலி முத்துத் தம்பி விளையாட்டுக் கழக அணி வீரன் விதுன், தொடர் ஆட்ட நாயகனாக அதே விளையாட் டுக்கழக வீரன் சுரேந்திரன் ஆகியோர் தெரிவானார்கள். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்




வவுனியா,டிசெ.5
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:
பி.ப.3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது.
பி.ப. 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது. (த-23)

* * *

வலி.வடக்கு,ஜன.5
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருநாளையொட்டி நடத்திவரும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் காலிறுதிஆட்டங்கள் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. இதில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:
இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் அராலி கிழக்கு அண்ணா விளையாட்டுக்கழகம்.
குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் எதிர் நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம். (த-86)

## எவ்.ஏ.கிண்ண ஆட்டம் கொழும்பில்

யாழ்ப்பாணம், ஜன.5
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் 'எவ்.ஏ' கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்களில் எதிர் வரும் 12 ஆம் திகதி கொழும்பு சாளிங்க விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இதில் திருகோணமலை ஈஸ்ரன் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இலங்கை போக்குவரத்துச் சபை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## பாடசாலைகளின் கிரிக்கெட்



யாழ்ப்பாணம், ஜன.5
முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி ஆகியவற்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இரண்டு நாள் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)

## ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஜன.5
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதி யுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இதில் கடந்த திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-
திங்கட்கிழமை இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் கரவைச் சுடர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்வாய் பாரதி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் அல்வாய் பாரதி விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல்கணக்கில்வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து செஞ்சுடர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழக அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதிக் கொண்டது.
இதில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி 7:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
புதன்கிழமை இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பூமகள் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் பூமகள் விளையாட்டுக் கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திக்கம் விளை யாட்டுக் கழக 'பி' அணி மோதிக் கொண்டது.
இதில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகம் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## தாச்சி விளையாட்டை மேம்படுத்த நடவடிக்கை



யாழ்ப்பாணம், ஜன.5
யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இணுவிலிலுள்ள யாழ். மாவட்ட தாச்சிச் சங்கச் செயலகத்தில் தலைவர் க.தயாளன் தலைமையில் நடைபெற்றது.
யாழ்.மாவட்டத்திலுள்ள தாச்சி விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொண்ட இந்தப் பொதுக் கூட்டத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் இம்மானுவேல் ஆனல்ட் மற்றும் யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலர் எஸ்.மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்
இந்த ஆண்டுக்கான யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தலைவராக வேலணை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.சண்முகலிங்கமும், செயலாளராக யாழ். நகர வர்த்தகர் ஜினதாஸும், பொருளாளராக யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையைச் சேர்ந்த வி. ஆனந்தஜெஸ்கரனும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் பதினேழு பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.
எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்திலுள்ள தாச்சி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான போட்டி ஒன்றை நடத்த தாம் பூரண ஆதரவு வழங்குவதாகவும் , இந்தப் போட்டிகள் இனிவரும் காலங்களில் வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் மிகச் சிறப்பாக நடைபெற தாம் வழிவகைகளை செய்வோம் எனவும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் இம்மானுவேல் ஆனல்ட் தெரிவித்தார்.
இதேவேளை இந்த விளையாட்டை பிரதேச செயலக ரீதியாக இனிமேல் நடத்துவதற்கு தன்னாலான உதவிகளை வழங்குவதாக யாழ். மாவட்ட விளையாட்டு அலுவலர் எஸ்.மோகன் கூறினார்.
(த-288)


## திருமலையில் உதைபந்தாட்டம்

திருகோணமலை, ஜன.5
திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது என லீக்கின் செயலாளர் யோகரெட்ணம் தெரிவித்துள்ளார். (த-23)




## முல்லைத்தீவில் கூடைப்பந்து சங்கம்

முல்லைத்தீவு,ஜன.5
முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந் தாட்டச் சங்கம் அண்மையில் உருவாக்கப்பட்டுள்ளது.
இதன் தலைவராக ஜெயந்தனும், உப தலைவர்களாக கஜசயன், செல்வச்சந்திரன் ஆகியோரும் செயலாளராக [illegible]மல்ராஜும், பொருளாளராக [illegible] தொழில்நுட்ப ஆலோசகராக முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி தனுராஜும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (த-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்புக் கிடைத்தால் மீண்டும் வருவேன்



வாய்ப்பொன்று கிடைத்தால் மீண்டும் பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்குப் பணியாற்ற வருவேன் என பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் தெரிவித்துள்ளார். அத்தோடு பாகிஸ்தான் கிரிக்கெட் சபையுடனான சிறந்த உறவையும் அவர் சுட்டிக் காட்டினார்.

2012ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்ட டேவ் வட்மோர், தனது 2 வருடகால ஒப்பந்தத்தின் முடிவில் பெப்ரவரியுடன் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து விலகவுள்ளார். தனது இறுதித் தொடராக இலங்கைக்கெதிரான தொடரில் அவர் பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றுகிறார்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள அவர், தனது பதவிக்காலத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையுடன் சிறந்த உறவைப் பேணியமை சிறப்பானது எனவும், எதிர்காலத்தில் சந்தர்ப்பம் கிடைக்குமாயின் ஏதாவதொரு பதவியில் பணியாற்றத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

2 வருடங்கள் இணைந்து பணியாற்றிய வீரர்களை விட்டுச் செல்லும் அந்த உணர்வு காணப்படுகின்றபோதிலும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும், தானும் சிறந்த உணர்வுகளுடன் பிரிகின்றமை குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் அணிக்குப் பயிற்சியளிப்பது சிறந்த அனுபவமாக அமைந்ததாகக் குறிப்பிட்ட டேவ் வட்மோர், ஆனால் மொழிப் பிரச்சினை காரணமாக தொடர்பாடலென்பது கடினமாக அமைந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். (கு)



# திஸர பெரேராவுக்கு பிக் பாஷ் அனுமதி மறுப்பு

ஆஸ்திரேலியாவின் உள்ளூர் 20/20 தொடரான பிக் பாஷ் லீக் தொடரில் பங்குபற்றுவதற்கு இலங்கையின் சகலதுறை வீரர் திஸர பெரேராவுக்கு அனுமதி மறுக்கப்பட்டதை இலங்கை கிரிக்கெட் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் வைத்து பாகிஸ்தானுக்கெதிராக இலங்கை அணி 2-3 என்ற கணக்கில் ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரைத் தோற்ற பின்பு, இலங்கை கிரிக்கெட் சபையின் மூத்த அதிகாரிகளுக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பையடுத்து புதிய வருடத்தில் அதிகளவிலான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அதன் ஒரு கட்டமாக பிக் பாஷ் லீக் தொடரில் பங்குபற்ற திஸர பெரேராவிற்கு அனுமதி மறுக்கப்பட்டதாகவும் முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

இலங்கை ஏ அணியுடனும் இணைந்து போட்டிகளில் பயிற்சிகளில் ஈடுபடுவதை உறுதிப் படுத்தும் விதமாக இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் தற்போது ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள இலங்கை கிரிக்கெட் சபை, மேற்படி விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளது. உள்ளூர்ப் பயிற்சியாளர்களுடனும், இலங்கை ஏ அணியுடனும் இணைந்து போட்டிகளில் பயிற்சிகளில் ஈடுபடுவதை உறுதிப்படுத்தும் விதமாக இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. (கு)



# டரன் சமி வெளியேற்றம்

நியூசிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் குழாமிலிருந்து டரன் சமி வெளியேற்றப்பட்டுள்ளார். அவருக்கு ஏற்பட்டுள்ள உபாதை காரணமாகவே அவர் வெளியேற்றப்பட்டுள்ளார்.

5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்குபற்றிவரும் நிலையில், 3 போட்டிகள் இதுவரை நிறைவடைந்துள்ளன. இதன்படி, எஞ்சியுள்ள 2 போட்டிகளில் டரன் சமி பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2ஆவது போட்டியில் பங்குபற்றிய டெரன் சமி, அதன் பின்னர் ஏற்பட்ட பின் தொடைத் தசைநார் உபாதை காரணமாக 3ஆவது போட்டியிலும் பங்குபற்றியிருக்கவில்லை.

3ஆவது போட்டியில் கொரே அன்டர்சன் உலக சாதனை சதத்தைப் பெற்று நியூசிலாந்துக்கு அதிரடி வெற்றியைப் பெற்றுக் கொண்ட நிலையில், தற்போது டரன் சமியின் இழப்புக் காரணமாக மேற்கிந்தியத் தீவுகள் அணி அழுத்தத்தை எதிர்கொண்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளின் டெஸ்ட், 20/20 அணிகளின் தலைவரான டரன் சமி, இந்த ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முடிவில் இடம்பெறவுள்ள 20/20 சர்வதேசப் போட்டித் தொடரில் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (கு)

# மோடிக்கு எதிராக மேன்முறையீடு

ஐ.பி.எல். கிரிக்கெட் முறைகேட்டில் சிக்கிய லலித் மோடிக்கு எதிராக இந்திய கிரிக்கெட் சபை, உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளது. ஐ.பி.எல் கிரிக்கெட்டில் முறைகேடு செய்ததாக குற்றம்சாட்டப்பட்ட லலித் மோடிக்கு இந்திய கிரிக்கெட் சபை, வாழ்நாள் தடை விதித்தது. இதனையும் மீறி, ராஜஸ்தான் கிரிக்கெட் சங்கத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டார். இதில் போட்டியிட ராஜஸ்தான் மாநில விளையாட்டுச் சட்டம் 2005இன் படி, லலித் மோடிக்கு உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியது. இதன் முடிவு நாளை அறிவிக்கப்பட உள்ளது. இந்த நிலையில் லலித் மோடிக்கு எதிராக இந்திய கிரிக்கெட் சபை உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளது. இதில் ஐ.பி.எல் ஊழலில், லலித் மோடி இடைநிறுத்தப்பட்டார் . எங்களின் எதிர்ப்பைக் கண்டு கொள்ளவில்லை. இதனால் லலித் மோடி போட்டியிட்டதே தவறு. இவர் ராஜஸ்தான் கிரிக்கெட் சங்கத் தலைவராக வருவது கிரிக்கெட்டின் நன்மதிப்புக்கு களங்கம் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (கு)



# அட்னன் அக்மல் இல்லை



ஐக்கிய அரபு இராச்சியத்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றிவரும் இலங்கை அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் அணியின் விக்கெட் காப்பாளர் அட்னன் அக்மல் மேலதிக பங்கை வகிக்க மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போது, இறுதிப்பந்தாக அமைந்த பந்திலேயே அட்னன் அக்மல் காயமடைந்தார். கௌஷால் சில்வா வழங்கிய பிடியைப் பிடிக்கும் போது அட்னன் அக்மலின் இடது சுட்டு விரலில் முறிவு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவர் இந்தப் போட்டியிலும், எஞ்சியுள்ள 2 போட்டிகளிலும் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அட்னன் அக்மலுக்குப் பதிலாக சப்ராஸ் அஹமட் அடுத்த 2 போட்டிகளுக்குமான குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆள் தேவை

ரியூசன் சென்ரருக்கு வேலைக்கு ஆள் தேவை. பெண்கள் மட்டும். யாழ்ப்பாணத்துக்கு அருகில் உள்ளோர் மட்டும் விரும்பத்தக்கது. (42061)(10.14)

**T.P: 077 160 4823 ஆரிய குளத்தடி**

## வீடு விற்பனைக்கு

யாழ் நகரில் இல. 08, குருசோ வீதியில் அமைந்துள்ள சகல வசதிகள் கொண்ட வீடு விற்பனைக் குண்டு. 2 ½ பரப்பு காணியில் 4 அறைகள், 2 Hall, கராஜ் (Garage), மேலே பல்கனி, சுற்றுமதில், நல்ல தண்ணீர் கிணறு, மோட்டார், தண்ணீர் தாங்கி யாழ் நகர சபை இணைப்புடன் உள்ளது. கண்டி வீதியில் இருந்து 150 யார் தொலைவில் Press Road குருசோ வீதி சந்திக்கு அருகில், மரியன்னை பேராலயத்தில் இருந்து 100 யார் தொலைவிலும் சென். பற்றிக்ஸ், சென் ஜோண்ஸ், சுண்டிக்குளி மகளிர் கல்லூரிகள் மத்தியில் அமைந்துள்ளது.

தொடர்புகளுக்கு: (42063)(10.14)

**Fr. Paul Nadchethiram OMI**
Phone No: 222 8086, Cell No: 077 691 3177

## ROOM தேவை

கிளிநொச்சி-நகரில் A9 வீதிக்கருகில் மிக அமைதியான சூழலில் இருவேளை உணவுடன் ஆங்கில ஆசிரியருக்கு அறை தேவை. தயவு செய்து குடும்பத் தலைவன் அல்லது தலைவி மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:
**071 540 9327**

## கட்டார் நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு

★ Univercity office boy
★ Airport helper

உடனடியாக தேவை. அதிஉயர் சம்பளம் 3 வருட வேலை ஒரு வாரத்தில் பயணம் தங்குமிடம் மருத்துவம் இலவசம்.
உடன் தொடர்பு கொள்ளவும்.

LANKA VOICE 075 0650084

## டுபாய் நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு

டுபாய் நாட்டில் உள்ள முன்னணி நிறுவனத்தில்
★Fabrication Helper ★ Welders Helper
உடனடியாக தேவை. அனுபவம் தேவையில்லை. அதிஉயர் சம்பளம்/தங்குமிடம்/மருத்துவம் இலவசம். (Pass Port copy - 01, Background White Passport Photo-01, Bio Data) என்பவற்றை உடனடியாக email இல் அனுப்பி வையுங்கள். 9ஆம் திகதி டுபாய் நாட்டவர்களால் நேர்முகப்பரீட்சை நடைபெற இருப்பதால் 8ஆம் திகதிக்கு முன் உங்களது விண்ணப்பங்களை அனுப்பி வையுங்கள்.

e-mail lankavoicefees@gmail.com
T.P:- 0777 929475

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## German Institute

German, Swiss மொழிகள் தமிழ் மொழிபெயர்ப்புடன் Goethe Institute exam இக்கு ஏற்றவாறு நடைபெறுகிறது. அடுத்த பிரிவுகள் 06.01.2014 அன்று ஆரம்பம்.
ஆரியகுளத்தடி (42062)(10.14)
10 Palaly Road, Jaffna
T.P: 077 160 4823 Mrs. Kajenthini

## A/L வரலாறு

மாவட்ட தேசிய மட்டங்களில் உயர் பெறு பேறுகள் பெறுவதற்கு வழிகாட்டும் உங்கள் ஆசான்
M. பத்மநாதன் M.A. (History)
* என்னிடம் கற்று மாவட்டத்தில் முதலாவதாக வந்த உமாகரன் துளசி
* "A" தர சித்திகளை அள்ளிக்கொண்டார்
*100 சித்திபெற்ற எனது அன்புக்குரிய அனைத்து மாணவர்களையும் வாழ்த்துகின்றேன்

கற்பிக்கும் இடங்கள்: D.M.I யாழ்.நகர் | உயர்கல்லூரி குளப்பிட்டி | புகழ் மானிப்பாய்

## பண்டிகை கால விசேட விமான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு—சென்னை | —18250 | RTN |
| கொழும்பு—திருச்சி | —22000 | RTN |
| கொழும்பு—மதுரை | —16000 | RTN |
| கொழும்பு—லண்டன் | —10850 | RTN |
| கொழும்பு—டோகா | —25200 | OWN |
| கொழும்பு—சிங்கப்பூர் | —31000 | RTN |
| கொழும்பு—மிலான் | —97000 | RTN |
| கொழும்பு—சுவிஸ் | —114000 | RTN |
| கொழும்பு—ஜேர்மன் | —96500 | RTN |
| கொழும்பு—பிரான்ஸ் | —91200 | RTN |
| கொழும்பு—இத்தாலி | —84500 | RTN |
| கொழும்பு—கனடா | —109500 | RTN |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

**Nation Popular Travels & Tours**
**#128,Brown Road, Jaffna**
**0214 920 920**

### சமயச் சடங்குகளுடன் திணைக்களம் உதயம்

சமுர்த்தி அதிகாரசபை வாழ்வு எழுச்சித் திணைக்களம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு திணைக்களமாக மாற்றப்பட்ட நிகழ்வு சமயச் சடங்குகளுடன் வவுனியா பிரதேச செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று முன் தினம் வவுனியா பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் க. உதயராசா தலைமையில் இடம் பெற்றது.

இதில் சமுர்த்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர், மாவட்ட சமுர்த்தி உதவிஆணையாளர், சமுர்த்தி அதிகார சபையின் மாவட்ட பிராந்திய திட்ட மிடல் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (க-421)

### தரம் உயர்த்தப்பட்டது யோகபுரம் மத்திய மகா வித்தியாலயம்

துணுக்காய் யோகபுரம் மத்திய மகாவித்தியாலயம் 1ஏபி தரத்துக்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக துணுக்காய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.செல்வரட்ணம் தெரிவித்தார்.

துணுக்காய் கல்விக் கோட்டத்தில் உள்ள முக்கிய பாடசாலைகளில் யோகபுரம் மத்திய மகாவித்தியாலயமும் ஒன்றாகும்.

போர் இடம்பெற்ற போது மாணவர்களின்கல்வியைப்பேணி வளர்ப்பதில் இந்தப் பாடசாலை முக்கிய பங்கு வகித்தது.

இந்தப் பாடசாலை மாவட்ட மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் பல சாதனைகளைப் புரிந்துள் ளது.

மேலும் இந்தப் பாடசாலையில் பயின்ற மாணவர்கள் பலர் அரச உயர் பதவிகளில் அமர்ந்துள்ளனர். (க-18)

## IBS கண்டுக்குளி

புதிய கல்வியாண்டு இன்று ஆரம்பம்
நேரம்: 09.30 a.m
தரம் 4,5,6 முதல் O/L வரை
A/L கணக்கீடு
A P. பகீரதன்
புதிய அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

## NEW SCIENCE WORLD

**VICTORY MUST**
Navalar road junction , Brown road , Jaffna.
Web : www.physicsocean.com Email : info@physicsocean.com

### DAY CLASS PHYSICS BATCH-II

ஆரம்பம்: 06.01.2014 (Monday)
நேரம்: 11.00 AM - 1.00 PM
பாட அலகு : பொறியியல் & மின்னியல்
By: R. குகன்

### மாதாந்த தொடர்போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் உயிரியல் 2015 A/L சு.பொன்திவாகரன்

| FULL NAME | SCHOOL NAME | MARKS | RANK |
|---|---|---|---|
| தர்மிளா குணரட்ணம் | J/V.G.H.S | 90 | 1 |
| சரண்ஜா நடேசகாந்தன் | J/V.G.H.S | 90 | 1 |
| கார்த்திகாயினி வர்ணகுலராசா | J/V.G.H.S | 89 | 3 |
| கிருசாந் கீர்த்தனன் | J/J.H.C | 84 | 4 |
| பிரியங்கா ஜெயகாந்தன் | J/V.G.H.S | 84 | 4 |
| சுலக்சனா முருகதாஸ் | J/V.G.H.S | 82 | 6 |
| சரண்ஜா லோகநாதன் | J/V.G.H.S | 82 | 6 |
| ரவிலோகன் கிசோ | J/J.H.C | 82 | 6 |
| தனன்சியா சின்னராசா | MU/P.C.C | 81 | 9 |
| தனுசியா கருணாகரன் | J/V.G.H.S | 79 | 10 |
| பாலச்சந்திரன் பார்த்தீபன் | J/K.H.C | 79 | 10 |
| அபிராமி சிவகுமார் | J/U.G.C | 77 | 12 |
| பிலோமினி அகிலேஸ்வரன் | MU/P.C.C | 77 | 12 |
| தமயந்தி ரங்கநாதன் | J/H.L.C | 77 | 12 |
| மதுரி முத்துகிருஷ்ணன் | J/C.G.C | 75 | 15 |
| S. சிறிகணன் | J/S.P.C | 74 | 16 |
| கீர்த்திகா ரவீந்திரன் | J/V.G.H.C | 74 | 16 |
| சிவசோதி சிவசெந்தூரன் | J/J.H.C | 72 | 18 |
| கீர்த்திகா ராஜ்குமார் | J/C.G.C | 72 | 18 |
| ஜோன்சன் | J/J.H.C | 71 | 20 |
| சுபலக்ஷ்மி செல்வராஜன் | J/H.L.C | 71 | 20 |
| திருலோகநாதன் சிந்துஜன் | J/M.H.C | 70 | 22 |
| ரஜீத்தனா ஜெயானந்தராஜ் | J/H.L.C | 70 | 22 |
| சுகன்ஜா சிவகுமரன் | J/V.G.H.S | 70 | 22 |
| பிரணவி சச்சிதானந்தம் | J/U.G.C | 69 | 25 |
| மிதுசா சண்முகநாதன் | J/U.G.C | 69 | 25 |
| கணேஸ்வரன் பார்த்தீபன் | J/J.H.C | 66 | 27 |
| யாழினி கைலாயபதி | J/V.G.H.S | 64 | 28 |
| வினோஜி வாமதேவன் | J/U.G.C | 62 | 29 |
| தனுசியா யோகரட்ணம் | J/H.L.C | 62 | 29 |
| ரசித்ரா ராசேந்திரம் | J/K.H.C | 60 | 31 |
| அக்சினி சந்திரராசா | J/V.G.H.S | 60 | 31 |

### CHEMISTRY DAY CLASS

GENERAL, BASIC, GASES
TUE & WED
1.30 - 3.00 PM
ஆரம்பம்: 07.01.2014

Model Paper Classes
2.15 - 3.45 PM
Sat & Sun
ஆரம்பம்: 11.01.2014

By: DIAS
B.Sc (Hons)-Spl in Chem

T. SIVAKUMAR
B.Sc PGDE

## German Language Academy

ஜேர்மன் மொழியும் இலகு வழியும்
ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் ஜேர்மன் தூதரகத்தினால் நடத்தும் A1பரீட்சைக்கு ஏற்றவாறு ஜேர்மனியில் பல வருடங்கள் வசித்து ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது. வேறு எங்கும் இல்லாதவாறு மிகக் குறைந்த கட்டணத்துடன் பரீட்சைகள் ஆரம்பமாகும்
No.23, Palaly Road, Jaffna. 077 970 7322 (40784)(12.3.6)

## French Classes பிரெஞ் வகுப்புகள்



French மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கிகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் **Alliance Française de Jaffna** (AF) மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
[illegible]
மேலதிக விபரங்களுக்கு T.P.021.222.8093 / நேரில் வரவும்
61, Kachcheri-Nallur Road, Jaffna
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

## 2ஆவது பிறந்தநாள் வாழ்த்து





ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ
சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த **தினேஸ்குமார் மதுரங்கா** தம்பதிகளின் செல்வப்புதல்வன் **த.இந்துஜன்** தனது இரண்டாவது பிறந்ததினத்தை இன்று (05.01.2014) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அம்பாள், மாயவர் துணைகொண்டு சகல செல்வங்களும் பெற்று நீடூழிகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

*வாழ்த்துவோர்:*
அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, அம்ம்மா, அம்மப்பா, லண்டன்-அப்பப்பா, சின்னஅப்பப்பா, சின்னஅப்பம்மா, சித்தப்பாமார்கள், பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, மாமன்மார்கள்.
571, கண்டிவீதி, சங்கத்தானை, சாவகச்சேரி
(41966)(3.6.4)

## UK Student visa with work Permission

உயர்தர கல்லூரிகளையும், பல்கலைக்கழகங்களையும் தன்னகத்தே கொண்ட London நகரில் நீங்களும் கல்விகற்க ஓர் அரிய சந்தர்ப்பம்

**February / March இற்கான அனுமதிகள்**

நீங்கள் ஏன் Exponet இனை தெரிவுசெய்ய வேண்டும்

- கடந்த 14 வருட காலமாக ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களின் UK உயர் கல்வி கனவை நனவாக்கி வெற்றி நடை போடுகின்ற ஸ்தாபனம்
- எமது நிறுவனம் ஐம்பதிற்கு மேற்பட்ட முன்னிலை வகிக்கின்ற கல்லூரிகள், பல்கலைக்கழகங்களிற்கு மிகத் தெளிவான ஆலோசனைகளையும், பகுதி நேர வேலை வாய்ப்புகளுடன் கூடிய விசாக்களையும் பெற்றுக்கொடுக்கின்றது
- நீங்கள் தெரிவு செய்யது கல்லூரியாயின் 2-3 வருட காலமும், பல்கலைக்கழகம் ஆயின் குறைந்தது 4 வருட விசாவினையும் பெற்றுக்கொள்ள முடியும்
- எம்மிடம் Student Visa அனுமதிக்காக இணைவோருக்கு IELTS வகுப்புகள் ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது
- சகல ஆவணங்களும் மிகத் திருத்தமாக சமர்ப்பிக்கப்படின் இரு மாதகாலங்களில் உங்கள் UK பயணத்தினை உறுதிப்படுத்தி கொள்ள முடியும்
- Student Visa தொடர்பான வழிகாட்டலில் யாழ் மாணவர்களின் அதிஉயர் நம்பிக்கையை பெற்ற எமது நிறுவனத்துடன் இணைந்து உங்கள் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ளுங்கள்

**Colleges**
- Yearly Payment £ 3500
- IELTS Overall : 4.5 or B1

**Universities**
- Yearly Payment £ 3950 - £ 6450
- IELTS overall band: Minimum 5.5 Each Band >5.0

EXPONET Overseas Consultants
#379-1/2 Galle Road, Colombo 06 Hotline: 011 7 555511/ 14/ 18 E-Mail: nimal@expogroup.lk
#197, Arasady Road, Jaffna. 021 75383395 | 021 2227230 Web: www.expogroup.lk

## Computer Courses

கல்வியாண்டு 2014 க்குரிய அனைத்து கணனிக்கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு 1: 05.01.2014
பிரிவு 11: 06.01.2014
காலை 10.00மணி

2013 O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே உங்களுக்காகவே இவ் விஷேட பிரிவுகள் ஆரம்பம். இப்பிரிவுகளில் தங்களை இணைத்துக் கொள்ளும் மாணவர்கள் Flash Memory ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளும் அதே வேளை ஒரு கற்கை நெறிக்கான கட்டணத்துடன் இரு கற்கை நெறிகளை பயில முடியும்.

மேலதிக விபரங்களுக்கு : 021 222 2831

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
100 மணிக்கூட்டு வீதி (பெருமாள் கோவில் அருகாமை), யாழ்ப்பாணம்
T.P : 021 222 2831 FAX : 021 222 6933
WEB : iis.edu.lk E-Mail : iis@iis.edu.lk

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி






நிதர்சனத்தை கடப்பது எளிதன்று! 03

# பணமே இன்றி ஒரு வாழ்க்கை



இரும்பு கடை கதை மட்டுமே 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதர்சனத்தைக் கடப்பது அவ்வளவு எளிதல்ல....

கதிர்

அவர்கள்... பிரியத்துக்குரிய நெருக்கமான நட்பு வட்டத்திலோ, எமக்கு உறவாகவோ அல்லது வெறும் வியாபார, பணியிடத் தொடர்புக்கூடாகத் தெரிந்தவர்களாகவோகூட இருக்கலாம். சட்டென இறப்பு அவர்களைத் தின்று செரிக்கையில், நமக்கும் அவர்களுக்கும் இருக்கும் உறவின் அடர்த்திக்கேற்ப ஏற்படும் அதிர்வுகளை, முடிந்தாலும் முடியாவிட்டாலும் எதிர்கொண்டு சமாளிக்க முயல்கிறோம். வழமைபோல் காலம் அந்தக் காயத்திற்கும் மருந்து போடுகிறது. பல இறப்புகள் ஏற்படுத்தும் தாக்கத்திலிருந்து நாம் சட்டென வெளியேறி விடுகிறோம். சிலவற்றில் இருந்து எம்மால் மெல்ல மெல்லவே வெளியேற முடிகிறது அல்லது வெளியேறத் தொடர்ந்தும் முயற்சிக்கிறோம்.

முன்பெல்லாம் இன்றுள்ளதைப் போன்று அகால இறப்புகளைச் சந்தித்ததில்லை. முன்பு இத்தனை பேர் நட்பு அல்லது உறவு வட்டத்தில் இல்லையோ? எல்லாவித சமாதானங்களையும் மீறி ஒப்புக்கொள்ளவேண்டிய உண்மை என்னவென்றால், விபத்துகளால், உணவு முறையால் வரும் நோய்களால் இளம் வயதுச் சாவுகளை நாம் கூடுதலாகச் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம் என்பதுதான்.

இப்படி எதிர்கொள்ளும் இறப்புகளில் இருந்து அவர்களோடு நமக்கிருக்கும் நெருக்கத்திற்குக்கேற்ப வெளியேறிவிடுகிறோம் அல்லது வெளியேற சிரமப்படுகிறோம். யாரும் அதே இடத்தில் தேங்கிவிடு வதில்லை. ஆனால் அப்படிக் கரையேறும் நம்மைச் சட்டென உள்ளே இழுத்துப்பிடித்து அமுக்குவதில் பெரும் பங்காற்றுவது நம் கைபேசியில் எஞ்சியிருக்கும் அவர்களின் தொடர்பு எண்கள்தான். எண்கள் கிடைத்தவுடன் பெயர் போட்டுப் பதிந்து கொள்வதுபோல், இறந்துபோன ஒருவரின் எண்ணை, சாவு வீட்டுக்குப் போய்வந்தவுடனேயே அழித்துவிட முடிவதில்லை. அழிக்கவும் தோன்றுவதில்லை. அழிக்கலாமா, வேண்டாமா எனஒருபட்டிமன்றமேமனதுக்குள்நிகழ்ந்துவிடுகிறது. எப்போதாவது கைபேசித் தொடர்புகளை உருட்டும்போதோ, வேறு எண்கள் தேடுகையிலோ இறந்து போனவர்களின் எண் கண்களில் சிக்குவதுண்டு. சிக்குவது என்பதைவிட அது அப்படியே கண்ணில் தைத்து நேரடியாக உயிரை சுருக்கென குத்திவிட்டுத்தான் மறுவேலை பார்க்கும். இரண்டு நாள்களுக்கு முன்பு செய்தித்தாளில் கண்ட ஒரு முதலாமாண்டு நினைவஞ்சலி அறிவிப்புக் கட்டத்திற்குள் இருந்த இளைஞர் முன்பொரு காலத்தில் தொழில் ரீதியாக என்னோடு தொடர்பிலிருந்தவர். உண்மையில் அவர் இறந்து போனதே எனக்குத் தெரிந்திருக்க வில்லை. அவரின் கைபேசி எண் அந்த நொடி வரைக்கும், என் கைபேசிப் பெயர் பட்டியலில் உயிரோடு இருந்து கொண்டிருந்தது.

கைபேசியில் இருந்த அவரின் பெயர் மற்றும் எண்ணையும், நினைவஞ்சலி விளம்பரத்தில் இருந்த பெயரையும் மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டிருந்தேன். கீழே வரிசையாய்க் கிடந்த குடும்பப் பெயர்களுக்குக் கீழே அந்தக் கைபேசி எண் தென்படுகிறதா எனத் தேடினேன். தென்படவில்லை. சில நினைவுக் கிளறலுக்குப் பின், சற்றே நீண்ட யோசனைக்குப் பின், அழித்துவிடுவதென முடிவெடுத்த அந்தக் கணத்தில் மூடிய இமைக்குள் எப்போதும் கண்டிராத ஒரு காரிருளையும், கொதிப்பையும் உணர்ந்தேன்.

ஒவ்வொரு முறையும் கைபேசியில் எஞ்சி நிற்கும் செத்துப்போனவர்களின் எண் கண்ணில் தைக்கும் கணத்தில் மனதில் படரும் இருள் அந்த எண்ணை என்ன செய்வது என்ற குழப்பத்தையே உருவாக்குகிறது. அப்படியே வைத்திருப்பதா? அந்த எண் என்னவாகியிருக்கும். அவர்கள் வீட்டில் யாரேனும் பயன்படுத்துவார்களா? அப்படி எவரேனும் பயன்படுத்தி அதிலிருந்து அழைப்பு செல்லும்போது, இறந்தவரின் பெயரை அழிக்காமல் வைத்திருப்பவர்,அதிரமாட்டாரா? எனப் பல கேள்விகள் துளைப்பதுண்டு.

எப்போதாவது ஓரிரு வார்த்தைகள் பேசியோ அல்லது பேசாமலேயே இருந்தோ, நேரில் சந்தித்து உரையாடியோ என முகப்புத்தக நட்பிலிருந்து திடீரென இறப்பை எதிர்கொள்ளும் நண்பர்களை எமது நட்பு வட்டத்தில் இருந்து நீக்க மிகப்பெரிய வலிமை தேவைப்படுகிறது. அவர்களின் இறப்புச் செய்தி கேட்டபிறகு ஏனோ அவர்களின் ஒளிப்படங்கள் கூடுதல் அழகாகவும், அவர்கள் எழுதியவை மனதிற்கு கூடுதல் நெருக்கமாகவும் புலப்படுகின்றன. நிதர்சனங்களைக் கடப்பதொன்றும் அவ்வளவு எளிதானதல்ல.





முகப்புத்தக நட்பிலிருந்து திடீரென இறப்பை எதிர்கொள்ளும் நண்பர்களை எமது நட்பு வட்டத்தில் இருந்து நீக்க மிகப்பெரிய வலிமை தேவைப்படுகிறது. அவர்களின் இறப்புச் செய்தி கேட்டபிறகு ஏனோ அவர்களின் ஒளிப்படங்கள் கூடுதல் அழகாகவும், அவர்கள் எழுதியவை மனதிற்கு கூடுதல் நெருக்கமாகவும் புலப்படுகின்றன.



மொபிடெல் இடமிருந்து மிகவும் சிறந்த IDD கட்டணங்கள்

| ரீலோட் / ரீசார்ஜ் பெறுமதி | கிடைக்கப் பெறும் IDD அழைப்புகளின் பெறுமதி | கிடைக்கப் பெறும் சர்வதேச SMS பெறுமதி | கிடைக்கப் பெறும் மொத்தப் பெறுமதி |
|---|---|---|---|
| ரூ. 189 | ரூ. 300 | ரூ. 100 | ரூ. 400 |
| ரூ. 589 | ரூ. 900 | ரூ. 400 | ரூ. 1,300 |

கட்டணங்கள் அரச வரிகள் மற்றும் தீர்வைகளுக்கு உட்பட்டவை. *நிபந்தனைகளுக்குட்பட்டது.

Sri Lanka Telecom Mobitel
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயம் 05 01 2014 ஞாயிற்றுக்கிழமை

# ஆசிரிய வளம் இன்றி தத்தளிக்கும் பாடசாலை

தட்சா. ஜோ



கடந்த வருடம் கல்வி நிலையில் வடக்குத்தான் ஒன்பது மாகாணங்களிலும் கடைசி. கடுமையான வாதப்பிரதிவாதங்களின் பின்னர் அடங்கிப்போன அந்த விவகாரம். இந்த ஆண்டில் உயர்தரப் பெறுபேற்றில் யாழ்ப்பாணம்தான் முதலாவது என்ற பெருமிதத்துடன் முனைமழுங்கிப் போயிற்று. யாழ்ப்பாணம் தவிர்ந்த வடக்கின் ஏனைய மாவட்டங்களின் நிலைமை பற்றி இன்று ஆராய்வார் எவரும் இல்லை. உண்மையில் யாழ்ப்பாணத்தின் கல்வி நிலை, தரம் முன்னேறிவிட்டதா என்பது தொடர்பில் விரிவான ஆய்வு நடத்தப்பட வேண்டும். அதனை யார் செய்வார்கள் என்று தெரியவில்லை.

நகர மையப் பாடசாலை முறைமையில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ள யாழ்ப்பாணச் சமூகம் கிராமப் புறப் பாடசாலைகளைப் புறந்தள்ளிவருவதற்கு மிகச் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது நவக்கிரி அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை.

இப்பாடசாலைக்கு 65 மாணவர்களும் 54 மாணவிகளுமாக 119 மாணவர்கள் வந்துபோகின்றனர். இவர்கள் அனைவருக்கும் கல்வி கற்பிப்பதற்காக இருக்கும் ஆசிரியர்களே மூன்று பேர்தான். அதிலும் ஒருவர் பிரசவ விடுமுறையில் போய்விட்டார். மீதமாயிருக்கும் இருவரில் ஒருவர் தற்காலிகமாகக் கடமையாற்றுபவர்.

நாளாந்தம் பாடசாலைக்கு வரும் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களை இந்த இரு ஆசிரியர்களும் அதிபரும் மட்டும் எப்படிச் சமாளிக்க முடியும்? வெள்ளைச் சீருடையுடன் புத்தக மூடைகளையும் நம்பிக்கையையும் சுமந்துவரும் அந்த மாணவர்களையும் அவர்களைக் காலையில் பாடசாலைக்கு அனுப்பி வைக்கும் பெற்றோரையும் நினைக்கையில் பரிதாபமாக இருக்கிறது.

தரம் ஒன்று மற்றும் இரண்டை இணைத்து பாடங்கள் நடைபெறுகின்றன என்றார் அதிபர் த.ராதாகிருஸ்ணன்.

"நான் நல்லா படிப்பன். படிக்கிறதில எனக்கு நிறைய ஆர்வம். ஆனா பள்ளிக்கூடத்தில ரீச்சர்மார் காணாது. அதால எல்லாப் பாடமும் நடக்கிறேல்ல. என்றாலும் பள்ளிக்கூடத்துக்கு வாறது எங்களுக்குச் சந்தோசம். நல்லாப் படிக்கிறம்" என்று கூறும் லதாங்கிக்கு வயது 10.

பள்ளிக்கூடத்தில நல்ல சாப்பாடு தருவினம். வெள்ளிக்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் மரக்கறிச் சாப்பாடும் மற்ற நாள்களில் ரின் மீனும் தருவினம் என்ற லதாங்கியின் வார்த்தைகளில் ருசி தெரிகிறது.

யாழ். நவக்கிரி அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களின் பிரதிநிதி அவள். பொன் விழாக் கண்ட பாடசாலை ஏன் இந்த நிலையில் இருக்கிறது என்பது பற்றியோ, கல்வி பற்றி மேடைகளில் பெருமை பேசியபடியே அவளது வாழ்வையும் சேர்த்து வீணடிக்கும் அதிகாரிகள் பற்றியோ அவளுக்கு எதுவும் தெரியாது.

## மண் பற்று

பாடசாலை புதிய கட்டடங்களுடன் பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறது. ஆரம்பத்தில் இயங்கிய இடத்தை விட்டகன்று புதிய இடத்தில் ஒப்பீட்டளவில் நல்ல வசதியுடனும் மைதானத்துக்கான இடத்துடனும் இயங்கி வருகின்றது.

சூழலும் மிக அமைதியானது. கற்றலுக்கு மிக உகந்தது.

போதிய சிறந்த ஆசிரியர்கள் இருப்பார்களானால், மிகச் சிறந்த ஆரம்பப் பாடசாலையாக மிளிரும் என்பதில் ஐயமேதுமில்லை. நகரப் புறப் பாடசாலைகளுக்குத் தமது பிள்ளைகளை அனுப்புவதில் ஆர்வமும் ஊக்கமும் கொண்டுள்ள பெற்றோருக்கு மத்தியில் எத்தனை குறைபாடுகள் இருந்தாலும் தமது ஊர்ப் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளைச் சேர்த்துப் படிக்க வைக்கும் துணிவைக் கொண்டுள்ள பெற்றோர்கள் இங்கிருக்கிறார்கள். ஆசிரியர்கள் மட்டும் கிடைத்துவிட்டால் போதும், பாடசாலை நன்றாகிவிடும் என்பதே கிராம மக்களின் கருத்து.

"எங்கட கிராமப் பள்ளிக்கூடத்தில படிச்சுத்தான் பிள்ளையள் மேல் வகுப்புக்குப் போகவேணும். அது தான் எங்களுக்கும் பெருமை. எங்கட ஊருக்கும் பெருமை" என்று கூறும் தாயின் குரலில் அறுதியான உறுதி தெரிகிறது.


"எத்தனையோ இடங்களில் கிராமப் புறப் பாடசாலைகள் சாதனை படைத்துக் கொண்டிருக்கின்றன. பொதுவாக கிராமப்புறப் பாடசாலைகளில் மாணவர்கள் குறைவாக இருக்கிறதால் ஆசிரியர்களின்ர கவனிப்புக் கூடுதலாக இருக்கும். ஆன்ால் இங்க சாதாரண படிப்புத்தான் நடக்குது. பிள்ளைகள் வாறது குறைவு. பெற்றோர் கூட்டத்துக்குச் சொன்னால் ஒழுங்கா வரமாட்டினம். நான் இதில கொஞ்சம் ஈடுபாடு உள்ளனான். ஏனெண்டா நானும் இந்தப் பாடசாலையின்ர பழைய மாணவன் தான்" என்று கூறும் ஆறுமுகம் நடராசாவிற்கு வயது 71. 1949ஆம் ஆண்டில் இந்தப் பாசாலையில் கல்வி பயின்றுள்ளார்.

"நவக்கிரிப் பகுதியில் பெரும்பான்மையானோர் இப்பாடசாலையின் மைந்தர்கள்தான். நானும் 1986ல இங்க தான் படிச்சனான். எங்கட காலத்தில ஆசிரியர் பற்றாக்குறை வரேல்ல. இப்ப என்ர பிள்ளையள் இல்லை. படிக்கினம். ஆசிரியர் பற்றாக்குறை ஒரு பிரச்சனை என்று நாங்கள் பள்ளிக்கூடத்தை மாத்த இல்லை. என்ன இருந்தாலும் எங்கட ஊர்ப் பள்ளிக் கூடம். நாங்கள் விட்டுட்டுப் போக ஏலாது" என்கிறார் இன்னுமொரு பெற்றார்.

"பெற்றோர் என்ற வகையில் ஆசிரியர் பற்றாக்குறை உண்டு என்பதை ஏற்றுக்கொள்கிறேன். இருந்தாலும் இருக்கிற ஆசிரியர்களை வைத்துப் பாடங்கள் நடத்தப்படுகின்றன. அது அதிபரின் திறமைதான். இருப்பினும் உலகம் போகிற போக்கில ஆங்கிலக் கல்வி அவசியம். எங்களுக்கு ஆங்கில அறிவு இல்லாட்டிக்கும் பிள்ளைகளுக்காவது வேண்டும். பாடசாலையில ஆங்கில பாடம் தொடர்பா கேட்கப் போனால் ஆசிரியர் இல்லை என்பதுதான் கிடைக்கிற பதில்." தனது ஆறு பிள்ளைகளையும் நவகிரி அ.மி.த.க. பாசாலையில் விட்டுக் கற்க வைப்பித்த திருமதி ச.நிர்மலாவின் ஆதங்கம் இது.

பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டங்களில் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் விவாதிக்கப்பட்ட பின்னர் நவக்கிரிப் பகுதியை சேர்ந்த ஆசிரியை ஒருவர் தொண்டர் ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நான் அந்தப் பாடசாலைக்குச் சென்றபோது சத்தம் சந்தடியின்றி இருந்த பாடசாலையும் ஆர்ப்பரித்த ஊரும் பாடசாலைக்கு விடுமுறை என்பதை உணர்த்தத் தவறவில்லை. பிள்ளைகள் ஊரை இரண்டுபடுத்திக் கொண்டிருந்தார்கள்.



அளவுக்குமீறிய அமைதியுடன் தோன்றும் அதிபர், "பாடசாலையின் நிலை பற்றி உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளேன்" என்றார். நீண்ட காலமாக ஆசிரியர்களுக்காக அவர் காத்திருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. "எமது கோரிக்கைகளுக்கு ஏற்ப பாடசாலைக்கு 2014இல் நான்கு ஆசிரியர்களைத் தருவதாக உறுதியளிக்கப்பட்டிருக்கிறது" என்கிறார் அதிபர் த.ராதாகிருஸ்ணன்.

## எதிர்காலம் என்ன?

"என்ர பெயர் சுலக்சன். இப்ப நான் அச்சுவேலி மத்திய கல்லூரில தரம் 10இல படிக்கிறன். நானும் என்ர ஆரம்பக் கல்வியை நவக்கிரி அ.மி.த.க. பாடசாலையிலதான் படிச்சனான். என்ர கல்வியின் அத்திவாரம் இதுதான். நான் படிக்கேக்க 9 ஆசிரியர்கள் படிப்பிச்சவை. இப்ப இங்க போதுமான அளவு ஆசிரியர்கள் இல்லை என்டு சொல்லினம். இப்பிடியே போனால் பாடசாலையின் நிலை என்னாகுமோ என்ற பயம் எனக்கே இருக்கு." சிறுவனிடம் தன் பாடசாலை பற்றிய அக்கறையும் கவலையும் இருக்கிறது.

"ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நவக்கிரி பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறை தீர்க்கப்படும். இதனை நான் முதலே தெரியப்படுத்தி இருந்தேன்" என்றார் வடமாகாண சபை அமைச்சர். "ஆசிரியர் பற்றாக்குறை என்பது ஆர்வமுள்ள மாணவர்களையும்பின்னடையச்செய்துவிடும். இருப்பினும் ஆசிரியர் பங்கீட்டில் எந்த விதமான பக்கச்சார்புகளும் இடம் பெறாது. உரிய விதத்தில் நவக்கிரி பாடசாலைக்கும் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். இந்தப் பாடசாலைக்கு மட்டமல்ல வடமாகாணத்தில் உள்ள எந்தப் பாடசாலையில் என்ன குறைபாடு இருந்தாலும் அது எனக்கு தெரியவந்தால் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்." நம்பிக்கையூட்டுகிறார் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா.

விடுதலை முடிந்து பாடசாலை மீண்டும் ஆரம்பமாகிவிட்டது. மன்னாரில் இருந்து இடமாற்றம் பெற்றுவரும் ஆசிரியர் ஒருவர் உட்பட நான்கு புதிய ஆசிரியர்கள் கடமைக்கு வருவார்கள் என்று வாயிலையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் அதிபரும் மாணவர்களும்.




விடுதலை முடிந்து பாடசாலை மீண்டும் ஆரம்பமாகிவிட்டது. மன்னாரில் இருந்து இடமாற்றம் பெற்று வரும் ஆசிரியர் ஒருவர் உட்பட நான்கு புதிய ஆசிரியர்கள் வருவார்கள் என்று வாயிலையே பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் அதிபரும் மாணவர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதமுனையில் கைது செய்துவிட்டு கெட்ட கனவாக மறந்துவிடு என்கிறார்கள்

ஜோ. கிறுக்கி






## தமிழ் மகா பிரபாகரனுடன் ஓர் உரையாடல்

கடந்த மூன்று நாள்களில் உங்களுக்குநடந்தவற்றை ஒரு கெட்ட கனவாக நினைத்து மறந்து விடுங்கள்" என்று தமிழ் மகா பிரபாகரன் என்ற தமிழக இளம் பத்திரிகையாளரிடம் இறுதியில் சொல்லியிருக்கிறார்கள் இலங்கை அதிகாரிகள். அப்படி என்றால் அவர்கள் தன்னை விசாரணை செய்ததே தவறு என்று தானே அர்த்தமாகிறது என்று கேட்கிறார் அந்தப் பத்திரிகையாளர்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் தமிழகத்திலும் ஈழத்திலும் சர்ச்சையைக் கிளப்பியது தமிழ் மகா பிரபாகரனின் கைது. கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரி பகுதியின் வேரவில் கிராமத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனுடன் சென்றிருந்தபோது அவர் கைது செய்யப்பட்டார். தமிழக இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுவிட்டார் என்ற செய்தி வெளியானதும் தமிழக ஊடகங்கள் பரபரப்பாயின.

கைது செய்யப்பட்டவர் விசா விதிகளை மீறி இராணுவ முகாம்களைப் படம் பிடித்தார் என்று பொலிஸார் அறிவித்தனர். அவர் ஒரு பத்திரிகையாளர் என்பதை மறைத்து இலங்கைக்குள் நுழைய விசா பெற்றிருந்தார் என்றும் சொன்னார்கள். அவர் ஒரு பத்திரிகையாளர் என்பது தனக்குத் தெரியாது என்றும் அவர் சுற்றுலாப் பயணியாகவே தனக்கு அறிமுக மாகியிருந்தார் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பி.பி.ஸிக்குப் பேட்டியளித்திருந்தார்.

உண்மையில் என்னதான் நடந்தது என்று மின்னஞ்சல் மூலமாகத் தமிழ் மகா பிரபாகரனைப் பிடித்துக் கேட்டோம்.

***இலங்கைக்கு குறிப்பாக வட பகுதிக்கு வருவதற்கு என்ன காரணம்? ஏன் வந்தீர்கள்?***

இலங்கைக்கு வருவதற்கு. அதுவும் வடபகுதிக்கு வருவதற்கு காரணமா வேண்டும். மனித உயிர்களின் விலையறியாமல் புலிகளை அழிக்கிறோம் என்று தமிழ் மக்களை அழித்துவிட்டு இன்று அந்த பலிப்பீட மண்ணை சுற்றுலாவுக்கான நிலமாக மாற்றியுள்ளது இலங்கை அரசு. அப்படிச் சுற்றுலாவுக்காக அனுமதிக்கப்பட்ட நிலத்தைப் பாரக்கலாம் என்றுதான் நானும் வந்தேன்.

***சுற்றிப் பார்க்க வந்த இடத்தில் இராணுவ முகாமை புகைப்படம் எடுத்தீர்கள் என்று பொலிஸார் சொல்கிறார்களே?***

இருட்டில் இருப்பவனுக்கு எல்லாம் கருப்பாகத்தான் தெரியும். அருண்டவன் கண்ணுக்கு மருண்டதெல்லாம் பேய் போல ஒட்டுமொத்த வடக்கு கிழக்கு பகுதியையும் இராணுவ நிலமாக வைத்துக் கொண்டிக்கும் இலங்கை அரசுக்கு எந்த இடத்தில் படம் எடுத்தாலும் அது இராணுவ முகாமைப் படம் எடுப்பதாகத்தான் தெரியும். இராணுவம் சொல்வதுபோல மக்களின் பயன்பாட்டுக்குத் தடைசெய்யப்பட்ட, இராணுவத்தின் எந்தவித பகுதிகளிலும் நான் படம் எடுக்கவில்லை. பொதுமக்கள் அனுமதிக்கப்பட்ட பாதைகளில் மட்டும் தான் நான் படம் எடுத்தேன். நேர்மையாக இராணுவத்தின் கண்முன்னே தான் படம் எடுத்தேன்.

***நீங்கள் கைது செய்யப்பட்ட சந்தரப்பம் மற்றும் சூழல் எவ்வாறிருந்தது?***

நிராயுதபாணியான என்னை ஆயுதம் காட்டி மிரட்டியே கைது செய்தனர். அதுவே முதலில் மனித உரிமை மீறல். ஒளிப்படக் கருவி வைத்திருந்த என்னை எதோ ஆயுதம் வைத்திருப்பவன் போல சுற்றிவளைத்து கையை முறுக்கி இருபது நிமிடம் ஆயுதமுனையில் வைத்திருந்தார்கள். அது அடுத்த குற்றம்.

கடந்த காலங்களில் செய்த மனித உரிமைக் குற்றங்களை மீள் பரிசீலனை செய்யும் எண்ணமில்லாமல் இன்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இலங்கை இராணுவம் என்னை நோக்கி ஓடி வந்த தருணத்தில் சற்று தடுமாறியே போனேன். ஆனால் இராணுவம் காவல்துறையிடம் முறைப்பாடு செய்து காவல்துறை என்னைப் பிடித்ததாக புது கதையை இலங்கை இராணுவம் சொல்கிறது. அது முழுப் பொய். அதை ஏற்றுக் கொள்ள முடியாது.

***விசா விதிமுறையை மீறி விட்டீர்கள் என்றுதான் உங்களைக் கைது செய்ததாக இங்கு அதிகாரிகள் கூறுகிறார்கள். அப்படிச் செய்தீர்களா என்ன?***

சுற்றுலா விசாவில் வருவதற்கு ஊடகவியலாளனாக இருக்கக் கூடாது என்று இலங்கையில் சட்டம் ஏதுமில்லையே. நான் எதையும் எழுதும் நோக்கில் வரவில்லை. அண்மையில் கொழும்பில் நடந்த பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வடபகுதி அபார வளர்ச்சி அடைந்துள்ளது எனக் கூறியிருந்தார். நான் 2012இல் இலங்கைக்கு வந்தபோது வடபகுதி அபிவிருத்தி அடையாமல்தான் இருந்தது. எனவே எவ்வாறான அபிவிருத்திகள் நடைபெற்றுள்ளன எனப் பாரப்பதற்காகவே வந்தேன். அதை எழுதும் நோக்கில் வரவில்லை. எழுத வேண்டியதை எல்லாம் நான் ஏற்கனவே எழுதிவிட்டேன்.

இலங்கை அரசின் தொடர் பொய்கள்தான் என்னை மீண்டும் இலங்கை விடயங்களை எழுதத் தூண்டுகின்றன. விசா விதிகளை நான் மீறியதாகக் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. தொழில்முறையாக நான் இலங்கைக்கு வரவில்லை. சுற்றிப்பார்க்கத்தான் வந்தேன்.

***நான்காம் மாடியில் வைத்து என்ன விசாரித்தார்கள்?***

என்னை முதலில் ஆறாம் மாடிக்குத்தான் அழைத்துச்சென்றார்கள். பின்னர் 2ஆம் மாடியில் வைத்து விசாரித்தார்கள். ரி.ஐ.டியினரின் விசாரணைகள் முழுவதும் என்னைப் புலிகளுடன் தொடர்புடையவன் என்று சித்திரிப்பதாகவே அமைந்தன.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எஸ்.சிறீதரன் ஆகியோருடனும் விக்கிரமபாகு கருணாரட்ண, வை. கோபால சாமி ஆகியோருடனும் எனக்கு என்ன தொடர்பு என்று துருவினார்கள். புலிகள் தொடர்பான எனது அபிப்பிராயம் என்ன என்று கேட்டார்கள். புலிகளுக்கும் எனக்கும் என்ன தொடர்பு என்றும் விசாரித்தார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் வருவார்களா என்றுகூட என்னிடம் கேட்டார்கள். முதல் இரு நாள்களும் தனி அறையில் (செல் இல்) தடுத்து வைக்கப்பட்டிருந்தேன். விசாரணைகளின் இறுதி நாளில் கையில் விலங்கிடப்பட்டு இரண்டாம் மாடியில் ஓர் மேசையோடு இணைக்கப்பட்டேன். விசாரணைகளின்போது எனக்குக் கொடுக்கப்பட்ட உணவுகளை உண்ணத் தயங்கினேன். நாச்சிக்குடாவில் தண்ணீருக்குப் பதிலாக பெற்றோல் கொடுத்ததை நான் அனுபவமாக்கிக் கொண்டேன். அதனால் பெரும்பாலும் உணவுகளைத் தவிர்த்து தேவையான சந்தர்ப்பங்களில் மட்டும் குறைவாக எடுத்துக் கொண்டேன். அதனையும் அவர்களைச் சிறிதளவு உட்கொண்டு காட்டுமாறு கேட்டுவிட்டு மட்டுமே உண்டேன். எல்லாவற்றையும் செய்து விட்டுக் கடைசியில், கடந்த மூன்று நாள்களில் உங்களுக்கு நடந்த விசாரணைகளை ஒரு கெட்ட கனவாக நினைத்து மறந்து விடுங்கள் என்று விசாரணை அதிகாரி ஒருவர் சொன்னார். அப்படியென்றால் அவர்கள் செய்த விசாரணை தவறு என்று தானே உறுதி ஆகிறது.

***புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து தமது தாயகத்திற்கு செல்ல ஈழத் தமிழர்கள் இன்றளவும் தயக்கம் காட்டிவரும் ஒரு நிலையில் மகா தமிழ் பிரபாகரன் எனும் பெயரில் சுற்றுலா விசாவுக்கு விண்ணப்பித்த போதே இலங்கை புலனாய்வு பிரிவினரின் கண்காணிப்பில் நீங்கள் இருந்திருக்கலாம் என நினைக்கின்றீர்களா?***

இல்லை. ஏனெனில் நான் எவ்வித மான தவறான செயற்பாடுகளிலும் அங்கு ஈடுபடவில்லை. நேர்வழியில்தான் சென்றேன். நான் 2012 இல் வந்ததும் தவறு என இலங்கை அதிகாரிகள் கூறினர். ஆனால் நான் இலங்கை சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்பட்ட இடங்களுக்குத்தான் சென்றேன். இராணுவத் தினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக் குள் செல்லவில்லை. என்னைப் பொறுத்தவரை மகா தமிழ் பிர பாகரன் என்ற பெயரில் சுற்றுலா விசாவுக்கு விண்ணப்பித்தபோது இலங்கை புலனாய்வு பிரிவினரின் கண்காணிப்பில் இருக்கவில்லை.

சில வேளை களில் எனது பெயர் அவர்களது கவனத்தை ஈர்த்திருக் கலாம்.

***விகடனில் நீங்கள் எழுதிய புலித்தடம் தேடி... என்ற தொடர் கட்டுரைக்கும் உங்கள் கைதுக்கும் தொடர்பு உண்டென நினைக் கிறீர்களா?***

கைதுக்கும் அதற்கும் தொடரபில்லை. ஆனால் கைதுக்குப் பிறகு என்னை எழுபது மணி நேரத்துக்கும் மேலாக தடுப்பில் வைத்திருந்ததற்கும் புலித்தடம் தேடி தொடர் கட்டுரைக்கும் தொடர்பு இருப்பதை புலனாய்வு பிரிவின் விசாரணைமுறை எனக்குப் புரிய வைத்தது.

***உளவியல் ரீதியான துன்புறுத்தப்பட்டீர்கள் என்று தமிழகம் திரும்பிய பின்னர் கூறியிருந்தீர்களே?***

என்னை இரவில் தூங்க விடாமல் தொடர்ச்சியாக நடந்த விசார ணைகள்தான் எனக்குத் தரப்பட்ட உளவியல் ரீதியான துன்புறுத்தல்கள்.

***தற்போது சென்னையிலுள்ள உங்களுக்குத் தொடர்ந்து ஏதும் அச்சுறுத்தல்கள் உள்ளனவா? எதிர் காலத்தில் அப்படி ஏதும் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டுஎன்றுநினைக் கிறீர்களா?***

வாய்ப்புகள் இருக்கிறது. ஏனெனில் இந்தியாவில் இலங்கை அரசின் உளவாளிகள் பலர் இருக்கின்றனர். என்னை விசாரணை செய்த ஓர் அதிகாரி என்னிடம் உங்கள் இந்தியாதான் இப்படியெல்லாம் கேள்வி கேட்க எங்களுக்குக் கற்றுக் கொடுத்தது என்றார். அப்படி இந்தியாவால் பயற்சிக் கொடுக்கப்பட்ட இலங்கை அரசின் உளவாளிகளால் ஆபத்து ஏற்படக்கூடும்.

***கைதுச்சம்பவத்தின் பின் இலங்கை பற்றி எப்படிப் பார்க்கிறீர்கள்?***

இலங்கை ஓர் விதிமுறையற்ற நாடு. மனிதமற்ற நாடு. பத்திரிகையாளர் விசாவில் வந்தால் என்னைச்சுதந்திரமாக எங்குவேண்டுமானாலும் செல்ல அனுமதிப்பதாக தலைமைப் புலனாய்வு அதிகாரி சொன்னார். அப்படிப் பத்திரிகையாளர் விசாவில் வந்தால் என்னவெல்லாம் நடக்கும்,யாரெல்லாம் பின் தொடர்வார்கள் என்பதைச் 'சனல் 4' பத்திரிகையாளர் ஜொனதன் மில்லர் தன் திறந்த கடிதத்தின் மூலம் உலகிற்கே சொல்லியுள்ளார். அதன் பின்னும் எந்தப் பத்திரிகையாளனாவது அப்படிச் செய்வானா?

***கைது செய்யப்பட்டபோது நீங்கள் ஒரு ஊடகவியலாளர் என்பது தனக்குத் தெரியாது எனத் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கூறியிருக்கிறார். உண்மையிலேயே அவருக்குக்கூட நீங்கள் பத்திரிகையாளர் என்பதைச் சொல்லவில்லையா என்ன?***

இது தொடர்பில் பதிலளிக்க விரும்பவில்லை. என்னால் மற்றவர்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படக்கூடாது என்பது என் நிலைப்பாடு. என்னைப் பற்றி எதுவும் பேசலாம். ஆனால் நான் நாடாளுமன்ற உறுப்பினர் பற்றி கருத்துக் கூறவிரும்பவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்து அதிபர் நி
# புகுந்து விளையாடு




● அன்ரன்

உள்ளே கனன்று, சுழன்று எரியும்அரசியல் நெருப்பின் வெக்கை வெளியே தெரியாமல் பளீர் நீலம் பரவி அமைதியாகக் கிடக்கிறது யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் முகப்பு. தன்பிள்ளைக்கு முதலாம் வகுப்பில் இடம் கிடைக்கவில்லை என்று முணுமுணுக்கும் பெற்றோரை அமைதியான சிரிப்போடு வரவேற்று பல சமாளிப்புகளின் பின்னர் வெளியே தள்ளத் தெரிந்த அதன் நிர்வாகம் அரசியல் குத்து வெட்டுக்களையும் கழுத்தறுப்புக்களையும் வெளியே தள்ள முடியாமல் திணறுகின்றது.

யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த இளநிலை பாடசாலைகளில் ஒன்று யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை. புலமைப் பரிசில் பரீட்சையில் வடக்கிலே அதிக எண்ணிக்கையான மாணவர்களை வெற்றிபெற வைக்கும் பாடசாலையாகப் பெயரெடுத்தது. வருடா வருடம் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களை புலமை எனும் தடையைத் தாண்ட வைக்கும் இந்தப் பாடசாலையால் இப்போது அரசியல் எனும் தடையைத் தாண்ட முடியாமல் இருப்பது தமிழர்களின் துரதிர்ஷ்டம்.

**அதிபர் நியமனம்**

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் புதிய அதிபர் நியமனம் தற்போது அரசியல் குழிபறிப்புகளுக்குள் சிக்கிக்கொண்டுள்ளது. ஆரம்பம் முதலே இந்த அதிபர் நியமனம் சர்ச்சைகளுக்கு உரியதாகியது.

பாடசாலையின் அதிபராக இருந்தவரான சு.தியாகலிங்கம். 2013 மே மாதம் ஓய்வு பெற்றார். முன்னர் இங்கு அதிபராக இருந்தவரும் தற்போது கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக இருப்பவருமான ஞானகாந்தன் பதவி விலகிச் சென்றபோது. அப்போதைய பிரதி அதிபராக இருந்த சு.தியாகலிங்கம் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தார்.

அதேபாணியில் மற்றொரு அதிபரையும் பாடசாலைக்கு நியமிக்கும் நோக்கத்துடன் 2013 ஜனவரி மாதத்தில் பிரதி அதிபராக உள்வாங்கப்பட்டார் ஜெ.தர்மசீலன். தற்போதும் அவரே பிரதி அதிபராகத் தொடர்கிறார். இவரது நியமனத்தின் பின்னால் அமைச்சர் டக்ளஸின் அரசியல் ஆதரவு அணி ஒன்றின் செயல்பாடு இருந்தது. அந்த அணியில் இருந்தவர்களில் மூவர் முக்கியமானவர்கள். அறிவியல் பாட ரியூசன் ஆசிரியரான இரா. செல்வவடிவேல், ஈபிடிபி கல்வி அபிவிருத்திக் குழுவின் தலைவரும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய (ஸ்ரான்லிக் கல்லூரி) ஆசிரியருமான சுதர்சன் மற்றும் தற்போது யாழ். கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றுபவரும் அதற்கு முன்னர் நல்லூர் கோட்ட பணிப்பாளராக இருந்தவருமான எஸ்.மாணிக்கராசா ஆகிய மூவரும் இந்த நியமனத்தில் செல்வாக்குச் செலுத்தியிருந்தனர்.

இந்தத் திட்டம் பாடசாலையின் பழைய மாணவர்களான இன்று உயர் பதவியில் இருப்பவர்களுக்குத் தெரிய வந்தது. அதை அடுத்து மாகாண மற்றும் வலய கல்வித் திணைக்களங்களுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. இதனால் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் பதவிக்கு யாழ்ப்பாண வலய கல்வித் திணைக்களம் 2012 டிசெம்பர் மாதம் விண்ணப்பம் கோரியது.

எட்டுப் பேர் அந்தப் பதவிக்கு விண்ணப்பித்தனர். அதிபர் தரம் இரண்டைச் சேர்ந்தவர்களான யாழ். இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் சதாசிவம் நிமலன், நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலய அதிபர் மகேசன் கஜேந்திரன் ஆகியோரும் அதிபர் தரம் மூன்றைச் சேர்ந்தவர்களான ஆனைக்கோட்டை உயரப்புலம் மாகா வித்தியாலய அதிபர் குலசிங்கம் திலீபன், கலட்டி மெதடிஸ்த மிசன் பாடசாலை அதிபர் கே.ரவீந்திரராசா, புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் ஏ.கோகுல ராகவன், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை பிரதி அதிபர் ஜெ.தர்மசீலன், சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் மகேந்திரராசா, வண்ணை நாவலர் மகாவித்தியாலய அதிபர் எஸ்.ரவீந்திரநாதன் ஆகியோரின் விண்ணப்பங்களில் முதல் இருவரது தவிர்ந்த ஏனைய ஆறும் ஏற்கப்பட்டு 3.6.2013 அன்று அவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டனர். கு.திலீபன் தவிர்ந்த ஏனையோர் தேர்வுக்குத் தோற்றியிருந்தனர்.

அதிபர் தரம் இரண்டைச் சேர்ந்த இருவரும் மேலதிகத் தகமைகளைக் கொண்டிருந்தனர் என்று காரணம் கூறப்பட்டு நிராகரிக்கப்பட்டனர்.

**கூட்டமைப்பின் தாக்கம்**

நேர்முகத் தேர்வின் பின்னர் தீர்மானம் அறிவிக்கப்படுவதற்கு இடையில் வடமாகாண சபைத் தேர்தல் அறிவிப்பு வெளியானதால் இந்த விடயம் கிடப்பிற்குப்போனது. எனினும் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் அதிபராகத் தெரிவு செய்யப்படுவதற்கான புள்ளிப் பட்டியலில் என். மகேந்திரராசா முன்னிலையில் இருந்தார்.

தேர்தல் முடிந்த கையோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைச் சேர்ந்த, முன்னாள் கல்விப் பணிப்பாளரான குருகுலராஜா வடமாகாண கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். என்.மகேந்திரராசாவின் பதவியை அவர் உறுதிப்படுத்தினார்.

**ஆட்டுவிக்கும் அரசியல்**

2013ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி என்.மகேந்திரராசா, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபராகப் பதவியேற்றுக் கொண்டார். அன்று முதலே வில்லங்கம் ஆரம்பமாகிவிட்டது. அதிபர் நியமனத்தில் தனக்கு அநீதி இழைக்கப்பட்டதாக பிரதி அதிபர் ஜெ.தர்மசீலன் முறையிட்டார். நீதி வேண்டி மனித உரிமைகள் ஆணைக்குழுவையும் நாடினார்.

மகேந்திரராசா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளராக இல்லாதபோதும் (இவர் ஒரு விதத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உறவினர்) அவரது நியமனத்தை அமைச்சர் குருகுலராஜா உறுதி செய்திருந்தார். இதுவே மகேந்திராசாவுக்கு வினையாகிப்போனது. கூட்டமைப்பினால் ஏற்கப்பட்டு நியமிக்கப்பட்டவர் என்ற நிழல் அவர் மீது விழுந்ததும் அவரை அந்தக் கதிரையில் இருந்து அகற்றுவதற்கான நிழல் நகர்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. இதில் முக்கிய பங்காற்றியவர் ஆசிரியர் சுதர்சன்.

இதற்கிடையில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் நியமன முறைகேடு பற்றி விடயத்தை மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு, சில மொட்டைக் கடதாசிகளின் அடிப்படையில் விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் வாய்மொழிமூல அறிவுறுத்தல்களும் இதற்குக் காரணம். அதேநேரத்தில் ஆணைக்குழுவின் செயலாளர் க.தெய்வேந்திரத்தை அடிக்கடி சந்தித்துப் பேசிவரும் ஆசிரியர் சுதர்சனின் அழுத்தமும் காரணம் என்று 'உதயன்' அறிந்தது. செயலாளரை நினைத்த நேரத்தில் சென்று பார்க்கும் அதிகாரம் பெற்ற அரசியல் பின்புலம் கொண்ட ஒரே நபர் சுதர்சன் மட்டுமே என்றும் 'உதயன்' அறிந்தது. "எந்த ஒரு அதிபர் நியமனமும் என்னை கேட்டு நடக்கையில் இது மட்டும் மாறிவிட விட்டுவிடுவேனா" என்று சில இடங்களில் வீரவசனம்கூடப் பேசியிருக்கிறார் சுதர்சன்.

செயலாளர் க.தெய்வேந்திரம் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு (தமிழ், சிங்கள, முஸ்லிம் பிரதிநிதிகள் மூவர் இதில் அங்கம் வகிக்கின்றனர். இது ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியால் நியமிக்கப்பட்டது) முன் இந்த விடயத்தைப் பரிசீலனைக்கு முன்னகர்த்தினார்.

**ஆணைக்குழு முடிவு**

விடயத்தை ஆராய்ந்த ஆணைக்குழு அதிபர் நியமனம் முறைப்படி இடம்பெறவில்லை என்று தீர்ப்பளித்தது. அதற்கான காரணங்களை முன்வைத்து பரிந்துரைகளை முன்வைத்தும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இரவீந்திரனுக்குக் கடிதம் அனுப்பியது. அந்தக் கடிதத்தில் தற்போதைய அதிபர் என்.மகேந்திரராசாவை பதவி நீக்கம் செய்யுமாறு கோரிய துடன் தற்போதையை பிரதி அதிபரிடம் பொறுப் புக்களை ஒப்படைக்குமாறும் பரிந்துரைத்தது.

இந்த விவகாரம் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவும் விசாரணைகளை நடத்தி வரும் நிலையில், மிக வேகமாக பொதுச் சேவைகள் ஆணைக்குழு தனது விசாரணைகளை முடித்து மகேந்திரராசாவை மீண்டும் அவரது பழைய பாடசாலைக்கே திருப்பி அனுப்பும்படி கூறியது. ஆணைக்குழுவின் இந்த முடிவு, அமைச்சர் டக்ளஸ் சார்பு *தாய்நாடு*இணையம்வலைப் பதிவில் உடனடியாக வெளியானது. அந்தச் செய்தி பின்வருமாறு அமைந்தது:

*யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபராக நாகராசா மகேந்திரராசா நியமிக்கப்பட்டமை முறைகேடானது என்று வட மாகாண பொதுச் சேவை ஆணைக் குழு பிரகடனப்படுத்தி உள்ளது.*

*வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவின் ஆசியுடன் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அதிபராக வந்தவர் மகேந்திரராஜா.*

*வட மாகாண கல்வி அமைச்சராக பதவி யேற்றமையை அடுத்து குருகுலராசா உடனடியாக இந்த நியமனத்தை வழங்கி இருந்தார். ஆனால் இந்த நியமனம் சுற்று நிருப விதிகளுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டு உள்ளது என்று ஆணைக்குழு கண்டு பிடித்துள்ளது.*

*பத்திரிகைகள் மூலம் ஒழுங்காக விளம்பரப் படுத்தி, நேர்முகத் தேர்வு நடத்தி, சுற்று நிருப விதிகளுக்கு அமைய அதிபரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வட மாகாண கல்வி அமைச்சுச் செயலாளருக்கு ஆணைக்குழு உத்தரவிட்டு உள்ளது.*

*சரியான முறையில் நேர்முகத் தேர்வு நடத்தாமல் இந்த நியமனம் வழங்கப்பட்டமை தவறானது என்று ஆணைக் குழு அறிவித்துள்ளதால் மகேந்திரராசா திருப்பி முன்னைய பாடசாலைக்கு அனுப்பப்படுகின்றார். பிரதி அதிபராக தர்மசீலன் செயற்படுவார்.*

*ஆணைக்குழுவின் அதிரடி நடவடிக்கை அமைச்சர் குருகுலராசா வுக்கு நேரடியாக விழுந்த பலத்த அடி என்றும் இந்த அதிபர் நியமனத்தில் தில்லுமுல்லுகள் செய்த உயரதிகாரிகளின் தலைகள் அடுத்து வரும் நாள்களில் உருளலாம் என்றும் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.*

இந்தச் செய்தி ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்தியது. கூட்டமைப்பு அமைச்சர் ஒருவரின் ஆசியுடன் வந்தவர் என்பதாலேயே என்.மகேந்திரராசா அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என் பதை அது ஒத்துக்கொண்டது.

அதிகார முறைகேடு செய்த குருகுலராஜாவுக்குச் சரியான பாடம் என்ற தலைப்பில் வெளியான இந்தச் செய்தி 2014.01.01 அன்று 2.33 மணிக்கு பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு முதல் நாள் மதியம் அளவில்தான் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின் நிர்வாக அலுவரால் இந்தக் கடிதம் கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலனின் அலுவலகத்தில் நேரில் கையளிக்கப்பட் டிருந்தது. அதற்கு முதல் நாள், 30ஆம் திகதிதான் இது தொடர்பில் ஆணைக்குழு முடிவு எடுத்ததாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

மறுநாளே மற்றொரு செய்தி *தாய்நாடு* பதிவுத் தளத்தில் பின்வரு மாறு பதிவாகியது:

*வட மாகாண கல்வி அமைச்சர் பதவியையும், அந்தப் பதவியின் கௌரவத்தையும் காப்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யமனத்தில் அரசியல்

பாற்றிக் கொள்கின்ற மைக்காக ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியின் உதவி, ஒத்துழைப்பு ஆகியவற்றை கோரி உள்ளார் குருகுலராஜா.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அதிபராக நாகராசா மகேந்திரரா சாவை அமைச்சர் குருகுலராசா நியமித்து இருந்தார். இந்த நியமனம் சுற்று நிருப விதிகளுக்கு முரணானது, முறைகேடானது என்று வட மாகாண பொதுச் சேவை ஆணைக் குழு பிரகடனப்படுத்தி உள்ளது.

பத்திரிகைகள் மூலம் ஒழுங்காக விளம்பரப் படுத்தி, நேர்முக தேர்வு நடத்தி, சுற்று நிருப விதிகளுக்கு அமைய அதிபரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வட மாகாண கல்வி அமைச்சுச் செயலாளருக்கு ஆணைக் குழு உத்தரவிட்டு உள்ளது.

சரியான முறையில் நேர்முக தேர்வு நடத்தாமல் இந்த நியமனம் வழங்கப்பட்டமை தவறானது என்று ஆணைக் குழு அறிவித்து உள்ளதால் மகேந்திரராசா திருப்பி முன்னைய பாடசாலைக்கு அனுப்பப்படுகின்றார். பிரதி அதிபராக தர்மசீலன் செயற்படுவார்.

இந்நிலையில் ஆணைக் குழுவின் தீர்மானம் அமைச்சர் குருகுலராஜாவுக்கு பெருத்த அவமானம் ஆகிவிட்டது. சக அமைச்சர்கள்கூட இவரைக் கடிந்து கொண்டனர். இவர் அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகின்றது என்று சக அமைச்சர்களில் சிலர் இவருக்கு காதோடு காதாகச் சொல்லி வைத்து உள்ளனர்.

இன்னொரு புறத்தில் ஆரம்ப பாடசாலைக்கு அதிபர் ஒருவரைக்கூட நியமிக்க அருகதை அற்ற அமைச்சர் பதவியையா இவர் வைத்திருக்கின்றார்? அல்லது இவரின் திறமைக் குறைவால் ஏற்பட்ட பிரச்சினையா இது? என்றெல்லாம் மாகாண கல்வி அமைச்சை சேர்ந்த உத்தியோகத்தர்கள் இவரின் காது படவே பேசுகின்றனர்.

நிலத்தில் விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டுப்படவில்லை என்கிற கணக்கில் இந்த ஊழியர்கள் முன்பாக இவர் வீரம் காட்டினார். ஆணைக்குழுவின் தீர்மானத்தை சட்டை செய்யவில்லை என்றும் ஆணைக் குழுவால் என்ன செய்ய முடியும்? என்பதை பார்த்துக் கொள்வார் என்றும் அமைச்சில் நேற்று இடம் பெற்ற விழா ஒன்றில் வைத்து இவர் கறுவினார்.

ஆனால் ஆணைக்குழுவின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்துதல், ஆணைக்குழுவின் தீர்மானத்தை அனுசரிக்க மறுத்தல், ஆணைக் குழுவை அவமதித்தல் போன்றன தண்டனைக்கு உரிய குற்றவியல் குற்றங்களாகும் என்பதை இவர் பின்புதான் அறிய முடிந்தது.

இந்த நிலையில் ஆப்பு இழுத்த குரங்கு நிலையில் இருக்கின்ற இவரை ஆளுநர் ஒருவராலேயே காப்பாற்ற முடியும் என்று உணர்ந்து கொண்டார். இன்று ஆளுநரை நேரில் தொடர்பு கொண்ட குருகுலராஜா ஆணைக்குழுவின் உத்தரவை வாபஸ்பெற்றுத்தரச்சொல்லிகெஞ்சிமன்றாடினார். ஆணைக்குழுவின் தீர்மானத்தை தற்றுணிவில் மாற்றவே முடியாது என்று இவருக்கு விளங்கப்படுத்தினார் ஆளுநர் சந்திரசிறி.

இருப்பினும் ஆணைக்குழுவின் விசாரணைகள் முறையாக இடம்பெற்றனவா? என்பதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பார் என்று அமைச்சருக்கு ஆறுதல் கூறி இருக்கின்றார்.

இந்த நிலையில் மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர் உட்பட்ட சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளை யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் நியமனம் தொடர்பான கோப்புகளுடன் ஆளுநர் அலுவலகத்துக்கு வரச் சொல்லி உத்தரவிட்டு உள்ளார் சந்திரசிறி.

இப்படிக்கூறும் அந்தச் செய்தி இந்த வருடத்தின் இரண்டாவது நாளில் வெளியானது. இந்தத் தகவல்கள் எங்கிருந்து உடனடியாக அமைச்சர் டக்ளஸ் ஆதரவு வலைப் பதிவுக்குக் கசிந்தன என்பதை ஊகித்து அறிவது கடினமானதொன்றல்ல.

ஆனால், இந்த விடயத்தில் தான் ஆளுநரை நேரில் சந்தித்துப் பேசியதாகக் கூறப்படுவதை அமைச்சர் குருகுலராஜா 'உதயன்' பத்திரிகையிடம் நேற்று மறுத்தார். "அது பொய்யான தகவல்" என்று கூறினார். இருப்பினும் மாகாண கல்வி அமைச்சர் தொலைபேசி மூலம் ஆளுநரிடம் முன்வைத்த கோரிக்கை மற்றும் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் செய்த மேன் முறையீடு ஆகியவற்றின் அடிப்படையில், மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின் முடிவை நடைமுறைப்படுத்துவதை எதிர் வரும் 8ஆம் திகதி வரை இடைநிறுத்தி வைக்குமாறு ஆளுநரால் கல்வி அமைச்சின் செயலருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று ஆளுநர் அலுவலக வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

இந்தப் பிரச்சினையை ஆளுநரின் கவனத்துக்கு எடுத்துச் சென்றவர்கள், கொடுத்த விம்பத்தின் அடிப்படையில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி பொதுச் சேவைகள் ஆணைக்குழுவை விரைவுபடுத்திய ஆளுநரே இப்போது அதன் முடிவை நடைமுறைப் படுத்துவதை இடைநிறுத்தி வைத்துள்ளார் என்பது ஆணைக்குழுவின் சுயாதீனத்தை கேள்விக்குறியாக்கி உள்ளது.

இதற்கிடையே இந்த விவகாரம் தொடர்பிலான மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை இன்னும் முடிவடையவில்லை. நேர்முகத் தேர்வின்போது அதில் கலந்து கொண்டவர்களுக்கு இடப்பட்ட புள்ளிகளின் விவரங்களை கல்வித் திணைக்களத்திடம் இருந்து பெறும் முயற்சியில் மனித உரிமைகள் ஆணைக்குழு இறங்கியிருப்பதாகத் தெரிகிறது. விரைவில் அதன் முடிவு வரக் கூடும். அதற்கிடையில் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் முடிவை ஆளுநர் இடைநிறுத்துவாரா இல்லையா என்பதற்காகவும் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

அது எப்படியிருந்தாலும் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் குறைபாடுகள் இருந்தன என்று பொதுச் சேவைகள் ஆணைக்குழு தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. எனவே இந்த நேர்முகத் தேர்வின் அடிப்படையில் இனிமேலும் மேற்கொள்ளப்படும் அதிபர் நியமனம் நம்பகத் தன்மையை தக்கவைக்கத் தகுதியற்றதாகிவிடும். எனவே முறையான நேர்முகத் தேர்வு ஒன்று விண்ணப்பித்த அனைவரையும் உள்ளடக்கி நடத்தப்பட வேண்டும், தகுதியான சிறந்த அதிபர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். அதற்கு தற்போது பாடசாலையில் இருக்கும் அதிபர்கள் தடங்கலாக இருப்பின் அதனைத் தவிர்க்க நேர்மையான அணுகுமுறை ஒன்று நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். அரசியல் செல்வாக்குகளையும் தகிடு தத்தங்களையும் தவிர்த்து விட்டு கல்வியை கல்வியாகப் பார்க்க அனைவரும் முன்வரவேண்டும். இல்லையேல் எங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையைக் கருத்தில் கொண்டு வீதியில் இறங்கி நீதிக்காகப் போராடுவது தவிர எமக்கு வேறு வழியில்லை என்கிறார்கள் புகழ்பூத்த யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் மிகச் சிரமப்பட்டுத் தமது பிள்ளைகளைச் சேர்ந்த பெற்றோர்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் இந்த அதிபர் நியமனச் சிக்கல் ஓர் உதாரணம் மட்டும் தான். வடக்கில் கல்வித்துறை அரசியல் தலையீடுகளால் எப்படிச் சீரழிகின்றது என்பதற்கான முழு உதாரணம் அது. இராணுவ அதிகாரிகளையும் தூரநோக்கற்ற அரசியல்வாதிகளையும் கொண்டு நடக்கும் இந்த நிர்வாகம், வடக்கின் கல்விப் புலத்தை எப்படி கறையான் போன்று [illegible] தாரணம். [illegible] எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் நீதி என்பது ஒன்றாகவே இருக்கவேண்டும்.

மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்
පළාත් රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව, උතුරු පළාත
PROVINCIAL PUBLIC SERVICE COMMISSION, NORTHERN PROVINCE

எனது இல. My No: NP/07/ED/Appl/44
உமது இல. Your No:
திகதி Date: 2013.12.31

செயலாளர்
கல்வி அமைச்சு
வடக்கு மாகாணம்

**யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் நியமனம் தொடர்பான மேன்முறையீடு**

திரு கி. தர்மசீலன், பிரதி அதிபர், யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை அவர்களின் 2013.10.31ஆம் திகதிய மேன்முறையீடு தொடர்பாக 2013.12.30 ஆம் திகதி நடைபெற்ற மாகான பொதுச் சேவை ஆணைக்குழுவின் மாதாந்த அமர்வில் ஆராயப்பட்டது.

2. ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன:

2.1. வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவரகளின் 2013/01 ஆம் இலக்க 2013.08.07 ஆம் திகதிய குறிப்பாணையின் (Governor's Memorandum -2013/01) பந்தி 2 : c (v) ற்கு அமைவாக ஒரு பாடசாலைக்குரிய அதிபரை நியமிக்கும் அதிகாரம் மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கே கையளிக்கப்பட்டுள்ளது. ஆனால் குறித்த பாடசாலையின் அதிபர் நியமனம் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரின் NP/20/ET/D/3 ஆம் இலக்க 2013.10.21 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைவாக, யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்களின் NP/41/20/01/01/AO இலக்க 2013.10.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் திரு நா. மகேந்திரராசா அவர்களுக்கு அதிபர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. எனவே இந்நியமனம் சட்ட வலுவற்ற நிலையில் செல்லுபடியற்றதாகும்.

2.2. அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமிப்பு, பதவி உயர்வு, இடமாற்றம் தொடர்பான பொதுச் சேவை ஆணைக்குழுவின் 1589/30 ம் இலக்க 2009.02.20 ஆம் திகதிய அதி விசேஷ வர்த்தமானப் பத்திரிகையின் அத்தியாயம் XI உபபிரிவு 130 ற்கு அமைவாகவும், வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை தொடர்பாக 1817/30 ஆம் இலக்க 2013.07.03 ஆம் திகதிய அதிவிசேஷ வர்ததமானப் பத்திரிகையின் அத்தியாயம் XI, உபபிரிவு 118 ற்கு அமைவாகவும், சேவை மூப்பு கருத்திற்கொள்ளப்படவில்லை. குறிப்பாக திரு கி. தர்மசீலன் ( பிரதி அதிபர்) திரு நா. மகேந்திரராசா (அதிபர்) ஆகிய இருவரும் 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் சேவை பரீட்சையில் சித்தியடைந்துள்ளதுடன் திரு . கி. தர்மசீலன் என்பவர் திரு நா. மகேந்திரராசா என்பவரை விடக் கூடிய புள்ளிகளைப் பெற்று சேவை மூப்பில் முதல் நிலையில் உள்ளார். ஆனால் நேர்முகப் பரீட்சையின் போது இவ்விடயம் கருத்திற்கொள்ளப்படவில்லை என்பது நியமன நடைமுறை விதிகளுக்கு எதிரானதாகும்.

2.3. குறித்த அதிபர் நியமனமானது வடக்கு மாகாண கல்வி அமைச்சின் 2008/04 ஆம் இலக்க 2008.02.14 ஆம் திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாகச் செய்யப்பட்டதாக, NP/20/ET/D/5-Jaff இலக்க 2013.12.19ஆம் திகதிய கடிதமூலம் மாகாணக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் அறிவித்துள்ளார். ஆனால் குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களோ அல்லது அதில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளோ சரியாகப் பின்பற்றப்படவில்லை. இந்நியமனம் தொடர்பாக இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்படாத புதிய விடயங்கள் (தற்போதய பாடசாலையில் 03 வருடங்கள் சேவையாற்றியிருத்தல் வேண்டும்) சேர்க்கப்பட்டுள்ளதுடன், சிலவற்றிற்கு தவறான, பொருத்தமற்ற விளக்கங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் குறித்த சுற்று நிருபம்

(Please indicate my reference No. in your reply)

பல குறைபாடுகளைக் கொண்டுள்ளதோடு அது அரசாங்க நியமன நடைமுறைக்கு எதிரானதாகவும் தன்னிச்சையாகத் தயாரிக்கப்பட்டதொன்றாகும். அத்துடன் அது சட்ட வலுவற்ற ஒரு ஆவணமாகும்.

2.4. குறித்த நியமனம் தொடர்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அவர்களால் எழுதப்பட்ட கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்ட நடைமுறைகளும் வழக்காறுகளும் ஆலோசனைகளும் தாபன நடைமுறைக்கு எதிரானது என்பதுடன் அவை சட்ட வலுவற்றதுமாகும்.

3. கட்டளைகள்

3.1. யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. செ. உதயகுமார் அவர்களால் NP/41/20/01/01/AO இலக்க 2013.10.23 ஆம் திகதிய கடித மூலம் திரு நாகராசா மகேந்திரராசா (SLPS III) அவர்களுக்கு யா/ யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலைக்கு (தரம் III) வழங்கப்பட்ட அதிபர் நியமனம் உடனடியாக இரத்துச் செய்யப்படல் வேண்டும். அத்துடன் திரு நா. மகேந்திரராசா ( SPLS-III) அவர்கள் எற்கனவே கடமையாற்றிய அதே பாடசாலைக்கு அவரது முன்னய பதவிக்கு உடனடியாக விடுவிக்கப்படுதல் வேண்டும்.

3.2. தற்போது பிரதி அதிபராகக் கடமையாற்றும் திரு. கி. தர்மசீலன் (SLPS-III) அவரகளிடம் அவரது கடமைக்கு மேலதிகமாக, அதிபருக்குரிய கடமைகளும் கையளிக்கப்படல் வேண்டும். அத்துடன் தற்போது இருக்கின்ற அதிபரின் பொறுப்பில் உள்ள சகல அரசாங்க சொத்துக்கள், உத்தியோகபூர்வ அடையாள அட்டை, சாவிகள், ஆவணங்கள், கணினி இரகசியச் சொற்கள் மற்றும் குறித்த பாடசாலையுடன் தொடர்புடைய நிருவாகத்திற்குட்பட்ட சகல விடயங்களும் திரு. கி. தர்மசீலன் (பிரதி அதிபர்) அவர்களிடம் கையளிப்பதற்கு உடனடியாகப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கப்படல் வேண்டும்.

3.3. வடக்கு மாகாண கல்விப் அமைச்சின் 2008/04 ஆம் இலக்க 2008.02.14 ஆம் திகதிய சுற்றுநிருபத்தை உடனடியாக இரத்துச் செய்து இரண்டு மாத காலப்பகுதிக்குள் இந்நியமனம் தொடர்பான புதிய சுற்றறிக்கை ஒன்று மத்திய கல்வி அமைச்சின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்டு வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்காக அனுப்பிவைத்தல் வேண்டும்.

3.4. பந்தி 3.3 இல் குறிப்பிடப்பட்டவாறு புதிய சுற்றறிக்கைக்கு அமைவாக குறித்த பாடசாலை அதிபர் பதவிக்குரிய நேர்முகப் தேர்வு புதிதாக நடாத்தப்படல் வேண்டும்.

3.5. மேற்குறித்த நியமனம் தொடர்பாக யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் திரு செ. உதயகுமார் மற்றும் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திரு .வ செல்வராசா ஆகியோருக்கு எதிராக, வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையின் அத்தியாயம் I, உப பரிவு 7ற்கு அமைவாக விளக்கங்கள் கோரப்பட்டு அவ்விடயம் தொடர்பான அறிக்கை கௌரவ ஆளுநர் அவர்களது மேலதிக நடவடிக்கைக்காக ஒரு வார காலத்திற்குள் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**"வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி"**

க. தெய்வேந்திரம்
செயலாளர்

க.தெய்வேந்திரம்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 05 01 2014 ஞாயிற்றுக்கிழமை



ஔண்ணயன்

**கவர்ந்து சென்றவர்களே வலிய வந்து , காணாமற் போனோர் தொடர்பில் ஆணைக் குழுக்கள் மூலம் விவரம் எடுத்து, நடந்தவற்றைப் பதிவு செய்து, நடவடிக்கை எடுப்பதாகக் கூறுகின்றபோது ஏதேனும் அற்புதம் நிகழாதா என்ற நப்பாசை எல்லோர் மனதிலும் எழுவது இயல்பே.**

# கதவைத் திறக்கும் பழைய குருடி

இரண்டு நண்பர்கள் திரையரங்கில் திரைப்படமொன்றைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். படத்தில் பாலமொன்றின் ஊடாக ஒரு வெள்ளைக் குதிரையில் நாயகன் புயல் வேகத்தில் வந்துகொண்டிருந்தான். அப்போது படம் பார்த்துக் கொண்டிருந்தவர்களில் ஒருவன் சொன்னான்.

"இந்தக்குதிரை பாலத்தால் தவறி ஆத்துக்க விழப்போகுதெண்டு நான் நினைக்கிறன்"

உடனே மற்றவன்,

"இல்லையில்லை. ஒருக்காலும் அந்தக் குதிரை விழாது" என்று நம்பிக்கையோடு சொன்னான்.

"பார்ப்பமா? அந்தக்குதிரை ஆத்துக்குள் விழுந்தால், நீ ஆயிரம் ரூபா தரவேணும். விழாட்டி நான் உனக்கு ஆயிரம் ரூபா தாறன்" என்று பந்தயம் கட்டினான். மற்றவனும் இந்தப் பந்தயத்துக்குச் சம்மதித்தான். படத்தில் பாலத்தின் நடுப்பகுதியை குதிரை நெருங்கிவிட்டது. திடீரென ஒரு வெடிச்சத்தம். அந்தச் சத்தம் கேட்ட குதிரை மிரண்டு போய், நாயகனோடு ஆற்றுக்குள் தவறி விழுந்தேவிட்டது. குதிரை ஆற்றுக்குள் விழாது என்று பந்தயம் கட்டியவன் மற்றவனுக்கு ஆயிரம் ரூபாயைக் கொடுத்து விட்டு, தலையைத்தொங்கப்போட்டுக் கொண்டான்.

காசை வாங்கிக் கொண்ட - வெற்றி பெற்ற- மற்ற நண்பன் "மச்சான்! உன்னட்டை ஒண்டு சொல்ல வேணும். நான் இந்தப்படத்தை முதலே பத்துப் பதினைஞ்சு தரம் பாத்திட்டன். அதாலதான் குதிரை விழப்போகுதெண்டு எனக்கு தெரிஞ்சது" என்று தன் வெற்றியின் ரகசியத்தைப் போட்டுடைத்தான்.

அதற்கு தோற்றவன் சொன்னான், "நானும் உந்தப்படத்தை இருபது தரத்துக்கு மேலை பாத்திட்டன். கன தரம் இப்பிடி விழுந்த அனுபவத்தில அந்தச் சத்தம் குதிரைக்கு பழகி, இந்தமுறை வெருளாது எண்டு நினைச்சன். அதென்னெண்டா, பழையபடி வெருண்டு ஆத்துக்க விழுகுது. அறிவுகெட்ட குதிரை" என்று சலித்துக் கொண்டான்.

அந்தக்குதிரை இந்த முறையாவது ஆற்றுக்குள் விழாது என்று நம்பியவனின் நிலையில் தான் காணாமற்போனோரின் உறவுகளும் இருக்கிறார்கள். போர் முடிவுக்கு வந்தபின்னர் காணாமற்போனோரைத் தேடியலைவோரின் எண்ணிக்கை தமிழ்ச்சமூகத்தில் திடீரென அதிகரித்துவிட்டது.

என்றைக்கு போர் தொடங்கியதோ அப்போதே காணாமற்போதல் என்ற நிகழ்வும் எம்மிடையே திணிக்கப்பட்டுவிட்டது. காணாமற் போதல்கள் விதவிதமான வகைகளில் நடந்தேறின. வெள்ளைவானில் வந்தோரால், சோதனையிட வந்தோரால், வீதிச்சோதனை செய்தோரால், சீருடை மற்றும் சிவில் உடைகளில் தோன்றுவோரால் என்று வெவ்வேறு ரூபங்களில் ஆள்களைக் கவர்தல் நடந்து கொண்டேயிருந்தது.

கவர்ந்து சென்றவர்கள் யார்? எங்கே அடைத்து வைத்திருக்கிறார்கள்? என்றெல்லாம் அநேக தருணங்களில் காணாமற்போனோரின் உறவுக்களுக்கு தெரிந்திருந்த போதும், நாங்கள் அவரைப் பிடிக்கேலை என்பதே பிடித்துச் சென்றவர்களின் பதிலாக இருந்தது. காணாமற் போனோரில் மிகச் சொற்பமானோரே உயிருடன் மீண்டிருந்தனர். ஏனையோரில் ஒரு தொகுதியினர் சடலங்களாகவும், எலும்புக்கூடுகளாகவும் ஆங்காங்கே குழிகள் வெட்டும்போது தற்செயலாகக் கண்டு பிடிக்கப்பட்டனர். இந்த இருவகைகளிலும் அடங்காதவர்கள் இன்னும் காணாமற்போனோர் பட்டியலிலேயே தொடர்கின்றனர்.

தமிழ் இளைஞர்கள் இனம்தெரியோரால்' காணாமற் போகடிக்கச் செய்யப்பட்ட சம்பவங்கள் தெட்டம் தெட்டமாக நீண்டுகொண்டிருந்த போரின் ஒவ்வொரு அசைவின் போதும் இடையறாது தொடர்ந்த போதும், 5முறை அவை மிகப்பெரிய அளவில் உணரப்பட்டன.

1.1986 இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற இலங்கை இராணுவம் மேற்கொண்ட ஒப்பரேசன் லிபரேசன்' உள்ளிட்ட படை நடவடிக்கைகளின் போது,

2. இந்திய இராணுவம் வடக்கு, கிழக்கில் நிலை கொண்டிருந்த போது

3. யாழ். குடாநாட்டை படைத்தரப்பு முற்றாகக் கைப்பற்றிய பின்னர்,

4. இறுதிப்போரின் ஆரம்பத்தில், (வன்னி தவிர்ந்த படைக்கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில்)

5.இறுதிப்போரின் கடைசிக் கணங்களில்,

6. போருக்கு பின்னான நலன் புரிநிலையக் காலத்தில்,

என்று மனதில் உடனே துருத்திக் கொண்டிருக்கும் காணாமற் போன சம்பவங்கள் அதிகளவில் நிகழ்ந்ததான சில கட்டங்களை பட்டியலிட முடியும்.

இவற்றில் இறுதிப்போரின் போதும், அதற்குப்பின்னான காலத்திலுமே ஒப்பீட்டளவில் மிகப்பெருமெடுப்பில் இளைஞர்களும், யுவதிகளும் இழுத்துச் செல்லப்பட்டார்கள். தாமாகவே படையினரிடம் சென்று சரணடைந்தவர்கள் கூட வலிந்து காணாமற்போனோராக்கப்பட்டனர். வெவ்வேறு காலகட்டங்களில், வெவ்வேறு சந்தர்ப்பங்களில் காணாமற்போதல்கள் நிகழ்ந்திருந்தாலும், அதன் பின்னர் அவர்களை மீட்பதற்கான உறவுகளின் போராட்டம் எப்போதும் ஒரே மாதிரியானவையாகவே இருந்தன.

சாட்சிக்காரனை விடுத்து நேரடியாகவே சண்டைக்காரனின் கால்களில் விழுந்தாவது தம்முறவுகளை மீட்பதற்கான கண்ணீரான போரைத் தொடங்கிவிடுவார்கள். காணாமற்போனோர் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சித்திரவதை முகாம்கள் என்று தாங்கள் சந்தேகிக்கும் சகல முகாம்களுக்கும் சென்று அழுது, குளறுவார்கள்.

'நீங்க சொல்ற மாதிரி இங்க யாருமில்லை. போ. போ...' என்று கொச்சைத்தமிழில் நாயைப்போல விரட்டப்பட்டாலும் , அடுத்தநாள் காலையிலே மறுபடி அந்த முகாம்களின் வாசலில் பிடித்துக் கொண்டு சென்றவரை திருப்பித் தரச்சொல்லி தம் கண்ணீரைப் பெருகவிட்டபடி குந்தியிருப்பார்கள் உறவுகள். எத்தனை நாள் தான் அங்கேயே காத்திருக்க முடியும்? எனவே வேறுவழிகளில் மீட்புப்போரை முன்னெடுப்பார்கள். கிராமசேவகர் தொடக்கம் ஜனாதிபதி வரை எல்லோரிடம் எழுத்து மூல முறையிடல்களைச் செய்துவிட்டு, எதுவுமே நடக்காது என்று உறுதியாகத் தெரிந்தபோதும் தப்பித் தவறி ஏதாவது நல்லகாலம் இருந்து பிடிபட்டவையை விடக்கூடும் என்ற அந்தரத்தில் தொங்கும் நம்பிக்கையோடு காத்திருப்பார்கள். காத்திருத்தலின் காலம்தான் நீளுமே தவிர, தீர்வொன்றும் கிட்டியிருக்காது. அப்படியிருந்தும் விடமாட்டார்கள். செருப்பில்லாத காலோடு, குழந்தை குட்டிகளையும் தூக்கிக் கொண்டு, வயிற்றில் பசி நெருப்பாக எரிந்து கொண்டிருக்க, அலைதலின் காலத்துக்குள் நுழைவார்கள். தங்கள் கணவனை, பிள்ளையை, தந்தையை, சகோதரனை, சகோதரியை திருப்பித் தாருங்கள் என்று சப்பாத்துப் போட்ட எல்லோரின் கால்களிலும் வீழ்ந்து அழுது புரள்வார்கள்.

எல்லோரிடமும் முறையிட்டுப் பயனேதும் கிடைக்காத பின்னர், தம்மைபோலவே கண்ணீரில் உழலும் உறவுகளைத் திரட்டிக்கொண்டு, வீதியில் இறங்கிப்போராடுவார்கள். தங்கள் கதறல் தங்களின் உறவுகளைக் கடத்தியோரின் காதுகளைச் சென்றடைந்து, அவர்களின் உள்ளத்தில் கொஞ்சமேனும் ஈரத்தை உற்பவித்து, விட்டுவிடமாட்டார்களா என்றுதான் அவர்கள் நம்புகிறார்கள். (இப்படித் தங்களின் உறவுகளை மீட்க அல்லும் பகலும் அனவரதமும் தமிழ்பெண்கள் நடத்தும் கண்ணீர் போராட்டங்களைத் தான் நாலைந்து பெண்கள் நீலிக்கண்ணீர் வடித்தபடி நாடகம் போடுகிறார்கள் என்று பிரிட்டன் பிரதமரிடம் எடுத்துரைத்து தன் மேதாவிலாசத்தைக் காட்டிக் கொண்டார் சுழற்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன்)


இவற்றையெல்லாம் தாண்டி சில ஆணைக்குழுக்களுக்கு முன்னாலும் அவர்கள் நடந்தவற்றை எடுத்துச் சொல்லி, சாட்சியமளித்திருக்கிறார்கள். கவர்ந்து சென்றவர்களே வலிய வந்து , காணாமற் போனோர் தொடர்பில் ஆணைக் குழுக்கள் மூலம் விவரம் எடுத்து, நடந்தவற்றைப் பதிவு செய்து, நடவடிக்கை எடுப்பதாகக் கூறுகின்றபோது, ஏதேனும் அற்புதம் நிகழாதா என்ற நப்பாசை எல்லோர் மனதிலும் எழுவது இயல்பே. அற்புதங்களுக்கான கனவுகளைச் சுமந்தபடி, இத்தனை நாளும் மனதில் தேக்கிவைத்திருந்த கவலையை, பிறத்தியார் என்றும் பாராமல், கண்ணீராகக் கொட்டினார்கள் உறவுகள். அவசரத்தனமான திட்டமிடல்களோடு, மிகக்குறுகிய காலத்தை மட்டுமே ஒதுக்கிக்கொண்டு ஆணைக்குழு அமர்வுகளை நடத்திய அதன் உறுப்பினர்களுக்கு கொட்டாவி விடுவதற்கும், குட்டித்தூக்கம் போடுவதற்குமே நேரம் போதாத போது, எப்படி இவர்களின் கதைகளைக் காது கொடுத்துக் கேட்க முடியும்?

தங்கள் உறவுகள் எப்படி, எங்கே, யாரால் கவர்ந்து செல்லப்பட்டார்கள் என்பதைக் கொட்டிவிடக்காத்திருந்தவர்களிடம் மாதிரிக்கு சிலரின் கதைகளை மட்டும் கேட்டுவிட்டு, மொத்தவியாபாரிகள் போல, புகைப்படங்களையும், சில தகவல்களையும் மட்டும் வாங்கித் தமது பைல்களுக்குள் அடைந்து கொண்டு

(28 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிமொழி





# பணமே இன்றி ஒரு வாழ்க்கை

இன்று பணம் இல்லாமல் ஒருவர் வாழவே முடியாது என்ற அச்சுறுத்தல் ஒவ்வொரு மனிதரிடமும் உருவாக்கப்பட்டுள்ளது. கல்வி மற்றும் அடிப்படை சுகநல சேவைகளைக் கூட அதிக விலை கொடுத்தால் தான் நுகர முடியும் என்ற சூழ்நிலையில் வாழ்ந்துவருகிறோம். இந்த நிலையில், சாதாரண மனிதர்களுக்குப் பணம் என்பது தவிர்க்க முடியாத தேவையாகவும், அச்சுறுத்தலாகவுமே உள்ளது. பணத்துக்காக ஓடிஓடியே வாழ்க்கையைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றான் மனிதன்.

பணம் இன்றி இந்த உலகத்தில் எவராலாவது உயிர் வாழ முடியுமா என்று ஒருவரைப் பார்த்துக் கேட்டால், அப்படிக் கேட்பவரைப் பைத்தியக்காரனாகத்தான் பார்க்கத் தோன்றும். ஆனால் இங்கிலாந்தில் பொருளாதார மற்றும் வர்த்தகத்தில் பட்டப்படிப்பு முடித்த இளைஞரான மார்க் பாயல் பணம் இல்லாமல் ஒரு மனிதனால் வாழ்க்கை நடத்த முடியும் என்று கூறுகிறார். அத்துடன் நின்றுவிடாமல் அதை நிரூபித்தும் வருகிறார். இவர் இந்தியாவின் மகாத்மா என்று போற்றப்படும் காந்தியின் கிராமப் பொருளாதாரம் மற்றும் தன்னிறைவுச் சிந்தனைகளால் ஈர்க்கப் பெற்றவர்.

## விசப் பரீட்சை

2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தனது வேலையைத் துறந்த அவர், இயற்கை உணவு நிறுவனத்தைத் தொடங்கினார். 'சாமர்செட்' பண்ணை என்ற இடத்தில் தனது வீடாகவும் பயன்படுத்தப்படும் வாகனத்தை நிறுத்திக்கொண்டார். அந்த வாகனம் அவருக்குக் கொடையாக அளிக்கப்பட்டது. தனது பண்ணையில் அவரே களத்தில் இறங்கிப் பணிகளில் ஈடுபட்டுத் தனக்கான உணவை உற்பத்திசெய்தார். விறகு அடுப்பில் சமையல் செய்துகொண்டார். தனது சோதனையைத் தொடங்குவதற்கு முன்னர் வாங்கிய 360 பவுண்டுகள் விலையுள்ள சூரிய ஆற்றல் மின்கலத்திலிருந்து மின்சாரத் தேவையையும் நிறைவேற்றி வருகிறார்.

உலகில் தற்போது நிலவும் தீவிரமான பிரச்சினைகளை ஆராய்ந்த போது அதற்குக் காரணங்கள் நுகர்வும், காடுகள் அழிப்பும், குறைந்த கூலிகளில் ஆயிரக்கணக்கில் மக்களைப் பணியமர்த்தும் தொழிற்சாலைகளும்தான் என்று கண்டுபிடித்தார் மார்க் பாயல். மனிதன் தான் நுகரும் பொருளிலிருந்து அந்நியப்பட்டதே சகல பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணம் என்பதை உணர்ந்தார். ஒரு கட்டத்தில் பணம்தான் சுதந்திரம் என்ற மாயையும் எல்லாரிடமும் ஏற்பட்டுவிட்டதாகக் கூறும் மார்க் பாயல், பணம் இல்லாமல் வாழ்வது சாத்தியமே என்கிறார். பணம் இல்லாமல் வாழ்வதற்குப் பழகுவது முதலில் சிரமமாகவே இருந்தது என்பதையும் இவர் ஒப்புக்கொள் கிறார். "பணத்துக்கு எதிரான சவால் [illegible]




தல்ல. எப்படிச் சாப்பிடுவது, ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு எப்படிப் பயணிப்பது, பல் தேய்ப்பது எல்லாமே எனக்குப் புதிராக இருந்தன. பணம் இல்லாத போது எல்லோரும் உணரும் பாதுகாப்பின்மை என்னையும் பயமுறுத்தியது" என்கிறார்.

## இயக்கம் ஆரம்பம்

இருப்பினும் 34 வயது பாய்ல், கடந்த சில ஆண்டுகளில் பணம் இல்லாமல் வாழ்வதை ஓர் இயக்கமாகவே மாற்றியிருக்கிறார். தன்னைப் பின்தொடர்பவர்கள் பலர் முழுமையாகப் பணத்தைத் துறக்காவிட்டாலும், பணத்தேவையை அதிகமாகத் தங்கள் அன்றாடப் பழக்கத்தில் குறைத்துள்ளதே தனது இயக்கத்தின் வெற்றி என்கிறார். தான் பயிரிட்ட உணவுகளை அல்லது கொடையாக வழங்கப்படுவதையே உண்கிறார் பாயல். ஆற்றில் குளிக்கிறார். சோப்புக்குப் பதிலாக சூழலில் கிடைக்கும் சில வகைச் செடிகளைப் பயன்படுத்துகிறார். கணவாயின் ஓடுகளைக் கழுவிப் பின் அதனை மாவாக்கி, பெருஞ்சீரகத்துடன் சேர்த்து அதை பற்பசையாக்கிப் பல் தேய்க்கிறார். கால்நடையாக அல்லது சைக்கிளில் அதிகம் பயணம் செய்கிறார். தண்ணீர் ஊற்றும் கழிப்பறைக்குப் பதிலாக உரக்கிடங்கு கழிப்பறையைப் பயன்படுத்துகிறார்.

> குறைந்த பணத்துடன் நிறைவான வாழ்க்கை வாழ்வதற்கான வழிவகைகளை அவர் இந்தப் புத்தகத்தில் சொல்லியிருக்கிறார். கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் முழுமையாகத் தன் வாழ்க்கையைப் பணமேயின்றி வாழ்ந்துள்ளார்.




2007ஆம் ஆண்டில் அவர் தொடங்கிய இலவச பொருளாதாரம் (Free Economy) என்ற இணைய சமூகத்தில் பணம் இல்லாமல் வாழ்வதற்கான யோசனைகளைத் தொடர்ந்து பகிர்ந்துகொள்கிறார். பணம் இல்லாமல் வாழ்வதற்கு யாரும் ஒரு வனத்தில் போய் வாழவேண்டியதில்லை. நாம் வசிக்கும் வீட்டிலேயே அதை மேற்கொள்ளலாம் என்பதுதான் மார்க் பாய்லின் செய்தி.

இவர் 'மணிலெஸ் மான்' (பணமற்ற மனிதன்) என்ற புத்தகத்தையும் எழுதியுள்ளார். அவர் சமீபத்தில் எழுதிய *பணமற்ற மனிதன்* இலவசமாக இணையத்திலேயே கிடைக்கிறது. குறைந்த பணத்துடன் நிறைவான வாழ்க்கை வாழ்வதற்கான வழிவகைகளை அவர் இந்தப் புத்தகத்தில் சொல்லியிருக்கிறார்.

கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் முழுமையாகத் தன் வாழ்க்கையைப் பணமேயின்றியே வாழ்ந்து, பணமின்றி வாழ்வது சாத்தியம் தான் என்பதை நிரூபித்த பாய்ல், மீண்டும் பண உலகத்தை நோக்கித் திரும்பியுள்ளார். எமர்சன் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்த இவர், உயிர் ஆற்றல் வேளாண்மை தொடங்கி கதைசொல்லல் வரை பல வகுப்புகளை எடுத்துச் சம்பாதிக்கிறார். ஒருவகையில் பணம் இல்லாமல் வாழ, தான் மேற்கொண்ட பரிசோதனை மூலமே அவரால் தற்போது பணம் சம்பாதிக்க முடிகிறது. தன் வேலை மூலம் கிடைக்கும் லாபத்திலிருந்து, கிராமப் பொருளாதார அடிப்படையிலான பண்டமாற்றுச் சமூகம் ஒன்றை உருவாக்க முயல்வதாகத் தெரிவிக்கிறார். நமது உணவை நாமே தயாரித்து, உபரியைப் பகிர்ந்துகொள்வதுதான் அந்த முறை.

## பாய்லின் யோசனை

உங்களுக்குத் தேங்காய் எண்ணெய் வேண்டுமெனில் பக்கத்து வீட்டுக்காரர் தோட்டத்திலிருந்து அனுமதியுடன் தேங்காயைப் பறியுங்கள். தேங்காயை உலரவைத்து எண்ணெய் தயாரித்து அவருக்கும் ஒரு போத்தலை நன்றி செலுத்தும் விதமாகக் கொடுங்கள். உங்கள் தோட்டத்திலேயே சில வகைச் செடிகளை வளர்த்து சோப் மற்றும் ஷாம்பூவைத் தயாரிக்கலாம். நீங்கள் உண்மையிலேயே தைரியசாலியாக இருந்தால், தோட்டத்திலேயே உரமாக மாறும் கழிப்பறையைக் கட்டுங்கள். அதனால் பணம், நீர் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபடாமல் இருக்கும். உடைகள் தேவையெனில் நண்பர்களிடம் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்து அவர்களின் மீதி உடைகளைப் பகிர்ந்துகொள்ளுங்கள். வெளியூருக்குப் போகவேண்டுமெனில் இணையம் மூலம், நட்பு வட்டத்தைத் தொடர்புகொண்டு கூட்டாகக் காரில் பயணம் செய்யுங்கள். எரிபொருள் மிச்சமாகும். இப்படி ஏராளம் யோசனைகள் அவரிடம் கைவசம் இருக்கின்றன.

இந்தப் பரிசோதனையின்போது, "உணவைப் பற்றி, இயற்கையைப் பற்றி, என்னைப்பற்றிக்கூட அறிந்துகொண்டேன். பணத்துடனான நெருக்கம், நட்பு என்பது உண்மையான பாதுகாப்பில்லை என்பதைக் கற்றுக்கொண்டேன். அந்தச் சுதந்திரம் தான் உண்மையான சுதந்திரம். என்னுடைய புதிய உலகில் நான் எவற்றையெல்லாம் தொலைத்துவிட்டேன் என்று என்னிடம் மக்கள் அடிக்கடி கேட்கிறார்கள். மன அழுத்தத்தை, வாகன நெருக்கடியை, வங்கிக் கணக்கறிக்கைகளை, வேறு தேவைகளுக்கான கட்டணச் சிட்டைகளை என்று என் பழைய உலகில் இருந்த எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு நான் நிம்மதியாக இருந்திருக்கிறேன்" என்கிறார் பாய்ல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரபு வசந்தப் புரட்சிக்கு முன்னால் சுற்றுலாத் துறையால் எகிப்துக்கு வந்த வருமானம் சுமார் 1,300 கோடி டொலர்கள். அது மொத்த உள் நாட்டு உற்பத்தியில் 12 சதவீதம். 2013ஆம் ஆண்டு 100 கோடி டாலர்கள் வந்தால் அதிசயம் என்கி றார்கள்.

மருத்துவர்
ராமகிருஷ்ணன்

# வாடி விட்டது எகிப்து

எப்போதுமே எகிப்தின் அடையாளம் பிரமாண்டமான பிரமிட்டுக்களே. பழைய உலகின் ஏழு அதிசயங்களில் இன்று வரை அழியாமல் இருப்பது பிரமிட்டுக்கள் மட்டும்தான். யேசு பிறப்பதற்கு 2,500 வருடங்களுக்கு முன்னால் கட்டப்பட்டவை. சிந்து சமவெளி நாகரிகத்துக்குக் கிட்டத்தட்ட சமகாலத்தவை. இந்த நாகரிகத்தின் குழந்தைகளாகத்தான் இன்றைய எகிப்தியர்களில் பெரும்பாலானோர் தங்களைக் காண்கிறார்கள். "நாங்கள் மதத்தால் இஸ்லாமியர். ஆனால், பிரமிட்டுக்களும் எங்கள் கலாசாரத்தின் முக்கியமான அங்கம்" என்று அவர்கள் சொல்கிறார்கள்.

2008இல் எகிப்து சென்றிருந்தீர்களானால் திரும்பிய இடமெல்லாம் சுற்றுலாப் பயணிகளைத் தவிர வேறு எதையும் கண்டிருக்கமாட்டீர்கள். பிரமிட்டுகளைச் சுற்றிலும் நெருக்கி நிறுத்தப்பட்டிருக்கும் பேருந்துகள். இப்போதோ பிர மிட்டுக்கள் வெறிச்சோடிப்போய்விட் டன.

சுற்றுலாவிகளைவிட சில்லறைப் பொருள்களை விற்பனை செய்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் இன்று. பேரம்பேசினால் கையில் இருப்பவற்றை எல்லாம் ஒரு டாலருக்குக் கொடுத்துவிட்டு ஓடிவிடுவார்கள் என்று தோன்றும். எகிப்து முழுவதும் இந்த நிலைமைதான் என்று தெற்கில் இருக்கும் அரசர்களின் பள்ளத்தாக்கைப் பார்த்துவிட்டு வந்திருப்பவர்கள் சொல்கிறார்கள். 200 அறைகள் கொண்ட நட்சத்திர விடுதி ஒன்றில் ஒரு நாளில் இப்போதெல்லாம் ஆறு அல்லது ஏழு பேர் தங்கினாலே பெரிய விடயம் என்றாகிவிட்டது.

எகிப்தின் தஹ்ரிர் சதுக்கத்தில் இருக்கும் கெய்ரோ அருங்காட்சியகம் உலகப் புகழ்பெற்றது. அங்கேயும் பார்வையாளர்கள் இப்போது வருவது கிடையாது. அருங்காட்சியகத்துக்கு வெளியே வந்தால் சுற்றிலும் டாங்கிகள்தான் அணிவகுத்து நிற்கின்றன. இரண்டு நாள்களுக்கு முன்புதான் சதுக்கத்தில் நடந்த போராட்டத்தில் ஒருவர் கொல்லப்பட்டார் என்று கதைகள் சொல்ல ஆரம்பிப்பார்கள் உள்ளூர்வாசிகள்.

எகிப்தின் மக்கள் தொகை சுமார் 8.5 கோடி. இவர்களில் சுமார் 75 லட்சம் பேர் கிறிஸ்தவர்கள். கெய்ரோ நகரத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சுமார் 1.5 கோடிப் பேர் வசிக்கிறார்கள். அலெக்சாண்டிரியா நகரில் 50 லட்சம் பேர். சுற்றுலாத்தலங்கள் எகிப்து முழுவதும் இருப்பதால், மக்கள் தொகையில் கணிசமானவர்கள் சுற்றுலாவைச் சார்ந்தே இருக்கிறார்கள். 40 லட்சத்துக்கு மேற்பட்டோர் சுற்றுலாத் தொழிலில் இருக்கிறார்கள் என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. 70க்கும் மேற்பட்ட மற்றைய தொழில்கள் சுற்றுலாவை நம்பியிருக்கின்றன.

அரபு வசந்தப் புரட்சிக்கு முன்னால் சுற்றுலாத்துறையால் எகிப்துக்கு வந்த வருமானம் சுமார் 1,300 கோடி டொலர்கள். இது மொத்த உள் நாட்டு உற்பத்தியில் 12 சதவீதம். 2013ஆம் ஆண்டு 100 கோடி டாலர்கள் வந்தால் அதிசயம் என்கிறார்கள். எனவே, பயணிகள் வராதது மிகப் பெரிய பின்னடைவு.

## நேற்று

1981ஆம் ஆண்டிலிருந்து 2011 வரை எகிப்தை ஹொஸ்னி முபாரக் ஆண்டார். 2008ஆம் ஆண்டில் தங்கள் தலைவரை இறைவன் அழைத்துக்கொள்ளும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாக எகிப்தியர்கள் பலர் சொல்ல ஆரம்பித்தார்கள். முபாரக் இன்றுவரை உயிரோடு இருக்கிறார். ஆனால் ஆட்சியில் இல்லை. 2011ஆம் ஆண்டில் தஹ்ரிர் சதுக்கத்தை மையமாகக் கொண்டு நடந்த மக்கள் புரட்சி, முபாரக் அரசைத் தூக்கி எறிந்தது. பின்பு நடந்த தேர்தலில், பல ஆண்டுகள் அடக்குமுறையை அனுபவித்த முஸ்லிம் சகோதரர்கள் அமைப்பின் ஆதரவு பெற்ற விடுதலை-நீதிக் கட்சி (ஃப்ரீடம் அண்ட் ஜஸ்டீஸ் பார்ட்டி) 35 சதவீத வாக்குகளைப் பெற்றது.

சலாஃபி அமைப்புகளைச் சேர்ந்த நூர் கட்சி 25 சதவீத வாக்குகளைப் பெற்றது. எனவே, மதம் சார்ந்த கட்சிகள் பெருவாரியான வாக்குகளைப் பெற்றன என்று சொல்லலாம். அதன் பிறகு, இரண்டு சுற்றுக்கள் நடைபெற்ற தேர்தல்களின் அடிப்படையில் விடுதலை-நீதிக் கட்சி ஆதரவு பெற்ற மோர்சி ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டார். அவர் கொண்டுவந்த அரசியல் சட்டம் பெரும் சர்ச்சைக்கு உள்ளானது. பெண் விடுதலைக்கு எதிராக அது இருக்கிறது. ஷரியா சட்டங் கள் திரும்பக் கொண்டுவரப்படும் என்றெல்லாம் சொல்லப்பட்டது. மக்கள் தஹ்ரிர் சதுக்கத்துக்குத் திரும்பினார்கள். இராணுவம் மோர்சியைக் கைதுசெய்து சிறையில் அடைத்தது. கைதுசெய்ததை எதிர்த்து 'முஸ்லிம் சகோதரர்கள்' கிளர்ந்து எழுந்தார்கள். 14 ஆகஸ்ட் 2013 அன்று நடந்த ராணுவ அடக்குமுறையில் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டார்கள்.

## இன்று

கெய்ரோ நகரில் மட்டும் இல்லாமல், இராணுவம் எல்லா இடங்களிலும் கண்ணுக்குத் தென்படுகின்றது இன்று. தெருக்களில் பாடசாலை வாக னங்கள் போன்று டாங்கிகள் செல்வதைப் பார்க்கலாம்.

அவற்றின் மீது அமர்ந்திருக்கும் படையினர் பால் மணம் மாறாத பாலகர் களாகத் தெரிகிறார்கள். 2014ஆம் ஆண்டு முதல் மாதங்களில் தேர்தல் நடக்கும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். புதிய அரசியல் சட்டத்தின் வரைவு வந்துவிட்டது.

அது மக்களுக்கு உரிமைகளைத் தருகிறது என்றாலும், இராணுவத்துக்குத் தேவைக்கு மேற்பட்ட அதிகாரங்களைக் கொடுத்திருப்பதாக வல்லுநர்கள் கருதுகிறார்கள். 'முஸ்லிம் சகோதரர்கள்', புதிய அரசியல் சட்டத்தைக் கொண்டு வருவதற்காக நடைபெறப்போகும் வாக்கெடுப்பைப் புறக்கணிப்பதாக அறிவித்துவிட்டார்கள். மதம் சார்ந்த மற்றொரு கட்சியான நூர் கட்சி, புதிய சட்டத்துக்குத் தனது ஆதரவைத் தெரிவித்திருக்கிறது. எனவே, மக்களின் ஆதரவோடு புதிய அரசியல் சட்டம் கொண்டு வரப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

## நாளை

கெய்ரோ நகரின் மிக முக்கியமான கான்-ஈ-கலீலி பஜாரிலும் கூட்டம் இல்லை. புகழ்பெற்ற அல்ஹுசைன் மசூதியின் அழகிய முகப்பைப் பார்த்துக்கொண்டே நடைபாதையில் போடப்பட்டிருக்கும் நாற்காலிகளில் அமர்ந்துகொண்டு, பானம் அருந்தவும் யாரும் இல்லை. தேநீர் கடைக்காரர்கள் டொலர்களை வாங்க மறுக்கிறார்கள். ஒரு டொலர் நோட்டில் இருக்கும் ஜோர்ஜ் வோஷிங்டனின் படத்தைக் காட்டி 'சைத்தான்' என்கிறார் கடை உரிமையாளர். அவரிடம் பேச்சுக் கொடுத்தால் நடப்பது ஏதும் அவருக்குப் பிடிக்கவில்லை என்று தெரிகிறது. மோர்சியும் மோசம். இராணுவம் அதை விட மோசம் என்கிறார். முபாரக் திரும்ப வந்தால் நல்லது. ஆனால், அது நடக்க முடியாத ஒன்று என்கிறார். ஆனால் வேறு சிலருக்கு எதிர்காலத்தைப் பற்றி மிகுந்த நம்பிக்கை இருக்கிறது.

"புது அரசியல் சட்டம் பெண்களுக்கு ஆதரவானது. என்னைப் போன்ற பல பெண்கள் அதைத் தீவிரமாக வரவேற்கிறோம்" என்கிறார் சுற்றுலாவிகளுக்கு வழிகாட்டியாகப் பணியாற்றும் பெண். இராணுவத்துக்கு அதிக அதிகாரம் இருக்கிறதே என்ற கேள்விக்கு எப்போது குறைவாக இருந்தது என்ற பதில் வருகிறது.


கெய்ரோ நகருக்கு வெளியே நிலைமை வேறு மாதிரி இருக்கும் என்று தோன்றுகிறது. சுயஸ் கால்வாய்க்குக் கிழக்குப்புறம் இருக்கும் ஸைனாய் பாலைவனத்தில் நெடும் பயணம் செய்து, நடு இரவில் விடுதி ஒன்றை அடைந்த போது அங்கிருப்பவர் "இறைவனின் ஆணைப்படி எல்லாம் நடக்கும்" என்கிறார்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அத்தியாவசிய, ஆடம்பரப் பொருள்களின் விலை அதிகரிப்பு, கட்டம் கட்டமாக மக்களை நெருக்கடிக் குள் தள்ளிக்கொண்டே இருக்கிறது. இவற் றுக்கான தேவை இன்றி மையாத நிலையில் மக்கள் தமது நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நாய்படாதபாடு வேண்டியுள்ளது.




# பதவி பங்கீட்டில் ஆபத்து தவிர்

விகேளம்

அரசியல் உள் நோக்கங்களுக்காக இந்தக் காலத்தில் ஏற்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், மனித வாழ்தகவை கேள்விக்குறியாக்குவதுடன், முரண்பாடுகளையே தோற்றுவிக்கும். இதனை இலாப நோக்கம் கொண்ட அரசியல்வாதிகள் உணரத் தயாராக வேண்டும்.

மஹிந்த அரசின் கீழ், நாட்டில் அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றி நடைபோடுவதாக அரச நிர்வாக மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவற்றையே அரசு சார்பு அரசியல்வாதிகளும் செப்புகின்றனர். குறிப்பாக கைத்தொழில் நடவடிக்கைகள் வேலைவாய்ப்பு, கிராமிய, நகர அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி உட்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதாகவும், இவற்றின் மூலம் மக்கள் பயனடைந்து வருவதாகவும் தகவல்கள் வெளிக் கிளம்புகின்றன.

தேவைக்கு அதிகமாக சேவை செய்து வருகிறோம் என்பதே இதன் மூலம் அரசு கூற முற்படும் செய்தி. ஆனாலும், மக்களின் தேவைகளும் பிரச்சினைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

அத்தியாவசிய, ஆடம்பர பொருள்களின் விலை அதிகரிப்பு, கட்டம் கட்டமாக மக்களை நெருக்கடிக்குள் தள்ளிக்கொண்டே இருக்கிறது. இவற்றுக்கான தேவை இன்றிமையாத நிலையில், மக்கள் தமது நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நாய் படாதபாடு பட வேண்டியுள்ளது.

ஓய்வின்றி உழைத்தால்கூட இந்தக் கால வாழ்க்கைச் செலவைப் பூர்த்தி செய்ய முடியாத நெருக்கடி நிலைக்கே மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக, இலங்கையின் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்றதாக வேலைக்கான ஊதியம் அமையவில்லை. அது சரி அரைவாசியால் குறைந்து நிற்கிறது.

இப்படியான சூழலில்தான் அரசு தனது வெற்றிக் கோஷங்களை விளாசி மேடைகளில் முழங்கி வருகிறது.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர், ஆறு மாதங்கள் பயிற்சி அளிக்கப்பட்டு அரசு சேவையில் உள்வாங்கப்படுவர் எனக் கூறி நாடு முழுவதும் இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகள், ஒரு வருடம் கடந்த நிலையில் தற்போது தான் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். சொல்லப்போனால், அரசின் செயற்படுத்தல் திறன் என்பது அரைவாசிக் காலத்தை அதிகரித்து வீணடிப்பதாகவே இருக்கிறது.

நியமனம் பெற்றவர்கள் போக அந்தச் சந்தர்ப்பத்தில் ஏதோ ஒரு காரணத்துக்காகத் தம்மைப் பயிலுநர்களாக இணைத்துக் கொள்ள முடியாத பட்டதாரிகள் பலர் இன்றும் வேலையற்று இருக்கின்றனர்.

இவர்களை அரச அலுவலர்கள் பல தடவை அழைத்து பதிவுகளை மேற்கொண்டபோதும், பயன் ஏதும் கிட்டவில்லை. இதனால் அவர்கள் வேலையற்றோர் பட்டியலிலும் வேலை தேடி அலைவோர் பட்டியலிலும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர்.

## சலுகை நியமனங்கள்

தற்போதும் வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. அவை அரசியல் சலுகை, அரசியல் தேவைகளுக்காக வழங்கப்படுகின்றன. நீண்ட நெடுங்காலமாக அர்ப்பணிப்போடு தொண்டர்களாக பணியாற்றிய பலர் புறக்கணிக்கப்பட்டு, தகுதியற்ற பலர் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். இதற்கு வேறு பல காரணங்கள் கூறப்பட்டு, அவர்களது கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு வெளியேற்றப்படுகின்றனர்.

பல்கலைக்கழக ஊழிய நியமனங்களின்போதும், சிபாரிசுப் பட்டியலே செல்வாக்குச் செலுத்துவதாக பாதிக்கப்பட்டவர்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர். உண்மையானதகைமை உள்ளவர்கள்கூட இதன்போது புறக்கணிக்கப்படுகின்றனர் என்பது அவர்களது வாதம்.

எந்தவொரு அரசநிறுவனமும் தனது திருகு தாளங்களை வெளியாருக்குத் தெரிவிப்பதில்லை. தெரிய வந்தாலும், அவற்றைச் சரி என்று ஏற்றுக் கொள்வதும் இல்லை. ஏதோ ஒரு காரணத்தைக் கூறி அந்தக் குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பித்துக் கொள்கின்றன.

இவ்வாறான பாரபட்சங்கள் காரணமாகப் போட்டிப் பரீட்சைகளில் சித்தி அடைபவர்கள்கூட புறக்கணிக்கப்படும் சம்வங்கள் அதிகரித்துள்ளன. குறிப்பாக லஞ்ச முறைமையும், வேலை வாய்ப்பும் இலங்கையில் வியாபார நடவடிக்கைகளில் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளன.

பல்கலைக்கழகங்களில் தொழில் முறைக் கல்வி இன்றளவும் சாத்தியமாகாத நிலையில், காலத்தை வீணடிக்கும் கற்கை முறைகளாகவே உயர்கல்வித் தகைமைகள் காணப்படுகின்றன.

சாதாரணதர, உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில் அரசு சேவையில் உள்வாங்கப்பட்ட ஒருவருக்கு சமமாகவோ அல்லது அதற்கு கீழ் நிலையிலேயோ பட்டப் பெறுபேறு பெற்றோர் பணியாற்றும் நிலையுள்ளது. இது இரு தரப்பினரிடமும் வினைத்திறனற்ற நிலையை ஏற்படுத்துகிறது.

தொழிற்கல்விசார் கட்டமைப்புகள் சரிவரப் பின்பற்றப்படாமையே இவற்றுக்கான காரணம் எனச் சுட்டிக் காட்டப்பட்டாலும், அதிலிருந்து விடுபட்டு, பிழைகளைத் திருத்தி வேலை வாய்ப்பு வழங்குவதில் எவரும் அக்கறை செலுத்தவில்லை.

துறைசார்ந்த கட்டமைப்புகளில் நிகழும் இவ்வாறான தவறுகள், தொழில் ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன், உயர் கல்விக்கான தேவைப்பாடுகளையும் கேள்விக்குறியாக்கியுள்ளன. இந்த உணர்தல், எதிர்காலத்திலும் நீடிக்குமானால் உயர்கல்விக்கான தேவைப்பாடுகள் இல்லாமலேயே போய்விடும். இப்போதைக்கு இந்தக் கருத்து சிரிப்புக்கு உரியதாயினும், அதிகரிக்கும் பொருளாதார, விலைவாசி உயர்வு வெகுவிரைவில் இதனை உறுதி செய்யும்.

திறந்த சமூகக் கட்டமைப்புக்குள் காணப்படும் ஆடம்பரப் போக்கும், எளியோர் மத்தியில் தொழில் திறன் கற்றலுக்கான தேவையை இல்லாமல் செய்து கொண்டு இருக்கிறது. இதனால் எதிர்காலத்தில் தொழிற்துறையில் கேள்வி அதிகரிக்கவே வாய்ப்பிருக்கிறது.

வருடந்தோறும் நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் பட்டதாரிகளுக்கு, அவர்களின் தகைமைக்கேற்ப வேலைவாய்ப்பை வழங்கக் கூடிய கொள்ளளவை, அரச நிறுவன கட்டமைப்புக்கள் கொண்டிருக்கவில்லை. புதிய வாய்ப்புகளை உருவாக்கும் அரசின் செயல் திறனும் போதியதாக இல்லை.

இதை விடுத்து, அரசியல் உள் நோக்கங்களுக்காக இந்தக் காலத்தில் ஏற்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மனித வாழ்தகவை கேள்விக்குறியாக்குவதுடன், முரண்பாடுகளையே தோற்றுவிக்கும். இதனை இலாப நோக்கம் கொண்ட அரசியல்வாதிகள் உணரத் தயாராக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அப்பிளின் புது முயற்சி

உலகில் மூன்று அப்பிள்கள் முக்கியமானவை. இந்த உலகத்தையே மாற்றிய மைத்தவை அந்த மூன்று அப்பிள்களும்தாம். முதல் அப்பிள் ஆதாம் ஏவாள் பொறுக்கி உண்டது. ஆண்டவரின் சொல்லைக் கேட்காமல் ஆதாம் ஏவாள் உண்ட அப்பிளால் மனித குலம் இன்றுவரை துன்பங்களில் கிடந்து உலைகிறது. இரண்டாவது அப்பிள் நமக்கு புவியின் இயக்கத்துக்கான சூத்திரத்தையே அறிமுகப்படுத்தி வைத்தது. அது ஐசாக் நியூட்டனுக்கு முன்னால் விழப்போய் புவியீர்ப்பு விசை கண்டறியப்பட்டது. மூன்றாவதும் முக்கியமானதுமான அப்பிள் ஸ்ரீவ் ஜாப்ஸ் படைத்தது. கைப்பேசிப் புரட்சியை ஏற்படுத்தி மனிதர்களை 'ஸ்மார்ட்' ஆக்கியது.

**மின்சாரப் பட்டியல் மாதக் கடைசியில் அலற வைக்கும். இந்தப் பிரச்சினையில் இருந்து காப்பாற்ற 'சிஸ்டம் அண்ட் மெதட் டிடர் மைனிங்' என்னும் புதுத் தொழில் நுட்பத்தைக் கண்டு பிடித் திருக்கிறது அப்பிள் நிறுவனம்.**

இந்த மூன்றாவது அப்பிள் தன்னுடைய படைப்புகளை இன்னும் நிறுத்தியபாடாக இல்லை. வீட்டில் இயக்கத்திலிருக்கும் மின்விளக்கு, மின்விசிறி போன்றவற்றை நிறுத்த மறந்து நாம் வெளியில் செல்வது அடிக்கடி நடக்கும் விஷயம். இந்தக் கவனக்குறைவால் மின்சாரப் பட்டியல் மாதக் கடைசியில் அலற வைக்கும். இந்தப் பிரச்சினையில் இருந்து காப்பாற்ற 'சிஸ்டம் அண்ட் மெதட் டிடர்மைனிங்' என்னும் புதுத் தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித் திருக்கிறது அப்பிள் நிறுவனம்.

விரைவில் சந்தைக்கு வரவிருக்கும் அந்தச் சாதனத்தின் மூலம் வீட்டை விட்டு வெளியே சென்ற பின்னும் இயக்கத்திலிருக்கும் மின் சாதனங்களைத் தானாக நிறுத்த முடியும். இதற்கு எமது கைவசம் ஒரு ஐ-போனும் வீட்டில் அதன் ரிசீவர் கருவி ஒன்றும் இருக்க வேண்டும். வீட்டில் உள்ள மின்சாதனங்கள் அனைத்தையும் இந்தக் கருவியோடு இணைத்துவிடலாம். வீட்டில் இருக்கும் கருவிக்கும் எமது கையிலிருக்கும் ஐ-போனுக்கும் இடையே எப்போதும் கம்பியில்லாத் தொடர்பு இருக்கும். நாம் வீட்டை விட்டு வெளியே செல்கையில், அந்தத் தகவலை கையிலிருக்கும் ஐ- போன், வீட்டிலிருக்கும் அப்பிள் கருவியிடம் சொல்லிவிடும். இதன் மூலம் தேவையில்லாமல் எரியும் மின்சாதனங்களை அது தானாகவே அணைத்துவிடும்.

## ஹெல்ப் அவுட்:

ஆர்க்குட், ஜி+, யூடியூப் , ஹேங் அவுட்டை தொடர்ந்து 'ஹெல்ப் அவுட்' என்ற புதிய மென்பொருளை உருவாக்கியுள்ளது கூகிள். இதன் மூலம் எமக்குத் தெரியாத பலவற் றைத் தெரிந்தவர்களிடமிருந்து நேரடியாகக் கற்றுக் கொள்ளலாம். உதாரணத்திற்கு, நீங்கள் பயணத் தில் இருக்கும்போது உங்கள் கார் திடீரென நின்றுவிட்டால், உடனே 'ஹெல்ப் அவுட்'டை தொடர்பு கொண்டு அதில் உள்ள வல்லுநரி டம் ஆலோசனை கேட்டு காரில் உள்ள சிக்கலை நாமே தீர்க்கலாம். இது ஏற்கெனவே யூடியூப்பில் இருக் கிறதே என்கிறீர்களா? யூடியூப்பில் உள்ளவை வெறும் வீடியோக்கள் மட்டும்தான். ஆனால் 'ஹெல்ப் அவுட்'டில் வரும் வல்லுநர்கள் நேரடியாக நம்மை இயக்குவார் கள். இதுதான் இதிலுள்ள சிறப்பு. வெவ்வேறு மாதிரியான கட்ட ணங்களின் மூலம் இதை நாம் பயன்படுத்திக்கொள்ள முடியும். கொஞ்சம் ஆங்கிலம் மட்டும் தெரிந் திருந்தால் போதும்.

## நுளம்பால் நுளம்புக் கொலை

இந்த நுளம்புத் தொல்லையைத் தாங்க முடியவில்லை. போதாத தற்கு டெங்கால் அத்தனை பேர் பாதிப்பு, இத்தனை பேர் பாதிப்பு என்று பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டு வயிற்றில் புளியைக் கரைக்கின்றன. நுளம்புத் தொல்லை இங்கே மட்டுமல்ல ஸ்பெயினிலும் அதிகமாகவே இருக்கிறது. நுளம்பிடம் இருந்து தப்பிக்க நுளம்புத் திரிகள், நுளம்படிக்கும் மின் மட்டைகள், நுளம்பு வலை என்று எவ்வளவோ முயற்சி செய்தும் நம் மைப்போலவே ஸ்பெயின் மக்களாலும் தப்பிக்க முடியவில்லையாம்.

அங்கிருக்கும் ஒலிவ் பழங்களும் நுளம்புகளால் அழிந்து வருகின்றதாம். இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டும் விதமாக நுளம்பை ஏவி நுளம்பைக் கொல்லும் புது முயற்சியில் இறங்கியுள்ளனர் ஸ்பெயின் அறிஞர்கள். அதன்படி ஸ்பெயினின் மரபியல் அறிஞர்கள் சிலர், இங்கிலாந்து மரபியல் நிபுணர்களுடன் சேர்ந்து ஒலிவ் பழ நுளம்பு என் னும் புது வகை நுளம்புகளை உற் பத்தி செய்து ஊருக்குள் விட்டுள்ளனர். இவை எல்லாமே ஆண் கொசுக்கள். ஒலிவ் பழ மரங்களில் அமரும் இந்த நுளம்புகள் அங்கே வரும் பெண் நுளம்புகளுடன் இணையுமாம். அப்படி இணையும் போது ஆண் கொசுவின் உயிர ணுக்கள் பெண் கொசுவை அடைந்ததும் அதைக் கொன்று விடுகின் றன என்று சொல்கிறார்கள். வேறு சில ஆராய்ச்சியாளர்களோ, இது சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் என்று எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள்.

## வெற்றியான இணையத்தளம்



இன்று செல்போன் எப்படி எல்லோருடைய கைகளிலும் இருக்கிறதோ அதைப்போலவே இணையத்தளங்களும் ஆகிவிட்டன. இன்று பலரும் ஆகக் குறைந்தது வலைப் பதிவர் களாகவாவது இருக்கிறார்கள். அதையே பிற்காலத்தில் தங்களின் இணையத் தளங்களாகவும் மாற்றி விடுகிறார்கள். அப்படி நாம் புதிதாக உருவாக்குகிற இணையத்தளத்தின் மூலம் அடுத்தவர்களை எப்படிக் கவர்வது என்பதைக் கண்டறிய இந்தியாவின் பெங்களூரைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. அந்த ஆய்வில், ஒரு விஷயத்தை எழுதுகிறபோது ஒரே பத்தியாக எழுதுபவர்களை விட வெவ்வேறு பத்திகளாக பிரித்து எழுதுபவர்களுடைய பக்கங் களைத் தான் பலரும் விரும்புகிறார்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. எழுத்துக்களோடு சில நிமிட வீடி யோக்களையும் அவ்வப்போது பதிவேற்றுவதும் அவசியமாம். இவற்றையெல்லாம் செய்தால் ஓர் இணையத்தளம் வெற்றிகரமானதாகிவிடும் என்று இந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

காதல், காதல், காதல், காதல் போயின் சாதல் என்று சொன்னாலும் சொன்னார்கள், புதுப்புது உத்தியாகக் கண்டுபிடித்துக் காதலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்க வாலிபர் ஷான் தனது காதலை வீடியோ கேம் மூலம் வெளிப்படுத்தி, காதலி மனதையும் கவர்ந்திருக்கிறார். இணையவாசிகளையும் வியக்க வைத்திருக்கிறார்.

செல்போன் பிரியர்கள் டொட்ஸ் கேமை (DOTS game) அறிந்திருக்கலாம். அன்ட்ராய்டு மற்றும் ஐபோன்களில் விளையாடக்கூடிய இந்த விளையாட்டில் புள்ளிகள்தான் எல்லாம். இதில் உள்ள வர்ணப் புள்ளிகளை ஒன்றாக இணைக்க வேண்டும். 60 நொடிகளுக்குள் எத்தனை வர்ணப் புள்ளிகளை இணைக்க முடிகிறது என்பதுதான் இந்த விளையாட்டின் சவால். ஆர்வத்தைத் தூண்டி அடிமையாக்கி விடும் விளையாட்டு என்று சொல்லப்படும் டொட்ஸ் விளையாட்டை, ட்விட்டர் மற்றும் முகப்புத்தகம் மூலம் நண்பர்களை போட்டிக்கு அழைத்தும் விளையாடலாம்.

இந்த விளையாட்டை நேசிக்கும் எத்தனையோ பேரில் அமெரிக்க இளம்பெண் கேசியும் ஒருவர். கேசி வேறு யாருமல்லர், ஷானின் தோழி. கேசியை காதலித்து வந்த ஷான் அவரை மணம் செய்து கொள்ள விரும்பினார். தனது காதலை அவரிடம் சொல்லிவிடவும் தீர்மானித்தார். ஆனால் வழக்கமான முறையில் இல்லாமல் கொஞ்சம் வித்தியாசமாகத் தனது காதலை சொல்ல விரும்பினார். இதற்கு அவர் தேர்வு செய்த வழிதான் டொட்ஸ் விளையாட்டு. கேசி, டொட்ஸ் விளையாட்டு பிரியை என்பதால் அந்த விளையாட்டு வடிவிலேயே காதலைத் தெரிவித்தால் அவர் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைவார் என நம்பினார்.

இந்த நம்பிக்கையோடு டொட்ஸ் விளையாட்டை உருவாக்கிய நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு. தன் காதலைச் சொல்லக்கூடிய வகையில் டொட்ஸ் கேமின் சிறப்பு வடிவை உருவாக்கித்தர முடியுமா என்று கேட்டிருக்கிறார். விளையாட்டின் முடிவில், என்னை மணந்து கொள்ளச் சம்மதமா? என்று கேட்கும் வகையில் அமைய வேண்டும் என்று இமெயில் வாயிலாக கோரியிருந்தார். டொட்ஸ் குழுவும் இதற்கு ஒப்புக்கொண்டு சிறப்பு டொட்ஸ் விளையாட்டை உருவாக்கிக் கொடுத்தது.



ஷானும் காதலியை இரட்டை ஆச்சரியத்தில் ஆழ்த்தப்போகும் உற்சாகத்தோடு அந்த விளையாட்டை கேசியிடம் ஆடக் கொடுத்திருக்கிறார். கேசி காத்திருக்கும் ஆச்சரியம் பற்றித் தெரியாமல் டொட்ஸ் கேம் ஆடும் ஆர்வத்தோடு அதை விளையாட ஆரம்பித்தார். ஆட்டத்தின் இறுதிக் கட்டத்துக்கு வந்ததும் காதல் வாசகம் வர அவருக்கே ஆனந்த அதிர்ச்சி. அந்த நிமிடம் பார்த்து ஷான் அவர் முன் மண்டியிட்டு தனது காதலைச் சொல்ல இன்னும் அசந்து போயிருக்கிறார். இப்படித்தான் ஷான் காதலைச் சொன்னார்:

http://www.youtube.com/user/weplaydots?feature=watch

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரும்புக்கடை

## கதைமட்டுமே, வேறொன்றுமில்லை

ஜெரா

தாடி அவருக்குக் கொஞ்சமும் அழகில்லை. தூரத் தூர முளைத்த நெல்லுப் போல முகம் முழுதும் பரந்திருக்கிறது. ஒரு முடி நீளமாகவும், இன்னொரு முடி சுருண்டு கட்டையாகவும் அவரின் முகத்தை இருள்மயப் படுத்திக் கொண்டிருக்கிறன. துயரத்தின் இறுதி விளம்பரமாக அவரின் முகம் தான் இருக்கக்கூடும் எனப்பார்ப்பவர்கள் நினைத்துக்கொள்வர். அந்த முகத்தை பேருந்து யன்னல் வழியே தொங்கப் போட்டிருக்கிறார். வெறித்துப் பார்க்க ஏதுமில்லாவிட்டாலும் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

ஓயாமல் ரத்தம் எடுக்கும் பழக்கம் என்னுடையது. அதாவது வயது வேறுபாடு, பால் வேறுபாடு கடந்து யார் அகப்பட்டாலும் கதைத்து, வதைத்து உயிரெடுப்பது எனது பிறவிக்குணம். இதனால் நண்பர்கள் மத்தியில் இரத்த வங்கி என்றே பெயரெடுத்திருந்தேன். எனக்குப் பக்கத்தில் அமர்ந்திருக்கும் அவரை மட்டும் விட்டுவிடுவேனா என்ன? புதுக்குடியிருப்பில் ஏறியநான், பியுஸ் கராச்சடி, பழைய காவல்துறை பொயின்டடி, கைவேலி கணேச வித்தியாலயத்தடி, பெரியகைவேலி ஏத்தம், மஞ்சள் பாலத்தடி, தேவிபுரம் சந்தியடி எனப் பல தடவை கதை கொடுக்க முயற்சித்தேன்.

அம்மாவிடம் அகப்பைக் கம்பால் அடி வாங்கிய அக்காபோல உம்மென்று இருந்தார். "சரியான புழுதி என்ன?" முதல் கேள்வியைத் தொம்மென்று விழுத்தினேன். "..ம்" பதில் சற்றுத் தாமதமாக விழுந்தது. அடுத்து என்ன கேட்கலாம் என்று யோசிக்கையில் சுதந்திரபுரம் காளி கோயிலடி வந்தது. நெஞ்சில் கை வைத்துக் கும்பிட்டார். "கோயில் முதல விட நல்லா உள்ளுக்குப் போயிட்டுது என்ன?" இரண்டாவது கேள்வியை நேரம் பார்த்து அடித்தேன். "ஓம் தம்பி! முதல் இந்த இடத்தில வாகனத்தில இருந்துகொண்டே, சிரட்டையில தொங்குகிற திருநீறை அள்ளியெடுப்பம். இப்ப நடந்து போனாலும் முடியாது.." என்று முடித்தார்.

நான் எதிர்பார்த்ததைவிட அதிக பதிலைத் தந்துவிட்டார். இது வெற்றி எனக்கு! அதுவும் நினைவைக் கிளறியிருக்கிறார். அப்படி நினைவைக் கிளறிக் கதைக்கத் தொடங்கும் ஒருவரிடமிருந்து, அவர் எவ்வளவு பெரிய உம்மாண்டியாக இருந்தாலும், மணிரத்தினமாக இருந்தாலும் முழுக் கதையையும் கறக்க முடியும் என்பது எனது அனுபவம். கதை கேட்கும் திறனிலும், அவரின் கதைக்கு ஆமாபோடும் வேகத்திலும், எடுத்துக்கொடுக்கும் சந்தரப்பங்களிலுமே கதையின் நீள, அகலம் தங்கியிருக்கிறது.

அந்த வசனத்தைச் சொல்லி முடிக்க முன் சுதந்திரபுரம் மாவீரர் விளையாட்டு மைதானம் வந்துவிட்டது. "..இதுக்குள்ள என்ர வாகனமும் நிக்கும் தம்பி.." என்றபடி என்னைப் பாரக்கிறார். கவலையை வரவழைத்துக் கொண்டு அவரைப் பார்க்கி றேன். தாடியடர்ந்த முகத்தில் கவலை யின் ரேகைகள் வலுவாக விழுகின்றன.

"ஆமிக்காரரிட்ட கதைச்சிருந்தா தந்திருப்பாங்களே! குடுத்தவங்கள் தானே?" உடையார்கட்டைக் கடக்கும் போது தாமதமான கேள்வியைத் தொடங்கினேன்.

"ஓம்! போன வருசம் அது நடந்தது. முள்ளிவாய்க்கால் வித்தன்ல குவிச்சி விட்டிருந்த வாகனங்கள எடுக்க, உரிமையாளர்களை முல்லைத்தீவுக் கச்சேரிக்கு ஆமிக்காரர் வரச்சொன்னவங்கள். முல்லைத்தீவுக்கச்சேரியில நோட்டீஸும் ஒட்டியிருந்தது. நானும், என்ர மச்சான் பெடியனும் போனம். அவனின்ர வாகனம் நிண்டது. என்ர வாகனத்தைக் காணயில்ல. அவனின்ர கன்ரர் நல்ல நிலையிலதான் நிண்டது. அடுத்த நாள் ஆவணங்களோட வந்து எடுத்துக் கொண்டுபோகச் சொன்னாங்கள். அவனும், நானும் சொன்ன மாதிரியே போனம். ஆனா இரவோட இரவா முழு வாகனங்களையும் யாரோ கொழுத்திப் போட்டாங்கள். எல்லாம் எரிஞ்சி இரும்பா நிண்டது. கொண்டுபோன காசுக்கு கள்ளியடிகொப்ரேசனில நல்லாகள்ளை மண்டிப்போட்டு வீட்டபோனம்."

மூங்கிலாறு, மட்டு. அம்பாறை மாவீரர் மண்டபத்தடியில் அந்தக் கதை முடிந்தது. "அப்ப... உங்கட வாகனத்த தேடேல்லயோ?" "தேடினன். பச்சப் பெயின்ற் அடிச்சிப் போட்டு, ஆமிக் காரர் ஓடிக் கொண்டு திரியிறாங் [illegible] பிடிச்சாலும், அவங்களிட்ட நான் போய்கேக்கவேஏலும்? என்ர வாகனம் தானா நம்பரில நிண்டது. இயக்கமெண்டு உள்ள தூக்கிப் போட்டிருவாங்கள்."

(மன்னிச்சிக்கொள்ளுங்க. தானா நம்பர் என்றால் என்ன என்பது குறித்து நான் சொல்கிறேன். சில வருடங்களுக்கு முன்னர் வடக்கின் சில மாவட்டங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. அங்கு புலிகள் தமது நிர்வாகத்தை அல்லது அங்கீகரிக்கப்படாத அரச கட்டமைப்பை நடத்தினார்கள். அது தமிழீழ அரசு எனப்பட்டது. அந்த அரசின் முதல் எழுத்தைக் குறித்து அவர்களின் கட்டுப்பாட்டிலிருக்கும் மக்களுக்குச் சொந்தமான வாகனங்களில் *த-0000* என இலக்கம் பொறிக்கப்பட்டது. இதனைத் தமிழீழ போக்குவரத்துக் கழகம் என்ற அமைச்சு மாதிரியான பிரிவு செய்தது. அதற்குக் குட்டியண்ணை என்பவர் பொறுப்பாளராக இருந்தார் என்பது குட்டித் தகவல்) இனி கதைக்குப் போகலாம்.

"இயக்கத்திட்டையா வாகனம் வாங்கினீங்கள்?" என்ற கேள்வியைக் கேட்பேன் என்று எதிர்பார்த்தார். என்னிடமும் அவரிடம் கேட்பதற்கான கேள்விகளுக்குப்பஞ்சமிருக்கவில்லை.

"இல்லை தம்பி. எங்கட பரம்பரைத் தொழில் கமம்தான். தண்ணிமுறிப்பில, கள்ளியடியில வயல் காணியளில விளைச்சல் இருந்தது. 2000இல கலியாணம் கட்டினன். அதுக்குப் பிறகு கமத்தில விருப்பமிருக்கேல்ல. சமாதானமும் வந்தது. பிரண்ட்ஸ் சொன்னாங்கள், 3 லச்சத்துக்கெல்லாம் நல்ல நிலையில வாகனம் நிக்குதாமெண்டு. பள்ளமடுவிலையும், ஓமந்தையிலையும், வவுனியாவிலையும் வாங்கலாம் எண்டும், வாங்கினவங்கள் சொன்னாங்கள். ஆசை ஆரைத்தான் விட்டது.

மனிசிட்ட சொன்னன். அவள் எனக்கு மேல ஆசைப்பட்டாள். மூத்தவன் பிறந்த அதிர்ஷ்டம் வேலைசெய்யத் தொடங்கீற்று எண்டும் நக்கலடிச்சாள். சீமெந்து மலிவெண்டபடியா எங்கட ஏரியா சனங்களெல்லாம் கல் வீடுகட்டுறதும், மதில் வளவு கட்டுறதுமா இருந்ததுகள் அந்தக் காலத்தில. அதுகளப் பாத்துப்பாத்து அவளுக்கு என்னில பெரிய எரிச்சல். நாங்கள் மட்டும் இப்பிடி எத்தின நாளைக்கு ஓட்டை வீட்டுல சீவிக்கிறது என்டது அடிக்கடி பெருமூச்சு விடுறவளுக்கு இதக் கேட்டாத் தேனாத்தானே இனிக்கும். அவங்களுக்கு வெளிநாட்டுக் காசப்பா.. என்ற வார்த்தைகளில தான் நானும் இவ்வளவு காலமாகச் சமாளிச்சு வந்தனான். ஆனா எனக்கு இப்ப கிடைச்சிருந்த ஐடியா நல்லதாப்பட்டது. அதாவது வயல் காணியவித்தால் 3லட்சம் தேறும். மிச்சத்துக்கு மனிசிற்ற கிடக்கிற சீதன நகையள அடகு வச்சால் வாகனத்த எடுத்துப் போடலாம். ஒரு மாதிரி 2004ஆம் ஆண்டில ஒரு இரவு விடியிறதுக்கு முதல் மனிசீற்ற இந்த ஐடியாவச் சொல்லிப் போட்டன். முதலில நகை தரமாட்டன் என்டுட்டாள். ஹயர் ஓடலாம் அப்பா, இப்ப எவ்வளவு என். ஜீ. ஓ. வந்திருக்கு. நல்ல காசு குடுக்கிறாங்கள், 2 மாசம் ஓடினா முழு நகையளையும் திருப்பி எடுத்துப் போடலாம். தனி ஆக்களிட்ட வச்சாத்தான் பயப்பிடவேணும். இயக்கத்தின்ர தமிழரசி தங்கநகை அடைவுக் கடயில வச்சாப் பிரச்சினையில்ல. எப்பவும் மீட்டுக் கொள்ளலாம் எண்டு அவளச்சமாதானப்படுத்திட்டன். அவள் சம்மதம். சரியாக அன்றிலிருந்து ஒரு மாதத்திற்குள் 3 லட்சம் ரெடியாக்கிட்டன். வீட்டுக் காணியும், கொஞ்ச உடுப்பும், மனிசியின்ர தோடும், பெடியனின்ற மோதிரம் ரெண்டும், அரணாக் கொடியும்தான் அப்பமிச்சமாயிருந்தது. எப்பிடியும் மீட்டிடலாம் என்ட நம்பிக்கையும் இருந்தது."

கொஞ்சம் நிறுத்தி, 10 ரூபா பொலித்தீன் பையுக்குள் கையை நுழைத்து, கொக்கோகோலா போத்தலில் நிரப்பபட்டருந்த தண்ணீரை உறிஞ்சினார்.

என்ன கொடுமைடா இது, இவ்வளவு பெரிய கதையா? என்ற மனநிலைக்கு நான் வந்திருந்தேன். "உதயனில் பக்கம் வடிவமைக்கவோ, வாசிக்கவோ மிகவும் கஷ்ரப்படப் போகிறார்களே என்ற எண்ணம் எனக்குள் கேட்டது. எப்பிடி காய்வெட்டலாம். இந்த நேரம் பார்த்து ஒரு கிழடுகட்டயள்கூட பஸ்ஸில ஏறுதுகள் இல்லயே. சீற் குடுக்கிறசாட்டில எஸ்கேப் ஆயிடலாம்" எனக்குள் புலம்பிக் கொண்டிருக்கையில், "என்ன தம்பி கனக்க யோசிக்கிறியள் போல. மிகுதி அடுத்த வாரம் எண்டு போட்டு முடிச்சிக் கொள்ளுங்கோ. இது பெரிய கதையப்பன். எப்பிடியும் அடுத்த கிழமை முடிச்சிடுவன்."

"பேப்பரில வருமெண்டது உங்களுக்கு எப்பிடித் தெரியும் அண்ண?"

அடுத்த கிழமை மட்டும் தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 05 01 2014 ஞாயிற்றுக்கிழமை



அசை போட ஒரு விடயம் 107

# புதுவருடத்துக்கான தீர்மானங்கள்

ரம்யன்

புதுவருடம் பிறந்து விட்டது. பொதுவாகபாடசாலைமாண வர்கள், தொழில் புரியும் இளம் வயதினர், ஏன் வயதான பெரியோர்கள்கூட புதுவருடத்தில்இன்ன இன்னதைச்செய்யவேண்டும், இன்னஇன்னதைச் செய்யக் கூடாது என்று தீர்மானங்கள் எடுப்பதுண்டு. அவ்வாறு என்னென்னவற்றைப் புதிதாக ஆரம்பிக்கலாம் என்பதைப் பற்றி சிறிது சிந்தித்துப் பார்க்கலாம் நாமும்.

**மாணவர்கள்**

வீட்டில் பெற்றோருக்கு உதவுவதில் அக்கறை இல்லாதவர்கள், இனி மேலாவது சில வீட்டு வேலைகளையும் பொறுப்பெடுத்துக் கொண்டு அம்மா, அப்பாவுக்கு உதவலாம். உ+ம்: வீட்டை சுத்தம் செய்வது, வீட்டுத் தோட்டத்துக்கு நீர் இறைப்பது, வளர்ப்பு மிருகங்களுக்கு உணவூட்டுவது போன்றவை. படிப்பு நேரம் தவிர்ந்து பொழுதுபோக்காக குசினியில் பாத்திரங்கள் கழுவுவது போன்றவற்றிலும் உதவ முடியும்.

கல்லூரியில் பாடங்களில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள தீர்மானித்தல். பொதுவாக பாடசாலையில் இருந்து திரும்பிய பின் வீட்டு வேலைகளைக் கட்டாயம் செய்து முடிப்பது. பாடக் குறிப்புக்களை மீட்டல் செய்வது போன்றவை முக்கியம்.

ஏதாவது ஒரு விளையாட்டைத் தெரிவு செய்து அதில் முன்னேறுவதற்கு முடிவு செய்யலாம். அதற்கான பயிற்சிகளைச் செய்தல். அத்துடன் அனுபவசாலிகளின் ஆலோசனைகளைப் பெறலாம். மூத்தவர்களை அவதானித்துப் பின்பற்றலாம்.

விளையாட்டுக்கள் நிச்சயமாக படிப்புக்கு அடுத்த படியாகவே இருக்க வேண்டும். பாடசாலைவிட்ட பின் மாலை நேரங்களில் கல்லூரியில் உள்ள அல்லது முக்கிய நூலகம் ஒன்றில் சேர்ந்து வாசிப்பதற்குத் தீர்மானிக்கலாம். முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் நூல்களைத் தேடி வாசிப்பது எதிர்காலத்துக்கு உதவும், அறிவு விரிவடையவும் செய்யும்.

நல்ல நண்பர்களைக் கண்டு பிடிப்பதும் சேர்ந்து பழகுவதும் நல்ல தீர்மானமாக அமையும்.

மற்றவர்களை அவசியமற்று கேலி கிண்டல் செய்வதில்லை என்று தீர்மானிக்கலாம். பெரியோரை மதிப்பதற்கும் அவர்களிடம் ஆலோசனை பெறுவதற்கும் புதுவருடத்தில் ஒரு முடிவு செய்யலாம்.

உணவில் அக்கறை கொண்டு உடலுக்கு ஆரோக்கியமானவற்றையே உண்பது என்று தீர்மானிப்பது நல்ல பயன்தரும். உடலைப் பாதிக்கும், கெடுதல் செய்யும் என்று காண்பவற்றை தவிர்க்க வேண்டும். குறிப்பாக வளர்ந்த பின்னர் சிறியவர்களுக்கு உதாரணமாக வாழ வேண்டும். உலகம் பழிக்கின்ற உடலுக்கு ஆரோக்கியமற்ற புகைத்தல், மது அருந்துதல் போன்ற தீய பழக்கங்களை அறவே கற்றுகொள்ளாமல் விடுவது என்றும் தீர்மானிக்கலாம்.

புதுவருடத்தில் சமூக சேவை ஏதாவது ஒன்றில் பயன்படும் வகையில் பங்களிப்புச் செய்வது என்றும் தீர்மானிக்கலாம். அந்த வகையில் ஒரு முதியோர் இல்லத்துக்குச் சென்று அங்கே அவர்களுக்கு ஏதும் உதவி தேவையெனில், செய்து கொடுத்து மகிழலாம். சிறியோர் மற்றும் அநாதை இல்ல சிறுவர்களுக்காக உதவலாம். நிதி சேகரிப்பு, நூல்கள், நிதி, உடைகள் வழங்கலாம்.

இவை சில ஆலோசனைகள் மட்டும்தான். இவைகளை வைத்துக் கொண்டு ஆர்வமுள்ளவர்கள் திட்டங்கள் தீட்டி அவைகளை ஒழுங்காகச் செயற்படுத்தினால் பெரும் பயன்கள் ஏற்படுவதைக் காணலாம்.



# கடந்த வருடத்தின் முக்கிய நிகழ்வுகள்



### விடுதலை வீரனின் மறைவு

95 வயதில் காலமானார் விடுதலை வீரர், ஆபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலா, தென்னாபிரிக்காவின் முதல் ஜனாதிபதியாகப் பதவி வகிப்பதற்கு முன்னர் 27 ஆண்டுகள் சிறையில் வாடியவர். தென்னாபிரிக்க கிழக்கு முனையிலுள்ள குணு என்னும் தமது சொந்த ஊரில் அரச மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டார். உலக நாடுகள் பலவற்றின் உயர் தலைவர்கள் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

தென்னாபிரிக்காவின் முதல் ஜனாதிபதியாக பதவி வகிப்பதற்கு முன்னர் 27 ஆண்டுகள் சிறையில் வாடியவர் மண்டேலா.

### இளம் வீராங்கனை மலாலா பாடசாலை திரும்பினார்

பாகிஸ்தானின் பெண் கல்விக்கு முன்னின்று குரல் எழுப்பி தலிபான்களால் தலையில் சுடப்பட்டு மரணப் படுக்கையிலிருந்து மீண்ட இளம்பெண் 15 வயதான மலாலா யூசூப்சாயி நீண்ட நாள்களுக்குப் பின் தமது படிப்பை தொடர பாடசாலையில் மீண்டும் சேர்ந்துள்ளார். பாகிஸ்தானில் பாடசாலையில் இருந்து திரும்புகையில் அவர் தலிபான்களால் சுடப்பட்டார். 9 ஆம் ஆண்டிலிருந்து அவர் படிப்பைத் தொடர்கிறார்.



### புதிய போப் தெரிவு

புதிய போப்பாண்டவராக ஆர்ஜென்ரீனாவின் கர்தினால் ஜோர்ஜ் மரியோ பேர்கொக்லியோ என்பவர் வத்திக்கானில் தெரிவு செய்யப்பட்டார். அவர் இனிமேல் பிரான்சிஸ் என்று அறியப்படுவார். வயது -76 அவருக்கு. புவனொஸ் அயர்ஸ் என்ற இடத்தைச் சேர்ந்தவரான அவர் இலத்தீன் அமெரிக்க நாடொன்றிலிருந்து தெரிவாகியுள்ள முதல் போப்பாண்டவராவார்.

### செவ்வாயில் நீர்ப்படலம்

செவ்வாய்க் கிரகத்தில் ஆய்வு நடத்துவதற்காக அனுப்பப்பட்டுள்ள 'கியூரியோசிட்டி' விண்கலம் அந்தக் கிரகத்தில் தண்ணீர் இருப்பதற்கான தடயங்களைக் கண்டறிந்து தெரிவித்துள்ளது. பாறையொன்றைக் குடைந்து அதற்குள் களிமண், கனியம் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளது இந்தக் கலம். தண்ணீர் இருப்பதற்கான தடயமாக இதனை விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். முன்னொரு காலத்தில் செவ்வாயில் உயிரினம் வாழ்ந்துள்ளமைக்கான தடயமாகவும் இது கருதப்படுகின்றது.

### புதிய இளவரசர் பிறந்தார்



பிரிட்டன் இளவரசி கேம் பிறிஜ் சீமாட்டி ஆண்மகவு ஒன்றைப் பெற்றெடுத்தார். ஜோஜ் அலெக்சாண்டர் லுயிஸ் என்று குழந்தைக்குப் பெயரிடப்பட்டது. பிரிட்டன் முடிக்குரிய இளவரசர் என்ற வரிசையில் இந்தக் குழந்தை இளவரசர் ஹரிக்கு முன் நிலையில் இருப்பார். அவர் இப்போது முடிக்குரிய மூன்றாவது நிலையில் இருக்கிறார்.

### பெரிய விண்கல் பூமியைக் கடந்தது


அநேகமாக 2.7 கிலோமீற்றர் அகலமுள்ள பெரிய விண் எரிகல் ஒன்று கடந்த வருடம் நமது பூமியை வேகமாகக் கடந்து சென்றது. 1998 ஆம் ஆண்டளவில் OZ2 என்று பெயரிடப்பட்டிருந்த இந்த எரிகல்லுக்குரிய சந்திரனும் இருக்கிறதாம். இந்தக் கல் பூமியில் மோதும் சாத்தியம் இருக்கவில்லையென்று விஞ்ஞானிகள் கருதினார்கள். டைனோசர்களை அழித்தொழித்ததாகக் கருதப்படும் விண் எரிகல்லின் அளவுக்கு இது பெரிதாக இருந்ததாக அவர்கள் கூறுகிறார்கள்.

### 'கொமன்வெல்த்' மாநாடு

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு கொழும்பில் நடைபெற்றது. கொழும்பில் மாநாட்டுக்கு வந்த தலைவர்களில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் யாழ்ப்பாணம் வந்து தமிழ் மக்களைச் சந்தித்துச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலின முரண்பாடுகள் குடும்பம் என்கிற நிறுவன அலகின் மூலம் திணிக்கப்படுகின்றது.பால் என்பது உயிரியல் அடிப்படையிலும், பாலினம் என்பது பண் பாட்டு நிலைமையின் அடிப் புடையிலும் கட்டமைக்கப்படுவதாகும். என்பது பிறப்பு அல்ல.





# பாலினப் புரிந்துணர்வும் பெண்ணின் தளமும்

ஆண் மட்டும் உள்ள ஒரு சமூகத்தைக் கற்பனை பண்ணிப் பார்க்கையில் சமுகத்தில். பெண் அமர்த்தப் பட்டுள்ள இடமும். பெண் மட்டுமே உள்ள சமூகத்தைக் கற்பனை பண்ணிப் பார்க்கையில் ஆணின் சமூக இடமும் தெளிவாகக் கூடியவாறு இருக்கும்.

நிலா

உயிரியல் ரீதியாக இப் பிரபஞ்சத்தில் ஆண் பெண். இடை நிலைப்பாலினர் என மூவகைப் பாலினம் மனிதர்கள் எனும் இனப்பிரிவில் காணப்படுகின்றது. இனம் என்பது. ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் பொதுவான பண்பாட்டுடன் வாழக்கூடிய பொது இயல்புடையவை

இந்த மூவகையில் ஆண் . பெண் எனும் இரண்டு பாலினங்கள் மனித உலகின் இனவிருத்திக்கும்.அவற்றின் நிலவுகைக்கும் ஆதாரமாயுள்ளதால் அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. இவை இரண்டும் இயல்பாகவே ஒன்றை ஒன்று ஆக்கிரமிக்கவும். ஒன்றை ஒன்று ஆதரிக்கவும் வார்ப்புப் பெற்றவை. ஆண் மட்டும் உள்ள ஒரு சமூகத்தைக் கற்பனை பண்ணிப் பார்க்கையில் சமுகத்தில். பெண் அமர்த்தப்பட்டுள்ள இடமும். பெண் மட்டுமே உள்ள சமூகத்தைக் கற்பனை பண்ணிப் பார்க்கையில் ஆணின் சமூக இடமும் தெளிவாகக் கூடியவாறு இருக்கும்.

இதில் மனிதன் வகுத்த பண்பாடு என்பது ஆண் -பெண் என்கிற இணைகளின் இயற்கைக்கும் , சமூகத்துக்கும் இடைப்பட்ட மாற்றுமையாகும். அல்லது பிறிதொரு கட்டமைப்பு ஆகும். பண்பாடு என்றால் என்ன என்று பார்த்தோமாகில். மக்கள் கூட்டம் கணக் குழுவில் இருந்து இனக்குழுவாக மாறுவதற்கு எடுக்கும் இடை நிலையின் அடிப்படையில் அதன் அடையாளமாக இன்னும் உள்ளது. பண்பாட்டை நாங்கள் இரண்டாக வகுக்கலாம்.

ஒன்று. பண்பாட்டில் உள்ள பழக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. பண்புகளின் மரபு சார்ந்தது. உதாரணமாக வழமைகள். பழக்கங்கள் போன்றவை அடங்கும்.இதுவெவ்வொரு இனக் குழுமத்துக்கும் மாறுபடும்.

இரண்டு. பண்பாட்டின் தூய நிலை. பகுத்து ஆராய்ந்து பரீட்சார்த்த ரீதியாகவோ, யதார்த்தமாகவோ சமூகத்துக்குள் உள்வாங்கிக் கொள்வது. இது இயற்கையை பண்பாட்டின் மூலம் வரையறுக்கத் தொடங்குகையில் ஏற்படுகின்றது. சாத்தியப்பாடுகளுக்கும். முரண் சாத்தியங்களுக்கும் ஏதுவாக கொள்கைகளை வகுத்தல் இதில் அடங்கும். பண்பாடு என்பது. இனம் சார்ந்த தொன்றாக எதிரெதிர்க் குழுமங்களால் அர்த்தப்படுத்தப்படுகிறது.

அதனாலேயே அது குழுமத்துக்குக் குழுமம் வேறுபடுகின்றது. குழந்தைகள் பிறக்கும் போதே அவர்களுடைய மரபணுக்கள் இனமாதலுக்காகத் தீர்மானிக்கப். பட்டு விடுகின்றன. தவிர பாலினராக வகைப்படுத்தப்பட்ட பண்பாட்டு ரீதியின் ஏற்றத்தாழ்வுகளுக்கு தயார்ப்படுத்தப்பட்ட குழந்தைகள் பிறப்பதில்லை. பண்பாட்டுத் தாழ்வுச் சிக்கல்கள் . ஒரு குழந்தை பிறக்கும் போதே ஆரம்பமாகின்றது.குழந்தையை ஆண். பெண் என்று குறித்துப் பிரித்துப் பேசுவது. பாலுக்கு ஏற்றாற் போல் பெயர் வைத்தல். உடைத் தெரிவுகள். வளர்ப்பு முரண்கள். விளையாட்டுப் பொருள்களைத் தெரிந்து கொடுத்தல். அவர்களை சமூகத்துக்குக் கட்டமைத்தல் என்பவற்றிலே பாலின முரண்பாடுகள் குடும்பம் என்கிற நிறுவன அலகின் மூலம் திணிக்கப்படுகின்றது. ஆக பால் என்பது உயிரியல் அடிப்படையிலும். பாலினம் என்பது பண் பாட்டு நிலைமையின் அடிப்படையிலும் கட்டமைக்கப்படுவதாகும். அது ஒரு செயலூக்கமுள்ள நிகழ்வு. கோணல்கள் பற்றிய கோட்பாட்டில் இது தெளிவாக்கப்பட்டுள்ளது.

உயிரியல் ரீதியாக ஒருவருக்கொருவர் அவரவர் தேவைக்கும். நிலவுகைக்கும் ஏற்ப உட்கட்டமைப்பையும். உயிரலகுகளையும் கொண்டவராயின் ஆண். பெண் இருபாலாருக்குமிடையில் ஏன் பேதம்?

*சமூகம் இறுக்கி வைத்திருக்கும் சில விடைகள்.*

1.எல்லா ஆண்களும், எல்லாப் பெண்களும்சுதந்திரமாகத் தனித்து. எதையும் செய்ய முடியாத மன நிலையில் இருப்பதாக ஒருவருக்கொருவர் கற்பனை பண்ணிக் கொண்டுள்ளமை.

2.குடும்பம் போன்ற ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவன அமைப்பு முறைமை சிதைந்து போய் விடும் எனும் பய மனப்பான்மை.

3. கட்டற்ற பாலியல் தேவைகள் மூலம் சமூகம் வன்முறை மிகுந்ததாக உருவாக்கம் பெற்றுவிடும் எனும் நம்பிக்கை.

4.பாலியல் பற்றிய சிந்தனை தவிர ஆண், பெண் பாலினருக்கு வேறு தேவைகள் இல்லை எனும் குருட்டுத்தனமான நம்பிக்கை.

இதுவே அடிப்படை பண்பாட்டுப் பிரிவினை ஏற்றத்தாழ்வுக்கு காரணமாகிறது.

பொதுவாக நாம் வட்டம் போட்டுக் காட்டும் தேவையின் கேள்வி என்னவென்றால் நாம் எதனை ஆதரித்துப் பேசுகின்றோமோ அந்தக் கணமே அதற்கு எதிரான கோஷத்தை அல்லது எதிரான குழுமத்தை மறைமுகமாக உருவாக்குபவர்களாக ஆகி விடுகிறோம். ஆதரித்தல் என்பது எதிர்த்தலுக்கான வலுவைக் கூட்டும் செயலை உருவாக்கி விடுகிறது. ஆக இன்னொரு அடக்கு முறை என்பது தீர்வாக இருக்க முடியாது.

# பாதுகாப்பின்மையும் அதன் விளைவுகளும்



மகதி

இன்றும் நம ஊர்களில் 50 வயது அம்மாவும் 18 வயது அக்காவும் துணைக்கு 8 வயது பையனை அழைத்துச் செல்வது என்பது பொதுவான விடயமாக உள்ளது. இரவில் பெண்ணால் தனியாக வெளியே செல்ல முடிவதில்லை. பகல் நேரங்களிலும் பெண்கள் கூட்ட நெருக்கடி இல்லாத இடங்களுக்கு தனியாக செல்ல அச்சம் கொண்ட நிலையில் தான் உள்ளார்கள். இதனால் பெண்கள் ஆண்களை சார்ந்து வாழும் நிலைக்கு இன்றும் தள்ளப்படுகிறார்கள். ஒன்று வெளி விவகாரங்களை கவனிக்க செல்லும் பொழுது ஓர் ஆண் துணையை நாடுகிறார்கள் அல்லது எதற்கு வம்பு என்று வீட்டிலேயே முடங்கி விடுகிறார்கள். இதற்கு முக்கிய காரணம் நமது கலாசாரப் போர்வை எனச் சொல்ல வேண்டும். வயதுக்கு வந்த பெண் ஓர் ஆணுடன் சரளமாக பேசிப் பழக நமது சமுதாயம் அனுமதிப்பதில்லை. அதையும் மீறி நெருங்கிப் பழகி விட்டால் அவளுக்கு கெட்டுப் போனவள் என்ற முத்திரை குத்தப்படுகிறது. அந்த முத்திரையுடன் அவள் வாழ்நாள் முழுவதும் அல்லல் பட வேண்டும். இந்த அவதூறில் இருந்து தம் பெண்களை பாதுகாத்துக் கொள்வதற்காக பெரும்பாலான பெற்றோர்கள் பள்ளி, கல்லூரி அல்லாமல் வேறு எங்கும் தம் பெண்களைத் தனியே செல்ல அனுமதிப்பதில்லை. இல்லை என்று மறுப்பவர்கள், எத்தனை பருவப் பெண்கள் வங்கிக்குச் சென்று [illegible] தொலைபேசி மற்றும் மின்சார கட்ட [illegible] வெளியில் சென்று [illegible] கொள்வது, வீட்டில் பழுதடைந்த பொருள்களைக் கடைக்கு எடுத்துச் சென்று சரி செய்து வுருவது போன்ற அன்றாட அடிப்படை வேலைகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள் என எண்ணிப்பார்க்க வேண்டும். இவை அனைத்தும் வீட்டில் பருவம் வந்த ஆண்பிள்ளை இருந்தால் அவனிடம் ஒப்படைக்கப்படும் அன்றாட வேலைகள்.

இதனால் இருதலைக் கொள்ளியாய் பெண் பாதிக்கப்படுகிறாள். ஒருபுறம் அவளது சுதந்திரம் பறிக்கப் படுகிறது. மறுபுறம், இவ்வாறு தொடர்ந்து பல ஆண்டுகளாக பெண் கட்டுப்பெட்டியாக வளர்க்கப்படுவதால் அவள் தன்னம்பிக்கையை இழக்கிறாள். பருவம் அடைந்து. படித்து முடித்து. திருமணம் முடிந்து. தாயுமாகி. ஒரு குடும்பத்தின் தலைவியாய் தலை நிமிர்ந்து நிற்கும் பொழுது. பருவத்தில் அவளுக்கு மறுக்கப்பட்ட சுதந்திர வாசல் ஒருவேளை திறக்கப்பட்டாலும். சுய சந்தேகங்களாலும். தன்னம்பிக்கை இன்மையினாலும் தொழுவில் கட்டிய மாடாய்க் கிடக்கிறாள். பல்லாண்டுகளாய் பழகிப் போன பழக்கத்தை அவளால் மாற்ற முடிவதில்லை. மேலும். தான் தாங்கியுள்ள நல்ல குடும்பப் பெண் என்ற பட்டத்தை துறக்கவும் அவள் தயாராய் இல்லை. மிகவும் சிலரே இந்த வேலிகளை விட்டு வெளியே வருகிறார்கள். இவ்வாறு நமது கலாசாரத்தில் சிறு வயதில் இருந்தே பெண் என்பவள் தன்னைச் சுற்றியுள்ள ஆண்களைச் சார்ந்து வாழும்படி வார்க்கப்படுகிறாள். எந்த ஒரு சூழ்நிலையிலும் ஒருவர் மற்றொருவரை வெகு நாள்களாக சார்ந்து வாழும் நிலை ஏற்படும் பொழுது அடக்கு முறை அங்கு வேர்விட்டு விடும். அந்த வேர். நமது கலாசாரத்தில் இன்று வளர்ந்து விருட்சமாக நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதடியூர்
நி.ஹரன்



# வரட்டுக் கௌரவம்

அன்று செவ்வாய்க் கிழமை. சின்னையா வீட்டின் தென்பக்கத்திலே சற்றுத் தூரவுள்ள பிள்ளையார் கோயில் மணி கணீர் கணீர் என அதிகாலை வேளையில் ஊர் முழுக்க தனது ஒலியை பரப்பியது. சின்னையா எழுந்து தனது மகன் சுரேஸுக்கு தேநீர் ஊற்றிக் கொடுத்துவிட்டு காலை உணவு செய்ய ஆயத்தமானான். சின்னையா அவ்வூரில் பிரபலமான விவசாயி என்பதுடன் நன்றாகவும் சமைப்பான். சின்னையாவின் மகன் பிறந்து மூன்று வயதாகும் போதே அவனது மனைவி மீள முடியாத நோயினால் பாதிப்புற்று இறந்து விட்டாள். மனைவி இறந்தவுடன் மறுதிருமணம் செய்து கொள்ளும் இவ்வுலகில் மகனை பார்த்துக் கொள்ளவும் சின்னையாவுக்கு துணையாகவும் வேறு திருமணம் செய்யுமாறு ஊரவர்கள் வற்புறுத்தியும் வேறு திருமணம் செய்தால் சித்தி என்பவள் தனது மகனை ஒதுக்கி விடலாம் என்ற நினைப்பில் மறுமணம் புரியாமல் அன்று தொடக்கம் இன்று வரை தனது மகனுக்காக மகனை தாய் இல்லாத குறை தெரியாமல் பாசத்துடனும் அரவணைப்புடனும் வளர்த்து தற்போது பல்கலைக்கழக இறுதி வருட மாணவனாக உருவாக்கியுள்ளான். சின்னையா. தனது மகன் சுரேஸ் மீது அளவு கடந்த பாசமும் நம்பிக்கையும் வைத்திருந்தான். தனது மகன் வளர்ந்து பெரியாளாகி ஊருக்கும் நாட்டுக்கும் சேவை புரிவான் என் தனது வேதனைகளையும் சோதனைகளையும் தாங்கி ஒரு குறையும் தெரியாத அளவுக்கு மகனை வளர்த்து வந்தான். தனது மகன் மீது எவ்வளவு பாசமும் நம்பிக்கையும் வைத்துள்ளானோ அதே அளவுக்கு உயர்ந்த சாதியில் பிறந்த அவன் தனது சாதி மீதும் ஈடுபாடு கொண்டவன். எவற்றுக்காகவும் தனது சாதி. மதம். கௌரவம். தன்மானம் போன்றவற்றை இழக்கமாட்டான். தன்னைவிட உயர்ந்தவர் யாரும் தனது ஊரில் இல்லை என்ற சுய கௌரவமும் கொண்டவன். அதேபோல் அவனது ஊரில் அவனுக்கு மதிப்பும் கௌரவமும் உண்டு. எதற்கெடுத்தாலும் தனது மகனைப் பற்றியே புகழ்ந்து கதைத்தவாறு இருப்பான். ஊரவர்களும் கதைக்கும் போது சின்னையாவின் மகன் போல இருக்க வேண்டும் என உதாரணம் காட்டியே கதைப்பார்கள். அந்தளவுக்கு அவனும் அவனது மகனும் அவ்வூரில் மதிப்பும் கௌரவமுமாக வாழ்ந்து வந்தார்கள். காலை உணவைச் சமைத்து முடித்த சின்னையா மகனுக்கு உணவை கொடுத்து பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி விட்டு "இனி எனக்கு என்ன?! மகன் படித்து இன்னும் ஒரு வருடத்தில் வெளியே வருவான். நல்ல வேலை செய்து என்னை ஒரு குறையும் இல்லாமல் வைத்திருப்பான். அடுத்த வருடமே என் தங்கச்சியின் மகள் அகல்யாவுக்கு கலியாணம் செய்து கொடுத்திட வேண்டியது தான். அதற்கு பிறகு எனக்கு என்ன குறை" என பெரு மூச்சு விட்டவாறே தனது நாளாந்தக் கடமைக்காக தோட்டத்துக்குச் செல்ல ஆயத்தமானான். ஒரு நாள் என்றாலும் தனது மகனைத் தோட்டத்துக்கு வா என்று கூப்பிட்டதும் இல்லை. மகனை ஏன் தன்னை மாதிரி வெய்யிலில் காய்ந்து கஷ்டப்பட வைக்க வேண்டும் என்ற நினைப்பில் மகனை அழைத்ததும் இல்லை. மகன் தோட்டத்துக்குச் சென்று அப்பாவுக்கு உதவியாக வேலை செய்து கொடுப்பதும் இல்லை. சின்னையா மாட்டு வண்டிலில் மாடுகளைப் பூட்டி மண்வெட்டி, கலப்பை, நுகம் போன்றவற்றை வண்டிலில் வைத்து தோட்டத்துக்குச் சென்று வண்டிலை நிறுத்தி நுகத்தில் மாடுகளைப் பூட்டி கலப்பையை பிடித்தவாறு "ஆ... கைய்.... கைய்"

தான். உழுது கொண்டிருக்கும் போதே அவனது தங்கை மகள் அகல்யா "என்ன மாமா நல்லாய் களைத்து போட்டியள் போல இருக்கு" என்றவாறே வயல் வரம்பினூடாக தேநீர் போத்தலுடன் வந்தாள். அகல்யா பெரிதாக படிக்கவில்லை. கிராமத்து பெண்களுக்கு படிப்பெதற்கு என எட்டாம் வகுப்புடனே படிப்பை நிறுத்தி விட்டார்கள். ஆனால் அடக்க ஒடுக்கமானவள். மாமாவிடமும் சுரேஸுடமும் அளவுக்கதிகமாக பாசம் வைத்துள்ளாள். கடவுளிடம் அதீத நம்பிக்கை வைத்துள்ளவள். ஆடம்பரமில்லாத உடையுடன் எளிமையாக செல்வாள். அழகாக தலைமயிரை வாரி பின்னி விடுவாள். அவளது நடை உடை பாவனை அனைத்தும் சின்னையாவுக்கு மிகவும் பிடித்தமானது. அதனாலேயே தனது மகனுக்கு அவளைச் செய்து வைக்க வேண்டும் என்ற விருப்பம் அவனுக்குள் இழையோடி இருந்தது. எப்போதும் மாமா என்றவாறு சின்னையாவுக்கு பின்னே வருவாள். சுரேஸும் அவள் மீது சகோதரியாக பாசம் வைத்துள்ளான். பல்கலைக் கழகம் செல்லும் போது அகல்யா ஏதாவது கடையில் வாங்கி வரச் சொன்னால் வாங்கி வந்து கொடுப்பான். சின்னையா தேநீர் அருந்திக் கொண்டு இருக்கும் போதே அகல்யா "மாமாசுரேஸ் எங்கே? கம்பஸ் போய்ட்டாரோ?" என மகிழ்ச்சியுடன் கேட்டாள். "ஓமடி அவனை சாப்பாடு கொடுத்து அனுப்பி விட்டுத்தான் நான் இஞ்சை வந்தனான்" என சின்னையா மருமகளைப் பார்த்து சொன்னான். மீண்டும் மீண்டும் சுரேஸைப் பற்றியே கேட்டவாறு இருந்தாள். "சுரேஸுக்கு எப்ப மாமா படிப்பு முடியுது?" என ஆவலாய் விசாரித்தாள். சின்னையாவுக்கு அவள் பேசிய பாணி விளங்கி விட்டது.

சிரித்துக் கொண்டே "அடி பிள்ளை எனக்கு விளங்குது. சுத்தி வளைச்சு எங்க வாறாய் எண்டு தெரியும். ஏன் உந்தளவு அவசரம்? உந்த நாட்டுப் பிரச்சினையால் கொஞ்சகாலம் கம்பஸ் பூட்டிக் கிடந்தது. அதனாலை ஒரு வருசத் துக்குகிட்ட பின்னுக்கு போட்டுது. பிரச்சினை ஒண்டும் வராட்டி இந்த வருசத்தோட படிப்பு முடிஞ்சிருக்கும்" என்று கூறினான் சின்னையா. தொடர்ந்து "உன்ர மச்சான் உனக்குத்தானே. அதைப் பற்றி ஒண்டும் யோசியாதே" என்று அகல்யாவுக்கு கூறினான். "போங்க மாமா நீங்க தான் இப்படி சொல்லுறியளே தவிர சுரேஸ் இதைப் பற்றி என்னோட ஒண்டும் கதைக்கிறதே இல்லை. சுரேஸ் எங்க மாமா நான் எங்கை. சுரேஸ் கம்பஸ்ல படிக்கிறார். நான் சும்மாதானே வீட்டில இருக்கிறன். சுரேஸ் என்னைச் செய்ய சம்மதிக்கிறாரோ" என்று அகல்யா தயக்கத்துடன் சொல்லி முடித்தாள். உடனே சின்னையா "என்ர பிள்ளையை பற்றி எனக்கு தெரியும். அவன் என்ர சொல்லை தட்ட மாட்டான்" என்று கூறி அவளை தேற்றினான். அகல்யாவும் மாமாவின் சொல்லை நம்பி சுரேஸ் மேல் ஆசையை வளர்த்துக் கொண்டாள். பல்கலைக்கழகத்தில் படிக்கும் சுரேஸும் அவனது வகுப்பில் படிக்கும் சக மாணவி கலாவும் காதல் வலைக்குள் வீழ்ந்து விட்டனர். பல்கலைக்கழகத்துக்குச் சென்றது முதல் நான்கு வருடங்களாக இருவரும் காதலித்தனர். கலா நகர் புறத்தில் வசிப்பவள். அவளுக்கு தந்தை இல்லை. தாயும் கலாவும்தான் வீட்டில் வசித்து வருகிறார்கள். சுரேஸ் கலா வீட்டுக்கு அடிக்கடி சென்று வருவான். அவளுடைய தாய்க்கு சுரேஸின் நடத்தைகள் பிடித்திருந்தது. அன்று மதியம் சுரேஸும் கலாவும் வழமையாக கதைப்பது போன்று திருமணத்தைப் பற்றியும் கதைத்தார்கள். 'எங்கட படிப்பும் இந்த வருசத்துடன் முடியுது. நாங்கள் எப்ப கலியாணம் செய்யலாம்" என கலா சுரேஸை கேட்டாள். தொடர்ந்து "எங்கட விசயத்தைப் பற்றி இன்னும் நீர் உம்மட அப்பாவை கேட்கவில்லை. உம்மட அப்பாவோ உமக்கு உங்கட சாதியில தான் உம்மை கட்டிக் கொடுக்க விரும்புவார். நானோ உங்கட சாதி இல்லை. அதனால் உம்மட அப்பா......" என இழுத்தாள். உடனே சுரேஸ் "எத்தனை தரம் சொன்னனான் உமக்கு. இப்பிடி சாதி பற்றி கதைக்க வேண்டாம் எண்டு... என்ர அப்பா என்ர விருப்பத்துக்கு எப்பவுமே தடையாக இருக்க மாட்டார். நான் அடுத்த முறை உம்மை சந்திக்கும் போது என்ர அப்பாவுடன் எங்கட விசயத்தைப் பற்றி சொல்லி கல்யாணத் திகதியுடன் தான் சந்திப்பேன். நீ அதைப் பற்றி யோசிக்காதீர்" என கூறி அப்பாவின் சம்மதத்தைப் பெற வீடு நோக்கி சென்றான்.

இதுவரை சுரேஸ் தனது காதல் பற்றி சின்னையாவிடம் எதுவுமே சொன்னது இல்லை. ஆனாலும் தனது விருப்பத்துக்கு தனது அப்பா என்றுமே தடையாக இருக்க மாட்டார் என்று மனதளவில் தைரியப்படுத்திய படியே இரவு உணவை உண்பதற்காக தந்தையுடன் அமர்ந்தான். தந்தையும் இதுவரை தனது தங்கை மகளை சுரேஸுக்கு செய்து கொடுப்பது தொடர்பாக தனது மகனிடம் எதுவும் சொன்னதும் இல்லை. சின்னையா இரவு உணவை தனக்கும் மகனுக்குமாக தட்டில் போட்டு எடுத்து வந்து மகனுக்கு கை கழுவ தண்ணீர் கொடுத்தான். மகனும் தந்தையும் சாப்பிட ஆரம்பித்ததும் சுரேஸ் சிறு பதற்றத்துடன் பேச ஆரம்பித்தான். "அப்பா நான் ஒன்று உங் ஓம் என்று சொல்ல வேணும். இல்லை என்று சொல்ல மாட்டீங்கள் தானே" என அப்பாவை கேட்டான். சின்னையாவோ "மகன் மேல் ஏதும் படிக்கப் போறானோ? அதுக்கு காசு எதும் கேட்கப் போறானோ? என் மகன் மேல படித்தால் எனக்கும் பெருமைதானே" என நினைத்து "நீ என்ன சொன்னாலும் நான் கேட்கத் தானே வேணும். உனக்கு செய்யாமல் வேற யாருக்கு செய்யப் போறன். முதலில் என்ன விசயம் என்று சொல்லு" என்று மகனை ஆவலுடன் கேட்டான். சுரேஸ் "என்ர அப்பா நான் சொல்வதற்கு இல்லை என்று சொல்ல மாட்டார் என்று எனக்குத் தெரியும். எண்டாலும் உங்களுக்கும் தெரியத்தானே வேணும் அப்பா. நான் என்னுடன் கம்பஸில் படிக்கிற கலா என்ற பிள்ளையை விரும்புறன் அப்பா. அதுக்கு அப்பா இல்லை. அம்மா மட்டும்தான். அது உங்களை தன்ர அப்பா போல வைத்திருக்கும் அவையின்ர வீட்டில ஓம் எண்டு சொல்லிட்டினம். நீங்கள் என்னப்பா சொல்லுறீங்கள்?" என்று மிகுந்த ஆவலோடு கேட்டான். இவ்வாறு சுரேஸ் கேட்டதுமே சின்னையாவுக்கு எங்கிருந்து வந்ததோ தெரியவில்லை கோபம். என்ன செய்வது என்றே புரியவில்லை. மகன் மீது வைத்த நம்பிக்கை இழந்து மகனை பேச தொடங்கினான். "உன்னை கம்பஸுக்கு விட்டது படிக்கவோ? இல்ல அங்க வாறவளையள காதலிக்கவோ? ஆர் அந்த பெட்டை? அவள் எப்படியானவளோ? என்ன சாதி, என்ன மதம் எண்டு உனக்கு தெரியுமாடா? என தொடங்கினான். சுரேஸ் சின்னையா இப்படி பேசுவான் என்று நினைத்து இருக்கவில்லை. சிறு தயக்கத்துடன் "அப்பா போன வருசம் என்ர பிறந்தநாளுக்கு எங்கட வீட்டை வந்த பிள்ளை. உங்களுக்கு அதை அண்டைக்கு வந்தவளோ? அவ அண்டைக்கு வந்த விதம் குட்டைப் பாவாடையும் ரீசேட்டும் போட்டுக் கொண்டு தலையையும் காளி மாதிரி விரிச்சு விட்டிட்டு சொண்டுக்கும் சாயம் பூசிக்கொண்டு.... அவள் வேற சாதி என்று அண்டைக்கு சொன்னியே... அவளையா நீ காதலிக்கிறாய்?" என்று மகனை கோபத்துடன் கேட்டான். "ஓமப்பா அவளைத்தான் நான் காதலிக்கிறன். அவள் வேற சாதி எண்டால் உங்களுக்கு என்ன? நான் தானே அவளை கட்டப் போறன்" என்றும் சுரேஸும் தகப்பனுடன் வாதாடினான். சின்னையாவுக்கோ மகனது கதையைக் கேட்க கோபம் அதிகரிக்கிறதே தவிர குறையவில்லை. "அவள் வேற சாதி எண்டு தெரிந்து கொண்டே அதுக்குள்ள இறங்கியிருக்கிறாய். இதுக்கு நான் எப்பவுமே சம்மதிக்கமாட்டன்." என பேசினான். சுரேஸும் சின்னையாவை விடுவதாயில்லை. "உங்கட சாதி உங்களுடனேயே முடியட்டும் அப்பா. என்னைப் பொறுத்த வரை எனக்கு சாதி பற்றி முக்கியம் இல்லை. என்ர மனசுக்கு விரும்பியவளை செய்து சந்தோசமாக வாழ வேண்டும். கலா என் மேல் எவ்வளவோ அன்பு வைச்சிருக்கிறாள்" என்று தந்தையிடம் கூறினான். சின்னையாவோ "என்னடா திருப்பி கதைச்சுக் கொண்டு இருக்கிறாய். கொம்மா செத்தாப்பிறகு உன்னை எந்தளவு கஷ்டப்பட்டு வளர்த்திருப்பன். இவ்வளவு காலமும் உனக்காகத் தானே வேற கலியாணம் செய்யாமல் இருந்தனான். உன்னை கம்பஸுக்கு படிக்க விட்டதுதான் பிழை. கண்டறியாத காதல் எல்லாத்தையும் உனக்கு மறைச்சிட்டுது என்ர தங்கச்சியின்ர மகள் அகல்யாவைத் தான் உனக்கு கட்டித் தருவனே தவிர வேற யாரையும் உனக்குக் கட்டித்தர மாட்டன். அவளுக்கும் உன்னைத்தான் பிடிச்சிருக்கு. அவளுக்கு உன்னை கட்டித்

ஊரவர்களும் கதைக்கும் போது சின்னை யாவின் மகன் போல இருக்க வேண்டும் என உதாரணம் காட்டியே கதைப்பார்கள். அந்தளவுக்கு அவனும் அவனது மகனும் அவ்வூரில் மதிப்பும் கௌரவமுமாக வாழ்ந்து வந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் வசீகரிக்க



**ஒரு நபரின் உள்ளே என்ன நடைபெறுகிறது என்பதை மனிதர்களின் தோல் தெரிவிக்கிறது. முகம் சிவந்திருக்கும் நிலையானது மறுத்துப் பேசுதல், கோபம் அல்லது சங்கட உணர்வோடு இருத்தல் என்பதற்கான அடையாளமாகும்.**

நிலாமகன்

உணர்ச்சி தொடர்பான அறிவை நீங்கள் பயன்படுத்தும்போது, அடுத்தவரின் நடவடிக்கையை உன்னிப்பாகக் கவனிப்பீர்கள். சூழ்நிலை, உடற்தோற்ற அமைவு, இயக்கம், அங்க அசைவு, முகபாவங்கள், தொனி, பேச்சுக்குரலின் தன்மை போன்றவை மூலச் சொற்களில்லாமல் தெரிவிக்கப்படும் தகவல்களை முழு உணர்வோடு கவனிப்பீர்கள். இந்த நடவடிக்கைகள் எல்லாம் பல வகையான செய்திகளைக் குறிப்பாகத் தெரிவிப்பதால், அவற்றை நீங்கள் கண்டுகொண்டவுடன் அதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். (உ-ம்) அறையிலுள்ளவர்கள் எந்தக் குறியீட்டின் மூலம் பணிவு/அதிகாரத்தை வெளிப்படுத்துகிறார்கள், யார் யாரைத் தொடுகிறார்கள், யார் முதலில், கடைசியில் அறைக்குள் நுழைகிறார்கள்?

ஒலியில்லாமல் தொலைக்காட்சி அல்லது திரைப்படத்தை பார்க்கவும். மனிதர்கள் சொற்களில்லாமல் எப்படி இயங்கிக் கருத்துப் பரிமாற்றம் செய்கிறார்கள் என்பதைக் கவனிக்கவும். பணம் வைத்து ஆடும் சீட்டாட்டத்தில் அனுபவசாலியான ஆட்டக்காரர்கள் இந்த வகையில் எதிராளியின் நிலைமையைப் புரிந்து கொள்ள உற்றுக் கவனிப்பார்கள்.

## மேம்பட்ட புலன் செயற்பாடு என்ன நடக்கிறது?

இது வெளிப்படையாகத் தெரியும் நடவடிக்கைகளையும் தாண்டிச் செல்கிறது; வெளிப்படையாகச் சிறிதும் தெரியாத கூறுகளையும் உள்ளடக்கிச் செயற்படுகிறது. மனிதர்கள் எவ்வாறு உணர்கிறார்கள். என்ன நினைக்கிறார்கள் என்பதை இக் கூறுகள் தெரியப்படுத்தக் கூடும். மனிதர்கள் சுவாசிப்பதைக் கவனிக்கவும் ஆழமில்லாத அல்லது ஆழமான மூச்சுக்களை எடுக்கிறார்களா? வேகமாக சுவாசிக்கின்றார்களா அல்லது அமைதியாகச் சுவாசிக்கிறார்களா?

தானாக வெளிப்படுகிற அடையாளங்களை மனிதர்களின் தோல் வெளுப்பது போன்றவற்றைக் குறிப்பாகக் கவனிக்கவும். அந்த நபரின் உள்ளே என்ன நடைபெறுகிறது என்பதை இது தெரிவிக்கிறது. முகம் சிவந்திருக்கும் நிலையானது மறுத்துப் பேசுதல், கோபம் அல்லது சங்க உணர்வோடு இருத்தல் என்பதற்கான அடையாளமாகும். இறுதியாக மக்களின் சக்தியின் அளவு உயர்ந்து, தாழ்ந்து எழும்பிக் கொண்டு குறைந்து கொண்டு இருக்கிறதா என்பதை மதிப்பிடவும். சக்தியின் அளவு மாறுவதற்கான அடையாளங்கள் உடல் தோற்றம், கண் தொடர்பு, கை, கால் களின் இயக்கம் போன்றவை மூலம் வெளிப்படுமாம்.

## சொற்களும் குறியீடுகளும்

உங்கள் சமூக ரடாரில் வெளிப்படுகிற சொற்கள் மற்றும் குறியீடுகளில் உன்னிப்பாகக் கவனம் செலுத்துவதைப் பற்றி இந்தக் கடைசிக் கருவி விவரிக்கிறது. சொற்களும் குறியீடுகளும் பெருமளவுக்கு வெவ்வேறு பொருள்களை நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கின்றன. அப்படியும் நாம் ஒருவர் மற்றொரு வருடன் கருத்துப் பரிமாற்றம் செய்கிறோம் என்பது ஒரு பெரிய அதிசயம்.

இந்தப் பிரச்சினையை வாழ்க்கையோடு தொடர்புடையதாகச் செய்வதற்கு. நீங்கள் மதிப்பு வைத்துப் பாராட்டும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரைப் பற்றி நண்பரிடம் விவரிக்கவும். நீங்கள் எத்தனை சொற்கள் பயன்படுத்துகிறீர்கள் என்பது பொருட்டல்ல.

உங்களது அனுபவத்தை உங்களால் முழுமையாக வெளிப்படுத்த முடியாது. அதனால் உங்கள் நண்பர் நீங்கள் வெளிப்படுத்தும் விதத்தில் இந்த நபரைப் புரிந்து கொள்கிறார். உங்களுக்கு நன்றாகத் தெரிந்த அந்த நபரைப் பற்றி அவர்கள் மனதில் உங்கள் படம் தெளிவற்ற உருவமாகத்தான் இருக்கும்.

ஒற்றைச் சொற்கள் கூட ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு பொருளைத் தரும். நீங்கள் அநீதி பற்றி மிகவும் விருப்பத்தோடு பேசினால் உலக, அளவில் குற்றங்களைத் தடுக்கப் பாடுபடும் அம்னெஸ்டி இன்டர்நேஷனல் அமைப்பைச் சார்ந்தவர் என்று நான் புரிந்துகொள்வேன். உண்மையில் நீங்கள் வறுமையைப் பற்றிப் பேசியிருக்கலாம். அல்லது வளரும் நாடுகளில் வெப்ப நிலை மாறுதலின் தாக்கம் பற்றிக் குறிப்பிட்டிருக்கலாம். மொழி, கொச்சை வழக்கு, பேச் சின் வகைகள், கடுமையான சொற்களைப் பயன்படுத்துதல்/ தவிர்த்தல் அல்லது சிறப்புச் சொற்களைப் (ஒரு துறைக்கே உரியவை) பயன்படுத்துதல் போன்றவற்றால் மக்கள் தங்கள் அதிகாரத்தை, பதவியை எவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள் என்பதைக் கவனிப்பதில் பயிற்சி எடுக்கவும்.

> உங்களால் முடியும் என்று நீங்கள் நினைத்தால் உங்களால் முடியும். உங்களால் முடியாது என்று நீங்கள் நினைத்தால், நீங்கள் சொல்வது சரிதான்!"
>
> *மேரி கே. ஆஷ்.*



# "போய்வா எங்கள் அமாவாசை சூரியனே..."

ஆபிரிக்கா தேசத்தின் கறுப்புச் சிங்கமே
ஒடுக்கப் பட்டோர் வாழ்வின் நம்பிக்கை
நட்சத்திரமே
விடை பெற்றுப் போகும் எங்கள்
நம்பிக்கை ஒளிக்கீற்றே.

போய்வா, வழியனுப்புகிறோம்
ஆனாலும்
எண்ணைக் கொதிப்புக்குள்ளும்
பற்றி எரியும் நெருப்புக்கும் நடுவில்தான்
எங்களின் வாழ்க்கை என்பதை
தேவனிடம் எடுத்து சொல் !

வெள்ளை மாளிகையும் உனக்காய்
தலை குனிந்து மரியாதை செய்யும்
கறுப்பு சரித்தை நீதான் படைத்தாய்
எங்கள் வாழ்வின்
தலை குனிவை அல்ரி மாளிகை
இன்னும் எதிர்பார்ப்பதை நீ அறியமாட்டாயா?

கறுப்பு என்பதை வெறுப்பாக உணர்ந்தவர்
பொறுப்பாக உனது பேச்சை கேட்கும்
வரலாற்று சரிதத்தை வியர்வையாலும்
மனோதிடத்தாலும் படைத்தவனே
எங்கள் குரலுக்கு மட்டும் ஏன்
யாரும் செவிசாய்க்கவில்லை?

இமாலய சரித்திரனே
விதிகளுக்குள்ளேயே வலிகளைச் சுமந்தவனே
இனி ஒரு பிறப்பு உண்டாகின்
எங்கள் தேசத்திலும் பிறந்துவிடு
சுயநலத்தோடு தான் கேட்கிறோம்
உன்னாலாவது ஈழம் பெறமுடியுமா என்னும்
எதிர் பார்ப்போடு

*- மாவை கதிர் மேலவன் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 05 01 2014 ஞாயிற்றுக்கிழமை

## உதயன் எங்கள் இதயம்....

உதயன் எங்கள் இதயம் என்றும்
இரக்கம் கொண்டு துடிக்கும்
எதையும் தாங்கும் இதயம் அஃது
எவர்க்கும் ஈடு கொடுக்கும்

பொறாமை கொண்ட புல்லர் தம்மை
புரிந்து கொண்டு தவிர்க்கும்
சிறுமை கொண்ட மனத்தோர் தம்மை
தெரிந்து கொண்டு விலத்தும்

குண்டு ஏந்தி வந்து குண்டர்
கொடுமை செய்தபோதும்
கண்டு ஓடி கதவை மூடி
கொண்டு நின்றதில்லை

...ண்டு ...கோழை நெஞ்சர்
...த்து முறிக்கும்
...பதுங்கும் வஞ்சர்
...க்கும்

நீதி வேண்...றகும் மக்கள்
நிலையில் நின்று பேசும்
சாதி பேதம் சாற்றிடாமல்
சகலரோடும் கலக்கும்

சமய வேறுபாடு இல்லை
சாற்றும் தெய்வம் ஒன்றே
இமய... போன்ற நெஞ்சமுண்டு
எவர்க்...அச்சமில்லை

உரிமையோடு எங்கள் மக்கள்
உலகில் வாழ வேண்டும்- அந்த
உயர்வுக்காக உழைக்கும் எங்கள்
உதயன் வாழ்க வென்போம்.

- ரம்யன்


உதயன்
கடுமையான பிரேரணை வருகின்றது இம்முறை

## தாய் ஓர் அற்புத படைப்பு

தான் பசித்திருப்பாள்
தன் பிள்ளை ஓர்
வேளை பசித்திருந்தால்
பதைபதைத்து ஒரு நொடி
துடித்திடுவாள்.

யார் எப்படிப் பேசிடினும்
தன் பிள்ளை சொக்கத்
தங்கமென்பாள்.

ஊர் கூடித் தூற்றிடினும்
நீ என் உயிர் என்று
உச்சி முகர்ந்து அணைத்திடுவாள்.

மெல்ல நடக்கையிலும்
செல்ல மொழி திக்கித் திக்கி
வருகையிலும் - உடலும் உளமும்
பூரித்திருப்பாள்.

நீ நினைக்க மறந்தாலும்
நினைவே நீயாய் வாழ்ந்திடும்
தாய் எனும் இவளோர்- இறைவனின்
அற்புதப் படையப்பப்பா
மானிடா - நீ புரிந்ததை உணர்ந்திடடா.




## சொற்சிலம்பம் - போட்டி இல: 299

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | 9 | | |
| | ■ | 10 | 11 | | | ■ | |
| ■ | 12 | | | | ■ | 13 | |
| 14 | | ■ | | ■ | 15 | | ■ |
| | ■ | 16 | | | | ■ | 17 |
| 18 | 19 | | | ■ | 20 | 21 | |
| 22 | | | ■ | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:........................................................

விலாசம்:........................................................

........................................................

கையொப்பம்:........................................................

### இடமிருந்து வலம்

1. வடக்குத் தமிழரைக் கட்டுப்படுத்தும் சட்டம்
5. ஒரு தமிழ் மாதம்
7. இறுதியானது
8. விலாசம்
10. ஐம்பத்தியாறு தேசத்தில் ஒன்று
12. தலைமுறை வழி
13. தமது என்பதைக் குறிக்கும்
14. முதலைக் கண்ணீர்
15. இது ஓய்வதில்லை
16. சகோதரன்
18. நவமணிகளில் ஒன்று
20. அதிகார நிலை
22. உறுதியான தன்மை
23. கிரௌஞ்சப் பறவை

### மேலிருந்து கீழ்

1. உடல்
2. முடி
3. கவரும் கலை
4. விளையாட்டுத் திடல்
5. இறக்க
6. சிங்கம்
9. காந்தியின் கடைசி வார்த்தை
11. இளவேனில்
12. நோவு
13. சிரசு
14. தீர்ப்புசச் சொல்லுபவர்
15. அன்பு கொண்டவன்
16. ஒரு தானிய வகை
17. வாத்தியக் கருவி
19. ஒரு திசையைக் குறிக்கும் சுருக்கம்
21. துணி நெய்யும் கருவி

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.
★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும் பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 297 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) அமராவதி (5) பசி (7) சரி (8) தடங்கல் (9) சினம் (10) வலு (11) பாரதம் (13) மான் (14) விசம் (15) தரு (17) தம்பதி (19) தலைவி (20) ரம்பம் (22) அம்புலி (23) கூன்.

### மேலிருந்து கீழ்

(1) அசம்பாவிதம் (2) மரி (3) வதனம் (4) திடம் (5) பகவன் (6) சில்லு (9) சிதம்பரம் (12) ரசம் (13) மாருதம் (16) கவிஞன் (18) திம்பு (21) பலி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 299**
நியூ உதயன் பப்ளிகேஷன்
[பிறைவேற்]லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
என்றும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (15.01.2014) ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.299இல்வெற்றி பெறுவோர்களது விபரம் 19.01.2014 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 297 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
கு.குலநாயகி,
இல.69, ஆனந்தநகர்,
கிளிநொச்சி.

**2 ஆம் பரிசு**
ஜெ.மாதவன்,
இல. 41A, சிவப்பிரகாசம் வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
கா.இராஜேஸ்வரி,
ஆயத்தடி, மிருசுவில்.

**4 ஆம் பரிசு**
ம.காருணியா,
இல. 5. அகத்தியார் வீதி, தோணிக்கல்,
வவுனியா.

**5 ஆம் பரிசு**
திருமதி ம.பரமேஸ்வர ஐயர்,
இல. 270, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

திருமதி B. சசிகலா,
இல ID- 55 B, சந்தை சுற்றுவட்ட வீதி,
வவுனியா.

ப.பகீரதன்,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

மு.அன்ரனி,
விற்றோ கேஸ் டீலர், ஆஸ்பத்திரி வீதி,
சின்னக்கடை, மன்னார்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி...?

05.01.2014 முதல் 11.01.2014 வரை



எந்தச் செயலையும் பரிசீலித்து மேற்கொள்வதால் மட்டுமே, உரியபலன் கிடைக்கும். எதிரியால் உருவாகிற தொல்லை விலகும். இல்லறத் துணையின் கருத்துக்கு, உரிய மதிப்பு தருவது குடும்ப ஒற்றுமை வளர உதவும். தொழிலில் அளவான மூலதனம், கூடுதல் உழைப்பு என்கிற நடைமுறை பின்பற்றுவீர்கள். பணியாளர்கள், நற்பெயரைப் பாதுகாப்பதில் கவனம் கொள்வர். மாணவர்கள் புதிய முயற்சியால் சிறந்த தேர்ச்சி பெறுவர்.



எவரிடமும் உள்ளன்புடன் பழகுவீர்கள். திட்டமிட்ட பணிகளில், முழு அளவிலான நன்மை கிடைக்கும். சமூகத்தில் பெறுகின்ற கௌரவம் கூடும். இல்லறத்துணை, ஒற்றுமை குணத்துடன் நடந்து கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர் சலுகைகள்பெற அனுகூலம் உண்டு. வெளியூர் சுற்றுலாப் பயணம் இனிதாக அமையும். மாணவர்கள் பாராட்டு, பரிசு பெறுவர்.



கடந்த கால நிகழ்வுகளின் அனுபவத்தை பாடமாக எண்ணி செயற்படுவீர்கள். சிரமம் குறைந்து புதிய நல்வழி வாழ்வு வளம் பெற உருவாகும். இல்லறத்துணை துன்பத்தின் பாதிப்பு அணுகாமல் உங்களுக்கு பாதுகாப்பாக நடந்து கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை திருப்திகர அளவில் இருக்கும். மாணவர்கள் விளையாட்டுகளில் பாதுகாப்பைப் பின்பற்ற வேண்டும்.



ஆடம்பரச் செயல்களைத் தவிர்ப்பதால் நேரம், பணம் மிச்சமாகும். புதிய நிகழ்வுகளை அனுபவித்து மனதில் எதிர்கால வாழ்வில் நம்பிக்கை பெறுவீர்கள். எதிரியால் ஏற்படும் சிரமத்தை சமயோசிதமாகச் சரி செய்வீர்கள் தொழிலில் வளர்ச்சியும் திருப்திகர பணவரவும் பெறுவீர்கள். மாணவர்கள், கூடுதல் முயற்சியால் தரதேர்ச்சி [illegible] பாதுகாப்பது அவசியம்.



நண்பரின் உதவி எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். பேச்சு, செயலில் அதிக நிதானம் பின்பற்றுவது சிரமம் வராமல் தவிர்க்க உதவும். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர்களின் மனக்கிலேசம் தவிர்க்கும் வகையில் பேசுவது நல்லது. தொழிலில் உற்பத்தி, விற்பனை இலக்கை அடைய லாபவிகிதம் குறைத்திடுவீர்கள். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டம் மதித்து செயற்படுவதால் கூடுதல் நன்மை பெறலாம். மாணவர்கள் புதியவரை நண்பராக ஏற்பதில் உரிய கவனம் [illegible]ண்டும்.



மனம், செயலில் உருவாகிற தடுமாற்றம் சரி செய்வதால் பணி குறித்த காலத்தில் நிறைவேறும். உங்கள் சொல்லுக்கு வரவேற்பு தருபவர்களிடம் மட்டுமே பேசுவது நல்லது. இல்லறத்துணை உங்களின் அருமை, பெருமை போற்றி மகிழ்வார். தொழிலில் வளர்ச்சி பெற புதிய வா[illegible]ப்பு உருவாகி உதவும். பணியாளர் கூடுதல் வேலை, பணவரவு கிடைத்து தாரா[illegible]ணம் செலவு செய்வர். மாணவர்கள் அக்கறையுடன் படித்து தரதேர்ச்[illegible]ாத்திடுவர்.



மனதில் புத்துணர்வும் செயல்களில் புதிய பரிமளிப்பும் பெறுவீர்கள். தாமதமான பணிகளை உத்வேகத்துடன் செயற்படுத்தி முழு அளவில் நன்மை பெறுவீர்கள். சமூகத்தில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். எதிரி இடம்மாறிப்போகி நன்னிலை உண்டு. தொழில், வியாபாரம் செழிக்க சீர்திருத்த நடைமுறையை மேற்கொள்வீர்கள். பணியாளர்கள் புதியவர்களின் உதவியால் தொழில் நுட்ப அறிவை வளர்த்துக் கொள்வர். மாணவர்கள், சகமாணவர்களின் உதவியால் படிப்பில் உருவாகும் சந்தேகத்தை நிவர்த்தி செய்வர்.



உங்களை அவமானப்படுத்தும் வகையில் பேசுபவரிடம் விலகி சுயகௌரவத்தைப் பாதுகாத்திடுவீர்கள். நிலுவைப்பணம் எளிய முயற்சியால் கிடைக்கும். இல்லறத்துணை உங்களின் பணிகள் சிறக்கத் தேவையான ஆலோசனை சொல்வர். தொழில், வியாபாரத்தில் அரசின் சட்டதிட்டம் மதித்து செயற்பட வேண்டும். மாணவர்கள் விளையாட்டில் பாதுகாப்பு நடைமுறை பின்பற்ற வேண்டும்.




சுயமுயற்சியால் பெறவேண்டிய நற்பலன்களை முழுஅளவில் பெறுவீர்கள். சொத்து ஆவணம் பிறர் பொறுப்பில் கொடுக்க வேண்டாம். புத்திரரின் சேர்க்கை சகவாசம் அறிந்து, நல்வழி நடத்துவீர்கள். இல்லறத்துணை வழிசார்ந்த உறவினர் உதவிகரமாக நடந்து கொள்வர். தொழிலில் வருகிற இடையூறு தாமதமின்றி சரி செய்வதால் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் அமையும். மாணவர்கள், அதிக தரதேர்ச்சியும் ஆசிரியரின் பாராட்டும் பெறுவர்.



குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைப்படி நடப்பதால், பணி இலகுவாக நிறைவேறி நற்பெயரை பெற்றுத் தரும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம். இல்லறத்துணை, உங்களின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவார். தொழில், வியாபாரத்தில் சிறு அளவில் அபிவிருத்தி பணிபுரிவீர்கள். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பை மனமுவந்து ஏற்றுக்கொள்வர். மாணவர்கள் அதிக விலை உள்ள பொருட்களை கவனமுடன் பயன்படுத்த வேண்டும்.



உத்வேகமும் செயல்களில் முன்னேற்றமும் உருவாகும். தொழிலில் பணவரவு அதிகம் பெறுவதற்கான புதிய வாய்ப்பு ஏற்படும். உறவினர் வருகை, வீட்டில் மகிழ்ச்சியை அதிகரிக்கும். புத்திரரின் நல்லறிவு செயல் திறனை பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, அரசு சார்ந்த உதவி கிடைக்க அனுகூலம் உண்டு. பணியாளர்கள் சலுகை, பிற பயன் எளிதில் பெறுவர். மாணவர்கள் படிப்பில் திறமை வளர்த்திடுவர்.



கடந்த கால உழைப்புக்கு உரிய அனுகூலம் தேடி வரும். உங்கள் சொல், செயலுக்கு நண்பரிடம் கூடுதல் வரவேற்பு கிடைக்கும். மனதில் இருந்த தாழ்வு மனப்பான்மை விலகும். சமூகப் பணியில் ஆர்வம் கொள்வீர்கள். எதிரியால் தொந்தரவு அணுகாத சுமுக வாழ்வு உருவாகும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். மாணவர்கள், இலகுவான மன உணர்வுடன் படித்து கூடுதல் தேர்ச்சி பெறுவர்.

# வறட்டுக் கௌரவம்

*(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

தாறாதாச் சொல்லி அவளுக்கு உன் மேல் ஆசையை வளர்த்து விட்டன். நீ அகல்யாவை செய்வெதன்றால் நான் அவளை செய்து தருவனே தவிர நீ நினைச்சவளை எல்லாம் செய்து தர என்னால் முடியாது" என தீர்க்கமாக மகனுக்கு சொல்லி முடித்தான் சின்னையா. சுரேஸுக்கோ உலகமே சுற்றியது. "என்ன சொல்லுறியள் அப்பா நீங்கள் அகல்யாவை நான் கலியாணம் செய்யிறதோ? அவளோட நான் தங்கச்சி மாதிரி தான் பழகுறன். அவளை நான் செய்யிறதோ? அவள் கல்யாணம் செய்யிற எண்ணமே எனக்கு வந்ததில்லை. நீங்கள் என்னண்டால் இப்படி சொல்லுறியள்" என கூறினான்.

சின்னையாவும் விடுவதாயில்லை. "உன்னில அவளுக்கு பாசம் இல்லாமலோ ஒவ்வொரு நாளும் தோட்டத்துக்கு வந்து உன்னை பற்றியே கேட்டுக் கொண்டு இருப்பாள். இண்டைக்கும் வந்தவள். உனக்கு எப்ப படிப்பு முடியுது எண்டு கேட்டுக் கொண்டே இருந்தாள். உன்னில விருப்பம் இல்லாட்டி ஏன் என்னட்ட இப்படி எல்லாம் கேக்கப் போறாள். நானும் அவளுக்கு சொல்லிட்டன். உனக்கு உன்ர மச்சானைத்தான் செய்து தருவன் எண்டு. நான் சொன்னது தான் முடிவு. அகல்யாவை செய்வன் எண்டா இனி உன்ர கலியாணத்தைப் பற்றி கதை. இல்லாட்டி நீ அந்த பெட்டையைத் தான் செய்ய வேணும் எண்டா ஒண்டில் இந்த ஊரில நீ இருக்க வேணும் அல்லாட்டி நான் இருக்க வேணும். முடிவை நீயே யோசித்து எடு" என்று சொல்லியவாறே படுக்கை விரிப்புடன் சின்னையா மகனிடம் இருந்து விலகிச் சென்றான். சுரேஸும் சின்னையாவின் முடிவை கேட்டு கவலையுடன் படுக்கைக்குச் சென்றான். இருவரும் படுத்திருந்தார்களே தவிர உறக்கம் கண்ணை எட்டவில்லை.

சுரேஸ் சின்னையா கூறியதை திரும்ப திரும்ப யோசித்தான். தாய் இறந்ததிலிருந்து இற்றைவரை தகப்பன் தனக்கு செய்தவற்றை மீட்டிப் பார்த்தான். இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தான். தகப்பனுடைய விரும்புக்காக தன் காதலை தியாகம் செய்தான். இராமாயணத்தில் இராமன் தந்தையின் சொல்லைக் கேட்டு நாடாளும் ஆசையை விட்டு காடேறியது போல சுரேஸும் தந்தையின் சொல்லைக் கேட்டு கலாவைத் திருமணம் செய்யும் ஆசையை விட்டு அகல்யாவைத் திருமணம் செய்வதாக முடிவெடுத்து தந்தையின் ஆசையை நிறைவேற்றத் தலைப்பட்டான்.

*(யாவும் கற்பனையே)*




வசந்த கால
பொழுதுகளின்
இரவுகளில்
தேன் சுமந்த
மலர்கள்
கசங்கிப் போயின !

வாடிய மலருக்கு
தாவலின் நோவிலும்
பார்க்க களிப்பு !
கூடிய வண்டிலும்
அதிகம் ! மிஞ்சி கிடந்தது

அதனால்..
மலர்கள்
வண்டுகளை
சிறைப் பிடித்து
மேலும்
வாடிப்போக
தயாராகின !

*மண்டைதீவு மகிழ்நன்.*

பிள்ளை !
எழும்பு பிள்ளை
விடிஞ்சிட்டுது
என்னம்மா !
இந்த உலகமே
இருட்டுக்க
உறங்கேக்க
நான் கொஞ்சம்
தூங்கினால்

என்ன?
அப்ப நீயும்
இருட்டுக்க வாழப்
போறியா?
இல்லையம்மா
நான்
உதிக்கிறதுக்காக
ஒத்திகை
பார்த்துக்
கொண்டிருக்கிறன்.

*கெ.நிப்தன்,*
*கொழும்புத்துறை.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பில் கேட்ஸ்



## உலகப் பணக்காரன் உருவான கதை

அழகிய பாண்டியன்

அப்பிள்நிறுவனத்தைமுறைத்துக்கொண்ட கையோடு மற்றொரு பெரிய நிறுவனத்தையும் முறைத்துக்கொள்கிற சூழ்நிலை உருவானது பில்கேட்ஸுக்கு.

எந்த ஐபிஎம் நிறுவனத்தின் மூலம் மைக்ரோசொஃப்டை வளர்க்க முடிந்ததோ அந்த ஐபிஎம்நிறுவனத்தையே முறைத்துக்கொள்ளும் நிலை.

கொஞ்ச நாளைக்கு முன்புதான் ஐபிஎம் நிறுவனம் பிசி கணினிகளைத் தயாரித்து பெரும் இலாபம் கண்டிருந்தது. இதற்கு ஆபரேட்டிங் சிஸ்டம் தயாரித்துக் கொடுத்ததே மைக்ரோசொஃப்ட்தான். இதன் மூலம் மைக்ரோசொஃப்டும் பெருமளவு சம்பாதித்துத் தனது எல்லைகளை விரித்திருந்தது.

இப்போது தொழில் நுட்பம் மேலும் முன்னேறி இருந்தது. ஐபிஎம் தயாரித்திருந்த பிசி கணினிகள் தட்டித் தட்டிக் கட்டளை போடும். சியூஐ தொழில் நுட்பத்தைச் சேர்ந்தவை.

இப்பொழுதோ சியூஐ தொழில்நுட்பத்தில் அவனவன் கணினி தயாரித்துக் கலக்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் ஐபிஎம்மின் அந்த சியூஐ தொழில்நுட்பக் கணினிகளை எவன் திரும்பிப் பார்ப்பான்?

எனவே ஐபிஎம் இற்கு இப்போது சியூஐ தொழில் நுட்பத்தில் புதிய ஆபரேட்டங் சிஸ்டம் தேவைப்பட்டது. ஏற்கனவே அவர்களுக்கு சியூஐ தொழில்நுட்ப ஆபரேட்டிங் சிஸ்டத்தை எழுதிக் கொடுத்தது மைக்ரோசொஃப்ட்தான். எனவே இப்போது "ஜியூஐ தொழில்நுட்ப ஆபரேட்டிங் சிஸ்டத்தையும் எழுதிக் கொடுக்கவேண்டும்" என்றுமைக்ரோசொஃப்டிடம் கேட்டுக்கொண்டது ஐபிஎம்.

இதே காலகட்டத்தில்தான் பில்கேட்ஸ் தன்னுடைய விண்டோஸ் ஆபரேட்டிங் சிஸ்டத்தை உருவாக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார். 'கிடைக்கிற எந்த வாய்ப்பையும் நழுவ விடக்கூடாது" என்பதுதான் பில்கேட்ஸின் கொள்கை.

தனது கொள்கைப்படி ஐபிஎம் கொடுத்த பணத்தை வாங்கிப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு அந்த நிறுவனத்துக்கான " OS/2" என்ற பெயரில் ஒரு புது ஆபரேட்டிங் சிஸ்டம் எழுதவும் மைக்ரோசொஃப்டில் ஒரு பிரிவை உருவாக்கினர்.

ஒரு பக்கம் மைக்ரோசொஃப்ட்டுக்காக விண்டோஸ், மறுபக்கம் ஐபிஎம் இற்காக "OS/2" என்று வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

ஐபிஎம் நிறுவனத்தில் புதிய கணினிக்கான ஹார்டுவேர்கள் தயாராகி விட்டன. மைக்ரோசொஃப்டிலிருந்து OS/2 இன்னும் உருவாகி இருக்கவில்லை. மைக்ரோசொஃப்டின் தாமதத்தால் ஐபிஎம் எரிச்சலடைந்தது.

இருக்காதா பின்னே? நேற்றுப் பெய்த மழையில் இன்றைக்கு முளைத்த காளான் நிறுவனங்கள் கூட கணினிகளைத் தயாரித்துக் காசாக்கிப் பார்த்துக் கொண்டிருக்கும் போது அவ்வளவு பெரிய ஐபிஎம் கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்ப்பது வெட்கமல்லவா?

"என்ன இன்னும் வேலை முடியவில்லையா?" என்று அதட்டுவதும் "இதோ முடிஞ்சிருச்சு இன்னும் கொஞ்சம்தான்" என்று மைக்ரோசாஃப்ட் பதில் சொல்வதும் வாடிக்கையாகிவிட்டது.

"பணத்தை கை நீட்டி வாங்கி விட்டால் ஒழுங்காக வேலையை முடித்துக் கொடுக்கிற ஆள்கள் இப்போது ஏன் இவ்வளவு தாமதம் செய்கிறார்கள்? உள்ளே என்னதான் நடக்கிறது" என்றுஐபிஎம் எட்டிப்பார்த்தபோதுதான் அந்த உண்மை தெரிய வந்தது.

பில்கேட்ஸ் உட்பட அத்தனை பேரும் விண்டோஸ் உருவாக்கவே முட்டி மோதிக் கொண்டிருந்தார்கள். OS/2 குழந்தையை யாருமே கவனிக்காததால் அது அநாதையாக நின்றது.

நியாயமாக வரவேண்டிய கோபம் ஐபிஎம் காரனுக்கு வந்தது. "உங்களுக்கு விண்டோஸ் முக்கியமா? அல்லது எங்கள் OS/2 முக்கியமா? என்று காட்டமாகக் கேட்க அதற்குப் பில்கேட்ஸ் "எங்களுக்கு விண்டோஸ் தான் முக்கியம்! அவசரம் என்றால் உங்கள் OS/2 வை இப்பொழுதே தூக்கிக் கொண்டு போகலாம்" என்று அலட்டிக் கொள்ளாமல் சொன்னார்.

அதிர்ச்சியடைந்த ஐபிஎம் "எல்லாம் நேரம் தான்" என்று தலையிலடித்துக் கொண்டு OS/2- வை எடுத்துக் கொண்டும் ரோஷத்துடன் வெளியேறியது.

ஐபிஎம் நிறுவன்த்துக்குச் சென்று அவர்களைப் பார்ப்பதற்காகப் பில்கேட்ஸ் காத்துக் கிடந்த காலம் அன்று. அந்த ஜாம்பவானையே 'வெளியே போ' என்று துரத்துவது இன்று.



ஒரு பக்கம் மைக்ரோசொஃப்ட்டுக்காக விண்டோஸ், மறுபக்கம் ஐபிஎம் இற்காக "OS/2" என்று வேலைகள் நடைபெற்றுக்கொண் டிருந்தன.

### அமெரிக்க அரசின் வழக்கு

ஆப்பிள் நிறுவனம் மைக்ரோசொஃப்ட் மீது வழக்குத் தொடுக்கும் முன்பு அமெரிக்க நீதித் துறையே மைக்ரோசொஃப்ட் மீது வழக்குத் தொடர்ந்த சம்பவமும் உண்டு.

தொடக்கக் காலம் மைக்ரோ சொஃப்டின் ஆபீஸ் மென்பொருள் களான "வேர்டு" "எக்ஸெல்" "பவர் பாயிண்ட்" மூன்றையும் நன்றாக விற்றுக் காசு பார்த்திருந்த மைக் ரோசொஃப்ட் மீண்டும் அவற்றை மக்களிடம் விற்க ஆசைப்பட்டது.

ஏற்கெனவே வாங்கியவர்கள் மறுபடியும்எப்படி வாங்குவார்கள்? யோசித்துக் கொண்டிருந்த மைக்ரோசொஃப்டுக்கு ஒரு வழி கிடைத்தது. விண்டோஸின் வியாபாரம் அமோகமாக நடந்துகொண்டிருந்த நேரம் அது.

யாராவது "விண்டோஸ்" வேண்டும் என்று கேட்டால் கூடவே அந்த "மும்மூர்த்தி" பொட்டலத்தையும் எடுத்துக் கொடுத்தார்கள்.

"இந்த ஆபீஸ் பேக்கேஜை ஏற்கனவே வாங்கிவிட்டேன். இப்போது விண்டோஸ் மட்டும்தான் வேண்டும்" என்று கேட்டால் "ஆபீஸ் பேக்கேஜை வாங்காதவர்களுக்கு விண்டோஸை விற்பதாக இல்லை" என்று கூறி விண்டோஸை எடுத்து உள்ளே வைத்து விடுவார்கள்.

அதிர்ச்சியுற்ற கணினிகாரர்கள் விண்டோஸுக்காக மீண்டும் ஒரு முறை ஆபீஸ் பேக்கேஜை வாங்கி அழுதார்கள்.

'விண்டோஸின் பிரபலத்தைப் பயன்படுத்தி மற்ற மென்பொருள்களை மக்கள் மீது வலுக் கட்டாயமாகத் திணித்து அதன் மூலம் போட்டியாளர்களின் மென்பொருள் வியாபாரத்தையும் நசுக்கி விடுகிறார்கள்" என்பதுதான் குற்றச்சாட்டு. 1991 இல் தொடரப்பட்ட இந்த வழக்கின் தீர்ப்பு 1994 இல் வெளியானது.

"விண்டோஸுடன் சேர்த்து மற்ற மென்பொருள்களை விற்கக் கூடாது. என்பதுதான் அந்தத் தீர்ப்பு.

இன்டெநட் யுத்தத்தில் மைக்ரோசொப்ஃட் நெட்ஸகேப்பை வீழ்த்திய போது அதன் மரண ஓலம் வேறு சிலரின் காதுகளிலும் விழுந்தது. மென்பொருள் துறையிலும் ஆபரேட்டிங் சிஸ்டம் துறையிலும். மைக்ரோசொஃப்டிடம் அடி வாங்கியவர்களின் காதுகள்தாம் அவை.



இப்படிப் பாதிக்கப்பட்டவர்கள் ஒன்றாக இணைந்து ஒரே சுதியில் "எங்கள் கூக்குரல் மற்றவர்களுக்குத்தான் கேட்கவில்லை. ஏ... அமெரிக்க அரசே உனக்குக் கூடவா கேட்கவில்லையா?" என்று பொங்கி எழுந்தார்கள். இவர்களின் கூட்டணிக் கூக்குரலைப் பெரும்பாலான பத்திரிகைகள் வரிந்து கட்டி எதிரொலித்தன. அதன் பிறகுதான் அமெரிக்க அரசு விழித்துக்கொண்டு "மைக்ரோசொஃப்டில் என்னதான் நடக்கிறது?" என்று எட்டிப் பார்த்தது.

மைக்ரோசொஃப்ட் கொடுத்த பலமான உதைகளால் பல நிறுவனங்கள் உயிரை விட்டிருப்பதும் சில நிறுவனங்கள் குற்றுயிராய்க் கிடப்பதும் தெரியவந்தது. அதற்குச் சமீபத்திய உதாரணம் "நெட்ஸ்கேப் மரணம்"

உடனே அமெரிக்க அரசு மைக்ரோசொப்ஃப்டுக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுகளைக் கூறி வழக்குத் தொடுத்தது. இந்த வழக்கு அமெரிக்காவில் பரபரப்பாகப் பேசப்பட்டது. காரணம். அப்போது பில்கேட்ஸ் சாதாரண ஆள் இல்லை. உலகத்தின் மிகப்பெரும் பணக்காரர்.

அகில உலகப் பணக்காரரை அமெரிக்க அரசு கோர்ட்டுக்கு இழுக்கிறதென்றால் அது சாதாரண விடயமா? பத்திரிகையாளர்கள் இரண்டாகப் பிரிந்து ஒரு பிரிவினர் பில்கேட்ஸுக்கு ஆதரவாகவும் மற்றொரு பிரிவினர் அரசுக்கு ஆதரவாகவும் விளாசித் தள்ளினார்கள்.

நீதிமன்றத்துக்கு வந்த பில்கேட்ஸை பத்திரிகையாளர்களும் சேனல்காரர்களும் முற்றுகையிட்டு படம் எடுத்தார்கள். பில்கேட்ஸை விசாரிக்க நீதிபதிக்கே கூட வியர்த்தது.

அன்று மீடியாக்களின் முக்கியச் செய்தியே பில்கேட்ஸ் நீதிமன்றத்துக்கு வந்து வாக்குமூலம் கொடுத்ததுதான். நெட்ஸ்கேப்பை வீழ்த்துவதற்கு மைக்ரோசொஃப்ட் தனது பணபலத்தையும் பயன்படுத்தியிருந்தது சந்தேகத்துக்கு இடமின்றித் தெளிவானது.

## பொறுமை மீறினால்....

பூக்களைத் தாலாட்டும் தென்றலும்
ஒரு நாள் புயலாக மாறும்
ஆல மரத்தையும் அடியோடு சாய்க்கும்
கரை தொட்டு விளையாடும் அலையும்
ஒரு நாள் கரை மேவிப் பாயும்
கடலாண்ட மக்களையும் காவு கொள்ளும்
பொறுமையாய் நமைத் தாங்கும் பூமியும்
ஒரு நாள் அதிர்ந்து அடங்கும்
அடுக்கு மாடியும் தரை மட்டமாகும்
புல் நனைத்த மழையும்
ஒரு நாள் தரை புரண்டு ஓடும்

வானுயர் மரங்களும் வேரறுந்து வீழும்
வயலுக்கு நீர் பாய்ச்சும் குளமும்
ஒரு நாள் அணை உடைத்து ஓடும்
அறுவடைப் பயிரும் அழிந்தங்கு போகும்
நாணி நெளிந்தோடும் நதியும்
ஒரு நாள் பெருக்கெடுத்து ஓடும்
தாழ் நிலம் நீரில் மூழ்கிப் போகும்
பொறுமையாய் இருக்கும்வரைதான்
[illegible]
எல்லை மீறினால் பாறை
அழித்திடும் பெரிய சக்திகள்.

அ. அஜந்தன், கந்தர்மடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வில்லியாக மாறத் துடிக்கும் திரிஷா

அவருடன் ஒரு நேரடிச் சந்திப்பு

சென்னையில் இருந்து
கா.இ.முத்து



பல ஆண்டுகாலம் தமிழ் சினிமாவில் அசைக்க முடியாத இடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளவர் திரிஷா. சிறிதேவிக்குப் பின்னர் ஒரு தமிழ் நடிகை இவ்வளவு உயரம் தொட்டார் என்றால் அது திரிஷாவாக மட்டும்தான் இருக்க முடியும்.

"உடம்பை இன்னும் கொஞ்சம் கட்டுக்கோப்பா வச்சிருக்க வேணும், உடற்பயிற்சிக்குப் போக வேணும், யோகா செய்யவேணும், கோபத்தைக் குறைக்கவேணும்.... இப்படி நான் எல்லா வருஷமும் புதுவருடத் தீர்மானங்கள் எடுப்பது உண்டு. ஆனால், செய்ததே கிடையாது.." என்று தனக்கேயுரிய புன்னகையுடன் புத்தாண்டு உறுதிமொழி பற்றிப் பேசியபடியே நேர்காணலை ஆரம்பிக்கிறார் திரிஷா.

*2013 வரைக்கும் தமிழ் சினிமாவில் முன்னணி நாயகி. 'மிஸ் சென்னை' பட்டம், விளம்பரங்கள், சினிமா.. என்று எப்படிப் பார்க்கிறீர்கள் இந்த முன்னேற்றங்களை?*

எதிர்பார்க்காதது. எதையும் திட்டமிடாமல் செய்யக்கூடாது என்று சொல்வார்கள்.. (சிரித்து) ஆனால், நான் எல்லாவற்றையும் திட்டமிடாமல்தான் செய்கிறேன். எது எது நடக்குதோ, அது அதற்குத் தகுந்த மாதிரி என்னை மாற்றிக்கொள்ளுவேன். அதுதான் என் சிறப்பு. அதனால நான் நல்லாத்தான் இருந்தேன். நல்லாத்தான் இருக்கிறேன். இனிமேலும் நல்லாத்தான் இருப்பேன்.

இவ்வளவு பெரிய இடத்தை நான் அடைந்ததற்கு 'மிஸ் சென்னை' போட்டி பெரிய தளம். நிறைய வாய்ப்புகள் வந்தன. நான் எதையுமே ஏற்கவில்லை. நிறைய விளம்பரப் படங்கள், பாஷன் ஷோக்கள் செய்தேன். அதனால எனக்கு கமிரா பயம் போயிருச்சு. பின்னர் சினிமா வாய்ப்புகள் தமிழ், தெலுங்கு, ஹிந்தி, இப்போ புதுசா கன்னடப் படங்கள் என்று வாய்ப்புகள் கிடைச்சு, நிற்க முடியாமல் ஓடிக்கிட்டே இருக்கேன்.

***தமிழ் திரையுலகில் 12ஆவது வருடத்தில் அடியெடுத்து வைக்கும் உங்களுக்கு சினிமா கற்றுக்கொடுத்தது என்ன?***

(சிரித்துக்கொண்டே) நிறைய விடயங்கள். முக்கியமாக பொறுமையைக் கற்றுக்கொண்டேன். நிறைய மன உளைச்சலோடு இருந்த நேரத்தை எல்லாம் எப்படிக் கடந்தேன் என்று இப்போது நினைத்தாலும் ஆச்சரியமா இருக்கு. எல்லோரும் நித்திரையாகிற நேரத்தில திடீர் என்று 'நைட் ஷூட்' என்று சொல்வார்கள். 2 நாள், 3 நாள்கள் தொடர்ச்சியாக படப்பிடிப்பு இருக்கும். வெளிநாடுகளில கடும் குளிருக்கு நடுவில் படம்பிடிப்பார்கள். அனல் வெயில்லயும் படம் எடுப்பார்கள். இப்படிப் பல சூழ்நிலைகளைக் கடந்திருக்கிறேன். நினைத்த நேரத்திற்கு எங்கேயும் போக முடியாது. எல்லாவற்றுக்கும் பொறுமைதான் மருந்து என்று கற்றுக் கொண்டேன். நிறையப் புது நண்பர்கள் கிடைத்தார்கள்.

***'மிஸ் சென்னை' பட்டம் பெற்றபோது, சினிமா வாய்ப்போடு உங்களைத் தேடி வந்த சுவாரஸ்யமான நிகழ்வு, பரிசு?***

'மிஸ் சென்னை' பட்டம் வாங்கிட்டு வந்து இரவு நித்திரை முடித்து எழுந்தால், காலையில் வீட்டு வாசலில் இரண்டு தயாரிப்பாளர்கள் படத்தில் நடிக்கிறீர்களா என்று கேட்டு வந்திருந்தார்கள். கௌதம்மேனன் *மின்னலே* படத்தில் கதாநாயகியாக நடிக்கிறாயா என்று கேட்டார். அப்பா, அம்மா இரண்டு பேருமே அதை மறுத்துவிட்டார்கள். பாடசாலையில் படிக்கிற பெண்ணுக்கு இப்போது நடிப்பு வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். அவள் ஒரேயொரு பட்டமாவது வாங்கட்டும் என்று சொல்லி விட்டார்கள். ஏனென்றால் 'மிஸ் சென்னை' பட்டம் வென்ற போது எனக்கு 16 வயசு.

***தாய்மொழியில் நடிக்கும்போது கிடைக்கும் திருப்தி மற்ற மொழிப் படங்களில் கிடைக்கிறதா?***

எல்லா மொழிகளிலும் வாய்ப்பு வரும்போது பயன்படுத்திக்கொள்வது ஒன்றும் தப்பேயில்லை. ஆனால் தாய்மொழியில் நடிக்கும்போது கிடைக்கும் வசதி, இலகு மற்ற மொழிகளில்ல கிடைக்காது. இப்போது முதல் முறையா கன்னடப் படத்தில் நடிக்கிறேன். இதே மாதிரி எல்லா மொழிகளிலும் நடிக்கும்போது புது மொழியை கற்க முடிகிறது. அது ஒரு வளர்ச்சிதானே? நிறையப் புதுபுது மனிதர்களைப் பார்க்க முடிகிறது. பழக முடிகிறது. என்னைப் பொறுத்தவரை மொழிகளுக்கு அப்பாற்பட்டதுதான் நடிப்பு.

***கமல், சீரஞ்சீவி என ஜோடி சேர்ந்தீர்கள். சிம்பு, ஜீவாவுடனும் நடிக்கிறீர்கள். என்ன வித்தியாசம் உணர்கிறீர்கள்?***

என்னைப் பொறுத்தவரை அவர்கள் மூத்தவர்கள், இவர்கள் இளையவர்கள் அவ்வளவுதான் வித்தியாசம். கமல், சீரஞ்சீவிகூட நடிக்கும்போது கொஞ்சம் பதற்றமா இருக்கும். சிம்பு, ஜீவாகூட நடிக்கும்போது அது இருக்காது. அதுவும் கமல் சார்கூட நடிக்கிறபோது நிறையப் பயந்திருக்கிறேன். அவர் நிறைய கச்சிதம் பார்ப்பார். மற்றப்படி எனக்கு எந்த வித்தியாசமும் தெரியவே இல்லை.

***ஜோடி படத்தில் நடிக்கும்போது இந்த உயரத்தை எட்டுவோம் என நினைத்தீர்களா?***

*ஜோடி* படத்துல நான் நடித்தது ஒரு விபத்து. அந்த நேரம் ஒரு மொடலிங் நிகழ்வு என்று நினைத்துச்செய்தேன். அப்போதெல்லாம் ஒரு நடிகையா வருவோம் என்றுகூட நினைத்தது கிடையாது. பெரிய நடிகையா வரும் எண்ணம் இருந்திருந்தால் அந்தப் படத்தில் நடித்திருக்கவே மாட்டேன். சும்மா ஒரு விளையாட்டுக்கு நடித்தேன். பின்னர் அப்படி அந்தப் படத்தில் நடித்திருக்கக்கூடாது என்று நினைத்தேன். எல்லாம் ஒரு அனுபவம்தானே!

***உங்களின் கனவுப் பாத்திரம்?***

படையப்பா ரம்யா கிருஷ்ணன் மாதிரி ஒரு வித்தியாசமான பாத்திரம். அந்த மாதிரிப் பாத்திரத்தில் நடிக்கக் கேட்டார்கள் என்றால் உடனே ஒத்துக் கொள்வேன். எவ்வளவு நாளைக்குத்தான் அமைதியான, பவ்வியான, நல்ல பெண்ணாகவே நடிப்பது? ஒரு மாற்றத்திற்கு கொஞ்சம் வில்லி மாதிரியான பாத்திரங்களில் நடிக்கலாம் என்று படுகிறது. பாக்கலாம்!

***உங்கள் காதல் குறித்து இவ்வளவு கிசுகிசுக்கள், இழுத்தடிப்பு அவசியம்தானா? பட்டென்று விஷயத்தை உடைத்து விடலாம் இல்லையா?***

உடைக்காதபோதே அப்படி எதுவும் இல்லை என்றுதானே அர்த்தம். நான் நேர்மையா இருக்க விரும்புகிறவள். எதையும் மறைக்க விரும்புவதில்லை. இவர்தான் எனக்குச் சரியான ஆள், இது தான் சரியான நேரம் என்று என்றைக்குத் தோண்றுகிறதோ அன்று நிச்சயம் சொல்வேன். அது இந்த ஆண்டாகக்கூட இருக்கலாம்.

***அப்பாவின் இறப்பு உங்களை எந்த அளவிற்குப் பாதித்தது?***

(சிறிய மௌனத்திற்குப் பின்) பெரியளவில் பாதித்தது. எனக்கு அப்பா தொடர்பில் நிறைய நிறைவேறாத ஆசைகள் இருக்கு. ஹைதராபாத்தில் அப்பா வேலை செய்துகொண்டிருந்த போது "வா! இன்று ஒன்றாக இரவு சாப்பிடலாம் என்று நிறையத் தடவைகள் கூப்பிட்டு இருக்கிறார்." ஆனால், நான் படப்பிடிப்பில இருப்பேன். அது முடிந்ததும் போய் எப்படா குளிச்சுத் தூங்கலாம் என்றுதான் நினைப்பேன். அப்பாதானே, இன்னொரு நாள் போய்ச் சாப்பிடலாம் என்று நினைச்சு ஈஸியா விட்டுவிட்டேன். ஆனால் அது ஒருபோதும் நடக்காமலே போய்விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 05.01.2014 ஞாயிற்றுக்கிழமை

வளமாக வாழ

# வாஸ்து சாத்திரம்

தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபல வாஸ்து ஆலோசகர்
எண்கணித நிபுணர் கலாநிதி
ஜே.என்.எஸ்.செல்வன்

1. 10. 19, 28, 3, 12, 21, 30, 5, 14, 23, 6, 15, 24 மற்றும் 9, 18, 27 திகதி களில் பிறந்தவர்களும் தமது பெயர் எண்ணை 9இல் அமைத்துக் கொண்டவர்களும் மட்டுமே தென்திசை முகப்பு வைத்து வீடு கட்டினால் சிரமங்கள் குறையலாம். இடமே கிடைக்கவில்லை என்ற பட்சத்தில்தான் தென்திசையைத் தேரந்தெடுக்கலாம். இருப்பினும் உள் அமைப்பை பிரதான வாயில்களை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் நல்ல முறையில் வாஸ்துப்படி மாற்றி அமைத்துக் கொள்வது சிறப்பாகும்.

### தெற்குத் திசை முகப்பு வீடு

இந்தத் திசையின் அதிபதி நீதியின் சிகர மாகத் திகழ்பவர். எனவே எந்தக் குறை பாட்டையும் செய்ய நினைத்தாலோ, பிறருக்குத் தீங்கு விளைவித்தாலோ மனித நேயமற்ற செயல்களில் ஈடுபட்டாலோ, அறச்செயல்களிலிருந்து பிறழ்ந்து செயற்பட்டாலோ, நீதி தவறினாலோ அந்த வீட்டு முகப்பைப் பயன்படுத்து பவரைத் தண்டிக்கத் தயாராக இருப்பார். எனவே நெறிமுறை தவறாதவர்கள் மட்டுமே இந்தத் திசையைப் பயன் படுத்த வேண்டும்.

நேர்மையானவர்கள், தெற்கு வாசல் வீட்டைப் பயன்படுத்தும்போது உடல் நலமும், நெஞ்சில் உறுதியும் கொண் டவர்களாக இருப்பார்கள். அவர்க ளுக்கு உற்றார் உறவினர்களின் அன் பும், ஆடை ஆபரணம், புதிய நிலம், வீடு, தோட்டம், வாகனம் போன்ற வசதி களும் கிடைக்கும். மக்கள் செல்வாக்கு, அரசியலில் பெரும் பதவி, அரசாங்கத் தில் முதன்மை இடம், உயர்வுகள் போன்றவையும் வந்தே தீரும்.

இந்தத் திசை நோக்கி உள்ளவர்கள் அவ்வப்பொழுது கொள்கைகளை மாற்றிக்கொள்வதோ, கட்சி மாறு வதோ, கயமைத்தனத்தில் ஈடுபடுவதோ கிடை யாது. இந்த வீட்டில் உள்ளவர்கள் நேய மற்ற செயல்களில் ஈடுபட்டாலோ, எந்தக் காரியத்திலும் வெற்றியை மட்டுமே குறிக் கோளாக எடுத்துக்கொண்டாலோ பல பின்னடைவுகளைச் சந்திக்க நேரிடும்.


பதற்றம், தலைவலி, வயிற்று வலி என்பன ஏற்படும். அவ்வப்பொழுது விபத்துக்களில் சிக்கிக்கொள்ளாமல் இந்த வீட்டில் உள்ளவர்கள் வெற்றியை மட்டும் பெற வேண்டுமானால் நீதி, நேர்மை, நியாயத் துடன் செயற்படவேண்டும்.

அதன் மூலம் செல்வச்செழிப்பை ஏற் படுத்திக்கொள்ள முடியும். மேலும் பிறர் சொல்லுக்குச் சற்றுச் செவி சாய்க்கவும் வேண்டும்.

தன்னுடைய நலனே பெரிதென்று கருதா மல் பொது வாழ்விலும் ஈடுபடுதல் கூடுதல் தகுதியைத் தரும். நல்ல காரியங்களைப் பட்டியலிட்டு நிறைவேற்றி வருதல் பலமான எதிரிகளைச் செயலிழக்க செய்து மன மகிழ்வைத் தரும். எப்படி இருந் தாலும் தீட்டப்பட்ட கத்தியின் மேல் நடப்பது போன்றதுதான் இந்தத் திசை முகப்பின் பலன்கள்.

இரண்டாம்எண்ணையும்பெயர்எண்ணை 2ஆம் எண்ணில் கொண்டவர்களும் தென்திசையை நோக்கி பிரதான முகப்பு அமைக்கவே கூடாது.

பதற்றம், தலைவலி, வயிற்று வலி என்பன ஏற்படும். அவ்வப்பொழுது விபத்துக்களில் சிக்கிக்கொள் ளாமல் இந்த வீட்டில் உள்ளவர்கள் வெற்றியை மட்டும் பெற வேண்டுமானால் நீதி, நேர்மை, நியாயத்துடன் செயற்பட வேண்டும்.




# ஒரு தாய் மக்களா நாங்கள்?

தாயிடமிருந்து குழந்தைகளுக்குக் கடத்தப்படும் மரபணுவின் (டி. என்.ஏ) சங்கிலியைப் பிடித்துக் கொண்டு ஓடிய விஞ்ஞானிகள், மனிதர்கள் அனைவருமே ஆப்பிரிக்காவில் வாழ்ந்த ஒரு தாயின் மக்கள்" என்கிறார்கள்.

உலகம்முழுவதும்பல்வேறு இடங்களில்கிடைத்த பழங்கால மனித உடல்களின் கல் படிவங்களை ஆராய்ந்த விஞ்ஞானிகள், ஆப்பிரிக்கக் கண் டத்தில் இருந்து சுமார் இரண்டு லட்சம் ஆண்டுகளுக்கு முன்பாகப் பிரிந்து உலகின் பல பகுதிகளுக்குச் சென்று வளர்ந்தவர்களே மனி தர்கள் என்று கூறுகிறார்கள் என்றால், நாம் எல்லோரும் ஒருவிதத்தில் ஒரு தாய் மக்கள் தான்.

### ஆபிரிக்க அம்மா

இன்றோ மனித இனம் ஆயிரத்துக்கும் மேற் பட்ட தேசிய இனங்களாகப் பரிணமித்திருக் கிறது. அந்த தேசிய இனங்களுக்கு உள்ளே பல்வேறு சமூகக் குழுக்கள் உள்ளன.

அமெரிக்க அரசு 'சென்டர் ஃபார் வேர்ல்டு விஷன்' எனும் ஒரு துறையை வைத்திருக் கிறது. அது கிறித்தவ மதப் பரப்புரைப் பணிகளுக்காக உலகம் முழுவதும் உள்ள சமூகக் குழுக்களைக் கணக்கெடுத்து வரு கிறது. அதன் ஆய்வுப்படி, உலக அளவில் 16,788 சமூகக் குழுக்கள் இருக்கின்றன.

"இந்தியத் துணைக்கண்ட மக்களைப் பற்றிய ஆய்வு மிகப் பழங்கால சமஸ் கிருத இலக்கியங்களிலேயே இருக்கி றது. ஆங்கிலேயர் கால ஆய்வுகள் 1806இல் ஆரம்பமாகின. 1881 முதல் 1941 வரையிலான மக்கள் தொகைக் கணக்கெடுப்புகளில் அவை விரிவ டைந்தன" என்கிறார் இந்திய மானுட வியல் நிறுவனத்தின் தலைவராக இருந்த கே. எஸ். சிங்.

உலக மொழிகளில் 617 மொழிகள் ஆசியா வில் இருப்பதாக ஓர் ஆய்வு சொல் கிறது. 1961 கணக்குப்படி, இந்தியா வில் மட்டும் அப்போது இருந்த மொழிகள் 1,652. அதிகார பூர்வ மொழிகளாக 22 அறிவிக்கப் பட்டாலும், அவற்றில் சமஸ்கிருத மும் சிந்தியும் குறிப்பிட்ட பகுதி யில் வாழும் மக்களால் பேசப் படாதவை. கொத்துக்கொத்தாக இத்தனை மொழிகள் பூத் திருக்கிற சமூகச் சூழல், ஆசி யாவுக்கு அடுத்தபடியாக ஆபி ரிக்காவில்தான் இருக்கிறது.

### சாதிகளின் மக்கள்

மனித சமூகத்தின் மற்றப் பகுதி களில் இல்லாத தனித்தன் மையாக சாதிமுறை இந்தியத் துணைக்கண்டத்தில்தான் இருக்கிறது. படிக்கட்டுகளின் தொகுதிகளாக சாதியச் சமூகத் தின் அமைப்பு முறை இருக்கி றது. சாதிப் படிநிலை ஏற்றத் தாழ்விலிருந்து ஆதிக்க சாதி களும் தப்பவில்லை. ஒவ் வொரு சாதிக்குள்ளும் ஏற்றத் தாழ்வுகள் உட்சாதிகள் பல இருந்தன.

ஆடை அணியும் காலகட்டத்துக்கு முன்பான சமூக நிலையில், இயற் கையின் குழந்தைகளாக இன்ன மும் அந்தமான் தீவுகளில் நிர்வாண மாக இருப்பவர் முதலாக உலகின் மிக நவீன வசதிகளை அனுபவிப்பவர் வரை இந்தியத் துணைக்கண்டத்தில் இருக்கி றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன காலத்தின் தாக்கத்தால் சாதிப் படிக்கட் டுகள் குலைகலத்தாலும்கூட, அவற்றின் அடித் தளம் இன்னும் முழுமையாக இடிந்து விட வில்லை.

இலங்கையில் தமிழர்களிடையே சாதியப் பிளவு தவிர தமிழ் சிங்கள முஸ்லிம் இனப் பிளவும் காத்திரமாக வேரூன்றி இருக்கிறது. இவர்களின் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்பதற்கு ஆபிரிக்கத் தாய் வரை சென்றுகூட நிரூபிக்க வேண்டியதில்லை. மகாவம்சம் போதும். விஜயனுக்கும் பாண்டிய இளவரசிக் கும் பிறந்தவர்கள்தான் சிங்களவர்கள் என்று மகாவம்சம் கூறுகின்றபோதும் தமிழர்களைக் கீழானவர்களாக நோக்கும் மனோநிலை இன் றும் பல சிங்களவர்களிடம் காணப்படுகிறது.

### கருத்தா? வாழ்நிலையா?

அறிவியல் ரீதியாக மனிதர்கள் எல்லோருமே ஒரு தாய் மக்களாக இருந்தாலும், இன்றைய அன்றாட நடைமுறையில் நாம் அவ்வாறு இல்லை. வெறும் பண்பாட்டு அடையாளங் களாக அல்ல, வேறுபட்ட வாழ்க்கை நிலை களாக நாம் வேறுபட்டுக் கிடக்கிறோம். வெறும் கருத்தாக அல்ல, வாழ்வின் யதார்த்தமாகவும் வேறுபட்டுக் கிடக்கிறோம்.

இத்தகைய சமத்துவமின்மை மனித சமூகத் தின் தனித்தன்மை. இவற்றுக்கு மத்தியில் பிணக்குகளைத் தீர்க்க முயன்றுகொண்டி ருக்கிறோம். நான் பெரிது நீ பெரிது அவன் தியாகி இவன் துரோகி என்றெல்லாம் கூறிக் கொண்டிருக்கிறோம். இனத்தின் பெயராலும் மதத்தின் பெயராலும் கொலைகளை, வன் முறைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கிறோம். பிறக்கும் எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே மாதிரியான கல்வி, வேலை, இதர சமூகப் பாது காப்புகள் கிடைத்துவிட்டால், சமூகநீதிக்கான தேவை பெரிய அளவில் எழாது. அவை இல் லாதபோது அதற்கான போராட்டங்கள் எழுவதையும் தவிர்க்க முடியாதுபோகும். அனைவருக்கும் சமூகநீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் மன்னராட்சிகளை ஒழித்து மக்களாட்சி கொண்டுவரப்பட்டது. ஆனால் மக்களாட்சியிலும் சமூகநீதி கிடைக்காத போது ஜனநாயகம் கேலிக்கூத்தாகிவிடும்.

### ஒரு தாயின் மக்கள்

ஒரு தாயின் மக்கள் என்ற சிறு குடும்பமாகத் தொடங்கிய மனித இனம் தங்களுக்குள் ஏற்பட்ட வேறுபாடுகளைக் களைந்து கொண்டே மீண்டும் ஒரு பெருங்குடும்பமாக இணையப்போகிற பாதையில்தான் பய ணிக்கிறது. அதற்கு இடையில்தான் ஆரியர் கள், திராவிடர்கள், இந்துக்கள், இஸ்லாமி யர்கள், ஆதிக்க இனம், ஒடுக்கப்பட்ட இனம் என்ற தற்காலிகப் பேருந்து நிறுத்தங்கள் எல்லாம் வந்துபோகின்றன.


ஒரு தாய் மக்கள் நாம் என்ற கருத்து முற்போக்கானதுதான். ஆனால், இன்றைய யதார்த்தத்தில் அதைப் பேசுவதிலும் மிகுந்த எச்சரிக்கை தேவை. அடித்தள மக்களின் குரல்வளைமீது நின்றுகொண்டு, பொத்தாம் பொதுவாக ஒரு தாய் மக்கள் நாம் என்று பேசக் கூடாது. பாதிக்கப்பட்ட மக்களின் உரிமை களை மீட்டுக்கொடுக்கும் வகையில் அதை விவாதிக்க வேண்டும். ஆதிக்க சக்திகளிடம் மனமாறுதல் வரும்படியாக அதைப் பேச வேண்டும்.

அனைத்து முற்போக்கு சக்திகளையும் ஒன்று திரட்டி ஜனநாயகத்தை வலுப்படுத்தும் வகை யில் அதைப் பேச வேண்டும். அப்படி நடக்கும் போது உண்மையிலேயே நாம் எல்லோரும் ஒரு தாய் வயிற்று மக்களாகிவிடலாம்.



# பயங்கரவாதிகளை ஒழித்துக்கட்ட ரஷ்ய அதிபர் உறுதி

ரெங்கன்



ரஷ்யாவில் அடுத்தடுத்து நிகழ்ந்துள்ள இரண்டு தற்கொலை குண்டுத் தாக்குதல்களில் 34 பேர் கொல்லப்பட்டிருப்பதுடன், இந்தச் சம்பவம் ரஷ்யாவில் சொச்சி நகரில் நடைபெற விருக்கும் குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டு விழாவுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் கருதப் படுவதனால் அதிபர் புட்டின் இந்த முடிவை எடுத்திருப்ப தாகக் கூறப்படுகின்றது.

ரஷ்யாவில் இயங்கிவரும் பயங்கரவாதிகள் முற்றாக ஒழிக்கப்படுவார்கள் என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் சூள் உரைத்துள்ளார். **ரஷ்யாவில் அடுத்தடுத்து நிகழ்ந்துள்ள இரண்டு தற்கொலை குண்டுத் தாக்குதல்களில் 34 பேர் கொல்லப்பட்டிருப்பதுடன், இந்தச் சம்பவம் ரஷ்யாவில் சொச்சி நகரில் நடைபெறவிருக்கும் குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டு விழாவுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் கருதப்படுவதனால் அதிபர் புட்டின் இந்த முடிவை எடுத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.**

தென் மாகாண நகரான வொல்கோதிராட்டின் பிரதான ரயில் நிலையத்தில் கடந்த ஞாயிறன்று நடந்த குண்டுவெடிப்பில் 18 பேர் கொல்லப்பட்டனர். பின்னர் ட்ரொலி பஸ் ஒன்றைத் தாக்கிய குண்டில் 16 பேர் கொல்லப்பட்டனர். 2011 ஆம் ஆண்டு வட காகோஸஸில் டொமொடே டோவோ விமான நிலையத்தில் நடந்த குண்டு வெடிப்பில் 37 பேர் கொல்லப்பட்ட சம்பவத்துக்குப் பின்னர் நடந்துள்ள பெரிய சம்பவமாகத் தற்போதைய சம்பவத்தைக் கொள்ளலாம்.

செசென்ய விடுதலை இயக்கத்தை முற்றாக முறியடிக்கப்போவதாகக் கூறியே விளாடிமிர் புட்டின் பதவிக்கு வந்தார். 1999 ஆம் ஆண்டு மாஸ்கோ நகரில் கட்டடத் தொகுதியொன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கு யார் பொறுப்பு என்று இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை. அதற்குப் பொறுப்பானவர்கள் முற்றாக ஒழித்துக்கட் டப்படுவார்கள் என்ற வாக்குறுதியின் மீது மக்கள் அவருக்கு தீர்ப்பு ஒன்றை வழங்கியிருந்தார்கள். ஆனால் இந்த வாரம் வொல்கோகிராட்டில் நடந்துள்ள சம்பவம் தமது நோக்கத்தில் புட்டின் தவறிவிட்டார் என்பதையே எடுத்துக்காட்டியுள்ளது. எனவே இச்சம்பவத்தினால் ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஆரம்பமாகவிருக்கும் காலப் பகுதி யில் பயங்கரவாதம் இன்னமும் செயற்பட்டுக் கொண்டே இருக்கிறது என்ற அச்சம் பரவத் தொடங்கியிருக்கிறது.

## புட்டினின் அணுகுமுறை

அதிபர் புட்டின் தோல்வியடைந்தமைக்கு அவரது அணுகுமுறையும் ஒரு காரணம் என்று கூறப்படுகின்றது.

இஸ்லாமிய செயற்பாட்டாளர்கள் மற்றும்செசென்யாவுக்கும் ஏனைய காகோஸியின் பிரதேசங்களுக்குச் சுயாட்சி கோரி நிற்பவர்களுக்குமிடையில் புட்டின் வேறுபாடு காட்டவில்லை. போராடும் செசென்யர்கள் அனைவருமே பயங்கரவாதிகள் தாம் என்று அவர் கருதுகிறார். அதனால் சகல பகுதிகளுக்கும் பாதுகாப்பை விஸ்தரித்துக் கொடூரமான எதிர் நடவடிக்கைகளை நியாயப்படுத்தினார். இதனால் செசென்யாவை நிர்மூலமாக்குவதில் வெற்றி கண்டார். அத்துடன் விடுதலைக்கு ஆதரவாக விளங்கிய சுதந்திர இயக்கத்தின் எச்சங்களும் அழிக்கப்பட்டன. என்றாலும் இஸ்லாமிய தீவிரவாதிகள் தொடர்ந்து இருக்கவே செய்தனர். அவர்கள் ரஷ்யர்களைக் குறி வைத்து மொஸ்கோ தியேட்டர், ஆரம்பப் பாடசாலைகள் அல்லது பொதுப் போக்குவரத்துக்கள் மீது தாக்குதல்கள் நடத்துகிறார்கள்.

'வொல்கோக்கிராட் முன்னர் லெனின் கிராட் என்று அழைக்கப்பட்டு வந்துள்ளது. இரண்டாம் உலகப் போரில் நாஸிகளை எதிர்த்துப் போராடியதில் இந்த நகருக்குப் பேரும் புகழும் உண்டு. இந்தத் தாக்குதலை யார் நடத்தினார்கள்? எதற்காக? என்பது இன்னமும் தெளிவாகத் தெரியாது போனாலும், நிச்சயமாக புட்டினுக்கு இது ஒரு பெரும் சவாலாகவே கருதப்படுகின்றது.

இன்னமும் ஆறு வார காலத்தில் ஆரம்பமாகவிருக்கும் சொச்சி குளிர்கால ஒலிம்பிக் விழாவானது புட்டினுக்குள்ள திறமையை வெளிக்காட்டுவதாக அமைய வேண்டும் என்பது ஏற்பாட்டாளர்களின் விருப்பம். பல்வேறு போராட்டங்களை எதிர்கொண்டு வந்துள்ள நிலையில் சர்வதேச விளையாட்டொன்றைச் சிறப்பாக நடத்தி முடிக்கக்கூடிய நிலைக்கு ரஷ்யா ஒரு முன்னேற்றகரமான நவீன நாடாக மாறியுள்ளது என்பதாக வெளி உலகுக்குக் காட்டிக்கொள்ள வேண்டிய நிலையில் புட்டின் தரப்பார் இருக்கின்றனர்.

ஜனநாயகப் போக்கிலிருந்து புட்டின் பின்வாங்கியுள்ளமையையும், ஓரினச் சேர்க்கை தொடர்பான அவரது அரசின் சட்ட கால நடவடிக்கைகளையும் பல மேற்கத்திய நாடுகளும் ஊடகங்களும் கண்டித்து வந்துள்ளன. என்றாலும் ரஷ்யாவின் எதிர்கால சந்ததியினரின் முற்போக்கை உத்தேசித்து சொச்சி ஒலிம்பிக் விழாவை அதில் கலந்து கொள்ளவிருக்கும் நாடுகள் தவிர்த்துவிடலாகாது.

### குளிர்கால ஒலிம்பிக் சுமுகமாக நடைபெற ஏற்பாடு

## புட்டினின் புதிய பாதுகாப்பு ஏற்பாடு

ரஷ்யாவில் முக்கிய மக்கள் போக்குவரத்து அதிகமாக உள்ள இடங்களுக்கு மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு புட்டின் திங்கட்கிழமை உத்தரவுகள் பிறப்பித்தார். வொல்கோகிராட் நகரின் வீதிகளுக்கும் மேலதிக பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வொல்கோகிராட் நகரம் சொச்சிக்கு 690 கி.மீற்றர் தொலைவில் இருக்கிறது. அந்த நகரின் போக்குவரத்துக்களை 5 ஆயிரம் காவலர்கள் கண்காணிப்பிலும், பரிசோதனைகளிலும் ஈடுபட்டிருப்பதை செவ்வாய்க்கிழமை காண முடிந்தது என்று பார்வையாளர்கள் அறிவித் துள்ளனர்.

## வடகொரியா மீண்டும் பயமுறுத்துகிறது

வடகொரியத் தலைவர் கிம். ஜொங்.உன் மீண்டும் அணு ஆயுதப் போர் பற்றிய எச்சரிக்கையை விடுத்துள்ளார். போர் ஒன்று வெடித்தால், கொரிய வளைகுடா பெரும் அணு சக்தி அழிவுக்குட்பட்டுவிடும் என்று கூறியுள்ள ஜொங் -உன் ஒரு மோதல் ஏற்பட்டால் அமெரிக்கா பத்திரமாக இருக்காது என்றும் எச்சரித்தார்.

புதுவருடப்பிறப்பையொட்டி வடகொரியத் தலைவர் விடுத்த செய்தியில் இதைத் தெரிவித்தார்.

நாம் ஓர் அபாயகரமான சூழ்நிலையில் இருக்கின்றோம். தற்செயலாக ஒரு சம்பவம் நிகழ்ந்தாலும் மாபெரும் போராக அது விரிவடையும் என்றார் அவர். ஏழ்மையிலுள்ளவர்களைத் தாம் பாதுகாப்பார் என்று கூறிய ஜொங்-உன், வடகொரியா அணு ஆயுதங்களுடன் பலமான தற்காப்பு நிலையில் இருக்கிறது -என்றார்.

அண்மையில் கொலைத் தண்டனை விதிக்கப்பட்ட தனது மாமனும் கட்சியில் மிக முக்கிய புள்ளியாக விளங்கியவருமான ஜாங் -சொங் -தாஎக் கொலை செய்யப்பட்டதை வரவேற்றவடகொரியத் தலைவர், அது ஒரு தீர்க்கமான செயற்பாடு என்று பாராட்டினார். ஊழல் சக்திகள் கடந்த ஆண்டில் கட்சியிலிருந்து ஒழிக்கப்பட்டன என்றார். ஆளும் கட்சியில் தனக்கென ஓர் அதிகார மையத்தைக் கட்டியெழுப்ப முயன்றவர் அவர் என்றும் சொன்னார்.

## ஜப்பானிய மருத்துவ முறைகள் அறிமுகம்

மருத்துவ மையங்கள் பலவற்றை உலகெங்கும் நிறுவுவதற்கு ஜப்பானிய அரசு தீர்மானித்துள்ளது.

பெரும்பாலும் ஆசிய நாடுகளிலும் மத்திய கிழக்கிலும், இந்த மருத்துவ மையங்கள் நிறுவப்படும். மருத்துவ வசதிகள் மற்றும் சேவைகள், புற்றுநோய் சிகிச்சை நிலையங்கள் உள்ளடங்கலாக இந்த நாடுகளில் மருத்துவ மையங்கள் நிறுவப்படும். 2020 ஆம் ஆண்டளவில் 16 நாடுகளில் இந்த மையங்கள் பணியாற்றும் . அதற்காக பயிற்சி பெற்ற மருத்துவர்களும் அங்கு அனுப்பப்படுவார்கள். தொலைவிலிருந்தே விம்ப பகுப்பாய்வுகள் செய்யும் முறையும் இவைகளில் அறிமுகப்படுத் தப்படுமாம்.

ஜப்பானிய மருத்துவ நிபுணத்துவத்தையும் , கருவிகளையும் உலகில் அறிமுகப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த மையங்கள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்டத்தில் ஒரு பில்லியன் யென் (சுமார் 9.5 மில்லியன் யு'.எஸ்.டொலர்) ஒதுக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறவிக் கடற்சிங்கம்!

கடற்சிங்கங்களில் இது அபூர்வமானது. இதன் பெயர் மாங்க் சீல் (அதாவது துறவிக் கடற்சிங்கம்) மத்திய தரைக்கடல் பகுதியில் உள்ள கபோபிளாங்கோ தீபகற்பப் பகுதியில் இவை காணப்படுகின்றன. மேற்கு சகாரா மொரிடானியா கடல் எல்லைப் பகுதிகளிலும் இவைகளைப் பார்க்க முடியும்.

8 அடி நீளம் வரை வளரும் இந்தத் துறவிக் கடற்சிங்கங்கள் 250 முதல் 300 கிலோ வரை எடை கொண்டவையாக இருக்கும். இவற்றின் இனம் இன்று 500க்கும் சற்று கூடுதலான அளவிலே தான் இருக்கிறது. கடல் நீரில் மனிதர்கள் இருந்தால் உடனடியாக இந்தக் கடற்சிங்கங் கள் அதை உணர்ந்து கொள்கின்றன. இவை பெரும்பாலும் மற்ற பிராணிகளுக்குத் தொந்தரவு தராமல் வாழ்வதால்தான் இவற்றுக்கு. துறவிக் கடற்சிங்கங்கள் என்று பெயர் சூட்டியுள்ளனர்.





# நான்கு வகை கவிகள்

ஆசுகவி- மற்றவர் புகழ்பாடி அவர்கள் உதவி நாடுபவர்கள்

மதுரகவி - மொழி நயத்துடன் கூடிய இனிய கவி பாடுபவர்

சித்திரகவி - கவிதை வரிகளால் கவி பாடுபவர்

வித்தாரக் கவி - ஏதோ ஒரு பொருள் பொருள் பற்றி விரித்துக் கவி பாடுபவர்.

சோ.மைத்திரி, தரம்-9,
யா/சாவகச்சேரி இந்து கல்லூரி.

## விடை தெரியுமா ? 244

### உங்களுக்கும் பரிசுகள்

1. இலங்கையில் செய்மதி தகவல் தொடர்பு நிலையம் அமைந்துள்ள இடம்?
2. இலங்கையின் இணையக்குறி என்ன?
3. காகிதத்தை முதல் முதல் கண்டுபிடித்த நாடு எது?
4. மனித உடலில் மிகப்பெரிய உறுப்பு எது?
5. இலங்கையில் ஊடகத்துக்கான சர்வதேச விருது முதல் முதலில் எந்த ஊடகத்துக்குக் கிடைத்தது?

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடைகள் 242


1. நெல்சன் மண்டேலா
2. சீனா
3. கொலம்பியா
4. ஜப்பான்
5. நியூசிலாந்து

### விடை தெரியுமா?

தெரிந்தால் 11.01.2014 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 பெறுமதியான பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### வெற்றி பெற்றவர் விவரம் (242 )


♥ஜெ.அர்ச்சுனன், தரம்-7எவ், யா/ இந்துக் கல்லூரி
♥அ.மயூரி, தரம்-7, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.



எ.கீர்த்தனா, தரம்-4
மல்லாகம் விசாலாட்சி வித்தி.



த.அனுஜிற்றா, தரம்-2
புனித யோன் பொஸ்கோ வித்தி.



எஸ்.சாத்வீகன், தரம்-2பி
யாழ்ப்பாணக் கல்லூரி

## பொது அறிவு

- ஒன்பது நிறங்களைக் கொண்ட பறவை
  பித்தா
- சீனப் பெரும் சுவரைக் காட்டிய மன்னன்
  ரிசன்சி
- வயிற்றில் அதிக காலம் கருவை சுமக்கும் விலங்கு
  யானை
- யூதர்களுடைய நாடு
  இஸ்ரேல்
- லண்டனில் பூமிக்கடியில் ஓடும் ரயில்
  டியூப் ரயில்
- வேகமாகப் பறக்கும் பறவை
  புறா
- சிகிரியாக் கோட்டையைக் கட்டிய மன்னன்
  காசியப்பன்
- இலங்கையின் தேச பிதா
  டி.எஸ்.சேனநாயக்க

த.கேமிஷா தரம் 7 'ஏ'
ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்



# ஏழு வர்ணம்

நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னர் உலகத்தில் பறவைகள் இருந்தன. ஆனால், அவை யாவுமே ஒரே வண்ணத்தில் இருந்தன. இப்போது காணப் படுவது போல் சிவப்பு, பச்சை, மஞ்சள் வண்ணத்தில் இல்லை. சொல்லி வைத்தது போல் சகல பறவைகளும் சாம்பல் நிறத்தில் இருந்தன.

ஒரு வசந்த காலத்தில், பறவைகளின் அரசன் பறவைகளுக்கு அழைப்பு விடுத்தது. அந்த அழைப்பை ஏற்று சகல பறவைகளும் அரசன் முன்னால் கூடின. கூட்டமாக கூடி வந்த பறவைகளில் சில கூவின. சில பறவைகள் அகவல் ஒலி எழுப்பின. சில கிரீச்சிட்டன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான ஒலி எழுப்பி மகிழ்ந்தன. சில பறவைகள் சில மீற்றர் வரை பறந்தன. சில தத்தி தத்திநடந்தன. சில நொண்டிச் செல்வது போல் நகர்ந்தன. சில பெரிய மனிதர்போல் கம்பீரமாய் உலவின. அவைகள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தன.

அரசப் பறவை, அவர்கள் எல்லாரையும் ஒரு முறை தனது கண்களைச் சுழற்றிப் பார்த்தது. பின்னர் ஓர் இறக்கையை வானத்தை நோக்கி திருப்பியது. உடனே சகல பறவைகளும் வானத்தை அண்ணாந்து பார்த்தன.

-ஆகா! வானத்தில் ஒரு பெரிய வானவில் தோன்றியது. அதன் வண்ணங்களைப் பார்த்து பறவைகள் ஆச்சரியப்பட்டன. ஊதா, கருநீலம், பச்சை, மஞ்சள், காவி, சிவப்பு என்று அவைகள் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தன.

- எழில் மிகு ஏழு வண்ணங்களைப் பார்த்து சில பறவைகள் வாயடைத்துப்போய் நின்றன. ஏனென்றால், அப்படி ஓர் அழகான பெரிய வானவில்லை அவைகள் அதுவரை பார்த்ததே இல்லை. உங்கள் ஒவ்வொருவருக்கும் நான் ஒரு நிறத்தைக் கொடுக்கப்போகிறேன். உங்களுக்கு எந்த நிறம் பிடிக்குமோ அதை நீங்கள் வானவில்லில் இருந்து எடுத்துக் கொள்ளலாம், என்று அனுமதி வழங்கியது பறவைகளின் அரசன். அடுத்த வினாடி அங்கு ஒரு தள்ளு முள்ளு ஏற்பட்டது. ஒவ்வொரு பறவையும் தனக்குத் தனக்குப் பிடித்தமான நிறத்தைப் பறிக்கமுயன்றன. எனவே, அவைகள் மற்றப் பறவையைத் தள்ளிவிட்டுமுன் வந்தன. அதனால் ஏகப்பட்ட குளறுபடி உண்டாயிற்று. ஒரு கிளி முன்னால் வந்தது, எனக்குப் பச்சை வர்ணமே பிடிக்கும், என்று சொல்லி அது பச்சை நிறத்தைப் பெற்றுக் கொண்டது. அதனால் கிளி செழிப்பான ஒரு மரத்தின் பெரிய இலை போல் காணப்பட்டது.

ஒரு குருவி ஓடி வந்தது. அது, எனக்கு மஞ்சள் நிறம்தான் பிடிக்கும், என்று கிரீச்சிட்டது. பின்னர் அது மஞ்சள் நிறத்தை அணிந்து கொண்டது. அதை எல்லாரும் மஞ்சள் குருவி என்று அழைத்தனர்.

-எல்லோரையும் தள்ளி விட்டப்படி ஒரு குருவி முன்னால் வந்தது. அது, எனக்கு சிவப்பு வர்ணமே விருப்பமானது, என்று சொல்லி அந்த நிறத்தைப் பெற்றுக் கொண்டது. அதை எல்லாரும் செங்குருவி என்று அழைத்தனர்.

-இப்படிச் சகல பறவைகளும் தாங்கள் தாங்கள் விரும்பிய நிறத்தைப்பெற்றுக் கொண்டன. ஆனால், ஒரே ஒரு சின்னஞ்சிறிய குருவி மட்டும் தனக்கு நிறம் கிட்டாமல் நின்று கொண்டிருந்தது. அதனால் மற்றவர்களைத் தள்ளி விட்டு முன்னால் வரமுடியவில்லை.

-அரசபறவை அந்தக் குருவியைப் பார்த்தது. சின்னஞ்சிறு பறவையே! நீ ஏன் அமைதியாய் அங்கே நிற்கிறாய்? மற்றவர்களைப் போல் நீ ஏன் வர்ணம் கேட்க வில்லை? என்று கேட்டது. வரிசையில் எனது முறை வரும் என்று நான் காத்திருந்தேன், என்று சொன்னது அந்த சின்னஞ்சிறு சிறிய பறவை. எல்லா நிறங்களும் முடிந்துவிட்டதே! என்ன செய்வது? என்றது அரசப் பறவை. அதைக் கேட்டதும், அந்த சின்னஞ்சிறு பறவை கண்ணீர் விட்டது. அப்படியானால் நான் எப்போதும் இந்தச் சாம்பல் நிறத்தில் தான் இருக்க வேண்டுமா? என்றது.

-சின்னஞ்சிறு பறவையே, நீ மற்றவர்களுக்கு விட்டுக் கொடுத்து மிகவும் பொறுமையைக் கடைப்பிடிக்கிறாய்! இப்படிப்பட்ட நீ எப்போதும் சாம்பல் வர்ணத்தில் இருத்தல் கூடாது, என்று சொன்ன அரச பறவை, சகல பறவைகளையும் திருப்பி அழைத்தது. ஒவ்வொரு பறவையிடம் இருந்தும், அது கொஞ்சம் வர்ணத்தை எடுத்து, அந்தச் சிறிய பறவைக்குக் கொடுத்தது. அதனால் அந்த சின்னஞ் சிறிய பறவை, இப்போது மிகவும் அழகாய்க் காணப்பட்டது. அதைப் பார்த்து மகிழ்ந்த பறவையின் அரசன், அதற்கு பஞ்சவர்ணக் கிளிஎன பெயர் வைத்தான்.

-இப்போது சகல பறவைகளும் அந்தச் சிறிய பறவையைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தன. ஏனென்றால், அதுதான் பறவைகளில் எல்லாம் மிக மிக எழிலுடன் திகழ்ந்தது..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையே நடந்த சந்திப்பே அந்த முக்கிய நிகழ்வு. புதுவருடம் பிறந்து அடுத்த நாளே ஜனாதிபதியின் அவசர அழைப்பின் பேரில் அலரி மாளிகைக்குச் சென்று அவரைச் சந்தித்துப் பேசியிருக்கிறார் வடக்கு மாகாண முதல்வர். வருடம் பிறந்து, ஜனாதிபதி மஹிந்த முதன் முதலில் சந்தித்துப் பேசிய முக்கிய நபராகவும் விக்னேஸ்வரன் உள்ளார்."





# தடைகளை உடைக்குமா

## மஹிந்த - விக்கி சந்திப்பு

அதிரன்

புதியதோர் ஆண்டு உதயமாகியிருக்கிறது. இந்தப் புதிய ஆண்டில் புதிய கனவுகளுடனும், புதிய இலக்குகளுடனும் அவரவர் தத்தம் வாழ்க்கையை நகர்த்துவதற்கு திட்டமிட்டிருக்கிறார்கள். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது முதுமொழி. அந்த முதுமொழிக்கு ஒப்ப, புதிய ஆண்டில் புதிய வாழ்வொன்று தமக்குக் கிடைக்க வேண்டும் என்றே புதுவருட தினத்தில் ஆலயங்களில் கூடும் மக்கள் தமக்குள் வேண்டிக் கொள்கிறார்கள்.

ஆண்டுகள் பல உருண்டோடிக் கொண்டிருக்கின்றபோதும், எந்தவொரு முன்னேற்றமும் இல்லாமல் தமிழர்களின் இனப்பிரச்சினை நீண்டு கொண்டே செல்கிறது. பல புதிய ஆண்டுகளைக் கடந்து வந்துள்ளபோதும் தமிழர்களுக்கு விடிவு இன்னும் கிட்டவில்லை. 30 ஆண்டுகளுக்கு மேலாக நீண்டு செல்லும் தமிழர் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான செயற்பாடுகளில் யாரும் இதய சுத்தியுடனும், அர்ப்பணிப்புடனும் செயற்பட்டதாக இல்லை. அவரவர் தத்தம் விருப்பு, வெறுப்புகளுக்கு ஏற்பவும், பதவிக் கதிரைகளைத் தக்க வைக்கவும் தமிழர் பிரச்சினையைப் பாவித்துக் கொள்கிறார்கள்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வொன்று கிட்டாமல் இருப்பதற்கு இதுவே ஒரு முக்கிய காரணம் என்று கூறலாம். அந்தளவுக்கு பலர் தமிழர்களின் இனப் பிரச்சினையில் தாங்கள் தாங்கள் குளிர் காய்ந்துகொண்டு இருக்கிறார்கள்.

பிறந்துள்ள புதிய ஆண்டிலாவது விடிவு கிடைக்க வேண்டும் என்ற மன அங்கலாய்ப்புடனும், எதிர்பார்ப்புடனும் தமிழ் மக்கள் இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக இடம்பெயர்ந்து 25 வருடங்கள் கடந்துள்ள போதும் தமது நிலத்தையும் இல்லிடங்களையும் ஏறெடுத்துக் கூடப் பார்க்க முடியாத நிலையில் பல குடும்பங்கள் இன்னும் அகதி வாழ்வைத் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. குறிப்பாக வலி. வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த ஆயிரக் கணக்கான குடும்பங்கள் இன்னமும் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாமல் அல்லற்படுகின்றன. அவர்கள் அகதி முகாம்களில் அனுபவிக்கும் வேதனைகள், துன்பங்கள் சொல்லில் அடங்காதவை. புதிய ஆண்டிலும் அவர்களின் துன்பங்கள் முடிவு இன்றி நீண்டுகொண்டே செல்கின்றன.

இந்த ஆண்டிலாவது ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிட்ட வேண்டும் என்று பலரும் எதிர்பார்க்கிறார்கள்.

அந்த எதிர்பார்ப்புக்கு அத்திபாரம் இடும் வகையில் முனைப்புக்களை மேற்கொள்ள வேண்டிய தேவையும் அவசியமும் தமிழர்களின் பிரதிநிதிகளாக செயற்படுபவர்களுக்கு உண்டு என்பதை அவர்கள் ஒருபொழுதும் மறந்துவிடக் கூடாது.

இவ்வாறான ஒரு நிலையில் புதுவருடத்துக்கு அடுத்தநாள் இடம்பெற்ற முக்கிய நிகழ்வொன்று பலராலும் கூர்ந்து நோக்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், வடக்கு மாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரனுக்கும் இடையே நடந்த சந்திப்பே அந்த முக்கிய நிகழ்வு. புதுவருடம் பிறந்து அடுத்த நாளே ஜனாதிபதியின் அவசர அழைப்பின் பேரில் அலரி மாளிகைக்குச் சென்று அவரை சந்தித்துப் பேசியிருக்கிறார் வடக்கு மாகாண முதல்வர். வருடம் பிறந்து ஜனாதிபதி மஹிந்த முதன் முதலில் சந்தித்துப் பேசிய முக்கிய நபராகவும் விக்னேஸ்வரன் உள்ளார். வடக்கு மாகாண சபையை நகர்த்திச் செல்வதில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகள், சிக்கல்கள் தொடர்பிலேயே இந்தச் சந்திப்பின்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் திடீர்ச் சந்திபபில் வடக்கு மாகாண சபை குறித்த பல முக்கிய விடயங்களை ஜனாதிபதி மஹிந்தவிடம் முன்வைத்திருக்கிறார் வடக்கு முதல்வர். வடக்கு மாகாண சபையின் முக்கிய பதவிகளுக்கு அதிகாரிகளை நியமித்தல், மாகாண சபைக்குத் தேவையான நிதி வளத்தை ஏற்பாடு செய்தல், அரசமைப்பில் மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்துவதைத் தூண்டுதல் மற்றும் அதனையும் தாண்டி அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்குதல் உட்பட பல முக்கிய விடயங்கள் குறித்து ஜனாதிபதியும் வடக்கு முதல்வரும் இந்தச் சந்திப்பின் போது பேசிக் கொண்டுள்ளனர்.

அத்துடன் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் மாகாண சபையின் இயக்கத்தை சுமுகமாக நடத்துவதைத் தூண்டுவது குறித்தும் இந்தச் சந்திப்பின் போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பாக விதவைகள், இடம் பெயர்ந்தோர், பெற்றோரை இழந்தோர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஆகிய தரப்பினர் குறித்து மேலதிக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வது என்றும் இந்தப் பேச்சில் முடிவு எட்டப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் சுட்டிக்காட்டிய விடயங்கள் தொடர்பில் அதிக அக்கறை செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் தெரிவித்தார் என ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கை கூறுகிறது.

வடக்கு மாகாண சபையின் இயக்கத்துக்கு ஏற்படுத்தப்படும் தடைகள் குறித்து இதில் அதிகம் பேசப்பட்டதாக கூட்டமைப்புத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை அரசியல் களத்தில் இவ் வருடத்தின் ஆரம்பமே வடக்கு மாகாண சபை பற்றிய பேச்சுடன் தொடங்கியிருக்கிறது. இதனால் இந்தச் சந்திப்புப் பற்றி அரசியல் விமர்சகர்கள் பலவாறாக விமர்சிக்கின்றனர்.

எது எவ்வாறாயினும் தமிழர் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் தமிழ் மக்கள் அதிக எதிர்பார்ப்புடன் உள்ளார்கள். அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதாக ஜனாதிபதி - விக்னேஸ்வரன் இடையேயான இந்தச் சந்திப்பு வழிவகுக்க வேண்டும்.

தடைகளைப் பேசித் தீர்த்துக் கொள்வதில் தவறு ஏதும் இல்லை. ஆயினும் அந்தப் பேச்சுக்கள் இதய சுத்தியுடனும் நேர்மையுடனும் நடைபெற வேண்டும். அதில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

மக்களின் மனங்களை வெல்லக்கூடிய வகையில் அர்த்தமுள்ள செயற்பாடுகளை அரசு முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் அரசியல் இலாபங்களுக்காக தமிழர் பிரச்சினையைத் தொடர்ந்தும் பயன்படுத்த முற்பட்டால் அதன் விளைவுகள் நாட்டை மீண்டும் ஒரு பாரதூரமான நிலைக்கே இட்டுச் செல்லும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் திருநாளாம்

# தைப்பொங்கல் முதல்

# சூரியகாந்தி

**புதிய தகவல்கள்,**

**சுவாரசியமான அம்சங்களைத் தாங்கி**

**வர்ணப் பக்கங்களுடன்**

## உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

அனைத்துப் பாகங்களிலுமுள்ள

உதயன் பத்திரிகை

விநியோக முகவர்களிடமும்

கிடைக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டெழுமா இலங்கை அணி?



பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரில் மோசமான பெறுபேற்றை வெளிப்படுத்தியிருந்ததோடு தொடரையும் பாகிஸ்தான் அணிக்குத் தரைவார்த்துள்ளது இலங்கை அணி.

5 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரை பாகிஸ்தான் அணி 3:2 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றி வெற்றது. அடுத்து நடந்த இரு ஆட்டங்களிலும் இலங்கை அணி மோசமாகத் தோல்வியைத் தழுவியிருந்தது.

இந்தத் தொடர் பாகிஸ்தான் அணிக்குச் சிறப்பாக அமைந்திருந்தது. பாகிஸ்தான் அணியினர் துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பு என அனைத்திலும் திறமையாகச் செயற்பட்டனர். மூன்றாவது மற்றும் நான்காவது ஆட்டங்களில் பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சு மெச்சத்தக்க வகையில் அமைந்திருந்தது. மாறாக இலங்கை அணியோ கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போன்று எதிலுமே பிரகாசிக்கத் தவறியிருந்தது.

இலங்கை அணியின் பந்து வீச்சு இந்தத் தொடரில் மிக மோசமாகக் காணப்பட்டது என்று கூறினால் மிகையாகாது. பந்துவீச்சாளர்கள் ஆட்டத்தின் ஆரம்பத்தில் இலக்குகளைக் கைப்பற்றத் தவறுவதுடன், தாராளமாக ஓட்டங்களையும் அள்ளிக் கொடுக்கின்றனர். இலக்குகளைக் கைவசம் வைத்திருக்கும் பாகிஸ்தான் அணியோ ஆட்டத்தின் இறுதியில் இலங்கைப் பந்துவீச்சாளர்களை துவம்சம் செய்தனர்.

இலங்கைப் பந்துவீச்சாளர்களில் அனுபவம் வாய்ந்த வீரர்களோ அல்லது புதிதாக இணைக்கப்பட்ட பந்துவீச்சாளர்களோ சிறப்பான பெறுபேறு எதனையும் வெளிப்படுத்தவில்லை.

இலங்கை அணியின் துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரையில் சொல்வதற்கு ஒன்றுமே இல்லை. குறிப்பிட்ட சில வீரர்கள் ஆட்டமிழந்தால் இலங்கை அணியின் ஆட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு விடும் என்ற நிலையே காணப்படுகின்றது. பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களும் அதை நன்கு புரிந்து வைத்துக் கொண்டுள்ளார்கள். அவ்வாறான வீரர்களை இனங்கண்டு அவர்களைப் பெவிலியன் அனுப்புவதில் குறியாக இருந்து அதனைச் சாதித்து வெற்றியையும் பெற்றுக் கொண்டுள்ளனர். அத்தகைய நுட்பத்துடன் கூடிய பந்து வீச்சு இலங்கை அணியிடம் காணப்பாடாமை கவலைக்குரிய ஒன்றே.

அதேவேளை, இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸின் அணித் தலைமை குறித்தும் கேள்வி எழுப்பப்படுகின்றது. அணித் தலைவர் பொறுப்பில் மத்தியூஸ் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தத் தவறுகின்றார் என்று விளையாட்டு நோக்கர்கள் மத்தியில் கருத்தோட்டம் ஒன்று உருவாகியுள்ளது. சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு அணியை கட்டமைப்புக்குள் கொண்டுவருவதில் மத்தியூஸ் சிரமங்களை எதிர்கொள்கின்றார். அதேபோன்று முக்கிய தருணங்களில் அணியின் களத்தடுப்பு வியூகங்களை மாற்றியமைப்பதிலும் அவர் சிரமத்தை எதிர்கொள்கின்றார். அணியில் மூத்த வீரர்கள் இருக்கும் காலகட்டத்தில் இவ்வாறான பிரச்சினைகளை அவர்களின் துணையோடு மத்தியூஸ் எதிர்கொள்ள முனைவது தான் புத்திசாலித்தனம்.

இலங்கைக் கிரிக்கெட் சபையின் அண்மைக்கால நடவடிக்கைகளின் காரணமாக இலங்கை அணி குறித்த காலப்பகுதிக்குள் அதிகளவிலான ஆட்டங்களில் பங்கெடுக்கவில்லை. இந்திய அணிக்கு எதிரான தொடர், மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடர், தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடர் என்பன இலங்கைக் கிரிக்கெட் சபையால் அண்மைக் காலங்களில் பிற்போட்டன. சிம்பாப்வே அணிக்கு எதிரான தொடர் அந்த நாட்டால் பிற்போடப்பட்டது. இத்தகைய காரணங்களால் 2013 ஆம் ஆண்டில் இலங்கை அணி போதிய ஆட்டங்களில் பங்குபெற்றிருக்கவில்லை. இலங்கை அணியின் தற்போதைய தடுமாற்றத்துக்கு இதுவும் ஓர் காரணமாக அமையக் கூடும்.

பாகிஸ்தான் அணிக்கெதிரான தொடரில் இலங்கை அணி பெற்றுக் கொண்டுள்ள மோசமான தோல்வியை அடுத்து அணியில் மாற்றங்களை ஏற்படுத்த இலங்கைக் கிரிக்கெட் சபை முடிவு எடுத்துள்ளது என்று தெரியவருகின்றது. அதன் பலனாக வேகப் பந்து வீச்சாளர் லசித் மலிங்க அணியில் இருந்து தூக்கப்படவுள்ளார் என்று கூறப்படுகின்றது. அவருடைய அண்மைக் காலப் பெறுபேறுகள் சிறப்பாக அமையாத காரணத்தாலேயே கிரிக்கெட் சபையின் பார்வையில் முதலாவது நபராகச் சிக்கிக் கொண்டுள்ளார் லசித்.

கிரிக்கெட் சபையைப் பொறுத்தவரையில் லசித் மலிங்க மற்றும் திஸர பெரேரா ஆகியோரிடம் அண்மைக்காலமாக அர்ப்பணிப்புத் தன்மை இல்லை என்று கருதுகின்றது. லசித் மலிங்கவுக்கு உடற்தகுதி தொடர்பான பிரச்சினைகள் காணப்படுகின்றபோதும் அது தொடர்பான பயிற்சிகளில் அவர் முனைப்புடன் கலந்துகொள்வதில்லை என்றும் கூறப்படுகின்றது. இந்தநிலையில் அவரை அணியில் இருந்து தூக்கி விட்டு இளம் வீரர் ஒருவரை இணைத்துக் கொள்வதற்கு கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

அணி வீரர்களைத் தவிர இலங்கையின் துடுப்பாட்டப் பயிற்சியாளர் மாவன் அத்தப்பத்து மற்றும் களத்தடுப்பு பயிற்சியாளர் றுவான் கல்பகே ஆகியோர் மீதும் கிரிக்கெட் சபை அதிருப்தியுடன் உள்ளது என்றும் தெரியவருகின்றது. அவர்கள் குறித்த கிரிக்கெட் சபையின் நகர்வுகளை பொறுத்திருந்தான் பார்க்க வேண்டும்.

2014 ஆம் ஆண்டில் இலங்கை அணி சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்த வேண்டுமானால் அந்த அணியில் உடனடி மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். இலங்கை அணிக்கான பயிற்சி ஆட்டங்கள் அதிகமாக்கப்பட்டு தோல்விகளாலும், நிர்வாகப் பிரச்சினைகளாலும் சோர்ந்து போயுள்ள வீரர்களுக்கு புத்துயிர் அளிக்கும் முயற்சிகளை கிரிக்கெட் சபை ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளும் உடனடி மாற்றங்களே இலங்கை அணி கைவிட்ட தனது இடத்தை மீண்டும் எட்டிப் பிடிக்க உதவும் என்பது திண்ணம்.



## விடிய விடிய ஆடிய கோஹ்லி

பிரபல நடிகை அனுஷ்கா கொடுத்த புத்தாண்டு விருந்தில் விடிய விடிய ஆட்டம் போட்டுள்ளார் விராட் கோஹ்லி.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடிய இந்திய அணி, கடந்த 31ஆம் திகதி இரவு மும்பை விமான நிலையத்தில் வந்திறங்கியது.

வீரர்கள் அனைவரும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஹோட்டலுக்கு சென்றனர். ஆனால் கோஹ்லி மட்டும் பிரபல நடிகை அனுஷ்காவின் வீட்டுக்கு சென்றுவிட்டார்.

கோஹ்லி, அனுஷ்கா மற்றும் அவரின் இரண்டு நண்பர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

விடிய விடிய விருந்து நடந்துள்ளது, மறுநாள் மதியம்தான் கோஹ்லி அங்கிருந்து சென்றுள்ளார்.

இதுகுறித்து அனுஷ்காவோ, நான் கோஹ்லியை 'டேட்' செய்யவில்லை, அவர் எனது நல்ல நண்பர். இரண்டு பேர் நண்பர்களாக இருந்தால் அவர்களின் வீட்டுக்கு செல்ல தான் செய்வார்கள் என்று தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 05 01 2014 ஞாயிற்றுக்கிழமை

# கனடாவில் ராதிகா ஏற்படுத்தும் பரபரப்பு

● வினோதன்


கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன் கடந்த வாரம் இலங்கை வந்திருந்தபோது அவரைச் சுற்றி பரபரப்பான செய்திப் புனைவுகள் மேற்கொள்ளப்பட்டன. அவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார் என்றும், அவரைக் கைது செய்யப் போகிறார்கள் என்றும் செய்திகள் கசிய விடப்பட்டன.

ராதிகா தனிப்பட்ட பயணமாகத்தான் இலங்கை வந்திருக்கிறார் என்பதை கனேடியத் தூதரகம் ஆரம்பம் முதலே கூறியிருந்தது. வந்த இடத்தில் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனையும் வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனையும் மன்னார் மாவட்ட ஆயரையும் சந்தித்திருந்தார்.

ராதிகாவின் தாயார் மாவிட்டபுரத்தையும் தந்தையார் வடமராட்சிப் பகுதியையும் சார்ந்தவர்கள். இதனால் வலி. வடக்குக்குச் சென்ற அவர், அங்கு வலி. வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தனின் உதவியுடன் சில இடங்களைச் சுற்றிப் பார்த்தார். தமது சொந்த இடங்களுக்கு இன்னமும் திரும்பிச் செல்லாமல் இருக்கும் மக்களில் சிலரையும் சந்தித்துப் பேசினார்.

இவையெல்லாம் அவர் ஏதோ அரசியல் ரீதியான உண்மைக் கண்டறியும் பயணத்தில் ஈடுபட்டிருக்கிறார் என்பதான தோற்றப்பாட்டை - விம்பத்தை - ஏற்படுத்தின.

ஆனால் தான் தனிப்பட்ட பயணமாகத் தனது உறவினர்களையும் தான் சிறுவயதில் வளர்ந்த இடங்களையும் பார்க்கவே அங்கு சென்றிருந்தேன் என்று ராதிகா பின்னர் அறிக்கையிட்டார்.



> “தனது உறவினர் களையும்தான் சிறுவயதில் வளர்ந்த இடங்களையும் பார்க்கவே அங்கு சென்றிருந் தேன் என்று ராதிகாஅறிக்கை யிட்டார்.”

தனது பயணம் பற்றித் தன்னிடம் விசாரணை நடத்திய அதிகாரிகள் தன்னைக் கைது செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம் என்று எச்சரிக்கை விடுத்திருந்தனர் என்று தனது பயணத்தின் நடுவில் ராதிகா தெரிவித்திருந்தார். எனினும் அத்தகைய கைதுஉத்தரவு எதுவும் அவருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை இலங்கை அதிகாரிகளுடன் தொடர்புகொண்ட கனேடிய தூதரக அதிகாரிகள் உறுதிப்படுத்தி ராதிகாவிடம் தெரிவித்திருந்தனர்.

தான் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார் என்று வெளியான செய்திகளை அவர் மறுத்துள்ளார். இணையத் தளங்களில் அந்தச் செய்தி வலம் வந்துகொண்டிருந்தபோது 'ரில்கோ' விடுதிக்குச் சொந்தமான வாகனத்தில் ராதிகா யாழ்ப்பாணத்தில் வலம் வந்துகொண்டிருந்தார்.

ஈழத் தமிழரும் எழுத்தாளரும் நோர்வே நாட்டில் வசிப்பவருமான வ.ச.ஜெயபாலன் அண்மையில் நாடு கடத்தப்பட்டமை மற்றும் தமிழகத்தின் இளம் பத்திரிகையாளர் தமிழ் மகா பிரபாகரன் நாடு கடத்தப்பட்டமை போன்ற நிகழ்வுகளை அடுத்து ராதிகாவின் பயணமும் அரசியல் சந்திப்புக்களும் இடம்பெற்றமையால் அவரும் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்படக்கூடும் என்ற எதிர்பார்ப்பில் பரபரப்பான செய்திகள் இணைய வானில் உலாவின. அண்மையில் ஆஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் இவ்வாறு நாடு கடத்தப்பட்டிருந்தமை ராதிகாவின் மீதான கவனக்குவிப்புக்கும் பரபரப்புக்கும் மற்றொரு காரணமாக அமைந்தது.

கொழும்பில் நடந்த பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை கனடாப் பிரதமர் புறக்கணித்திருந்தமை மற்றும் இறுதிப் போரின் போது நிகழ்ந்த மனித உரிமைகள் மீறல் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்றுக்கு கனடா வலியுறுத்துகின்றமை என்று எல்லாம் சேர்த்து ராதிகாவின் பயணம் சிக்கலில் மாட்டிவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியமையும் மற்றொரு காரணம்.

எந்த விதப் பிரச்சினையும் இன்றி ராதிகா கனடா திரும்பி விட்டார்.

அவரது பயணம் இலங்கையில் ஏற்படுத்திய அதிர்வுகளைவிட கனடாவில் உள்ள ஈழத் தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்திய அதிர்வுகளே அதிகமாக உள்ளன.

2015ஆம் ஆண்டில் கனேடிய நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ராதிகாவின் இலங்கைப் பயணம் கனடா வாழ் ஈழத் தமிழர்கள் மத்தியில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. ராதிகா சிற்சபைஈசன் போட்டியிடவுள்ள தொகுதியில் தானும் போட்டியிடப் போவதாக நகர சபை உறுப்பினர் லோகன் கணபதி அறிவித்துள்ளார். ஒரே தொகுதியில் இரு தமிழர்கள் வெவ்வேறு கட்சிகளின் சார்பில் போட்டியிடுகையில் மீண்டும் வெற்றியை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவை ராதிகாவுக்கு இருந்தது என்கிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா தான் அங்கம் வகிக்கும் புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு கடந்த தேர்தலில் வென்றவர். மீண்டும் அதே கட்சியில் அதே தொகுதியில் (ஸ்காபுரோ) போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளார். இதே தொகுதியில்தான் தானும் களமிறங்கப் போகிறார் என்று லோகன் கணபதியும் அறிவித்துள்ளார்.

இதற்கிடையில் ராதிகா கடந்த முறை போட்டியிட்ட தொகுதி அடுத்த தேர்தலில் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் அங்குள்ள தமிழ் வாக்குகள் பிரிந்துபோயுள்ள நிலையில், லோகன் கணபதியின் போட்டி ராதிகாவுக்கு மேலும் சவாலை ஏற்படுத்தியுள்ளது.

ராதிகா சிற்சபைஈசன் புலம்பெயர் தமிழர்களின் இரண்டாம் தலைமுறை அடையாளமாகவும் லோகன் கணபதி புலம் பெயர் தமிழர்களின் முதல் தலைமுறை அடையாளமாகவும் நோக்கப்படுகின்றனர். அவர்களின் அரசியல் நகர்வுகள்கூட இதனை மையம் கொண்டதாகவே இருந்து வருகின்றது.

இந்தச் சவால்களைச் சமாளித்து ஈழத் தமிழர்கள் அனைவரையும் தன் பக்கம் ஈர்த்து வைப்பதற்காகத்தான் ராதிகா திடீரென யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்தார் என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். ஆனால் ஒரு ஆண்டுக்கு முன்னர் ராதிகா இப்படிச் செய்யும் 'ஸ்டன்ட்' வேலைகளை மக்கள் நினைவில் வைத்திருந்து வாக்குப் போட மாட்டார்கள் என்று கூறுவோரும் உள்ளனர்.

ராதிகா மீது, தீவிர ஈழ ஆதரவு புலம்பெயர் அமைப்புக்களுக்குக் கடும் கோபம் உள்ளது. இலங்கையில் போர் தீவிரமடைந்திருந்தபோது கனடாவில் நடத்தப்பட்ட எந்தவொரு போராட்டத்திலும் அவர் கலந்துகொண்டிருக்கவில்லை என்பதனால் ஏற்பட்ட கோபம் அது. எதிர்காலத்தில் அவ்வாறின்றி ஈழத் தமிழ் அமைப்புகளின் போராட்டங்களில் தான் கலந்துகொள்வார் என்று கடந்த தேர்தலின் போது ராதிகா தமக்கு வழங்கிய வாக்குறுதியைத் தேர்தலில் வென்ற பின்னர் காற்றில் பறக்க விட்டுவிட்டார் என்றும் புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

இவற்றின் பின்னணியில்தான் கனடாவில் உள்ள தமிழர்கள் ராதிகாவின் இலங்கைப் பயணத்தை நோக்குகிறார்கள். அரசியலில் இவையெல்லாம் சாதாரணமப்பா என்று இதனை விட்டுவிடமுடியுமா?

“போர் முடிவடைந்து நான்கு வருடங்கள் கடந்தோடிப்போன நிலையில்... இடம்பெயர்ந்த மக்களில் பெருமளவானவர்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு விட்ட பின்னர்... வடமாகாண சபை உருவாக்கப்பட்டுள்ள சூழலில்... ராதிகாவுக்கு யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் தேவை ஏற்பட்டதை வேறு எப்படித்தான் அர்த்தம் கொள்ள முடியும்?" என்று கேட்கிறார் புலம்பெயர் வாசியான ஊடகர் ரமணன்.

“அரசியல் என்று வந்த பின்னர் இது போன்றவை தவிர்க்க முடியாதவை ஆனால் மக்களை கவரவும் அவர்களின் மனங்களை வெல்லவும் இந்த மாதிரியான பழைய உத்திகள் கைகொடுக்காது என்பது அவரை வழிநடத்தம் ஆலோசகர்களுக்கு வேண்டுமானால் தெரியாமல் இருப்பது நியாயம்... ஆனால் கனடாவில் பட்ட மேற்படிப்பு வரை படித்து நான்கு வருடங்கள் நாடாளுமன்ற ஆசனத்தை அலங்கரித்த ராதிகாவிற்குக் கூடவா தெரியாமல் போய்விட்டது? என்று சிலர் கேட்பதில் கூட நியாயம் இருக்கத்தானே செய்கின்றது" என்கிறார் அவர்.

---

## பழைய குருடி....

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்றார்கள் அப்படிச் செல்லும்போது, நாட்டில் உள்ள சிறைகள், தடுப்பு முகாம்கள், இராணுவ முகாம்கள் என்பவற்றுக்கு சென்று உங்கள் உறவினர்கள் இருக்கிறார்களா என்று கண்டறிந்து சொல்வோம் என சொற்களை போகிற போக்கில் உதிர்த்து விட்டுச் செல்வார்கள். அதையே நம்பிக் கொண்டு இவர்கள் இருக்கவேண்டியது தான். ஆணைக்குழுவினர் அறிக்கைகளை மட்டும் பக்கம் பக்கமாக எழுதிவிட்டு அடங்கி விடுவார்களே தவிர, ஏற்கனவே சொல்லி விட்டு சென்றது போல, சிறைக்கூடங்கள், தடுப்பு முகாம்கள், இராணுவமுகாம்கள் என்பவற்றை எட்டியும் பார்த்திருக்க மாட்டார்கள்.

இப்போது பழைய குருடி கதவை மறுபடி திறந்திருக்கிறாள். நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையையும் பரிந்துரையையும் கிடப்பில் போட்டுவிட்டு, காணாமாற்போனோரைக் கண்டறியும் ஜனாதிபதியின் ஆணைக்குழு சாட்சியங்களைப் பதிவு செய்ய வரவிருக்கிறது. இந்தப் பத்தியின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட குதிரையை நம்பி ஏமாந்தவனைப் போல , ஏற்கனவே நல்லிணக்க ஆணைக்குழுவிடம் சொல்லி மாய்ந்த கதைகளை மீண்டும் ஒருதடவை , விக்கிரமாதித்தனைப் போல சொல்வதற்கு தயாராகிறார்கள். காணாமற் போனோரைக் கண்டறியும் கண்டறியாத ஆணைக்குழு.உதெல்லாம் பம்மாத்து. என்று அவர்களுக்கு நன்கு தெரிந்தாலும், இழந்தவர்களை மீட்க வேண்டுமென்ற பேரவா , மண்குதிரைகளை நம்பி ஆற்றில் இறங்க வைக்கிறது.

இவர்களின் கண்ணீர்க் கதை கேட்டதும், காணமற் போனோரைக் கண்டறியும் ஆணைக்குழு வேதாளம் , விர்ரென்று பறந்து, முருங்கைக் மரத்தில் தொற்றிக் கொள்ளும். பின்னர் உண்மை ஆணைக்குழு என்ற பெயரில் அதே வேதாளம் வந்திறங்கும். விக்கிரமாதித்தர்களும், சாவித்திரிகளும் சலிக்காமல் தங்கள் கண்ணீர்க்கதைகளை கொட்டத் தொடங்குவார்கள். மீண்டும் கதை கேட்டி விட்டு வேதாளம் வேறு ரூபம் எடுக்க விரைந்து செல்லும். அது அடுத்த ரூபம் எடுத்து வந்து விடுப்புக் கேட்டாலும் காயாத கண்ணீரோடு உறவுகள் உண்மைகளைக் கொட்டி, இழந்தவர்களை மீட்க முடியும் என்ற அந்தரவெளி நம்பிக்கைகளை கெட்டியாகப் பிடித்தபடியே காலத்தை உருட்டுகிறார்கள் காணாமற் போனோரின் உறவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாங்க அழகாகலாம்



## பிரெஞ்சு ரோல் தலையலங்காரம்

தலைமுடியில் காண்பிக்கும் சின்னச் சின்ன வித்தியாசம்கூட, பெண்களைப் பேரழகாகக் காட்டும். அதனால், எப்போதுமே தலையலங்கார விடயத்தில் தனிக் கவனம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

நீளமான மற்றும் நடுத்தரக் கூந்தல் உள்ளவர்கள் இந்த தலையங்காரத்தை எளிதாக செய்து கொள்ளலாம்.

முதலில் முகத்தின் முன் பக்கத்தில் சிறிது முடியை எடுத்து அயர்ன் செய்து தொங்கவிடுங்கள்.






**படம் 1:**
படத்தில் காட்டியுள்ளதுபோல முன்பக்க முடியை சீவி, பஃப் செய்து,கொண்டை ஊசி கொண்டு குத்திவிடுங்கள்.

**படம் 2:**
இடது பக்கத்தில் இருந்து சிறிது முடியை எடுத்துச் சீவி, கொண்டை ஊசி பயன்படுத்தி குத்திவிடுங்கள்.

**படம் 3:**
இதேபோல வலது பக்கத்திலும் முடியை எடுத்து, கொண்டை ஊசி பயன்படுத்திக் குத்த வேண்டும்.

**படம் 4:**
மீதம் இருக்கும் பின்பக்க முடிகளை எல்லாம் ஒட்டுமொத்தமாகச் சீவி, படத்தில் காட்டியுள்ளது போல கையால் பிடித்துக் கொள்ளுங்கள்.

**படம் 5:**
ஒரு விரலை நடுவில் வைத்து அதைச் சுற்றி முடியைச் சுழற்றுங்கள்.

**படம் 5a,5b:**
சுற்றும்போது அவை நேராக, நீளமாக வரும்.

**படம் 5c:**
இப்படி சுற்றிய முடியை, தலையை ஒட்டியிருக்கும் முடியோடு சேர்த்து கொண்டை ஊசி கொண்டு குத்திவிடுங்கள்.

**படம் 6, 6a:**
அடியில் மிஞ்சும் முடியை அப்படியே மேலாக நிமிர்த்தி, சுருட்டிய தலை முடி ஓரத்தோடு கொண்டை ஊசி கொண்டு குத்திவிட்டால், பிரெஞ்சு ரோல் தலையலங்காரம் தயார்! பிறகு, ஆடைக்கு ஏற்றாப்போல் பிரெஞ்சு ரோல் ஓரத்தில் இணைத்துவிடுங்கள்.

**குறிப்பு:**
முடியில் ஆங்காங்கே குட்டிக் குட்டி முத்துக்களைச் செருகிவிடுங்கள். பின்னர் முகத்தைச் சீர்செய்து புடைவையின் நிறத்துக்கு ஏற்றாற்போல் ஐஷடோ மற்றும் லிப்ஸ்டிக் போட்டுக் கொள்ளவும். புடைவையின் நிறத்துக்கேற்ப அட்டிகை, தோடு மற்றும் காப்புகள் அணிந்தால்... உங்கள் அழகு மேலும் மெருகேற்றப்பட்டு மிக அழகாகத் தெரிவீர்கள்.








# நோய்களை விரட்டும் நடைப்பயிற்சி



உடல் நலத்தில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் முதலில் கடைப்பிடிப்பது நடைப் பயிற்சிதான். அதிகாலையில் பயிற்சி செய்தால், அன்றைய நாள் முழுவதும் உற்சாகமாக இருக்க முடியும். நீரிழிவு நோய், உடல் பருமன், இதய நோய் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளைத் தவிர்க்கவும் முடியும்.

நடைப் பயிற்சியோ, ஓட்டப் பயிற்சியோ எதுவானாலும் அதை முறையோடு செய்யவில்லை என்றால், மூட்டு மற்றும் கால் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும்.

ஓடுவதால் எந்த அளவுக்கு நன்மைகள் இருக்கிறதோ, அதேபோல் முறையாக ஓடவில்லை என்றால், மூட்டில் உள்ள குருத்தெலும்பு தேய்ந்து வலி ஏற்படும். ஆரம்பத்தில் இந்த வலியை உணர முடியாது. மாடிப்படிகளில் ஏறும்போதும் இறங்கும்போதும் கதிரையில் அதிக நேரம் அமரும் போதும் இந்தப் பாதிப்பை உணரலாம். எனவே, அதிக ஆர்வத்தில் கால்களுக்கு அதிக பளுவைக் கொடுக்கக் கூடாது. உடற்பயிற்சிக்காக ஓடுபவர்கள், ஓடும் விதத்தைத்தான் பார்க்க வேண்டுமே தவிர, ஓடும் தூரத்தைப் பார்க்கக் கூடாது.

தொடர்ந்து நீண்ட நேரம் பயிற்சியில் ஈடுபடும்போது சோர்வு, வலி ஏற்படும். இதனால் பயிற்சியில் ஈடுபடுவதற்கான மனநிலை பாதிக்கப்படும். எனவே, பயிற்சிக்கு இடையே அவ்வப்போது ஓய்வு எடுங்கள்.

ஓட்டப் பயிற்சியில் ஈடுபடுவதற்கு முன்பு உடலைச் சுய பரிசோதனை செய்துகொள்ள வேண்டியது அவசியம். இதயம் தொடர்பான பிரச்சினை உள்ளவர்கள், நீரிழிவு நோயாளிகள் நடைப்பயிற்சி செய்வதே போதுமானது. மருத்துவரின் ஆலோசனைக்குப் பிறகு ஓடுவது நல்லது.

நடைப்பயிற்சியில், ஓட்டப்பயிற்சியில் ஈடுபடுபவர்கள் பருத்தி மற்றும் இறுக்கமான ஆடைகளை அணியக் கூடாது. இதனால் உடலின் வெப்பம் அதிகரிக்கும் வாய்ப்புகள் அதிகம். காலுக்குப் பொருத்தமான, எடை குறைந்த காலணிகளை அணிந்து பயிற்சியில் ஈடுபடுவது நல்லது.

மிகவும் இறுக்கமான காலணி அணிந்துகொண்டு நடைப்பயிற்சி செய்வது வலியை ஏற்படுத்தும். புதிதாக ஓட்டப் பயிற்சியில் ஈடுபடுபவர்கள் இரண்டு நிமிடம் ஓட்டம், ஒரு நிமிடம் நடைப் பயிற்சி என்று மாற்றிமாற்றிச் செய்ய வேண்டும். இதனால், இதயத்துக்கு அதிக சிரமம் ஏற்படுவது தவிர்க்கப்படும்.

சரியான நிலையில் நடப்பது மிகவும் அவசியம். தலையைத் தாழ்த்தியபடி முன்னோக்கிச் சாய்ந்தபடி நடப்பதால், கழுத்து வலி, முதுகு வலி, தோள்பட்டை வலி ஏற்படலாம். எனவே, முதுகை வளைக்காமல், நடக்கும்போதும் ஓடும்போதும் நேராக இருங்கள். முதுகின் இயல்பான தன்மையைப் பின்பற்றுங்கள். வயிற்றை உள்ளிழுத்தபடி பயிற்சியில் ஈடுபடுங்கள். கால்கள் நடப்பதற்கு ஏற்ப நம் உடலை சமநிலைப்படுத்தும் வகையில் கைகள் அசைகின்றன. இதனால் வேகமாக நடக்கலாம். கைகளை அசைக்காமல் நடக்கும்போது, அது முதுகெலும்பில் அழுத்தத்தை ஏற்படுத்தும்.

எனவே, தாராளமாகக் கைகளை வீசி நடைபோடுங்கள். சமதளத்தில் நடைபயிற்சியில் ஈடுபடுங்கள். கரடுமுரடான ஓடுதளத்தைத் தவிர்த்துவிடுங்கள். நடைப்பயிற்சியை மிதமாகத் தொடங்கி, கொஞ்சம் கொஞ்சமாக வேகத்தை அதிகரியுங்கள். அதேபோல முடிக்கும்போது வேகத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துப் பயிற்சியை முடியுங்கள்.

ஆண்களை விட, பெண்கள் உடலில்தான் கொழுப்பு அதிகம் சேருகிறது. 35 வயதைத் தாண்டிய பெண்கள், கண்டிப்பாக நடைப்பயிற்சி செய்ய வேண்டும்.

இதனால் தேவை இல்லாத கொழுப்புகள் குறையும். குருதி ஓட்டம் சீராகும். நாள் முழுக்கத் துடிப்புடன் செயல்பட முடியும். உயர் குருதி அழுத்தம் குறையும். குருதியில் சீனியின் அளவு குறையும். எலும்பின் அடர்த்தி அதிகமாவதுடன் தசைகள் வலுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எனக்கொரு வழி சொல்லுங்களேன்!"



தங்கவேல்

எங்கெங்கு காணினும் பிளாஸ்டிக் மயம் என்று பாடலாம். அந்தளவுக்கு வீதி ஓரங்களையும் பொது இடங்களையும் குப்பை மேடுகளையும் கூடுகளையும் நீக்கமற நிறைத்திருக்கிறது பொலித்தீன்.

அவற்றைப் பார்க்கப் பார்க்க எரிச்சலாகவும், கோபமாகவும் வருகிறது. ஆனால் யார் மீது கோபப்படுவது என்று புரியவில்லை. பிளாஸ்டிக் பைகளை, போத்தல்களை, குவளைகளைக் கொடுக்கும் கடைக்காரர்கள் மீதா? அதை வாங்குபவர்கள் மீதா? வாங்கி கண்ட இடத்தில் தூக்கி வீசுபவர்கள் மீதா? அப்படித் தூக்கி எறியப்பட்டதை சுத்தப்படுத்தாத உள்ளூராட்சி நிர்வாகத்தினரின் மீதா? சும்மா பேருக்கு பிளாஸ்டிக் பைகளை தூக்கிப்போடுவதை தடை செய்யும் அரசின் மீதா? அறிக்கைகளுடன் நின்றுவிடும் மாகாண அமைச்சர்கள் மீதா? இல்லை, இந்தப் பொருள்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் மீதா? யாரைக் குற்றம் சொல்லவதென்று புரியவில்லை.

பிளாஸ்டிக் குப்பை இல்லாத இடமே இல்லை. அது நம் வாழ்விலும் சுற்றுப்புறச் சூழலிலும் இரண்டறக் கலந்துவிட்ட ஒன்றாகிவிட்டது. நம் வீட்டின் உள்ளேயும், வீட்டைச் சுற்றிலும், ஆற்றில், குளத்தில், கழிவு நீர் வாய்க்காலில், கடையில், கால் நடையின் கழிவுகளில், வயலுக்குப் போடும் உரத்தில், மான்களின் குடலில், யானையின் லத்தியில், பறவைகளின் கூட்டில், கடல் அலையில், தேங்கிக் கிடக்கும் நீரில், வற்றிய ஆற்று மணலில், பச்சைப் பசேலன பரந்து விரிந்திருக்கும் வயல்வெளியில், வீதியோரம் நிற்கும் வேலியின் முள்ளுமரத்தின் முள்ளில் மாட்டி காற்றில் படபடத்துக்கொண்டு, முள்வேலிக் கம்பியில் சிக்கி சலசலத்துக்கொண்டு, எங்கெங்கு காணினும் பிளாஸ்டிக் குப்பை.

கல்யாணமா? சாமத்தியச் சடங்கா? சாவு வீடா? அரசியல் பொதுக் கூட்டமா? கோயில் திருவிழாவா? பொது நிகழ்வா? உல்லாசக் கடற்கரையா? எந்த இடமானாலும், நிகழ்ச்சியானாலும் அது நடந்து முடிந்ததற்கான, மனிதன் இருக்கிறான் என்பதற்கான அறிகுறி அந்த இடத்தைச் சுற்றிலும் சிதறிக் கிடக்கும் பிளாஸ்டிக் குப்பைகள் தான். நாம் குப்பைகளுக்கு மத்தியில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் சுத்தமாக இருக்கிறோம் என்று மார்தட்டிக்கொள்கிறோம். என்ன ஓர் அபத்தம் பாருங்கள்.

இந்தக் குப்பைகள் நிச்சயமாக சுற்றுப்புறத்தை அழகுபடுத்தவில்லை. இதெல்லாம் என் கண்ணில் மட்டும் தான் படுகிறதா? இல்லை, அனைவரும் இந்தக் காட்சியைப் பார்த்து என்னைப் போலவே கோபப்படுகிறார்களா? எத்தனை பேருக்கு இந்த மக்காத குப்பைகளைப் பார்க்கும்போது எரிச்சல் வருகிறது? இப்படி இருக்கிறதே என்று கவலைப்படுபவர்கள் எத்தனை பேர்? அப்படி ஆதங்கப்படுவர்களில் எத்தனை பேர் பிளாஸ்டிக் பைகளையோ, குவளையையோ உபயோகிக்காமல் இருக்கிறோம்? அவை நமக்குக் கொடுக்கப்படும்போது வேண்டாம் என்கிறோம்? விடை காண முடியாத இத்தகைய ஆயிரம் கேள்விகள் முளைத்துக்கொண்டே இருக்கின்றன.

சுத்தம் சுகம் தரும் என்று படிக்கிறோம். "சொர்க்கம் என்பது நமக்கு... சுத்தம் உள்ள வீடுதான், சுத்தம் என்பதை மறந்தால்... நாடும் குப்பை மேடுதான்..." என்றெல்லாம் பாடுகிறோம். இருந்தாலும் நாம் செய்ய வேண்டியதை, செய்யக் கூடியதைச் செய்வதில்லை. பிளாஸ்டிக் குப்பைகள் நம் முன்னோர்கள் காலத்திலிருந்து இருந்து வருபவை அல்ல. 15 வருடங்களில்தான் அவை அறிமுகமாகி இப்படி விஸ்வரூபம் எடுத்திருக்கின்றன. இன்றைக்குப் 20 ஆண்டுகளுக்கு முன், சிறுவனாக இருந்தபோது கடைக்குச் செல்ல ஒரு துணிப்பையை எடுத்துச் செல்லும் பழக்கம் அனைவரிடமும் இருந்தது. இல்லையேல் நல்லூர் திருவிழாவில் வாங்கிய பனையோலைப் பை இருந்தது. அதுவும் இல்லையென்றால் பிரம்புக்கூடை இருந்தது. கல்யாண வீடுகளில் தரும் தாம்பூலப் பையும் துணியால் ஆனதே.

இன்று எல்லாமும் தலைகீழ் ஆகி விட்டது.

அந்தக் காலத்தில் கடைகளில் பயன் படுத்திய தாள்களினால் ஆன உறையில் அரிசியையும், பருப்பையும், புளியையும், பலசரக்குகளையும் கட்டித்தந்தார்கள். 'பேப்பர் பாக்' என்று அழைத்தார்கள். இன்றும் சில இடங்களில் பயன்பாட்டில் இருக்கிறது. போர் தீவிரமடைந்திருந்த 90களில் தாள்களின் மீளுருவாக்க முயற்சிகளின் ஒருபகுதியாகக்கூட இத்தகைய பைகள் உருவாக்கப் பட்டன.

வாங்கும் அளவிற்குத் தகுந்தவாறு செய்தித்தாளையோ அப்பியாசக் கொப்பித் தாளையோ கிழித்து, லாவகமாக மடித்து பொட்டலம் போட்டு, மேலே தொங்கும் கண்டிலிருந்து சணலை இழுத்துக் கட்டி, சணலை இரு விரலாலும் திருகி, பிய்த்து முடிச்சு போட்டு கொடுப்பார்கள். (சில கடைகளில் இந்த நடைமுறை இன்னமும் இருக்கிறது) சந்தைக்குப் போனால் கூட வீட்டிலிருந்து கூடை எடுத்துப் போய் அதில்தான் வாங்கி வந்தார்கள். பின்னப் பட்ட வயர் கூடைகள் இதற்குப் புகழ் பெற்றிருந்தன. இறைச்சியும், மீனும் வாங்க மட்டுமே பிளாஸ்டிக் பையைத் தேடிச் சென்ற காலம் ஒன்றுண்டு.

பாடசாலைகளில் சாப்பிட்டபின், குழாயைத் திறந்து விட்டு, அதிலிருந்து ஓடும் தண்ணீரை கீழே கையைக் கொடுத்துத் தேக்கி அதில் குனிந்து வாயை வைத்துக் குடித்தார்கள் மாணவர்கள். இல்லையேல் சாப்பாடு கொண்டு வரும் சில்வர் பெட்டியில் தண்ணீர் பிடித்து அதன் விளிம்பில் வாய் வைத்துக் குடித்தார்கள். ஐஸ்கிரீம் எடுத்துச் சாப்பிட மரக்கட்டையால் ஆன சிறிய கரண்டியைக் கொடுத்தார்கள். மாரி, கிராக்-ஜாக் பிஸ்கட்டுகள் மெழுகு தடவிய தாளில் மடிக்கப்பட்டு இருந்தன. இப்போது எல்லாம் பிளாஸ்டிக் மயம்; பொலித்தீன் மயம்.

நமக்கு சாப்பிட, குடிக்க, வசிக்க எல்லாமே சுத்தமானதாகவும், சுகாதாரமானதாகவும் இருக்க வேண்டும். ஆனால் இந்த உலகைப் பற்றி, சுற்றுப்புறச்சூழலைப் பற்றி நாம் கவலைப்படுவது இல்லை. அதை அசுத்தப்படுத்த கொஞ்சம் கூடத் தயங்குவதில்லை. நமக்கு நோய் ஏதும் வரக்கூடாது, ஆனால் நாம் வாழும் இந்த உலகு எக்கேடு கெட்டு போனாலும் நமக்குக் கவலை இல்லை. வீதி ஓரத்தில் கிடக்கும் இந்தக் குப்பைகள் என் கண்களை மட்டும்தான் உறுத்துகிறதா? எனக்கு மட்டும்தான் அவை அசிங்கமாகக் காட்சியளிக்கின்றனவா? இப்படித்தான் காலாகாலத்திற்கும் இருக்குமா? இதையெல்லாம் சகித்துக் கொள்ளத்தான் வேண்டுமா? பார்க்கப் பார்க்கப் பழகிவிடுமா? பிடித்துப் போய்விடுமா? அல்லது இதை யாருமே ஒரு பிரச்சினையாக நினைக்கவில்லையா? நான்தான் பிதற்றுகிறேனா? எனக்கு புரியவில்லை. யாராவது வழி சொல்லுங்களேன்.






விரையுங்கள்!
இச்சலுகை 2013.10.25 முதல் 2014.01.25 வரை மட்டுமே.
நீங்கள் வெற்றி பெற்றால் மேற்குறிப்பிட்டுள்ள காலப்பகுதிக்குள் கார்டினைக் கொள்வனவு செய்த விற்பனையாளரை சந்தியுங்கள்.
கார்டின் பெறுமதி இச்சலுகைக் காலம் முடிவடைந்த பின்னரும் செல்லுபடியாகும்.
இச்சலுகை, ரூ.100 பெறுமதியான கார்ட்களிற்கு மட்டுமே.
1212 ஐ அழையுங்கள்
www.slt.lk | Web chat: www.slt.lk (My SLT→Chat with us)
CITYLINK
PHOENIX O&M WP/GT/3969

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பயணியுங்கள் பயணியுங்கள் பயணித்துக் கொண்டே இருங்கள்!

எஸ்.இராமகிருஷ்ணன்

இந்தியாவின் நாளந்தா அருங்காட்சியகத்தில் எரிந்துபோன பின் எஞ்சிய அரிசியை காட்சிக்கு வைத்திருக்கிறார்கள்.
ஒரு சிறிய அரிசி அது. பார்த்துக் கொண்டிருக்க பிரமிப்பை ஏற்படுத்தியது. அது வெறும் அரிசியில்லை, ஒரு வரலாற்றுச் சாட்சி, கருகிய அரிசியில் இந்திய வரலாற்றின் கடந்த காலம் எழுதப்பட்டிருக்கிறது.
இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்தியாவில், உலகிலே மிகப்பெரிய பல்கலைக் கழகமாக நாளந்தா இருந்தது. பத்தாயிரம் மாணவர்கள் தங்கிப் படித்த உறைவிடக் கல்வி நிலையமான அதை டெல்லி சுல்தான் பக்தியார் கில்ஜி 1203இல் படையெடுத்து வந்து அழித்தார். பல்கலைக்கழகத்தையும் அதை ஒட்டி வாழ்ந்த ஊர்களையும் எரித்தும் இடித்தும் அழித்தார். ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள், புத்த பிட்சுக்கள் இதில் கொல்லப்பட்டார்கள். நாளந்தா ஒரு பௌத்த பல்கலைக்கழகமாகவே இருந்தது. நாளந்தாவின் பிரம்மாண்டமான சுவடி நூலகம் முழுமையாகவே அழிக்கப்பட்டது.
அந்த நினைவுகளின் உறைந்த வடிவம் போலவே இந்த அரிசி தோன்றுகிறது. இந்திய வரலாற்றை நமக்கு கற்றுக்கொடுப்பவை எஞ்சியிருக்கும் கோட்டை கொத்தளங்கள், அகழ்வாய்வுப் பொருள்கள் மட்டுமில்லை, இதுபோல எரிந்த அரிசிகளும்தான் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் பல இடங்களுக்கும் பல நாடுகளுக்கும் பலமுறை பயணம் செய்திருக்கிறேன், எந்தப் பயணத்திலும் எனக்கு நோக்கங்களோ இலக்குகளோ இருந்தது கிடையாது, மனம் விரும்பியபடியே பயணம் செய்துகொண்டிருப்பேன், சாலையின் பாடலை, முணுமுணுப்பைக் கேட்கிற நாடோடிப் பயணி நான், இந்தப் பயணங்களில் நான் கண்ட உண்மை, என்னைப் போல காரணமேயில்லாமல் ஊர் சுற்றுகிற உதிரி மனிதர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள் என்பதே. அவர்கள் எதைத் தேடிப் பயணிக்கிறார்கள், எதைக் கண்டடை கிறார்கள் என்று யாருக்கும் தெரியாது.

> ஒவ்வொரு பயணியும் ஓர் இரகசிய ஆய்வாளன். அவன் எதைக் கண்டுபிடிக்கிறான் என்று யாரிடமும் பகிர்ந்து கொள்வதில்லை.
> பெட்டிபெட்டியாக உடைகள். வீட்டுப் பொருள்கள். உணவு வகைகளைத் தூக்கிக்கொண்டு போவதன் பெயர் பயணமில்லை. பயணம் நமது சமூக அடையாளங்களை மறக்கச் செய்கிறது.



ஒருவர் தனது வீட்டைப் புரிந்து கொள்ளவும் நேசிக்கவும், உறவும் நட்பும் எவ்வளவு முக்கியமானவை என்பதை ஆழமாக உணரவும் பயணம் தேவைப்படுகிறது. ஆம் நண்பர்களே! எனது பயணங்களின் வழியேதான் வீடும் உறவும் எவ்வளவு முக்கியமானவை என்பதை உணர்ந்திருக்கிறேன். அதேநேரம் வீடு மட்டுமே உலகமில்லை. உலகம் எவ்வளவு பெரியது, எவ்வளவு அழகானது, எவ்வளவு நம்பிக்கை தரு வது என்பதையும் அறிந்திருக்கிறேன்.
ஒவ்வொரு பயணமும் ஒரு பாடமே. பயணம் நமது அச்சங்களிலிருந்து நம்மை விடுதலை செய்கிறது. அறியாத மனிதர்களுடன் நட்புக் கொண்டாட வைக்கிறது. பிறப்பில் வருவது மட்டும் உறவில்லை. உண்டாக்கிக் கொள்வதும் உறவுதான் எனக் கற்றுத் தருகிறது.
பயணம் செய்வது வேறு. சுற்றுலா செல்வது வேறு. பயணம் என்பது உலகை அறிந்துகொள்ளும் வழி. சுற்றுலா என்பது பொழுதைப் போக்குவதற்கான வழி. பெரும்பான்மை சுற்றுலாக்கள் விடுமுறைக் கொண்டாட்டங்களே.
பயணி ஒருபோதும் சுற்றுலா செல்ல விரும்புகிறவனில்லை. அவன் போகும் இடங்களில் எல்லாம் புகைப்படம் எடுத்துக்கொள்வதையோ, சுடச்சுட எழுதி, அச்சிட்டு இணையத்தில் ஏற்றி விளம்பரப்படுத்திக்கொள்வதையோ விரும்பாதவன். வானில் பறந்து செல்லும் பறவையின் நிழல், தண்ணீரில் பட்டுச் செல்வதைப் போல தன்னிருப்பை உலகின் மீது படிய விட்டுப் பறந்து போகிறவனே பயணி. எனது பயணங்களே என் ஆளுமையை உருவாக்கின. [illegible] இலக்கில்லாமல் பயணிக்கும் பலரை நான் அறிவேன்.
அவர்கள் தங்களின் இருப்பை அர்த்தப்படுத்திக்கொள்ளப் பயணிக்கிறார்கள். ஒவ்வொரு பயணியும் ஓர் இரகசிய ஆய்வாளன். அவன் எதைக் கண்டுபிடிக்கிறான் என்று யாரிடமும் பகிர்ந்துகொள்வதில்லை.
பெட்டிபெட்டியாக உடைகள், வீட்டுப் பொருள்கள், உணவு வகைகளைத் தூக்கிக்கொண்டு போவதன் பெயர் பயணமில்லை. பயணம் நமது சமூக அடையாளங்களை மறக்கச் செய்கிறது. ரயில் ஏறிய மறுநிமிடம் படிப்பும் வேலையும் இன்னபிற அடையாளங்களும் உதிர்ந்துபோய் விடுகின்றன. பயணி என்ற ஒற்றை அடையாளம் மட்டுமே மிஞ்சுகிறது. அந்த அடையாளமும் நமக்கானதில்லை, பொதுவானது.
பயணம் கற்றுக்கொடுக்கும் முதல் பாடமே உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும் என்பது தான். பயணத்தில் நோயுற்றால் பயணம் தடைப்படுவதோடு மனதில் காரணமற்ற நூறு பயங்கள் கவ்விக் கொள்ளத் ஆரம்பித்துவிடும். பார்த்துக்கொண்டிருக்கும்போதே பயம் கிளைவிட்டு நம்மை முடக்கிவிடும். விட்டேத்தியாகச் சுற்றியலைந்த எனது பயணங்களில் நான் கற்றுக் கொண்ட முதல் பாடம் நாக்குக் கு அடிபணியக் கூடாது என்பதே. தண்ணீரையும் உணவையும் மட்டும் கவனமாகப் பார்த்துக்கொண்டுவிட்டால் எந்த ஊருக்கும் எப்போதும் போகலாம். எவ்வளவு வேண்டுமானாலும் சுற்றித் திரியலாம். படுத்தவுடன் தூங்கத் தெரிந்தவன்தான் ஊர்சுற்றியாக இருக்க முடியும். உண்டு, உறங்கி, சுகித்து உடல் வளர்ப்பது மட்டும்தான் வாழ்க்கையா என்ன? வாழ்க்கையை அர்த்தப்படுத்திக்கொள்வது நம் கையில்தான் இருக்கிறது. அதற்குப் பயணமே எளிய வழி.
"பயணத்தில் சிலர் வியப்பூட்டும் இடங்களைப் பார்க்கிறார்கள், சிலர் மனிதர்களை வேடிக்கை பார்க்கிறார்கள், ஒரு சிலரே அங்குள்ள ஆன்மாவைக் காண்கிறார்கள்" என்ற எமர்சனின் மேற்கோள் ஒன்றை வாசித்திருக்கிறேன். நாளந்தாவிலுள்ள எரிந்த அரிசியைக் கண்டபோது அதன் ஆன்மாவைக் கண்டதாகவே அறிந்தேன். வரலாறு என்பது முடிந்துபோன கடந்த காலமில்லை. அது உயிருள்ள நிகழ்காலம்.

*(கட்டுரையாளர் தமிழகத்தின் புகழ் பூத்த எழுத்தாளர்)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குமரேசன் அசாத்

# மதயானைக் கூட்டம்

## சாதிப் பெருமை பேசும் குள்ளநரிக் கூட்டம்

மதம் பிடிக்கிற யானைகள் எதிரில் தென் படும் எதையும் அழிக்கக் கூடியவை. சாதிப் பெருமை என்னும் வெறி மதம் பிடிக்கிற மக்கள் கூட்டம் மற்ற வர்களை மட்டுமல்லாமல் தம்மைத் தாமேயும் அழித்துக் கொள்ளக்கூடியது. குறிப் பிட்ட வட்டாரத்தின் குறிப் பிட்ட சமூகத்தி னரிடையே காலங்காலமாக ஊட்டப் பட்டு வந்துள்ள சாதிப் பெருமைக்குள் தங்களைத் தாங்களே அழித்துக்கொள் கிற மூர்க்கம் புதைந்திருப்பதைச் சொல் கிற படம், மத யானைக்கூட்டம்.

ஜெயக்கொடி தேவர் எந்த மனைவி, மகன், மகள் மீது பாசமாக இருந்தாரோ அது அதிகாரப்பூர்வமான குடும்பம் அல்ல. பெரிய மனிதத்தனத்தின் அடை யாளங்களில் ஒன்றாக, முதல் மனைவி யும் பிள்ளைகளும் இருக்க இன்னொரு பெண்ணைச் சேர்த்துக் கொண்டவர் அவர். அந்த வீட்டில்தான் அவருடைய சாவு நிகழ்கிறது. சாவுச் சடங்குகளை அந்த வீட்டில் நடத்தக் கூடாது என்று முதல் மனைவியின் குடும்பத்தார் சடலத் தைத் தங்களது வீட்டிற்கு எடுத்துச் செல்கிறார்கள். அந்தச் சடங்குகளில் இந்தக் குடும்பத்தினர் கலந்துகொள்ள விடாமல் தடுக்கிறார் கள்.

மேலோட்டமாகப் பார்த்தால் அந்த மூத் தவளின் ஆத்திரத்தால் நடக்கிற வன் முறைகள் போலத் தெரிகிறது.

ஆனால், ஆழ்ந்து பார்த்தால், ஆண் களின் மதிப்புக்காகப் பெண்கள் வஞ் சிக்கப்படுவது வெளிப்படுத்தப்படுகிறது. ஒரு ஆணின் பாலியல் தாகத்தால் ஏமாற்றப்படுவது அந்த மூத்த வள் மட்டுமல்ல, பிற்காலத்தில் சமூக மரி யாதையின்றி அந்த இளையவளும் கூடவே கைவிடப்படுகிறாள்.

நிலவுடைமை காரணமாகப் பெரிய தலைகளாகத் தலை தூக்கியவர்களி டையே தலைமுறைகளாகத் தொடரும் தமது மதிப்பு சார்ந்த போட்டி, அதற்கு இரத்தப் பலியாகும் உறவுக்காரர்கள், தொடரும் ஈவிரக்கமற்ற வன்முறை கள், தடுக்க வேண்டிய காவல்துறை யினரின் ஒத்துழைப்பு... இத்தனைக்கும் பின் னால் இருப்பது அந்த சாதிப் பெருமை தான்.

கொலை செய்துவிட்டு சிறைக்குப் போ வ துகூட பெருமைக்குரிய சாதிக்கடமை யாகப் புகட்டப்பட்டிருக்கிறது. அதுவும், தன் சாதிக்காரனையே போட் டுத்தள்ளி விட்டு அந்தப் பெருமையைச் சூடிக் கொள்ளும்படி ஒவ்வொரு நாடி நரம்பும் தூண்டப்பட்டிருக்கிறது. எதிர் விளைவு கள்பற்றி யோசிக்கவோ, தலைமுறை கள் முடக்கப்படுவது பற் றிக் கவலைப் படவோ விடுவதில்லை இந்த சுயசாதிப் பெருமை. கொஞ்சமாவது நியாயமாகச் சிந்திக்க முனைவோரையும் அது விட்டு வைப்பதில்லை.

கதாநாயகன் எதிரிகளை வீழ்த்துவதாக முடித்து, அவனை உயரமாக நெஞ்சுயர்த்தி நிற்க வைத்திருந்தால் இது சாதிப் பெருமை யைப் பேசுகிற படமாகியிருக்கும். மாறாக, கதாநாயகனை ஒழிக்கத் துடிக்கும் வீராத் தேவர், வீட்டு மாடியில் மறைந்திருந்து கத்தி யை வீசி அவனைக் கொல்வதாகவும், கம்பீர மாக சிறைக்குச் செல்வதாகவும் சித்தரிக்கப் படுகிறது. நேயம் கொன்ற பெருமிதத்திற்காக எவ்வளவு அபத்தமாக நடந்துகொள்கிறார் கள், வாழ்க்கையின் அழகுகளை இழக்கி றார்கள் என்று காட்டப்படுகிறது.

கொலை செய்துவிட்டு சிறை சென்று திரும்பு வதுகூட சாதியின் பெருமையாகப் பேசப்படு கிறது. அந்தப் பெருமையில் ஊறிப்போய் மாற்றுச் சிந்தனை எதுவும் இல்லாதவர் களாக, வட்டத்தைத் தாண்டி முன்னேற முடி யாதவர்களாக சாதி மக்கள் சுருக்கப்பட்டிருப் பது நேர்த்தியாக உணர்த்தப்படுகிறது. படத்தி ல் யாருமே முழு நல்லவர்களோ, முழு கெட் டவர்களோ இல்லை என்பதும் சமூக இயல் புக்கு நெருக்கமான பதிவுதான்.

ஆணின் பெருமை சார்ந்து பெண்ணும் ஆட் டுவிக்கப்படுகிறாள். அவளும் குற்றம் செய் யத் தூண்டப்படுகிறாள். அவளுக்காகத்தான் எல்லாம் நடப்பதாகக் கூறிக்கொண்டாலும், அவளுடைய சுயமான குரலுக்கு எந்த மரி யாதையும் இல்லாமல் போகிறது என்பதை யும் படம் சொல்லத் தவறவில்லை. கொண்ட வன், கூடப்பிறந்தவன், நம்பி வந்தவன் என எல்லோரையும் பறிகொடுத்துவிட்டுக் கடைசி யில் அந்த மூத்தாள் கதறி அழுகிறாளே– அது நூற்றாண்டுகளாகத் தொடர்கிற பெண் அழுகையின் தொடர்ச்சி. சாதியத்தை ஒழிப்ப தற்கான போராட்டம் இரண்டு முனைகளில் நடைபெற வேண்டும். ஒன்று - ஒடுக்கப்படு கிறவர்களுக்குப் பகையான ஒடுக்குகிற சாதி யத்தைச் சாடுவது. மற்றையது - போலித் தனங்களை அம்பலப்படுத்தி சுயசாதி மதி ப்பைத் தகர்ப்பது. இரண்டாவது முனை யில் நிற்கிறது இந்தப் மதயானைக்கூட்டம். அதே வேளையில் ஒரு இடத்தில் கூட சாதிப் பெருமையை நேரடியாக விமர்சிக்கிற உரை யாடலோ காட்சியோ இல்லை. அதுவே இந் தப்படம் சாதிப்பெருமையைப் பேசுகிறதா, சாடுகிறதா என்ற விவாதத்திற்கு இட்டுச்செல் கிறது. ஆயினும் தனிமனித சாகசம் இல்லா மல், குத்தும் வசனம் (பஞ்ச் டயலொக்) இல் லாமல், கதாநாயகன் வெற்றிபெற்றே தீர வேண்டும் என்ற விதியும் இல்லாமல் இப்படி யொரு படத்தை வழங்கியிருக்கிற இயக்குநர் விக்ரம் சுகுமாறன், முக்கியப் பாத்திரத்தில் நடித்திருக்கிற வேல ராமமூர்த்தி, கதிர், முரு கன், விஜி சந்திரல்சேகர், தயாரிப்பாளர் ஜி.வி. பிரகாஷ் குமார் எல்லோரும் பாராட்டுக் குரியவர்கள்.

தமிழகத்தின் சாதி வரண் முறைக் கட்டுப்பாட் டையும் அதன் ஆழ அகலப் பரிமாணங் களையும் புரிந்து கொள்ள விரும்புபவர்கள் இந்தப் படத்தைத் தியேட்டரில் சென்று பார்க்க வேண்டும். இது [illegible] படம் அல்ல. ப[illegible] போக்குக்கானதாக மட்டும் இருக்காது.





## SOFT LOGIC Holdings Ltd இல் வேலைவாய்ப்பு

உலகில் உள்ள உயர்தர கம்பனிகளில் ஒன்றான Soft logic Holdings Ltd நிறுவன மானது 6000 இக்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்டு ஆஸ்திரேலியா மற்றும் இலங்கையில் ஏறத்தாள 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக உழைத்து வருகிறது. உலகிலே மிகவும் வேகமாக வளர்ந்துவரும் வர்த்தக கம்பனிகளில் Soft logic Holdings Ltd கம்பனியும் ஒன்றாகும்.

வியாபார சந்தையிலே நிலைத்து நிற்கக்கூடிய ஒரு பலமான வர்த்தக நிலைகளை நாம் உருவாக்கியிருக்கிறோம் தொலைத்தொடர்பு, சுகாதாரமும் பராமரிப்பும், சில்லறை வியாபாரம், நிதிச்சேவை, தொலைபேசி மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் எமது வியாபாரத்தை விஸ்தரித்துள்ளோம்.

தற்போது வியாபித்து வரும் உலக மயமாதலிற்கேற்ப ஆழமாக கால்பதித்து நிலைத்து நிற்கக் கூடிய ஊழியர்களையும் அதிவினைத் திறனாகச் செயற்படக்கூடியவர்களையும் இணைத்து ஒரு தொழிற்படையை உருவாக்கியுள்ளோம். நீங்கள் சொப்ட் லொஜிக்கின் ஒரு பணியாளராக இணைந்து உங்கள் தொழில் மற்றும் வருமானத்தை முன்னேற்று வதற்கான சந்தர்ப்பத்தை Soft logic Holdings Ltd வழங்குகின்றது.
எமது Soft logic Holdings Ltd நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

### 01. District Manager

பொறுப்புக்கள்:

- மாவட்டத்தில் உள்ள அனைத்து காட்சியறைகளுக்கும் முழுப் பொறுப்புதாரியாக இருக்கவேண்டும் என்பதுடன் பின்வரும் பொறுப்புகளையும் செயற்படுத்தல் வேண்டும்.
- மாதாந்த விற்பனையை ஊக்குவித்தல்.
- வாடகைக் கொள்வனவு முறையை முகாமைசெய்தல்.
- காசு மற்றும் சொத்து முகாமைத்துவம்.
- பராமரிப்பும், மேற்பார்வையும்.
- கம்பனி மூலம் நடைபெறும் சகல கொடுக்கல்வாங்கல் நிகழ்வுகளுக்கு பொறுப்புதாரி ஆதல்.
- காட்சியறைகளை விஸ்தரித்தலும், வலையமைப்பை உருவாக்கலும்.
- எதிர் கால சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வகையில் ஆளணியினரையும், காட்சியறை முகாமையாளர்களையும் விருத்தி செய்தல்.

கொண்டிருக்கவேண்டிய தகைமையும் திறன்களும்

- இத்துறை சார்ந்த தொழில் அனுபவமானது மேலதிக நன்மையாகக் கருதப்படும்.
- குறைந்தது இரண்டு வருடங்கள் சந்தைப்படுத்தல் மற்றும் கணக்கியல் துறைகளில் நிறைவேற்று தரத்தில் உள்ள தொழில் அனுபவம்.
- ஒரு பிரதேசத்தின் முகாமையாளராக விஷேடமாக மின் சாதனப்பொருள்களின் காட்சியறையை நிர்வாகம் செய்தவராக இருப்பது விரும்பத்தக்கது.
- காட்சியறை முகாமையாளர்களையும், ஊழியர்களையும் ஊக்குவித்து இலக்கை அடைவதற்கு வழி நடத்தக் கூடியவராக இருத்தல்.
- நீண்ட காலத்திற்கு கடின உழைப்பை வழங்கக்கூடியவராக இருத்தல்.
- நாட்டின் சகல பாகங்களிலும் கடமையாற்றக் கூடியவராக இருத்தல்.
- ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் சிறப்புத் தேர்ச்சியுள்ளவராக இருத்தல்.
- வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் மொழி மிக அவசியம்.
- வேலைகளைப் பகுத்தறியக் கூடிய திறனைக் கொண்டிருத்தல் மற்றும் சந்தைப் படுத்தல் துறையில் போதிய கல்விப் புலமையையும் கொண்டிருத்தல். ★ செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரத்தைக் கொண்டிருத்தல்.

### 02. Showroom Managers

பொறுப்புக்கள்:

- கம்பனியால் வழங்கப்படும் மாதாந்த இலக்குகளை அடைதல்.
- சகல நிர்வாக நடவடிக்கைகள், வாடகைக் கொள்வனவு முறை, சொத்து முகாமைத்துவம் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக இருத்தல்.
- வாடிக்கையாளர்களுடன் சுமூக உறவைப் பேணுதல்.
- கம்பனியால் பிரதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் முன்னெடுக்கப்படும் வியாபார நடவடிக்கைகளில் பங்கு கொண்டு வியாபாரத்தை விஸ்தரித்தல்.
- கம்பனியால் வழங்கப்படும் தகவலுக்கேற்பவும் நியம சட்டதிட்டங்களுக்கமைவாகவும் காட்சியறையை மேற்பார்வை செய்தல்.
- முகாமைத்துவத்தினரின் வேண்டுகோளுக்கமைய வாராந்த, மாதாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

தகைமைகள்:

- மின்பாவனைப் பொருள்களின் விற்பனை மற்றும் நிர்வாகத்துறையில் முகாமைத்துவம் தொடர்பான அனுபவம்.
- வாடகைக் கொள்வனவு முறையில் பொருள்கள் விற்றல் மற்றும் சொத்து விற்பனை போன்றவற்றில் அனுபவம்.
- ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் தொடர்பாடலை மேற்கொள்வதுடன் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் மொழித் தொடர்புகளை மேற்கொள்ளக்கூடியவராக இருத்தல் அவசியம்.
- வாடிக்கையாளர் சேவையைச் செய்வதில் சிறந்த அனுபவம். ★ கணினி அறிவு அவசியம்
- சுயமாகச் செயற்படக்கூடியவராகவும், மற்றவர்களை வழிநடத்தக் கூடியவராகவும் வார இறுதியில் நேரம் பாராது கடமை யாற்றக்கூடியவராகவும் இருத்தல். ★ வயது 40 வயதுக்குக் கீழ்.

### 03. Trainee Showroom Sales Executives

பொறுப்புகள்:

- கம்பனியால் வழங்கப்படும் மாதாந்த விற்பனை இலக்கை அடைதல்.
- சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குதல்.
- வாடிக்கையாளருடன் சிறந்த உறவைக் கட்டியெழுப்புதல்.
- கம்பனியால் நடத்தப்படும் வியாபார நடவடிக்கைகளில் பங்கு கொள்ளல்.

தகைமைகள்:

- சுறுசுறுப்புள்ளவராகவும் ஊக்கத்துடன் செயற்படக் கூடியவராகவும் இருத்தல்.
- இத்துறையில் சிறந்த அனுபவமுள்ளவராக இருத்தல். (காட்சியறை, வெளிக்களம் மற்றும் நேரடி விற்பனை)
- வியாபார நடவடிக்கைகளினை செயற்படுத்திய அனுபவம்.
- ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழியில் தொடர்பாடலை மேற்கொள்வதுடன் கணிணி அறிவு அவசியம்.
- மின்சாதனப் பொருள்களின் விற்பனைத் துறையிலான அனுபவம் விரும்பத்தக்கது.
- பாடசாலையில் இருந்து விலகிய திறமையுடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- வாடிக்கையாளர் சேவை தொடர்பான பூரண அறிவு கொண்டிருத்தல் அவசியம்.
- சுறுசுறுப்பாகவும் சுயமாகவும் செயற்படக் கூடியவராகவும் மேற்பார்வையாளரின் வழிநடத்தலின் கீழ் செயற்படக் கூடிய வராகவும் வார இறுதி நாள்களில் நெகிழ்வுப் போக்குடன் கடமையாற்றக் கூடியவராகவும் இருத்தல்.
- 25 வயதுக்குட்பட்டவராக இருத்தல்.

### 04. Showroom And Stores Assitant

பொறுப்பும் கடமையும்:

- சொத்துக்களைக் கையாள்தல்.
- காட்சியறையில் உள்ள அனைத்து ஆவணங்களுக்கும் பொறுப்புதாரி.

தகைமைகள்:

- இத் துறையில் அனுபவம் விரும்பத்தக்கது
- கணினி அறிவு அவசியம் (Ms Office Applications)
- சுயமாக செயற்படக் கூடியவராகவும் ஆளுமையும் சுழற்சி முறையில் நெகிழ்வுப் போக்குடன் வேலை செய்யக்கூடிய வராகவும் இருத்தல். ★ வயது 20 - 35 வருடங்கள்

### 05. Cashier

பொறுப்புகளும் கடமைகளும்

- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நாளாந்த காசு நடவடிக்கை மற்றும் காசோலை மூலமான பெறுவனவு, கொள்வனவு, கடனட்டைகள் மற்றும் காட்சியறையில் நடைபெறும் அனைத்துவிதமான கொடுக்கல் வாங்கல்களுக்குப் பொறுப்புதாரி ஆவார்.
- நாளாந்த காசு மற்றும் வங்கி அறிக்கைகளைக் கொழும்புத் தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்ப வேண்டும்.
- வாடிக்கையாளர்களின் தேவைப்பாடுகள், ஆலோசனைகள் மற்றும் சேவைகளை வினைத்திறனாகக் கையாளக் கூடிய வராக இருத்தல்.

தகைமைகள்:

- காசாளராக அல்லது உதவிக் காசாளராகக் கடமையாற்றிய அனுபவம்.
- கணினி மூலம் வேலை செய்யக்கூடியவராக இருத்தல். (Ms Office Applications)
- சுய அறிவும் ஆளுமையும் கொண்டிருப்பதோடு சுழற்சி முறையில், நெகிழ்வுத் தன்மையுடன் கடமையாற்றக் கூடியவ ராக இருத்தல். ★ வயதெல்லை 20 - 35 வருடங்கள்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிவரங்களை எழுதி இரண்டு உறவினரல்லாத நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு இவ் விளம்பரம் பிரசுரமாகி 10 நாள்களுக்குள் எமக்குக் கிடைக்கக்கூடியதாக எமது கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தபால் மூலம் அனுப்பும் விண்ணப்பதாரிகள் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண் டும். ஈமெயில் மூலம் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விடயம் என்ற பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்குக் கம்பனியால் கவர்ச்சிகரமான சம்பளப் பொதியும் ஊக்குவிப்புத் தொகைகளும் தகுதிகளுக்கேற்ப வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
Head of Human Resources
Softlogic Holdings Ltd.
No.14,De Fonseka Place, Colombo - 05
www.softlogic.lk. E-mail: hr@softlogic.lk

(C /10931)(2.6)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org